வேதாகம புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்



Rev. Prof. S. பன்னீர் செல்வம்

வேதாகம புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்

Presented by

S. N. RAVI CHANDREN
(Indian Bible Tranlators)

Rev. Prof. S. பன்னீர் செல்வம் B.E., M.Sc. (Engg.)

WORD PUBLISHERS TRUST

Civil Aerodrome Road
Coimbatore - 641 014

வார்த்தை வெளியீடு
முதல் பதிப்பு : மே 2008, 1000 பிரதிகள்

வேதாகம புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்

© Word Publishers Trust

விலை : ரூ. **50/-**

PUBLISHED BY:
WORD PUBLISHERS TRUST
Civil Aerodrome Road, Coimbatore - 641 014
Ph. : 0422 - 2574143

Printed at : **GRAPHIC ARTS,** Coimbatore - 641012
Ph. 0422 - 2490890

முன்னுரை

கிறிஸ்தவர்களாகிய நம்மிடையே காணப்படும் ஒரு பொதுவான குறை என்ன தெரியுமா? வேதாகமத்தை நாம் வாசிக்கும் போது அது புரியுதோ அல்லது புரியில்லையோ அதைப்பற்றி கவலைப்படாமல் அதை வாசிக்க வேண்டும் என்ற கடமை உணர்வில் பயபக்தியோடு அதை வாசித்து மூடிவிட்டு ஆமென் சொல்லி அமர்ந்து விடுகிறோம்.

ஆனால் ஆண்டவர் நமக்கு வேதப்புத்தகத்தை அந்த நோக்கத்திற்காக கொடுக்கவில்லை. வேத புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆலோசனைகளையும் நாம் ஆராய்ந்து கற்று, அதை நாம் நமது அன்றாட வாழ்க்கையில் கடைபிடித்து நாம் வாசித்த சத்தியங்களை வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட வேண்டும் என்று தான் ஆண்டவர் விரும்புகிறார். பைபிளை படிக்கும் பயபக்தியான பக்தர்களாக நாம் இருப்பதைக் காட்டிலும், வேதத்தை ஆராய்ந்து பார்த்து அதை நன்கு புரிந்து கொண்டு அதை மற்றவர்களுக்கும் போதிக்கும் சீஷர்களாக ஆண்டவர் நம்மை உருவாக்க விரும்புகிறார். அந்த நோக்கத்தோடு தான் "வேத புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்" என்ற நூல் எழுதப்பட்டுள்ளது. பல ஆங்கில வேதாகமங்களில் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களை பயன்படுத்தி இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளேன்.

அறிமுகம் இல்லாத ஒரு நபரோடு நாம் அதிக நேரம் பேச விரும்ப மாட்டோம், பேசவும் இயலாது.

ஆனால் யாராவது நமக்கு நன்கு அறிமுகம் ஆனவர் கிடைத்துவிட்டால், மணிக்கணக்காக நேரம் போறதே தெரியாமல் உட்கார்ந்து பேசுவோம். அது தான் அறிமுகம் செய்து வைப்பதில் அடங்கியுள்ள அற்புதம்.

உங்கள் கையில் உள்ள "வேதாகம புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்" என்ற நூலும் அதைத் தான் செய்கிறது. வேதாகமத்தில் உள்ள 66 புத்தகங்களையும் அதை எழுதிய ஆசிரியர்களையும் உங்களுக்கு காலம் என்ற மேடையில் நின்று கொண்டு உங்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியை இப்புத்தகம் ஆற்றுகிறது. ஒரு கூட்டத்தில் முக்கிய பேச்சாளர்களை ஒருவர் அறிமுகப்படுத்துவது போல. ஒவ்வொரு புத்தகத்தை பற்றிய குறிப்பு - விளக்கம் - யார் - எந்த காலகட்டத்தில், எப்படிப்பட்ட பின்னணியில் - சூழ்நிலையில்

- எதற்காக - யாருக்காக - எழுதப்பட்டது; புத்தகத்தின் முக்கிய, மையக்கருத்து என்ன? ஒவ்வொரு புத்தகத்திலும் இயேசு கிறிஸ்து எப்படி வெளிப்படுகிறார் - போன்ற பல விபரங்கள் இதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த "வேதாகம புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்" என்ற புத்தகத்தை நீங்கள் வாசித்த பின்பு நீங்கள் இதுவரை வாசிக்க தவறிய, வாசிக்க மனமில்லாமல் இருந்த வேதாகம புத்தகங்களையும் வாசிக்க தூண்டுதல் பெறுவீர்கள். உங்கள் "பைபிளோடு" அநேக நாட்கள், அநேக மணிநேரங்கள், நேரம் போகிறதே அறியாமல், உணராமல், அதை வாசிப்பதற்கும், தியானிப்பதற்கும், இந்த அறிய நூல் ஒரு தூண்டுகோலாக, ஒரு நல்ல வழிகாட்டியாக புல்லுள்ள இடங்களில் மேயவும், அமர்ந்த தண்ணீர்கள் அருகில் அழைத்துக் கொண்டு போகும் ஒரு நல்ல மேய்ப்பனாக அமைய வேண்டும் என்பதே எங்களது வாஞ்சையும், வேண்டுகோளும், ஜெபமும்.

இப்புத்தகத்தை Draft எழுதவும், Type பண்ணவும் உதவிய IBT Staff, இதை அச்சிட உதவிய Wordpublishers Trust, மற்றும் Graphic Arts அனைவருக்கும் எனது நன்றி.

ஆசிரியர்.

அட்டவணை

பொருள்	பக்கம்
வேதாகம காலெண்டர்	1
வேதாகம புத்தகத்தின் அறிமுகம்	3
பழைய ஏற்பாடு	
I. மோசேயின் ஆகமங்கள் - 5 (Books of Moses)	
1. ஆதியாகமம்	7
2. யாத்திராகமம்	13
3. லேவியராகமம்	15
4. எண்ணாகமம்	19
5. உபாகமம்	23
II. சரித்திரப் புத்தகங்கள் - 12 (Historical Books)	
6. யோசுவா	26
7. நியாயாதிபதிகள்	30
8. ரூத்	33
9. I சாமுவேல்	36
10. II சாமுவேல்	38
11. I ராஜாக்கள்	41
12. II ராஜாக்கள்	44
13. I நாளாகமம்	47
14. II நாளாகமம்	50
15. எஸ்றா	53
16. நெகேமியா	56
17. எஸ்தர்	58
III. கவிதைப் புத்தகங்கள் - 5 (Poetical Books)	
18. யோபு	60
19. சங்கீதம்	63
20. நீதிமொழிகள்	66
21. பிரசங்கி	70
22. உன்னதப்பாட்டு	73
IV. பெரிய தீர்க்கரிசிகள் - 5 (Major Prophets)	
23. ஏசாயா	78
24. எரேமியா	81
25. புலம்பல்	86
26. எசேக்கியல்	89
27. தானியேல்	91
V. சிறிய தீர்க்கதரிசிகள் - 12 (Minor Prophets)	
28. ஓசியா	94
29. யோவேல்	98
30. ஆமோஸ்	100
31. ஒபதியா	102
32. யோனா	104
33. மீகா	108

பொருள்	பக்கம்
34. நாகூம்	111
35. ஆபகூக்	114
36. செப்பனியா	117
37. ஆகாய்	120
38. சகரியா	123
39. மல்கியா	126
புதிய ஏற்பாடு	
I. இயேசுவின் சரிதைப் புத்தகங்கள் - 4	
Synoptic Gospels ஏறக்குறைய ஒரே சம்பவங்களை சீராக தொகுத்து எழுதப்பட்ட சுவிசேஷப் புத்தகங்கள் - 3	
40. மத்தேயு	129
41. மாற்கு	131
42. லூக்கா	134
Topical Gospel சம்பவங்களுக்கு அல்ல பிரசங்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்ட சுவிசேஷப் புத்தகம் - 1	
43. யோவான்	137
II. சரித்திரப் புத்தகம் - 1 (Historical Book)	
44. அப்போஸ்தலர்	141
III. பவுலின் நிருபங்கள் (Pauline Epistles)	
45. ரோமர்	149
46. I கொரிந்தியர்	153
47. II கொரிந்தியர்	158
48. கலாத்தியர்	161
49. எபேசியர்	163
50. பிலிப்பியர்	166
51. கொலோசெயர்	168
52. I தெசலோனிக்கேயர்	171
53. II தெசலோனிக்கேயர்	175
54. I தீமோத்தேயு	178
55. II தீமோத்தேயு	180
56. தீத்து	183
57. பிலமோன்	185
IV. பொதுவான நிருபங்கள் (General Epistles)	
58. எபிரேயர்	188
59. யாக்கோபு	191
60. I பேதுரு	194
61. II பேதுரு	197
62. I யோவான்	200
63. II யோவான்	204
64. III யோவான்	206
65. யூதா	210
V. தீர்க்கதரிசன நூல் - 1 (Prophetical Book)	
66. திருவெளிப்பாடு	213

வேதாகமத்தின் அறிமுகம்

இந்த உலகத்தில் பல ஜாதிகள், இன மக்கள், பல மதத்தினர் இருப்பினும் யூத மக்கள் வழியாக வந்த பைபிள் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிளமெண்ட் என்பவர் இதற்கு Ta Biblia (கிரேக்க பதம்) அதாவது புத்தகங்கள் என்று பெயர் கொடுத்தார். பின்பு 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெரோம் இதை Divine Library 'தெய்வீக நூலகம்' என்று அழைத்தார். 13-ம் நூற்றாண்டில் புத்தகங்கள் (Ta Biblia) என்ற பன்மை சொல்லிற்குப் பதிலாக The Bible - புத்தகம் என்ற ஒருமை சொல் வழக்கத்திற்கு வந்தது.

வேதாகமத்தின் தொகுப்பு (Canon) வரலாறு பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாடு எஸ்ரா (BC 536?) மற்றும் நெகேமியா (BC 446?) நாட்களில் தொகுக்கப்பட்டது. இத்தொகுப்புப்பணி ஒரே காலகட்டத்தில் நடைபெற வில்லை. பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து நடைபெற்ற இத்தொகுப்புப்பணி ஏறக்குறைய கி.மு. 300-ம் ஆண்டு முற்றுப்பெற்றது. இந்தப் புத்தகங்களைத் தொகுத்து இறுதி வடிவமைக்கும் பணியைச் செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவைகள் அனைத்தும் எபிரேயு பாஷையில் எழுதப்பட்டிருந்தது. இந்த எபிரேயு பாஷையில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு கி.மு. 294-லிருந்து கி.மு. 284 வரை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இது தான் உலகத்திலேயே முதன் முதலாகச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு. இந்த கிரேக்க மொழிபெயர்ப்பின் பெயர் 'செப்ஜிஜென்ட்' என்று அழைக்கப்படுகிறது. ஜெர்மனியில் எட்டின்பெர்க் என்பவர் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட போது முதன் முதலில் அச்சடிக்கப்பட்ட புத்தகமும் இந்த செப்ஜிஜென்ட் என்பதும் 1969-ம் ஆண்டு சந்திர மண்டலத்தில் முதன்முதல் காலடி வைத்த நீல் ஆம்ஸ்ட்ராங் அங்கு விட்டு வந்துள்ள பைபிளும் இந்த செப்ஜிஜென்ட் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டில் உள்ள 27 புத்தகங்களில் 20 புத்தகங்கள் எல்லோராலும் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இறுதியாக இதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு மூன்று கால கட்டத்தில் கி.பி. 325, 394, 397 ஆண்டுகளில் கூடி 27 புத்தகங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தள்ளுபடி ஆகமங்கள்

இந்தத் தள்ளுபடி ஆகமங்கள் மொத்தம் 14 புத்தகங்கள் கொண்டது. இவைகள் மல்கியாவிற்கும், கிறிஸ்துவிற்கும் இடையிலான காலக்கட்டத்தில் எழுதப்பட்ட நூதனமான கதைகள் அடங்கிய புத்தகங்கள். இந்தப்புத்தகங்களில் 6 புத்தகங்களை ரோமன் கத்தோலிக்கச் சபை கி.பி. 1546-ம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. ஆனால் புராட்டெஸ்டன்ட் சபை இவற்றில் ஒன்றைக்கூட இன்றுவரை சபை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. காரணம் (1) இயேசு கிறிஸ்து தனது பிரசங்கத்தில் இதை மேற்கோள் காட்டவில்லை. (2) இதன் ஆசிரியர்கள் இதைத் தங்களுக்கு ஆண்டவர் வெளிப்படுத்தினார் என்று எங்குமே குறிப்பிடவில்லை. (3) ஒரு தீர்க்கதரிசியால் எழுதப்படாததால் யூதர்கள் இதைத் தள்ளி விட்டார்கள். (4) பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய மல்கியா புத்தகத்தில் அடுத்து வரும் தீர்க்கதரிசி யோவான் ஸ்நானகன் என்று எழுதியிருந்தது இன்னொருகாரணம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்திய வேதாகம சங்கமும் ரோமன் கத்தோலிக்கச் சபையும் இணைந்து மொழிபெயர்த்த திருவிவிலியத்தில் புராட்டெஸ்டன்ட் பைபிளில் இந்த தள்ளுபடி ஆகமங்கள் சேர்க்கப்படாமல் 66 புத்தகங்கள் மாத்திரமும், ரோமன் கத்தோலிக்க பைபிளில் இந்த 66 புத்தகங்களுடன் தள்ளுபடி ஆகமங்களில் 6 புத்தகங்களையும் சேர்த்து மொத்தம் 72 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வேதாகமங்களின் பிரிவுகள் (Divisions of the Bible)

பழைய ஏற்பாடு (5 பிரிவுகள்) மொத்தம் 37 ஆசிரியர்கள் - எபிரேயு மொழி (1) மோசேயின் ஆகமங்கள் - 5 (ஆதியாகமம் - உபாகமம்) (2) சரித்திர புத்தகங்கள் - 12 (யோசுவா - எஸ்தர்) (3) கவிதை நடையில் எழுதப்பட்ட 5 புத்தகங்கள் (யோபு - பிரசங்கி) (4) பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் - 5 (ஏசாயா - தானியேல்) (5) சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள் - 12 (ஓசியா - மல்கியா)

புதிய ஏற்பாடு (5 பிரிவுகள்) மொத்தம் 7 ஆசிரியர்கள் - கிரேக்க மொழி (1) 4 சுவிசேஷங்கள் (2) சரித்திர புத்தகம் - 1 (3) பவுலின் நிருபங்கள் - 13 (ரோமர் - தீத்து) (4) பொதுவான நிருபங்கள் - 8 (எபிரேயு - யூதா) (5) தீர்க்கதரிசன புத்தகம் - 1

வேதாகமத்தின் அறிமுகம்

இந்த உலகத்தில் பல ஜாதிகள், இன மக்கள், பல மதத்தினர் இருப்பினும் யூத மக்கள் வழியாக வந்த பைபிள் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிளமென்ட் என்பவர் இதற்கு Ta Biblia (கிரேக்க பதம்) அதாவது புத்தகங்கள் என்று பெயர் கொடுத்தார். பின்பு 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெரோம் இதை Divine Library 'தெய்வீக நூலகம்' என்று அழைத்தார். 13-ம் நூற்றாண்டில் புத்தகங்கள் (Ta Biblia) என்ற பன்மை சொல்லிற்குப் பதிலாக The Bible - புத்தகம் என்ற ஒருமை சொல் வழக்கத்திற்கு வந்தது.

வேதாகமத்தின் தொகுப்பு (Canon) வரலாறு பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாடு எஸ்ரா (BC 536?) மற்றும் நெகேமியா (BC 446?) நாட்களில் தொகுக்கப்பட்டது. இத்தொகுப்புப்பணி ஒரே காலகட்டத்தில் நடைபெற வில்லை. பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து நடைபெற்ற இத்தொகுப்புப்பணி ஏறக்குறைய கி.மு. 300-ம் ஆண்டு முற்றுப்பெற்றது. இந்தப் புத்தகங்களைத் தொகுத்து இறுதி வடிவமைக்கும் பணியைச் செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவைகள் அனைத்தும் எபிரேயு பாஷையில் எழுதப்பட்டிருந்தது. இந்த எபிரேயு பாஷையில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு கி.மு. 294-லிருந்து கி.மு. 284 வரை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இது தான் உலகத்திலேயே முதன் முதலாகச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு. இந்த கிரேக்க மொழிபெயர்ப்பின் பெயர் 'செப்ஜிஜென்ட்' என்று அழைக்கப்படுகிறது. ஜெர்மனியில் எட்டின்பெர்க் என்பவர் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட போது முதன் முதலில் அச்சடிக்கப்பட்ட புத்தகமும் இந்த செப்ஜிஜென்ட் என்பதும் 1969-ம் ஆண்டு சந்திர மண்டலத்தில் முதன்முதல் காலடி வைத்த நீல் ஆம்ஸ்ட்ராங் அங்கு விட்டு வந்துள்ள பைபிளும் இந்த செப்ஜிஜென்ட் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டில் உள்ள 27 புத்தகங்களில் 20 புத்தகங்கள் எல்லோராலும் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இறுதியாக இதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு மூன்று கால கட்டத்தில் கி.பி. 325, 394, 397 ஆண்டுகளில் கூடி 27 புத்தகங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தள்ளுபடி ஆகமங்கள்

இந்தத் தள்ளுபடி ஆகமங்கள் மொத்தம் 14 புத்தகங்கள் கொண்டது. இவைகள் மல்கியாவிற்கும், கிறிஸ்துவிற்கும் இடையிலான காலக்கட்டத்தில் எழுதப்பட்ட நூதனமான கதைகள் அடங்கிய புத்தகங்கள். இந்தப்புத்தகங்களில் 6 புத்தகங்களை ரோமன் கத்தோலிக்கச் சபை கி.பி. 1546-ம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. ஆனால் புராட்டெஸ்டன்ட் சபை இவற்றில் ஒன்றைக்கூட இன்றுவரை சபை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. காரணம் (1) இயேசு கிறிஸ்து தனது பிரசங்கத்தில் இதை மேற்கோள் காட்டவில்லை. (2) இதன் ஆசிரியர்கள் இதைத் தங்களுக்கு ஆண்டவர் வெளிப்படுத்தினார் என்று எங்குமே குறிப்பிடவில்லை. (3) ஒரு தீர்க்கதரிசியால் எழுதப்படாததால் யூதர்கள் இதைத் தள்ளி விட்டார்கள். (4) பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய மல்கியா புத்தகத்தில் அடுத்து வரும் தீர்க்கதரிசி யோவான் ஸ்நானகன் என்று எழுதியிருந்தது இன்னொருகாரணம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்திய வேதாகம சங்கமும் ரோமன் கத்தோலிக்கச் சபையும் இணைந்து மொழிபெயர்த்த திருவிவிலி யத்தில் புராட்டெஸ்டன்ட் பைபிளில் இந்த தள்ளுபடி ஆகமங்கள் சேர்க்கப்படாமல் 66 புத்தகங்கள் மாத்திரமும், ரோமன் கத்தோலிக்க பைபிளில் இந்த 66 புத்தகங்களுடன் தள்ளுபடி ஆகமங்களில் 6 புத்தகங்களையும் சேர்த்து மொத்தம் 72 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வேதாகமங்களின் பிரிவுகள் (Divisions of the Bible)

பழைய ஏற்பாடு (5 பிரிவுகள்) மொத்தம் 37 ஆசிரியர்கள் - எபிரேயு மொழி (1) மோசேயின் ஆகமங்கள் - 5 (ஆதியாகமம் - உபாகமம்) (2) சரித்திர புத்தகங்கள் - 12 (யோசுவா - எஸ்தர்) (3) கவிதை நடையில் எழுதப்பட்ட 5 புத்தகங்கள் (யோபு - பிரசங்கி) (4) பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் - 5 (ஏசாயா - தானியேல்) (5) சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள் - 12 (ஓசியா - மல்கியா)

புதிய ஏற்பாடு (5 பிரிவுகள்) மொத்தம் 7 ஆசிரியர்கள் - கிரேக்க மொழி (1) 4 சுவிசேஷங்கள் (2) சரித்திர புத்தகம் - 1 (3) பவுலின் நிருபங்கள் - 13 (ரோமர் - தீத்து) (4) பொதுவான நிருபங்கள் - 8 (எபிரேயு - யூதா) (5) தீர்க்கதரிசன புத்தகம் - 1

ஆசிரியர்கள்

இந்த 66 புத்தகங்களும் ஏறக்குறைய 44 ஆசிரியர்களால் 1600 ஆண்டு கால இடைவெளியில் கி.மு. 1500 முதல் கி.பி. 100 வரை எழுதப்பட்டன. இவற்றில் யோபு ஆபிரகாமின் காலத்தில் வாழ்ந்தவர். எனவே யோபுவின் புத்தகம் தான் முதன் முதலில் எழுதப்பட்டது. யோபுவிற்குப் பிறகு ஏறக்குறைய 500 ஆண்டுகள் கழித்துதான் மோசே ஆதியாகமத்தை எழுதினார். ஆனாலும் கவிதை நடையில் வடிவம் அமைக்கப்பட்ட ஒரே காரணத்தினால் இந்த யோபு புத்தகம் சரித்திர புத்தகத்தின் முடிவிலும் கவிதைப் புத்தகத்தின் ஆரம்பத்திலும் வருகிறது.

பைபிளின் தனித்தன்மை

இந்த உலகமும் இந்த அண்டசராசரமும் எப்படித் தோன்றியது; எப்படி முடியப்போகிறது - என்பதை பைபிள் மாத்திரமே விளக்கம் கொடுக்க தைரியமாக முன்வருகிறது. இந்த உலகத்தில் உள்ள எந்த விஞ்ஞானபுத்தகமோ, மதச்சார்பான புத்தகமோ அண்டசராசரத்தின் ஆரம்பத்தையோ முடிவையோ பேசவில்லை, பேசப் பயப்படுகிறார்கள். இந்த அண்ட சராசரம் எப்படி ஆரம்பித்தது என்பதை விளக்குவதற்கு பல விஞ்ஞானிகள் முன்வந்திருக்கிறார்கள். ஆனால் அவற்றில் ஒன்று கூட தீர்க்கமான விளக்கம் இந்நாள் வரை கொடுக்க முன்வந்ததில்லை.

யூதர்களின் சிறப்புப் பங்கு

இஸ்ரவேல் நாடு நமது மதுரை ஜில்லாவைப் பார்க்கிலும் சிறிய பரப்பளவு உள்ள நாடு. இங்கு வாழ்ந்த யூத மக்கள் தங்களது வம்ச வரலாறு, நாட்டு வரலாறு, தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனம் - இவற்றை மிக நுணுக்கமாக எழுதி அவற்றைக் கண் போல பாதுகாத்து வந்தார்கள். இவர்களைப் பார்க்கிலும் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய மற்ற இனத்தவர்கள் யாரும் இந்த யூதர்களைப் போல தங்களது சரித்திரத்தைப் பத்திரமாகப் பாதுகாக்கவில்லை - என்பது குறிப்பிடத்தக்கது.

தங்களோடு ஆண்டவர் இடைபட்ட விதத்தையும் அவர் வெளிப்படுத்திய வார்த்தைகளையும் இந்த யூதர்கள் மிகப்பெரிய செல்வமாகக் கருதி அதைப் பாதுகாத்து வந்தார்கள். இது ஆண்டவர் இம்மக்களுக்குக் கொடுத்த ஒரு விசேஷித்த உத்திரவாதம்; விசேஷித்த வரம்.

இன்றைய உலக ஜனத்தொகை 600 கோடி. இதில் இஸ்ரவேல் மக்கள் 1 கோடி கூட கிடையாது. அப்படியானால் இந்த 599 கோடி

மக்களை விட்டுவிட்டு, ஆண்டவர் இந்த 1 கோடி மக்களுக்கு மாத்திரம் தான் தன்னை வெளிப்படுத்தினாரா? மற்ற ஜாதியினருக்கு, இன மக்களுக்கு ஆண்டவர் தன்னை வெளிப்படுத்த- வில்லையா? என்றதொரு கேள்வி எழும்புகிறது. நிச்சயமாக ஆண்டவர் பட்சபாதம் உள்ளவர் அல்ல, மற்ற மக்களுக்கும் அவர் தன்னை வெளிப்படுத்தியிருப்பார். ஆனால் இந்த யூதமக்கள் மாத்திரம் தான் ஆண்டவர் தங்களுக்கு வெளிப்படுத்திய வார்த்தைகளை பத்திரமாகப் பாதுகாத்து உலகமக்களுக்குக் கொடுத்துள்ளனர். தன்னை வெளிப்படுத்த இந்த யூதமக்களை மாத்திரம் ஏன் ஆண்டவர் தெரிந்து கொண்டார் ? மற்ற இன மக்களை ஏன் தெரிந்து கொள்ளவில்லை ? என்ற கேள்வியைக் கேட்பதற்கு - சட்டப்படி நமக்கு அதிகாரம் கிடையாது. அது ஆண்டவரது விருப்பம். என் கையில் கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது. என் தோட்டத்தில் பல செடிகள் இருக்கின்றன. எந்தச் செடிக்கு என் கையில் உள்ள தண்ணீரை ஊற்றுவது என்பது என் விருப்பம். அதைச் செடிகள் கேட்பதற்கு உரிமை கிடையாது.



ஆதியாகமம் - புத்தகம் 1

இப்புத்தகத்தை 'தொடக்கநூல்', 'ஆரம்பப் புத்தகம்', 'விதைப் புத்தகம்', (Seed Book) 'வேர்களின் புத்தகம்' (Root Book) என்றழைப்பர். உலகத்தின் ஆரம்பம்; அண்ட சராசரத்தின் ஆரம்பம்; மனித குலத்தின் ஆரம்பம்; பாவத்தின் தொடக்கம்; இரட்சிப்பின் ஆரம்பம்; சமுதாயத்தின் ஆரம்பம்; பாஷைகளின் ஆரம்பம்; கட்டடத்தின் ஆரம்பம் இப்படி எழுதிக் கொண்டே போகலாம். இந்த உலகத்தில் எதையாவது ஒன்றை உங்கள் மனதில் தோன்றியதை வாயிற்கு வந்த ஏதாவது ஒன்றை நீங்கள் சொல்லுங்கள். காடு, மேடு, கொலை, கொள்ளை, கரடி, சிங்கம், பாம்பு, பல்லி நீங்கள் சொல்லும் ஒவ்வொன்றின் ஆரம்பத்தை அதனுடைய தொடக்கத்தை அதன் வேரை இப்புத்தகத்தில் நீங்கள் நிச்சயமாகக் காணலாம். வேதாகமத்திலுள்ள எல்லா போதனைகளும், சத்தியங்களும் இரட்சிப்பு, ஞானஸ்நானம், சிலுவை; உயிர்த்தெழுதல் எல்லாமே இந்தப் புத்தகத்தில்தான் ஆரம்பமாகிறது.

இப்புத்தகத்தில் இந்த அண்டசராசரம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது என்ற சிருஷ்டிப்பின் வரலாறு முத்து முத்தாக மூன்று அதிகாரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதில் முதல் வசனத்திற்கும் இரண்டாம் வசனத்திற்கும் நடுவில் ஒரு பெரிய இடைவெளி ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான ஆண்டுகள் இடைவெளி இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்' என்று முதல் வசனம் கூறுகிறது. இரண்டாவது வசனத்தைக் கவனமாக வாசியுங்கள், "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது" என்று கூறுகிறது.

இங்கே நமக்கு ஒரு சந்தேகம் வருகிறது. முதல் வசனத்தின் முடிவிலேயே தேவன் பூமியை சிருஷ்டித்து முடித்துவிட்டார். பொதுவாக ஆண்டவர் எதையும் சிருஷ்டித்தால், பூரணமாகத்தான் சிருஷ்டிப்பார். அப்படியானால் முதலாம் வசனத்தில் வானத்தையும், பூமியையும் அவர் பூரணமாகத்தான் சிருஷ்டித்திருக்கிறார். ஆனால் அதன்பின்பு ஏதோ விரும்பத்தகாததொன்று நடந்திருக்கிறது. ஏதோ கலகம் நடந்து பூரணமாக வடிவம் அமைக்கப்பட்ட பூமி, இப்பொழுது ஒழுங்கின்மையாக உருவெடுத்துவிட்டது.

அதனால்தான் பல வேதப்பண்டிதர்கள் இதை இப்படியாக விளக்குகிறார்கள்.

முதல் வசனத்தின்படி ஆண்டவர் பூமியை பூரணமாக பழுதில்லாமல் சிருஷ்டித்தது உண்மைதான். தேவதூதர்கள் இந்தப் பூமியைச் சுதந்தரித்து அதில் வாழ்ந்து வந்தார்கள். அந்த தேவதூதர்கள் கீழ்ப்படியாமல் விழுந்து போனார்கள். லூசிபர் தலைமையில் அவர்கள் கலகம் பண்ணின காரணத்தால்தான் இந்த பூமி ஒழுங்கின்மையாக உருவெடுத்துவிட்டது.

தேவதூதர்கள் யுகம்

அப்படியானால் முதல் வசனத்திற்கும் இரண்டாம் வசனத்திற்கும் இடையில் 'தேவதூதர்கள் யுகம்' இருந்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. விஞ்ஞான ரீதியாகச் சொல்லப்படும் பல ஆயிரம், இலட்ச வருடங்கள் இந்தக் கால இடைவெளியில் கடந்து சென்றிருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது

இந்தச் சிருஷ்டிப்பின் வரலாற்றில் யூதமக்களின் வரலாற்றை எழுதத்தொடங்கிய ஆசிரியராகிய மோசே, 'ஆதிமனிதனாகிய ஆதாம், ஏவாள் கதையை உள்ளே நுழைத்து அதை யூதமக்களின் வரலாற்றில் இணைத்து, இழைத்து தைத்து விட்டார் என்று பல வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு - வரலாறு முற்றுப்பெற்று 300 ஆண்டுகளுக்குப் பின்புதான் மோசே பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதாம் ஏவாள் கதையைப் படிக்கும்போது காயீன் ஆபேல் வரலாற்றில் ஒரு தொடர்பு துண்டிப்பு இருப்பதைக் காணலாம். காயீனுக்கு மனைவி எப்படி கிடைத்தது (4:17)? காயீன் தன் கூடப்பிறந்த சகோதரியைத்தான் திருமணம் செய்வான் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அதற்கு மாறாக அவன் நோத் என்னும் தேசத்திலுள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான்! இந்த நோத் என்னும் தேசத்திலுள்ள மக்கள் எப்படி வந்தார்கள்? ஆதாமின் சந்ததிக்கும் இவர்களுக்கும் உள்ள தொடர்பு இங்கே போடப்படவில்லை இதைத்தான் தொடர்பு துண்டிப்பு என்று முதலில் குறிப்பிட்டேன். இருப்பினும் இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இந்தத் தொடர்பு துண்டிப்பு காணப்படவில்லை - என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது.

இந்த புத்தகத்தில் மிக முக்கியமான 5 பேர்களின் வாழ்க்கை வரலாறு அடங்கியிருக்கிறது. தேவனுடன் சஞ்சரித்த ஏனோக்கு, பேழையை கட்டிய நோவா, ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு.

வேதாகமத்திலுள்ள மற்ற 65 புத்தகங்களும் மொத்தமாக நிரப்பும் காலகட்டத்தைவிட இந்த ஆதியாகமம் புத்தகம் அதிகமான காலகட்டத்தை நிரப்புகிறது. ஆதாம் உண்டாக்கப்பட்ட கி.மு.4,000ஆண்டு முதல் யோசேப்பின் மரணம் கி.மு.1804ம் ஆண்டுவரை ஏறக்குறைய 2200 ஆண்டுகளின் கால இடைவெளியில் நடந்த சம்பவங்கள் இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

உலக முழுவதும் ஒரே மொழி பேசப்பட்டது

இந்த உலகத்திலுள்ள எந்த மொழியியல் வல்லுனருக்கும் (Linguistic Expert) தெரியாத ஒரு உண்மையை இங்கு 11:1 ம் வசனத்தில் வாசிக்கிறோம். பூமியில் ஒரே ஒரு பாஷைதான் பேசப்பட்டு வந்தது. அது எந்த பாஷையென்று கேட்காதீர்கள். ஒருவேளை அது எபிரேயு பாஷையாக இருக்கலாம் அல்லது சமஸ்கிருத பாஷையாக இருக்கலாம். நமது முதல்வர் திரு. கருணாநிதியிடம் கேட்டால் அது நிச்சயம் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தமொழியாகிய தமிழ்மொழிதான் அது என்று வாதிப்பார். விண்ணைத் தொடும் அடுக்குமாடிகள் கட்டும் அளவிற்கு ஆதியாகமம் 11ம் அதிகாரத்திலேயே அதாவது கி.மு. 2000 ஆண்டிற்கு முன்பே கட்டிடக்கலை உயர்ந்து வளர்ந்திருப்பது நமக்கு ஆச்சரியத்தை கொடுக்கிறது.

நோவா காலத்து வெள்ளத்திற்குப் பின்பு தான் கண்டங்கள் உருவாயிற்று. பாபேல் கோபுரத்தைக் கட்டி ஒரே இடத்திலேயே குடியிருக்க முயற்சித்த மக்களை, வேறு கண்டங்களிலும் குடியேற வைப்பதற்கு ஒரே ஒரு வழி அவர்களது பாஷைகளை தாறுமாறாக்கி அவர்களை பிரிப்பது.

ஒரு குடும்பம் ஒரு நாடாக உருவெடுத்தது

ஆண்டவர் தனது இரட்சிப்பின் திட்டத்திற்கு ஒரு குடும்பத்தைத் தெரிந்தெடுக்கிறார். முதலாவது ஒரு மனிதனையும் பின்பு அவனது குடும்பத்தையும், சந்ததியையும் தெரிந்தெடுத்து, அதை ஒரு பெரிய ஜாதியாகப் பெருகச் செய்கிறார். யாக்கோபின் சந்ததியாகிய அந்த 70பேர்கள் அடங்கிய குழுதான் பின்பு ஒரு நாடாக உருவெடுப்பதை நாம் காண்கிறோம். ஆதியாகம புத்தகத்திலுள்ள 50 அதிகாரங்களில் 39 அதிகாரங்கள் (12 - 50) ஆபிரகாமின் குடும்ப சரித்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் வசனம்

இப்புத்தகத்தின் சாராம்சத்தை ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், 'ஆதியிலே' 'தொடக்கத்திலே' In the beginning என்று கூறலாம்.

டார்வின் கொள்கையும் வேதாகமமும்

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று ஒரே ஒரு சொற்றொடரில் (Sentence) எல்லாவிஞ்ஞானிகள் வானசாஸ்திரிகள், அறிவியல் வல்லுனர்கள் அனைவரது வாயையும் அடைத்து விடுகிறது. உலகம் உண்டாக்கிய விதத்தை விளக்கும் எந்த விஞ்ஞானியும் இவ்வளவு திட்டவட்டமாக, ஆணித்தரமாகச் சொல்லியது கிடையாது. அமீபா என்ற செல் (Cell) லிலிருந்து இந்த பூமியும், குரங்கும் உருவாகி அந்தக் குரங்கிலிருந்து மனிதன் உருவெடுத்தான் என்று கூறும் 'டார்வின்' கொள்கையில் ஏறக்குறைய 1600 முறை இது இப்படியிருந்திருக்கலாம் 'என்று நம்பத் தோன்றுகிறது' 'என்று யூகிக்கப்படுகிறது' என்ற சொற்கள் வருகிறது. பாவம் டார்வின் சாகும்போது, "நான் ஏதோ ஒரு யூகத்தை எடுத்துரைத்தேன். அதிலிருந்து கடவுளுக்கு விரோதமாக ஒரு கொள்கை உருவாகும் என்று நான் எண்ணியது கிடையாது" என்று மனம் வருந்தினார்.

இந்த பூமியும் அண்டசராசரமும் தானாக உருவாகியது என்று சொல்லுகிற மனிதர் அல்லது விஞ்ஞானி யாரையாவது நீங்கள் சந்திக்க நேர்ந்தால், அவரை என்னிடம் கோவைக்கு அழைத்து வாருங்கள். அவருக்கு நான் பதில் கேள்வி வைத்திருக்கிறேன்.

ஒரு இரயில் பயணத்தின் போது M.B.B.S. முடித்து விட்டு Post Graduate M.D. படிக்கும் 4 மாணவர்கள் என்னோடு பயணம் செய்தார்கள். அப்பொழுது இந்த 'சிருஷ்டிப்பு' பற்றி விவாதம் வந்தது. ஒரு மணிநேரம் விவாதித்தோம். நான் அவர்களிடம் ஒரே ஒரு கேள்வி கேட்டேன், "அமீபாவிலிருந்து ஒரு செல்லிலிருந்து அனைத்தும் உருவானதாகவே வைத்துக் கொள்வோம். அப்படியானால் அந்த Cell ஐ அந்த அமீபாவை யார் உருவாக்கியது என்று கேட்டபோது அவர்கள் வாயடைத்துப்போய் அமைதியாகி விட்டார்கள்.

இந்த அண்டசராசரத்தின் இரகசியத்தை அறிந்துகொள்வதற்கு விஞ்ஞான ரீதியாக மீண்டும் அழுத்தமாக கூறுகிறேன் விஞ்ஞானபூர்வமாக ஒரே ஒரு பதில்தான் கொடுக்க முடியும். "தேவன் சிருஷ்டித்தார்" இந்தப் பதிலைத் தவிர வேறு எந்த பதில்

கொடுத்தாலும் அந்தப் பதிலில் சில ஓட்டைகள் சில கேள்விகள் சில புதிர்கள் இருக்கும். தேவன் அதைச் சிருஷ்டித்தார் என்று சொல்வோமானால் அந்தப் பதிலில் தர்க்கரீதியாகவும் (Logically) விஞ்ஞான பூர்வமாகவும் (Scientifically) ஒரு பூரணம் ஒரு முடிவு அடங்கியிருக்கிறது. இதை எந்த உச்சநீதிமன்றமும் கேள்வி கேட்க முடியாது.

ஆசிரியர் :

இதை மோசே தான் எழுதியிருக்க வேண்டும் என்று எல்லோராலும் நம்பப்படுகிறது. மோசே மரித்து தேவனால் அடக்கம் பண்ணப்பட்ட பகுதியையும் அதற்குப்பின்னால் நடக்கும் சம்பவங்களையும் வேறு யாரோ எழுதியிருக்க வேண்டும். ஒரு புத்தகத்தை எழுதும்படியாக ஆண்டவர் மோசேக்கு கட்டளையிட்டார் (யாத்.17:14, 34:27) தான் ஒரு புத்தகத்தை எழுதியதாக (யாக். 24:4, எண். 33:2) மோசேயே அறிக்கையிடுகிறார். வேதாகமத்தின் முதல் 5 புத்தகங்களின் சாராம்சத்தை கவனிப்போமானால், அதிலே விஞ்ஞான அறிவு கட்டடக்கலை அறிவு, பொதுவியல், மருத்துவம், வானசாஸ்திரம், விலங்கியல் Zoology, Biology உயிரியல், தாவரவியல் இப்படி எல்லாத் துறைகளும் அதில் கலந்திருக்கிறது. மோசே பார்வோனின் அரண்மனையில் இருந்தபோது அவன் எகிப்தியக் கலைகளை கற்றவன் என்று வேதம் கூறுகிறது (அப்7:22) இந்த 5 புத்தகங்களையும் எழுதக்கூடிய கல்வி, ஞானம் தகுதி எபிரேய மக்கள் மத்தியில் மோசே ஒருவருக்குத்தான் இருந்தது.

எழுதப்பட்ட இடம் காலக்கட்டம் :

இதை மோசே தன் மாமனார் தேசமாகிய மீதியானியர் தேசத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த காலகட்டத்திலோ அல்லது சீனாய் மலையிலோ இந்தப் புத்தகத்தை கி.மு. 1450 ம் ஆண்டு எழுதியிருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது.

கிறிஸ்து :

வேதத்திலுள்ள 66 புத்தகங்களிலும் இயேசுகிறிஸ்து மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ காணப்படுகிறார் என்பது வேதபுத்தகத்தில் நாம்காணும் ஒரு மேலான உண்மை

இந்தப் புத்தகத்தில் இயேசு ஸ்தீரியின் வித்தாக (3:15)வும், இரண்டாம் ஆதாமாகவும் (ரோமர் 5:14) ஆபிரகாமிடம் தசமபாகம் வாங்கியவரும் சாலேமின் இராஜாவாகிய மெல்கிசெதேக்காகவும் (எபி.7:13) யோசேப்பாகவும் வெளிப்படுகிறார்.

1. ஸ்திரீயின் வித்து :

இங்கே ஆணின் வித்து என்று குறிப்பிடாமல் ஸ்திரீயின் வித்திற்கும், சர்ப்பமாகிய சாத்தானின் வித்திற்கும் பகையை உண்டாக்குவேன் என்று கூறுகிறார். காரணம் பெண்ணின் வித்தின் மூலமாகத்தான் பெண்ணின் வயிற்றின் மூலமாகத்தான் தேவகுமாரன் இயேசு பிறக்க முடியும். லூக்கா சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டிருப்பது மரியாளின் வம்ச வரலாறு - அதுதான் சரீரப் பிரகாரமாக (Physical Heirs) இயேசுவின் உண்மை வம்ச வரலாறு. மத்தேயு சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டிருப்பது (Legal Heirs)யோசேப்பின் வம்ச வரலாறு. சரீரப் பிரகாரமாக இயேசுவிற்கும் யோசேப்பிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

2. இரண்டாம் ஆதாம் :

இயேசுவும் ஆதாமும் இருவருமே தேவனுடைய விசேஷித்த சிருஷ்டிப்புகள். முதல் ஆதாம் எல்லா (பழைய) சிருஷ்டிப்புக்கும் மூலகாரணம் இயேசு எல்லாப் புதிய சிருஷ்டிப்புக்களுக்கும் காரணகர்த்தா.

3. மெல்கிசெதேக்கு :

இவருக்குப் பெற்றோர் யாரென்று வேதத்தில் கொடுக்கப்படவில்லை. இருவருமே ஆதியும், அந்தமும் ஆரம்பமும், முடிவும் இல்லாதவர்கள் இருவருமே ஆசாரியர்களாகவும், இராஜாக்களாகவும் எல்லோருடைய தசமபாகங்களையும் பெறுவதற்குத் தகுதி படைத்தவர்களாகவும் காணப்பட்டார்கள்.

4. யோசேப்பு :

இயேசு யோசேப்பு இருவருமே தங்களது சகோதரர்களால் வெறுக்கப்பட்டார்கள் இருவரும் 20/30 வெள்ளிக்காசிற்கு விற்கப்பட்டவர்கள். வெகு தாழ்வான நிலையிலிருந்து மகிமைக்கு தீடீரென உயர்த்தப்பட்டவர்கள். இருவருமே தன்னோடு வாழும் மக்களுக்கும் அழிந்துபோகும் நிலையிலுள்ள மக்களுக்கும் அப்பம் கொடுத்தவர்கள்.

யாத்திராகமம் - புத்தகம் 2

<u>பெயர் :</u> எகிப்து நாடு என்ற வயிற்றிலிருந்து இஸ்ரவேல் தேசம் என்ற குழந்தை எப்படிப் பிறந்தது என்ற சரித்திரத்தை இப்புத்தகம் விளக்குகிறது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் குழந்தை பிறக்கும் போது தாய்க்குத்தான் பொதுவாக வேதனை இருக்கும். ஆனால் இந்த "பிள்ளைபேறு" விஷயத்தில் குழந்தைதான் எல்லா வேதனைகளையும் அனுபவித்தது. இந்த புது நாடு பிறந்தபோது அதன் ஜனத்தொகை ஏறக்குறைய 20 முதல் 30 லட்சம் இருந்தது.

இந்தப் புத்தகத்திற்கு ஒவ்வொரு மொழியிலும் வித்தியாசமான தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளது. கிரேக்க மொழிபெயர்ப்பில் இதற்கு 'வெளியே சென்றார்கள்' என்ற தலைப்பும் எபிரேயு மொழியில் "புறப்பாடு புத்தகம்" என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. புறப்பாடு என்ற சொல் விமான நிலையத்தில் வெளியே போகின்றவர்களின் நுழைவாயிலுக்கு 'புறப்பாடு' என்று பெயர் கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்புத்தகத்திற்கு நான் கொடுக்க விரும்பும் தலைப்பு 'விடுதலைப் பயணம்' எகிப்திலிருந்து சீனாய் மலை வரை பயணம்

வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு புத்தகத்திற்கும் கொடுக்கப்பட்ட தலைப்பு நிரந்தரமானதல்ல. அது ஒவ்வொரு கால கட்டத்தையும் ஒவ்வொரு மொழி பெயர்ப்பாளரையும் பொறுத்தது என்ற உண்மையை நாம் அறிவது நல்லது.

<u>ஆசிரியர் :</u> இதை மோசேதான் எழுதினார் என்பது நிரூபிக்கப்பட்டதொரு உண்மை. 40 ஆண்டுகள் வனாந்தர பயணத்தின் போது மோசே இதை எழுதி தான் மரிப்பதற்கு முன்பு அதைப் புத்தகமாக தொகுத்திருக்க வேண்டும்.

<u>**கால இடைவெளி :**</u> யாக்கோபு எகிப்திற்கு வந்த நாள் தொடங்கி (கி.மு. 1875) வனாந்தரத்தில் மோசே ஆசரிப்புக் கூடாரம் போட்ட நாள் (கி.மு.1445) வரை உள்ள 430 வருட கால இடைவெளியில் நடந்த சம்பவங்களை இப்புத்தகம் சித்தரிக்கிறது.

<u>**கருப்பொருள் :**</u> ஒரு கிறிஸ்தவன் பாவத்திலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை பெற வேண்டும் என்ற நடைமுறை சத்தியத்தை இப்புத்தகம் மையப் பொருளாக வைத்து விளக்குகிறது. "இரத்தத்தின் மூலம் விடுதலை" "இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை" என்ற உண்மை வலியுறுத்தப்படுகிறது.

இஸ்ரவேல் மக்கள் ஆரம்பத்தில் வேதனை அனுபவித்தாலும் முடிவில் அது சாதனையாக மாறியது. முறுமுறுப்பில் ஆரம்பித்தாலும் முடிவில் ஆண்டவரது மகிமையில் முடிந்தது. இஸ்ரவேல் மக்களுக்கு 'எகிப்து' ஒரு உபத்திரவ உளைக்கலமாக இருந்தாலும் அந்த உபத்திரவ உளைக்கலத்தில் தான் இஸ்ரவேல் கருக்கள் பலுகி பெருகியது என்பது குறிப்பிடத்தக்கது. எகிப்து இல்லையேல் இஸ்ரவேல் உருவாகியிருக்காது.

ஒரு குடும்பம் ஒரு ஜாதியாகவும் அந்த ஜாதி ஒரு நாடாகவும் உருவெடுக்கும் ஒரு சரித்திரத்தை நாம் இங்கே வாசிக்கிறோம்.

ஒரு கிறிஸ்தவனின் மோட்ச பயணத்திற்கு இப்புத்தகம் ஒரு நிழலாட்டம்.

முதல் 18 அதிகாரங்களில் மக்கள் ஆண்டவர் செய்யும் அற்புதங்களை கண்கூடாகக் காண்கிறார்கள். அதைத் தொடர்ந்து வரும் 19-40 அதிகாரங்கள் ஆண்டவர் மக்களிடம் எதிர்பாக்கும் ஒழுக்கத்தையும் சட்டதிட்டங்களையும் விவரிக்கிறது. இஸ்ரவேல் மக்கள் எதற்காக விடுதலையாக்கப்பட்டார்கள்? தான் தோன்றித்தனமாக வாழ்ந்து தாங்கள் பெற்ற விடுதலையை விற்றுப் போடவா? பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டவர்கள் ஆண்டவரின் சட்டதிட்டங்களுக்கும் ஒழுக்கத்திற்கும் கீழ்படிந்து நடக்க வேண்டும். விடுதலையாக்கப்பட்டது ஒரு சிலாக்கியம் என்றால் அந்த சிலாக்கியத்தோடு ஒரு கடமையும் பொறுப்பும் ஒட்டிக் கொண்டே வருகிறது. அதுதான் ஆண்டவரின் 10 கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு ஒழுக்கமாய் நடப்பது.

<u>**இயேசு**</u> : இப்புத்தகத்தில் 'மோசே' இயேசுவிற்கு ஒரு ஒப்பனையாகக் காணப்படுகிறார். இருவருக்கும் பிறந்தவுடனே உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. இரு குழந்தைகளுமே அற்புதமாக காப்பாற்றப்பட்டார்கள். இருவருமே தங்களுக்கு வலிய வந்த வல்லமையும் அதிகாரத்தையும் வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளினார்கள். இருவருமே மக்களுக்கு விடுதலையும், சட்டதிட்டங்களையும் வகுத்துக் கொடுத்தார்கள். இருவருமே மக்களுக்காக இறைவனிடத்தில் மன்றாடினார்கள்.

2. பஸ்கா பண்டிகையில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி இயேசுவிற்கு நிழலாட்டம் 3. மன்னா 4. அடிக்கப்பட்ட கன்மலை 5. ஆசரிப்பு கூடாரம் 6. பிரதான ஆசாரியன் இவை அனைத்தும் இயேசுவை பிரதிபலிக்கிறது.

லேவியராகமம் - புத்தகம் 3

அறிமுகம்

ஆதியாகமப் புத்தகம் நாம் பாவத்தில் விழுந்த நிலையைக் காட்டுகிறது. அடுத்துவரும் யாத்திராகமப் புத்தகம் பாவத்தில் விழுந்த கிறிஸ்தவன் அதிலிருந்து விடுதலையாவதைச் சித்தரிக்கிறது. அடுத்து வரும் லேவியராகமம் நாம் எப்படி ஆண்டவருக்கு ஆராதனை செய்ய வேண்டும் என்று விவரிக்கிறது. நாம் விடுதலையாக்கப்பட்டது ஆண்டவருக்கு ஆராதனை செய்வதற்காகத்தான் என்ற உண்மையை இப்புத்தகம் வலியுறுத்துகிறது.

ஆண்டவருக்கு ஆராதனை செய்வதில் ஒரு ஆசாரியன் என்னென்ன சட்டதிட்டங்களை (Rules & Regulations) பின்பற்ற வேண்டும் என்பதுதான் இப்புத்தகத்தின் மையப்பொருள். இதை லேவியராகமம் என்று அழைப்பதைக்காட்டிலும் ஆசாரியராகமம் என்ற பெயர் பொருத்தமாகும். இதில் சொல்லப்பட்டிருக்கிற அனைத்தும் லேவியர்களுக்கு அல்ல; லேவியர்களில் ஒரு பகுதியாகிய ஆசாரியர்களுக்குத்தான் எழுதப்பட்டிருக்கிறது. ஆலயப்பணி முட்டுகளை கவனிப்பது - பாத்திரங்களைக்கழுவுவது - ஆலயத்தை சுத்தமாக வைத்துக் கொள்வது - ஆசாரியனுக்கு உதவியாளாக இருப்பது - இதுபோன்ற பணிகளை செய்பவர்கள் தான் லேவியர்கள். அதாவது இன்றைய காலகட்டத்தில் உள்ள Sexton - சபைச்சந்தாவை வசூல் செய்பவர், கோவில் கு(கூ)ட்டி, Bible women போன்றவர்கள் தான் லேவியர்கள். இன்றைய போதகர்கள் அன்றைய ஆசாரியர்கள் எனக் கூறலாம். இப்புத்தகத்திற்கு 'லேவியராகமம்' என்ற பெயரைக் காட்டிலும் "Manual for Priest" ''ஆசாரியர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்'', ''ஆசாரியர்களுக்கு ஆலோசனை'' என்று அழைப்பது சாலப்பொருந்தும்.

ஆசாரிய ஊழியம் ஆபத்தான வேலை

மனிதன் செய்யும் பாவங்கள் பல. அது போலவே அந்தப் பாவத்தை நிவிர்த்தி செய்யும் பலிகளும், முறைகளும் பல. நீங்கள் ஏதோ ஒரு பாவம் செய்து விட்டீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பரிகாரமாக என்ன பலி செலுத்த வேண்டும்? அந்தப் பலியை எப்படி செலுத்த வேண்டும்? என்பதை

ஆசாரியன் இப்புத்தகத்தைப் படித்து விட்டு உங்களுக்கு அறிவிப்பார். அந்தக் காலத்தில் ஆசாரியனாக இருப்பது ஒரு ஆபத்தான விஷயம், Electrician உத்தியோகம் பார்ப்பது எப்படி ஆபத்தானதோ அது போலவே ஆசாரிய உத்தியோகமும். எலக்ட்ரிஷியன்கள் மின்சாரத்தையும் 10KV, 220KV வோல்டேஜை கையாளுகிறார்கள், ஆனால் இந்த ஆசாரியர்களோ அதைக் காட்டிலும் பெரிய சக்தியுடைய ஆண்டவரது பிரசன்னத்தைக் கையாளுகிறார்கள். எத்தனையோ எலக்ட்ரிஷியன்கள் அவர்களது கவனக்குறைவினாலும், அஜாக்கிரதையாலும் மின்கம்பங்களில் சிக்கிப் பிணங்களாக எரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அது போலவே ஆண்டவது பிரசன்னத்தில் அஜாக்கிரதையாக, மெத்தனமாக ஊழியம் செய்த ஆசாரியர்களும், பிரதான ஆசாரியர்களும் செத்துப்போயிருக்கிறார்கள். ஆரோனின் மகன்கள் மற்றும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை தவறாகக் கையாண்ட ஊசா என்ற மனிதனும் கர்த்தருடைய சமூகத்தில் ஒரு ஆசாரியன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற ஒழுங்குமுறை சரியாக கையாளாத அஜாக்கிரதையின் நிமித்தம் மூவருமே கொல்லப்பட்டார்கள் என்ற உண்மையை நாம் மறக்கக்கூடாது.

மருத்துவ ஆலோசனை புத்தகம்

ஒரு பெண் தூரமாகி விட்டால் அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டும், ஒரு செத்த பிணத்தை எப்படிக் கையாள வேண்டும், ஒரு பிள்ளையை பெற்றெடுத்த பின்பு ஒரு பெண் என்னென்ன செய்ய வேண்டும் இதையெல்லாம் படிக்கும்போது இப்புத்தகம் ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளிக்கு மருத்துவர் கொடுக்கும் மருத்துவ ஆலோசனைப் புத்தகம் போலத் தோன்றும்.

இன்றைய காலகட்டத்தின் கண்ணோட்டத்தில் நாம் பார்ப்போமானால், இந்தப் புத்தகத்திற்கு "Pastors Manual" 'போதகர் ஆராதனையில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்' என்று பெயர் கொடுக்கலாம். ஞாயிறு ஆராதனை, திருமண ஆராதனை, கிரக பிரவேசம், திருமண நிச்சயதார்த்தம், சாவு இப்படி ஒவ்வொரு சமயத்திலும் ஒரு போதகர் எந்த முறையில் ஆராதனை நடத்த வேண்டும் என்ற ஆலோசனைகள் அடங்கிய புத்தகம் இன்றைய காலத்திலும் போதகர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற ஆலோசனைகள் அடங்கிய புத்தகம்தான் இந்த லேவியராகமம். அந்தக் காலத்தில் ஆசாரியர்கள்

ஏதாவது தவறு செய்தால், சில சமயங்களில் அவர்களது உயிருக்கு ஆபத்து. ஆனால் இன்றைக்கு போதகர் ஆராதனையை நடத்தும்போது ஏதாவது தவறு செய்தால், அவரது உயிருக்கு ஆபத்து இல்லை. போதகர் தவறு செய்தால் அதிகபட்சமாக அவருக்கு மாறுதல் தண்டனை தான் கிடைக்கும்.

சட்ட ஒழுங்கு புத்தகம்

பொருளாதாரம், சுகாதாரம், அறநெறி, மதம் இவை அனைத்தையும் ஒரு சமுதாயத்தில் எப்படிக் கட்டுப்படுத்துவது என்ற பாடம் இதில் கூறப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தால் இடம் பெயர்ந்து வாழும் (Migrators) நாடோடி மக்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் என்ற உண்மை தெளிவாகும். இஸ்ரவேல் மக்கள் அடிக்கடி ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு பயணமாகிக் கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எந்த பாவத்திற்கு எந்த தண்டனை கொடுக்கப்படவேண்டும் என்பதும் இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் இதை சட்ட ஒழுங்கு (Law & Order) புத்தகம் என்றும் அழைக்கலாம்.

காலம், இடம் : எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து இரண்டாம் ஆண்டு முதல் மாதம் எழுதப்பட்டது. ஏறக்குறைய கி.மு. 1490ம் ஆண்டு எழுதப்பட்டது. ஆனால் அவைகளைப் புத்தகமாகத் தொகுத்துக் கொடுக்கப்பட்டது மோசேயின் மரணத்திற்குச் சற்று முன்பு மோவாபியர் தேசத்தில் கி.மு.1450ம் ஆண்டு.

ஆசிரியர் : மோசே

திறவுகோல் வசனம் : 20:7,8 என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள். நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

மையப்பொருள் :

பாவமுள்ள ஒரு மனிதன் ஒரு பரிசுத்த கடவுளிடத்தில் சேர வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழி - இரத்தம் சிந்தி பலியிடுவதின் மூலமாக அவன் கடவுளிடத்தில் கிட்டிச் சேர முடியும். அதோடு கடவுளுடைய வார்த்தைக்குக் கீழ்படிவதன் மூலமாக மாத்திரமே கடவுளோடு அவன் ஐக்கியம் (Fellowship) கொள்ள முடியும்.

'பரிசுத்தம்' என்ற வார்த்தை ஏறக்குறைய 87முறை வருகிறது.

இரட்சிக்கப்பட்டவுடனே நீ ஆண்டவரை ஆராதிக்கச் செல்ல வேண்டும். ஆதியாகமத்தில் பாவத்தில் விழுந்த கிறிஸ்தவன், யாத்திராகமத்தில் விடுதலை பெறுகிறான்; லேவியராகமத்தில் அவன் ஆண்டவருக்கு ஆராதனை செய்கிறான்.

லேவியராகமத்தின் உச்சகட்டம் : (Climax) வருடத்தில் ஒரு நாள் பிரதான ஆசாரியன் மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்து எல்லா மக்களுக்காகவும், தனக்காகவும் பலி செலுத்துதல் (16ம் அதிகாரம்) ஏதாவது தவறு செய்து இந்தப் பிரதான ஆசாரியன் இறந்து விட்டால், அவனது பிணத்தை எடுப்பதற்காக யார் உள்ளே போனாலும் அவர்களும் செத்துப் போவார்கள். இதற்காகவே இவன் தனது இடுப்பில் மணியும் தனது காலில் கயிறையும் கட்டிக் கொள்வானாம். ஒரு வேளை அவன் மரித்தால், அவனது சடலத்தை கயிறு மூலமாக வெளியே இழுத்துக் கொள்ள முடியும்.

இந்தப் புத்தகத்தைப் பற்றிய முக்கியக் குறிப்பு :

இந்தப் புத்தகத்தை மோசே ஒரு மாதத்தில் ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டு எழுதியிருக்கிறார். இதை எழுதி முடிக்கும்வரை இஸ்ரவேல் மக்கள் ஒரே இடத்தில் ஒரு மாத காலம் பாளையம் இறங்கி தங்கியிருந்தார்கள் (No geographical movement) என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசு கிறிஸ்து :

(1) போக்காடு (6:8) (2) பஸ்கா பண்டிகை (3) 5பலிகள் (4) பிரதான ஆசாரியன் இந்த நான்கும் இயேசுகிறிஸ்துவை குறிக்கிறது.



எண்ணாகமம் - புத்தகம் 4

பெயர் : இந்தப் புத்தகத்திற்கு 'எண்ணாகமம்' என்ற பெயர் அவ்வளவு பொருத்தமானதல்ல. மோசே எழுதிய 5 புத்தகங்களில் லேவியராகம், உபாகம் இந்த 2 புத்தகங்களிலும் எந்த வித சம்பவங்களும் (Incidents) சொல்லப்படவில்லை. வெறும் போதனைகள், ஆலோசனைகள் மாத்திரமே இடம் பெறுகின்றன. இஸ்ரவேல் மக்கள் பிரயாணப்படாமல் ஒரே இடத்தில் தான் தங்கியிருப்பார்கள். அதற்கு மாறாக இந்த எண்ணாகமப் புத்தகத்தில் இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலையிலிருந்து கானான் தேசத்திற்கு மிக அருகாமையிலுள்ள மோவாபியர் தேசத்திற்கு யோர்தான் நதிக்கு அருகில் வந்துவிடுகிறார்கள். இரண்டு எண்ணிக்கைகள் இரண்டுமுறை ஜனத்தொகை எடுக்கப்படுகிறது. அதாவது எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்ட இஸ்ரவேல் மக்களின் தொகை எண் (1:2) அதிகாரத்தில் முதல்முறையாக எடுக்கப்படுகிறது. இரண்டாவதாக வழிப்பயணத்தின்போது பிறந்த மக்கள் அதாவது கானான் தேசத்திற்குள் உண்மையாகவே நுழைந்த மக்களின் எண்ணிக்கை (26:2) எடுக்கப்படுகிறது. ஜனத்தொகை இரண்டுமுறை எடுத்த ஒரே காரணத்திற்காக இந்தப் புத்தகத்திற்கு எண்ணாகமம் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 7முறை இவர்கள் முறுமுறுத்திருக்கிறார்கள். அப்படியானால் இந்தப் புத்தகத்திற்கு 'முறுமுறுப்பு', 'முரட்டாட்டம்' என்ற பெயர்கள் இன்னும் அதிக பொருத்தமாக இருந்திருக்கும். இதற்கு நான் கொடுக்க விரும்பும் பெயர் "சீனாய் மலையிலிருந்து யோர்தான் நதிவரை பயணம்" என்ற பெயர்.

எழுதியவர் : இதை எழுதியது மோசே என்பதில் யாருக்கும் எந்த வித கருத்து வேறுபாடும் கிடையாது. லேவியராகமம் இஸ்ரவேல் மக்கள் சீனாய் மலையின் அடிவாரத்தில் Camp போட்டிருந்த ஒருமாத கால இடைவெளியை சித்தரிக்கிறது. ஆனால் எண்ணாகம புத்தகம் இஸ்ரவேல் மக்களின் 39 வருட வனாந்தர பயணத்தையும் அந்த கால இடைவெளியில் வனாந்திரத்தில் நடந்த சம்பவங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது.

ஏறக்குறைய 25 லட்சம் மக்கள் கொண்ட கூட்டம் வனாந்திரத்தில் அது பல மைல்கள் பரப்பளவில் கூடாரம் Tent போட்டிருக்க வேண்டும். இவர்களுக்கு உண்ண உணவும், உடையும் குளிக்க வசதியும் பிள்ளைகளைப் பாதுகாப்பதும் எவ்வளவு பெரிய ஒரு

காரியம். நம்மால் கற்பனை கூட செய்ய முடியாது. 40 ஆண்டுகள் இப்படி வனாந்தரத்தில் அலைந்தார்கள் என்று நினைக்கும் போது நமக்கே இந்த மக்கள் மேல் பரிவு ஏற்படுகிறது. ஆனால் இவர்கள் ஒழுங்காக, ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து இருந்திருந்தால் 11 நாட்களிலேயே எகிப்திலிருந்து கானான் தேசத்திற்கு வந்திருக்க முடியும். இவர்கள் முறுமுறுத்த ஒரே காரணத்தினால் தான் ஆண்டவர் இவர்களை 11 நாள் பயணத்தை 40 வருட பயணமாக மாற்றி அதாவது முறுமுறுத்த கூட்டத்தினருள் பயணத்தை எகிப்திலே ஆரம்பித்த மனிதர்களில் கடைசி மனிதன் சாகும் வரை ஆண்டவர் காத்திருந்து கடைசி மனிதன் செத்தவுடன் (காலேப், யோசுவா தவிர) இவர்களை கானான் தேசத்திற்குள் நுழைய அனுமதித்தார்

திறவுகோல் வசனம் : 14-22,23

நான் எகிப்திலும் வனாந்திரத்திலும் செய்த என் அடையாளங்களை, கண்டிருந்தும், என் சத்தத்திற்கு செவி கொடாமல் பத்துமுறை என்னைப் பரீட்சை பார்த்த மனிதரில் ஒருவரும் அவர்கள் பிதாவிற்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்.

மையக்கருத்து

அவிசுவாசம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையும் வாசலை அடைத்து விடுகிறது

புதிய ஏற்பாடு - ஜோடி வசனம்

சகோதரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் - எபி:3:12

திருப்புமுனை அதிகாரம் காதேஸ் வனாந்திரக் கலாட்டா

பாரான் என்ற வனாந்திரத்தில் காதேஸ் என்ற இடத்தில் பாளையம் இறங்கியிருக்கும் போது இந்த மக்கள் செய்த கலாட்டா கொஞ்சம் நஞ்சம் அல்ல. 40 நாட்கள் வேவு பார்த்து விட்டு வந்து தப்பான செய்தியை பரப்பி மக்களிடையே மனமடிவை இன்றைய Anthrax யைப் போல பரவி விட்டார்கள். அழுதார்கள், புலம்பினார்கள், மோசேயையும் ஆண்டவரையும் தூஷனம் செய்தார்கள். வேவு பார்த்த 12 பேர்களில் யோசுவா, காலேப் மாத்திரம், "நாம் பயப்பட வேண்டாம் அவர்களை கர்த்தர் நமது கரத்தில் ஒப்புக் கொடுப்பார்

என்று தைரியமாக சொன்னபோது அந்த மக்கள் இவர்கள் இருவரையும் கல்லெறிந்து கொல்லுவதற்கு முயற்சி செய்தார்கள்.

சூழ்நிலை கட்டுக்கு அடங்காமல் மோசமாக போய் கொண்டிருக்கும் போது, கர்த்தருடைய மகிமை பாளையத்தில் இறங்கி ஆண்டவர், "இந்த மக்கள் சாகும் வரைக்கும் வனாந்திரத்தில் அலைய வேண்டும் - வேவு பார்த்த 40 நாளுக்கும் சமமாக 40 வருடங்கள் வனாந்திரத்திலே அலைய வேண்டும்" என்று தனது முடிவை அறிவிக்கிறார்.

இந்த மக்கள் காதேஸ் வனாந்தரத்தில் செய்த தவறுக்கு ஆண்டவர் எப்படி தண்டனை கொடுக்கிறார் தெரியுமா? குருட்டாட்டம் பிடித்த மக்களைப்போல அந்த காதேஸ் வனாந்தரத்தை மூன்று முறை சுற்றி வரச் செய்கிறார். உதாரணமாக கோவையை காதேஸ் வனாந்தரமாகவும் சென்னையை கானான் தேசம் என்றும் வைத்துக் கொள்ளுங்கள். முதலாவது கோவை வந்த பின்பு, கலாட்டா செய்த பின்பு அவர்களை கோவையிலிருந்து பாலக்காடு வரை அனுப்பிவிட்டு மீண்டும் கோவை வரச்செய்கிறார். அடுத்து கோவையிலிருந்து திருப்பூர் - தாராபுரம் உடுமலை போகவிட்டு மீண்டும் கோவைக்கு கொண்டு வருகிறார். மூன்றாவது முறையாக கோவையிலிருந்து புறப்பட்டு, மதுரை சென்று சேலம் வழியாக சென்னையை அதாவது கானான் தேசத்தை நோக்கி அவர்கள் போகிறார்கள் இந்த மக்கள் காதேஸ் வனாந்தரத்தை சுற்றி சுற்றி வந்ததையும் மூன்றாவது முறையாக கானான் தேசத்தை நோக்கி பிரயாணம் தொடர்ந்ததையும் நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

ஆண்டவரது அற்புதங்களையும், அடையாளங்களையும் நேரில் பார்த்த மூத்த பரம்பரையினர் தான் முறுமுறுத்து முரட்டாட்டம் செய்து வழியில் அழிந்து போனார்கள் (1-14 அதிகாரம்) இளைய பரம்பரை (21 -36) யினர் மாத்திரமே கானான் தேசத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

இன்றைக்கும் ஆண்டவர் காதேஸ் வனாந்தரத்தை ஒரு போதும் அனுமதிக்கமாட்டார். அவிசுவாசத்திற்கு ஆண்டவர் கொடுத்த தண்டனை நோக்கமில்லாமல் எங்கு போகிறோம் என்று தெரியாமல் அவர்களை அலையவிட்டார். இறுதியில் மரித்து வனாந்தரத்திலே புதைக்கப்பட்டார்கள்.

ஆண்டவர் ஒழுங்கையும், கீழ்ப்படிதலையும், நம்மில் எதிர்பார்க்கிறார். இன்றைக்கும் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் சபையின் சரித்திரத்திலும் காதேஸ் வனாந்தரத்தில் நிற்கும் மக்களை ஆண்டவர் தண்டிப்பார்.

"வெயிலில் அலைந்தால்தான் நிழலின் அருமை தெரியும்" என்ற பாடத்தை இப்பொழுதுதான் பிறந்த குழந்தையாகிய இஸ்ரவேல் தேசத்திற்கு ஆண்டவர் கற்றுக் கொடுக்க விரும்பினார்.

இயேசு கிறிஸ்து

1) வனாந்திரத்தில் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பம் (21:4-9) (வெண்கல) சர்ப்பமானது மோசேயினால் உயர்த்தப்பட்டது போல் மனுஷகுமாரனும் உயர்த்தப்பட வேண்டும் (யோ 3:14)

2) வனாந்திரத்தில் கொடுக்கப்பட்ட மன்னா (யோ3:14)

3) அடிக்கப்பட்ட கன்மலை (யாத்17:6) (1கொரி 10:4)

4) நட்சத்திரம் மற்றும் செங்கோல் (24:17)



உபாகமம் - புத்தகம் 5

பெயர் :

லேவியராகமம் புத்தகம் ஆசாரியர்களுக்காக (Priest) எழுதப்பட்டது; ஆனால் உபாகமம் புத்தகம் இஸ்ரவேலின் சாதாரண குடிமக்களுக்காக (Laymen) முக்கியமாக எகிப்து தேசத்தை விட்டுப் புறப்பட்ட பின்பு பிரயாணத்தின் போது பிறந்த புதிய இளம் பரம்பரையினருக்காக எழுதப்பட்டது. வனாந்திரப் பயணத்தின் போது மடியாமல், (லேவியராகமம் பயணத்தின் தொடக்கத்தில் எழுதப்பட்டது ஆனால் உபாகமம் பயணத்தின் முடிவில் எழுதப்பட்டது). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குள் நுழையப் போகிற இளைய பரம்பரைக்காக எழுதப்பட்டது.

மோசேயின் கடைசிப் புத்தகமாகிய இப்புத்தகத்தில் அவரது பிரிவு உபச்சாரப் பிரசங்கம் Farewell Speech அடங்கியிருக்கிறது. லேவியராகமத்தில் கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்கள் இங்கு மீண்டும் இரண்டாவது முறையாக விளக்கப்படுகிறது. இதனால் உபாகமப் புத்தகம் இரண்டாவது சட்டப் புத்தகம் என்றும் அழைக்கப்படுகிறது. இப்புத்தகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள இன்னொரு பெயர், "ஞாபகப் புத்தகம்" காரணம் இளைய பரம்பரையினர் ஆண்டவர் செய்த அற்புதங்களை மறக்காமல் அவரது கற்பனைகளைக் கைக்கொள்ள நினைவு படுத்தப்படுகிறார்கள். சீனாய் மலையில் ஆண்டவர் கொடுத்த சட்டதிட்டங்கள் இங்கு நிலைநிறுத்தப்படுகிறது. லோக்சபாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், ராஜ்யசபாவில் நிலைநிறுத்தப்பட்டு பின்பு மக்களுக்கு அது நடைமுறை சட்டமாக மாறுகிறது. அதுபோலவே சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட லேவியராகம சட்டதிட்டங்கள் இந்த உபாகமம் புத்தகத்தில் விளக்கப்பட்டு, உறுதி செய்யப்பட்டு, மக்களது நடைமுறை வாழ்க்கையில் அச்சட்டங்கள் அமுலுக்கு வருகிறது

ஆசிரியர் :

இதை எழுதியது மோசே என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இருப்பினும் அவரது மரணத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள இதன் கடைசி அதிகாரத்தை (34) யோசுவா எழுதியிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

காலகட்டம் :

இஸ்ரவேல் மக்களின் 40 வருட பயணத்தின் கடைசி வருடம் மோவாபிய தேசத்தின் சமபூமியில் எரிகோவிற்கும் யோர்தான் நதிக்கும் கிழக்கு திசைக்கு வந்தபோது ஒரு மாத இடைவெளி காலத்தில் எழுதப்பட்டது - கி.மு.1405

திறவுகோல் வசனம் :

கீழ்படிந்தால் ஜீவன்; கீழ்படிய மறுத்தால் மரணம். கீழ்படிந்தால் ஆசீர்வாதம்; இல்லையேல் சாபம். (10:12,13)

மையக்கருத்து :

கீழ்படிதலின் ஆசீர்வாதமும், பாவத்தின் சாபமும் வெள்ளி கம்பியைப் போல இப்புத்தகத்தில் ஓடுகிறது.

மோசேயின் மூன்று பிரசங்கங்கள் இப்புத்தகத்தில் இடம் பெறுகின்றன. 1-4 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டுள்ள முதல் பிரசங்கத்தில் மோசே கடந்த காலத்தில் நடந்த சம்பவங்களை விளக்குகிறார். இவர்களது பெற்றோர்கள் கீழ்ப்படியாமையினாலும், முரட்டாட்டத்தினாலும் முறுமுறுப்பினாலும் வனாந்தரத்தில் எப்படி அழிந்து போனார்கள்; எப்படி ஆண்டவர் அவர்களை அதிசயமாய் விடுதலையாக்கினார் என்றும் விளக்குகிறார்.

இரண்டாவது பிரசங்கத்தில் (4-26 அதிகாரங்கள்) ஆண்டவரது பத்துக் கட்டளைகளை விளக்கி இந்த இஸ்ரவேல் தேசம் பலம் வாய்ந்த தேசமாக மாற வேண்டுமானால் அவர்களது கடமை என்ன நீதி நியாயங்கள் எப்படி விசாரிக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் எப்படி தண்டிக்கப்பட வேண்டும் - அதாவது அந்நாட்டின் அரசியல் சாசனத்தை அவர் வகுக்கிறார்.

மூன்றாவது பிரசங்கத்தில் (28-34அதிகாரங்கள்) இனி எதிர்காலத்தில் இஸ்ரவேல் நாட்டிற்கு என்ன நடக்கும் என்பதை விளக்கி விட்டு தனக்குப் பிறகு யோசுவாவை தலைவராக நியமிக்கிறார்.

கிறிஸ்து :

மோசே கிறிஸ்துவின் மாதிரி. மோசேக்கும் கிறிஸ்துவிற்கும் உள்ள ஒற்றுமை : 1. குழந்தை பருவத்தில் இருவரது உயிருக்கும் எதிரிகளினால் ஆபத்து வந்தது. 2. மோசே 3 விதத்தில் இயேசுவின் மாதிரியாகத் திகழ்ந்தார். தீர்க்கதரிசியாக, ஆசாரியனாக, ராஜாவாக அதாவது மோசே ராஜ பதவி வகிக்காவிட்டாலும் அந்த ஸ்தானத்தில்

இருந்து மக்களைத் தலைமை தாங்கி நடத்தி ஆளுகை செய்தான். இயேசுவின் இந்த 3 குணங்களும் அடங்கிய ஒரே மனிதன் இந்த மோசே. 3. இருவருமே இரட்சகர்கள் மக்களை விடுதலையாக்கினார்கள். 4. இருவருமே சொந்த ஜனங்களினால் கைவிடப்பட்டார்கள்.

உலகத்திலுள்ள அனைத்து மதங்களின் கோட்பாடுகளும் இந்த மோசேயின் 5 ஆகமங்களிலிருந்து எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. உலகத்திலுள்ள எல்லா மதங்களின் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் ஆராய்ந்து பார்த்தால், அவைகளில் கொடுக்கப்பட்டிருக்கிற கருத்துக்கள் அனைத்திற்கும் மோசேயின் புத்தங்களில் கூறப்பட்டவைகள்தான் அடிப்படையாக ஆதாரமாக அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. கீழே கொடுக்கப்பட்டிருக்கிற அனைத்து மதங்களின் கோட்பாடு புத்தகங்கள் மோசே வாழ்ந்த காலத்திற்கு பின்புதான் எழுதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

1. சோரோஸ்டார் Zoroaster கி.மு.1200 ல் எழுதிய மேதிய பெர்சிய மதங்களின் புத்தகம்
2. இந்துக்களின் 4 வேதங்கள் கி.பி.1100
3. சீனா தேசத்தின் கன்பூசியஸ் எழுதிய 5 ராஜாக்கள் புத்தகம் கி.மு. 1100
4. கௌதம புத்தர் எழுதிய 'பிதக்கில்' என்ற புத்தகம் கி.மு.600
5. முகமதுநபி எழுதிய 'குர்ரான்' கி.பி.600

மேலே கொடுக்கப்பட்டுள்ள எல்லா புத்தகங்களும் மோசேக்குப் பிறகு 300லிருந்து 2000 ஆண்டுக்களுக்குப் பின்பு எழுதப்பட்டது. இப்புத்தகங்கள் அனைத்தும் மோசே எழுதிய புத்தகத்திலிருந்தும், புதிய ஏற்பாட்டிலிருந்தும், பழைய ஏற்பாட்டிற்கு எழுதப்பட்ட விளக்க புத்தகமான யூதர்களின் டால்முட் Talmud புத்தகத்திலிருந்தும் எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்ககது என்று வேத பண்டிதர் டேக்ஸ் எழுதுகிறார் (பக்கம் 238)

யோசுவா - புத்தகம் 6

பெயர்

இந்தப் புத்தகத்தின் கதாநாயகன் நிச்சயமாக யோசுவா தான். எனவே இந்தப் புத்தகத்திற்கு யோசுவா என்று பெயர் கொடுத்திருப்பது பொருத்தமானது தான். இருப்பினும் ஒரு புத்தகத்தின் சம்பவங்களை வைத்து அதற்கு பெயர் கொடுப்பது தான் சாலச் சிறந்தது. உதாரணமாக நமது தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அம்மாவட்டத்தில் பிறந்த முக்கியமான அரசியல் தலைவர்களின் பெயரை அந்த மாவட்டத்திற்கு சூட்டினார்கள். ஆனால் அது பல குழப்பங்களை - ஜாதி கலவரங்களை உருவாக்கியதின் நிமித்தம் - இப்பொழுது மீண்டும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அந்த மாவட்டத்திலுள்ள முக்கியமான நகரின் பெயரை அந்த மாவட்டத்திற்கு சூட்டியிருப்பது சாலச் சிறந்தது. அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இந்தப் புத்தகத்திற்கு, "வாக்குத்தத்தங்களை சுதந்தரிப்பது" - என்ற பெயர் சாலப் பொருந்தும்.

யுத்தவீரர்கள், படைத்தளபதிகள் படிக்க வேண்டிய ஒரு முக்கியமான புத்தகம். அவர்களுக்கு இது ஒரு நல்ல Hand Book ஒரு யுத்தத்தை எப்படி தலைமைதாங்கி நடத்துவது - ஒரு நாட்டை எப்படிப் பிடிப்பது - போன்ற பல யுத்திகள், பல War Tips இதில் அடங்கியிருக்கிறது. உதாரணமாக இங்கு யோசுவா கையாளும் ஒரு யுத்த யுக்தி என்ன தெரியுமா? ஒரு நாட்டைப் பிடிக்க வேண்டுமானால் அதை இரண்டு துண்டாகப் பிரித்து தனித்தனியாக போராடி வெற்றி கொள் என்ற யுக்தி கையாளப்பட்டுள்ளது.

Divide & Conquer பிரித்து வெற்றிபெறுதல்

யோர்தானைக் கடந்தவுடன், யோசுவா முதலாவது கானான் தேசத்தின் மத்திய பகுதியாகிய எரிகோ, ஆயி - என்ற பகுதியை பிடிக்கிறான். கானான் மத்திய பகுதியைப் பிடித்தபின்பு அடுத்து, எருசலேமை உள்ளடக்கிய தென் பகுதியைக் கைப்பற்றுகிறான். மத்திய மற்றும் தென்பகுதியை பிடித்த பின்பு இறுதியாக வடபகுதியின் மேல் போர் தொடுத்து அதையும் கைப்பற்றுகிறான். உதாரணமாக இந்தியாவை ஜெயிக்க வேண்டுமானால் முதலில் அதன் மத்தியப் பகுதியாகிய ஒரிஸ்ஸா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், ஆந்திராவை கைப்பற்றுவது. பின்பு தென்னிந்தியாவை தமிழ்நாடு, கேரளா, கர்நாடகாவைக் கைப்பற்றுவது. அதன் பின்பு இறுதியாக வட பகுதியாகிய உ.பி, பஞ்சாப், பீகார், ஹரியானா - போன்றவற்றைக்

கைப்பற்றுவது. இந்த முறையைத்தான் யோசுவா கைக்கொண்டான். தென்பகுதியில் உள்ள ராஜாக்களும் வடபகுதியிலுள்ள ராஜாக்களும் கூட்டு சேர்ந்து தன்னை எதிர்க்காதபடிக்கு அவர்களுக்கு நடுவில் நுழைந்து மையப்பகுதியைக் கைப்பற்றி கூட்டு சேர்வதைத் தடுத்துவிட்டான்.

இப்புத்தகத்தை 3 பகுதியாக பிரிக்கலாம்.

முதல்பகுதி (Planning) ஒரு மாதம் கி.மு 1405-ம் ஆண்டு மார்ச் முதல் ஏப்ரல் வரை

முதல் பகுதி (1-5 அதிகாரங்கள்) யுத்தத்திற்கு ஆயத்தப்படுதல், திட்டமிடுதல். நமது வாழ்க்கையிலும் ஆண்டவருக்காக எதையாவது சாதிக்க விரும்பினால், நாம் அவரது பாதத்தில் அமர்ந்து, திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

இரண்டாவது பகுதி வெற்றி பெறுதல் (Victory) இது கி.மு. 1405 முதல் 1398 வரை 7 ஆண்டுகள்

இரண்டாவது (Victory) (6-13) பகுதி, கானான் தேசத்தின் 3 பகுதிகளையும் யுத்தம் தொடுத்து அதை வெற்றி பெறுதல். ஏறக்குறைய 30 எதிரிகளின் படைகளை இவன் தோற்கடிக்கிறான். இந்த யுத்தங்கள் 7 ஆண்டுகள் நடக்கிறது. ஆம்! கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு போராட்டம், நாமும் இயேசு கிறிஸ்துவிற்காக நல்ல போராட்டத்தைப் போராட முடிவு எடுப்போம்.

மூன்றாவது (Possession) சொந்தமாக்குதல்

மூன்றாவது பகுதி கி.மு. 1398 முதல் 1390 வரை ஏறக்குறைய 7 அல்லது 8 ஆண்டுகள் ஜெயித்த எல்லைப்பகுதிகளை இஸ்ரவேலின் 12 கோத்திரங்களுக்கும் பிரித்துக் கொடுத்தல். இது மிகவும் சிக்கல் நிறைந்த பகுதி. பிள்ளைகளுக்கு சொத்துப் பிரிப்பதில் பல சிக்கல் இருப்பது போல் ஒரு கூட்டணி அரசியல் கட்சி தேர்தலில் வெற்றி பெற்ற பின்பு யார் யாருக்கு எந்தெந்த கட்சிக்கு எந்தெந்த மந்திரிப் பதவி கொடுப்பது போன்றது.

இதில் நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான உண்மை ஒன்று இருக்கிறது. கி.மு. 1398ம் ஆண்டு அதாவது மிகுதியான கானான் தேசத்தின் பகுதிகளை வெற்றி பெற்ற போது இன்னும் வெற்றி கொள்ள வேண்டிய சிறு சிறு பகுதிகள் இருப்பினும் யோசுவா மிக ஞானமாக தனக்கு 102 வயதாகிவிட்டதை உணர்ந்து தொடர்ந்து யுத்தம் செய்வதை நிறுத்திவிட்டு வெற்றி பெற்ற பகுதிகளை பிரிக்கும்

மிக சிக்கலான வேலையை முடிக்க தனது மீதியுள்ள 8 ஆண்டுகளை அவன் பயன்படுத்தினான்.

அப்பா சொத்து சம்பாதிப்பதிலேயே ஈடுபட்டு, சொத்தை பிள்ளைகளுக்கு பிரித்துக் கொடுக்கும் முன்பு திடீரென்று இறந்து விட்டால் என்ன நடக்கும்? பிள்ளைகள் சொத்தைப் பிரிப்பதில் சண்டை போட்டு, ஒருவருக்கொருவர் தாக்கி அப்பா சம்பாதித்த எல்லா சொத்துக்களையும் இழந்து விடுவார்கள். அப்பா உயிரோடு இருக்கும் போதே, இந்த சொத்துக்களை பிரித்திருந்தால் இந்த பிரச்சனை வராது.

இந்த உண்மையை உணர்ந்து தான் தனது மீதமுள்ள 8 ஆண்டுகளையும் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் எல்லைகளைப் பிரித்துக் கொடுக்கிறான். இந்தப் பகுதிகளை யுத்தம் செய்து, வெற்றி பெற 7 ஆண்டுகள் தான் ஆனது. ஆனால் அதை இவர்களுக்குள் பிரித்துக் கொடுக்க 8 ஆண்டுகள் ஆகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

யோர்தானுக்கு கிழக்குப் பக்கம் 2½ கோத்திரங்களும் யோர்தானுக்கு மேற்குப்பகுதியில் 9½ கோத்திரங்கள் பின்பு 6 அடைக்கலப்பட்டணங்கள் மற்றும் 48 பட்டணங்கள் லேவியர் கோத்திரத்திற்கும் நாடு முழுவதும் பரவலாகக் கொடுக்கப்பட்டது.

ஆசிரியர்

24:26ம் வசனத்தின்படி யோசுவா தான் இதை எழுதினார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. யோசுவாவின் மரணத்தைப் பற்றிய 24:29-33 குறிப்பை எலியேசர், பினகாஸ் இருவரும் நியாயாதிபதிகள் காலத்தில் சேர்க்கப்பட்டது.

காலம் – இடம் கி.மு. 1405 முதல் 1390

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் எழுதப்பட்ட முதல் புத்தகம். இப்புத்தகம் எழுதப்பட்ட போது ராகாப் எனப்பட்ட வேசி (இயேசுவின் மூதாதையர் வரிசையில் இடம் பெறும் 2வது அன்னியப் பெண்) உயிரோடு இருந்தாள் (6:25) என்பது குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் வசனம் :

1 : 2,3 உங்கள் காலடி வைக்கும் இடம் அனைத்தையும் கொடுப்பேன். 23:14 கர்த்தர் உங்களுக்குச் சொன்ன ஒரு வார்த்தையும் தவறிப் போவதில்லை.

மையக்கருத்து

தேவன் வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்குள் நுழைதல், வெற்றி பெறுதல் - அதை சுதந்தரமாக்குதல் (Entering, Conquering & Occupying & Possessing) ஆண்டவர் நமக்கு அருளிய வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் அவர் நிச்சயம் நிறைவேற்றுவார்.

இயேசு கிறிஸ்து

யோசுவா-இயேசுவின் நிழல்-5ம் அதிகாரத்தில் யோசுவாவிற்கு தரிசனமாகும் கர்த்தருடைய சேனையின் அதிபதி இயேசு. மோசேயினால் செய்ய முடியாத செயல்களையும், அரிய காரியங்களையும் யோசுவாவினால் செய்ய முடிந்தது. மோசே ஒரு Statesman ஒரு நல்ல அரசியல் தலைவன். அவன் ஒரு நீண்ட பயணத்தை வேண்டுமானால் தலைமை தாங்கி நடத்த முடியும். ஆனால் பல யுத்தங்களைத் தலைமை தாங்கி நடத்தும் தாலந்து, திறமை மோசேக்கு கிடையாது. அந்தத் திறமை யோசுவாவிற்குத்தான் உண்டு - யோசுவா was a born - soldier அவன் பிறக்கும் போதே பட்டயத்தோடும், கேடயத்தோடும் பிறந்தவன். அவன் கி.மு. 14ஆம் நூற்றாண்டின் வின்ஸ்டன் சர்ச்சில்(இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது அதன் Allies-ன் வெற்றிக்கு முக்கிய முதுகெலும்பாயிருந்தவன். இங்கிலாந்தின் வின்ஸ்டன் சர்ச்சில் அதாவது 2வது உலகமகா யுத்தத்தின் ஆட்ட நாயகன் (Man of the match) என்று கூறினால் மிகையாகாது.

அதுபோலவே மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் செய்ய முடியாததை இயேசுவின் கிருபைப் பிரமாணம் செய்து முடித்தது.

நியாயாதிபதிகள் - புத்தகம் 7

இந்த நியாயாதிபதிகள் புத்தகம் இதற்கு முந்திய யோசுவா புத்தகத்திற்கு முற்றிலும் நேர்மாறானது. யோசுவா புத்தகத்தில் இஸ்ரவேல் மக்கள் யோசுவாவின் தலைமையில் வெற்றியின் மேல் வெற்றி பெற்றார்கள். அவர்களைச் சுற்றிலும் வாழ்ந்த புறஜாதியார் இவர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள். ஆனால் யோசுவாவும், அவனோடு இருந்த சந்ததியினரும் மரித்த பின்பு இஸ்ரவேல் மக்கள் தோல்விக்குப் பின் தோல்விகளை சந்தித்தார்கள். இவர்களுக்கு எந்த ஜாதியார் அடிமைகளாக இருந்தார்களோ, அவர்களுக்கு இவர்கள் அடிமைகளாக மாறினார்கள். கீழ்ப்படியாமையின் நிமித்தமும், விக்கிரக ஆராதனையின் நிமித்தமும் ஆண்டவர் இவர்களை கைவிட்டார்.

இந்த புத்தகத்தில் நியாயாதிபதிகள் என்ற பெயரைக் காட்டிலும் 'விடுதலை வீரர்களின் சரித்திரம்' அல்லது தீவிரவாதிகளின் ஆட்சி காலம்' என்ற பெயர்கள் பொருத்தமானது. ஒரு வேதாகம பண்டிதர் இதற்கு 'தோல்விகளின் புத்தகம்' (Book of Failures) என்று பெயர் கொடுக்க விரும்புகிறார். இப்புத்தகத்தில் 'கோர்ட்', 'வழக்கு போடுதல்', 'நியாயம் விசாரித்தல்' தண்டனை வழங்குதல் போன்ற காரியங்கள் கொடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் : இப்புத்தகத்தை எழுதியவர் யார் என்று சரியாக கணிக்க முடியாது' அந்த நாட்களில் ராஜா இல்லை என்ற வார்த்தையிலிருந்து, இந்த புத்தகம் ராஜாக்களின் காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று ஓரளவு கணிக்க முடிகிறது. ஒரு வேளை சாமுவேல் தீர்க்கதரிசி இப்புத்தகத்தை தொகுத்திருக்கலாம் என்பது பலருடைய கணிப்பு. காரணம் நியாயாதிபதிகள் காலத்தையும், ராஜாக்களின் காலத்தையும் இணைக்கும் பாலமாக இந்த சாமுவேல் தீர்க்கதரிசி அமைந்திருக்கிறார்

காலம் : சரியாகச் சொல்லப்போனால் இந்தப்புத்தகம் கி.மு. 1380 லிருந்து 1045 வரை உள்ள 335 வருட கால இடைவெளியில் நடந்த சம்பவங்களை சித்தரிக்கிறது. ஆனால் ஏலி, சாமுவேலின் 2 மகன்கள் யோவேல், அபியா (8:2) ஆகிய நான்கு பேரும் இந்த நியாயாதிபதிகளின் குழுவின் கடைசி அங்கத்தினர்களாக இருப்பதால்

நியாயாதிபதிகளின் காலம் சாமுவேல் புத்தகத்திலும் 30 ஆண்டுகள் தொடர்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. யோசுவாவிற்கும், சவுல் ராஜாவிற்கும் இடையே உள்ள காலம் ஏறக்குறைய 365 ஆண்டுகள், 17 நியாயாதிபதிகள் (சாமுவேலையும் சேர்த்து) இஸ்ரவேல் மக்களை ஆட்சி செய்திருக்கிறார்கள்.

திறவுகோல் வசனம் : "அவனவன் தன் தன் பார்வைக்கு சரியானபடி செய்தார்கள்", இதற்கு 'தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்' என்று கூறுவதுதான் பொருத்தமான விளக்கம்.

கர்த்தருடைய கோபம் மூண்டது என்பதும் இப்புத்தகத்தில் அடிக்கடி நாம் வாசிக்கிறோம்.

இப்புத்தகத்தில் நடக்கும் சம்பவங்களை ஒரு ரீல் சுற்றுவது போல் நீங்கள் சுற்ற வேண்டுமானால், மீண்டும் மீண்டும் சுற்றி சுற்றி வரும் ரீல் (Cycle) இதுதான் 1. பாவம் 2. அடிமைத்தனம் 3. ஆண்டவரை நோக்கி முறையிடுதல் கதறுதல் 4. ஆண்டவரின் மீட்பு 5. விடுதலையும், அமைதியும் இதைத் தொடர்ந்து மீண்டும் பின்வாங்குதல், அடிமைத்தனம் இந்த மாதிரி 7 ரீல்கள் இப்புத்தகத்தில் சுழலுகிறது.

கற்றுக் கொள்ளும் பாடம் : இந்தப் புத்தகத்திலிருந்து நாம் ஒரு பாடம் கற்றுக் கொள்ள விரும்பினால், அந்த பாடத்திற்குப் பெயர் இதுதான். ஆண்டவர் இவர்களுக்குக் கொடுத்த தண்டனையிலிருந்து இவர்கள் எந்த பாடத்தையும் கற்றுக் கொள்ள தவறியது தான் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்.

இப்புத்தகத்தில் மொத்தம் 13 நியாயாதிபதிகளின் ஆட்சிக்காலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 13 பேர்களைத் தவிர 1 சாமுவேல் புத்தகத்தில் இன்னும் 4 நியாயாதிபதிகளைப் பற்றி வாசிக்கிறோம். அவர்கள் ஏலி, சாமுவேல், சாமுவேலின் மகன்கள், யோவேல், அபியா (8:2).

மையக்கருத்து : கீழ்ப்படியாமை, விக்ரக ஆராதனை நம்மை அடிமைத்தனத்திற்கு வழி நடத்துகிறது. ஆண்டவரை நோக்கி கதறும் போது, நாம் எவ்வளவு மோசமானவர்களாக இருந்தாலும் நமது ஜெபத்தைக் கேட்டு நமக்கு ஆண்டவர் விடுதலை கொடுக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் இந்தப் புத்தகத்திற்கு இணையாக, ஒத்து இருப்பது - கலாத்தியர் நிரூபம். ஆண்டவர் யோசுவா (இயேசு) மூலம் கொடுத்திருக்கிற சுயாதீனத்தை விட்டு விட்டு சடங்காச்சாரம் என்ற அடிமைத்தனத்தை நாடுவது.

முக்கியமான பாத்திரங்கள் : தெபோராள் - நாட்டுப்பற்றுள்ள வீராங்கனை, பராக்கிரமசாலியான கிதியோன், அவசரப்பட்டு பொருத்தனை செய்த யெப்தா, பலவீனமான பராக்கிரமசாலியான சிம்சோன். நீதி, நேர்மை தவறாமல் ஆட்சி செய்யக் கூடிய ஆட்சியாளர்கள் இஸ்ரவேல் மக்களுக்குத் தேவை

இயேசு கிறிஸ்து : இதில் வரும் அனைத்து நியாயாதிபதிகளும், ஆட்சியாளர்களும் இயேசு கிறிஸ்துவிற்கு முன்மாதிரி. அன்னியரின் (பிசாசின்) அடிமைத்தனத்திலிருந்து மக்களை காப்பாற்றும் இரட்சகர். இதில் பலர் இராஜாவிற்கு சமமான யுத்த வீரர்கள் (ஒத்னியேல், கிதியோன்) ஏலி ஒரு ஆசாரியன், சாமுவேல் ஒரு தீர்க்கதரிசி, அதாவது இயேசுகிறிஸ்து - ஒரு ராஜா ஒரு பிரதான ஆசாரியன் ஒரு தீர்க்கதரிசி இம்மூன்றும் ஒருங்கிணைந்தவர்தான் இயேசு கிறிஸ்து.



ரூத் - புத்தகம் 8

முன்னுரை : இந்த ரூத் புத்தகம் நியாயாதிபதிகளின் காலத்தில் நடந்த ஒரு மோவாபிய பெண்ணின் வரலாற்றை சித்தரிக்கும் புத்தகம். வேதாகமத்தில் உள்ள 66 புத்தகத்தில் இரண்டு புத்தகங்கள் 'பெண்களை' மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கிறது. ஒன்று 'ரூத்' அடுத்தது 'எஸ்தர்' புத்தகம்.

'எஸ்தர்' புத்தகத்தில் ஒரு யூதப் பெண் யூதரல்லாத புறஜாதி கணவனை திருமணம் செய்கிறாள். ஆனால் இந்த ரூத் புத்தகத்தில் ஒரு யூதன் புறஜாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்கிறான். தனது இரட்சிப்பின் திட்டத்தில் யூதரல்லாத புறஜாதியாருக்குள் ஒரு ஆணையும், பெண்ணையும் தெரிந்தெடுத்து அவர்கள் மூலம் இயேசு கிறிஸ்து பிறந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது மனித ஞானத்திற்கு எட்டாத ஆண்டவரது திட்டம்.

காலம் : நியாயாதிபதிகள் காலம் கி.மு. 1380 முதல் 1045 வரை உள்ள கால இடைவெளியின் பின்பகுதியில் இச்சம்பவம் நடந்திருக்கக்கூடும். ரூத் 1:1 வசனத்தின்படி, "நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்து வரும் நாட்களில்" இது நடந்தது என்று கூறுகிறது.

இந்த ரூத் மோவாபியப் பெண்மணி. மோவாபியர்கள் 'லோத்தின்' சந்ததி என்பதை நாம் மறக்கக் கூடாது. இவள் புறஜாதியாக இருந்தும் இவள் சந்ததியின் மூலமாக இரட்சகர் இயேசு பிறந்தது குறிப்பிடத்தக்கது. புறஜாதியாருக்கும் இயேசு கிறிஸ்து மூலமாக 'இரட்சிப்பு' உண்டு என்ற உண்மையை இந்த ரூத்தின் சரித்திரம் விளக்குகிறது.

ஆசிரியர் : இதை யார் எழுதியது என்பதைத் தீர்க்கமாகக் கூற இயலாது. சாமுவேல் எழுதியதாகச் சிலர் கூறுகிறார்கள். ஆனால் சாமுவேல் வாழ்ந்த காலத்தில் தாவீது ராஜாவாகப் பதவி ஏற்கவில்லை. தாவீது ராஜாவாக இருந்த போதோ அல்லது பல ஆண்டுகள் கழித்தோ இப்புத்தகம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று பலர் கருதுகிறார்கள். எனவே இதை ஏசாயா தீர்க்கதரிசி எழுதியிருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

புத்தக சுருக்கம் : 4 பகுதிகளாகப் பிரிக்கலாம்

1. மோவாபியர் தேசத்தில் நடந்தவைகள் (10 ஆண்டுகள்) 1:1-18
2. பெத்லகேமில் உள்ள வயல்வெளியில் நடந்தவை (ஒரு மாதம்) 1:19, 2:23
3. போவாஸின் வாற்கோதுமை களத்தில் நடந்தவை (ஒரு நாள் சம்பவம்) 3:1-18
4. பெத்லகேம் பட்டணத்தில் நடந்தவை (ஒரு வருடம்) 4:1-22

மையக்கருத்து : போவாஸ் ரூத்தைக் காட்டிலும் 20 வயது மூத்தவன். 'உறவின் மூலம் ஏற்படும் மீட்பு' **(Kinsmen Redemption)** தான் இப்புத்தகத்தின் மையக்கருத்து. இது 13 தடவை இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திறவுகோல் வார்த்தை : இரத்த உறவின் மூலம் மீட்பு, இரத்தத்தின் மூலம் ஏற்படும் உறவு. புதிய ஏற்பாட்டில் இராப்போஜனத்தின் மூலம் நமக்கும் இயேசுவிற்கும் இடையே இரத்தத்தின் மூலம் உறவு ஏற்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் வசனம் : 1:16,17 உன் ஜனம் என் ஜனம் உமது தெய்வம் எனது தெய்வம், மரணமேயல்லாமல் வேறெதுவும் நம்மைப் பிரிக்காது.

திறவுகோல் அதிகாரம் : 4-ம் அதிகாரம் இதில் உள்ள 22 வசனத்தின் மூலம் ஏழையான, ஆதரவற்ற ஒரு விதவைக்கு போவாஸ் மூலம் மறுவாழ்வு கிடைக்கிறது. ஒரு புறஜாதிப் பெண்ணின் ஆணித்தரமான விசுவாசத்தை ஆண்டவர் கனம் பண்ணுகிறார். ஒரு புறஜாதி மோவாபியப் பெண் தாவீதிற்கும் இயேசுகிறிஸ்துவிற்கும் தாயாக மாறும் ஒரு அற்புதத்தை இங்கே வாசிக்கிறோம். ஆண்டவரின் இரட்சிப்பின் திட்டத்தில் ஜாதி தேசம் இவற்றிற்கு இடம் கிடையாது.

இயேசு கிறிஸ்து : நகோமியின் நிலத்தை விலை கொடுத்து வாங்கவும் ரூத்தை மறுமணம் செய்யவும் முன்வந்த போவாஸ் இயேசுவிற்கு நிழலாட்டம். இங்கே போவாஸ் ஒரு இரட்சகனாக வெளிப்படுகிறார்.

ரூத் புத்தகத்தில் உள்ள யூத பண்பாட்டைக் குறித்த எனது சொந்தக் கருத்து

இந்தப் புத்தகத்தின் அனைத்து சம்பவங்களும் வரப்போகிற இயேசு இரட்சகரை வெளிப்படுத்துகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இருப்பினும் நமது இன்றைய தமிழ் பண்பாட்டிற்கும் அந்தக் காலத்தில் நிலவிய யூத பண்பாட்டிற்கும் இடையே ஒரு பெரிய முரண்பாடு காணப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ரூத் ஒரு 'குணசாலியான பெண்' (3:11) என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இருப்பினும் அவள் போவாஸ் படுத்திருக்கும் போது அவளாக அவனைத் தேடி அவனது படுக்கையில் போய் அவனது காலடியில் அவனது போர்வையை விலக்கிப் படுத்துக் கொள்ளுவதும் இந்த யோசனையை அவளது மாமியாரே கொடுப்பதும் நமது தமிழ் பண்பாட்டிற்கு ஒத்து வராது. ஏற்க முடியாதது என்ற கருத்தை மாத்திரம் இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன். ஆனால் இங்கே நாம் வாசிப்பது தமிழர் சரித்திரம் அல்ல. யூதர்கள் சரித்திரம் யூதர்கள் பண்பாடு. நமது பண்பாட்டை வைத்துக் கொண்டு இன்னொரு நாட்டின் பண்பாட்டை குறை கூற நமக்கு உரிமையில்லை. இருப்பினும் இரு பண்பாடுகளுக்கு நடுவிலே ஏற்படும் முரண்பாடுகளை எடுத்து விளக்குவதில் தவறு ஒன்றுமில்லை. ஒரு நாட்டின் பண்பாட்டை இன்னொரு நாட்டவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயமல்ல. வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள யூதர்களின் பண்பாடுகளையும், வழக்கங்களையும் தமிழர்களாகிய நாம் முழுமையாக மன அளவில் ஏற்றுக் கொள்ள வேண்டும், ஆனால் அதை நாம் கடைபிடிக்க வேண்டும் என்று ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை; அப்படி அவர் எதிர்பார்ப்பார் என்று நாம் நினைப்பது நமது தவறு.



I சாமுவேல் - புத்தகம் 9

பெயர் : ஆரம்ப காலத்தில் I சாமுவேல் மற்றும் II சாமுவேல் இரண்டும் ஒரே புத்தகமாக சாமுவேலின் புத்தகம் என்ற பெயரில் இருந்தது. கிரேக்க பைபிளில் I,II சாமுவேல், I,II ராஜாக்கள் - இந்த 4 புத்தகங்களும் முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது ராஜ்ஜியம் என்று அழைக்கப்பட்டது (சவுல், தாவீது, யூதா, இஸ்ரவேல் ராஜ்ஜியங்கள்). இப்புத்தகத்திற்கு 'சவுலின் ஆட்சிக்காலம்' என்ற பெயர் மிகப் பொருத்தமானது.

ஆசிரியர் : I சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் சாமுவேல் என்பது உண்மையாக இருந்தாலும் அதை தீர்க்கமாக சொல்வதற்கில்லை. இப்புத்தகத்தில் 25-ம் அதிகாரத்தில் முதல் வசனத்தில் அவர் மரித்ததாக எழுதப்பட்டிருக்கிறது. அப்படியானால் மீதமுள்ள 7 அதிகாரங்களையும் வேறு யாரோ எழுதியிருக்க வேண்டும். I சாமுவேல் புத்தகத்திலேயே மரித்து விடும் சாமுவேலுக்கும் அடுத்த புத்தகமாகிய II சாமுவேல் புத்தகத்திற்கும் எந்த தொடர்பும் இருக்க சாத்தியமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சாமுவேலின் பிரபந்தம், நாத்தானின் பிரபந்தம், காத்தின் பிரபந்தம், - என்று I நாளா, 29:29-ல் எழுதப்பட்டதின்படி - இப்புத்தகத்தை இம்மூவரும் சேர்ந்து (சாமுவேல், நாத்தான், காத்) எழுதியிருக்கக் கூடும் அல்லது இவர்கள் எழுதியதை வேறு யாராவது தொகுத்திருக்கக் கூடும்.

காலம் : சாமுவேல் பிறப்பு முதல் - சவுலின் மரணம் வரை (கி.மு 1105 முதல் - கி.மு. 1011 வரை) ஏறக்குறைய 94 வருட கால இடைவெளியில் நடந்த சம்பவங்களை இப்புத்தகம் விவரிக்கிறது. I சாமு. 27:6-ம் வசனத்தில் சிக்லாக் இந்நாள் வரைக்கும் யூதாவின் ராஜாக்களுக்குச் சொந்தமானது - என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே இந்த புத்தகம் இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட கால கட்டத்தில் தொகுத்து எழுதப்பட்டிருக்க வேண்டும் - என்பது தெளிவாகிறது. அதாவது சாலமோன் மரித்த பின்பு - கி.மு. 971-ற்குப் பிறகு தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அசீரியா ராஜா சமாரியாவை வீழ்த்திய சம்பவம் (கி.மு. 722) குறிக்கப்படவில்லை. எனவே இப்புத்தகம் கி.மு. 971-க்குப் பிறகு கி.மு. 722-க்கு முன்பு எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மையக்கருத்து : இப்புத்தகத்தில் இஸ்ரவேல் மக்களை ஆளும் தலைமை 3 முறை மாற்றப்படுகிறது. 3 தலைமை மாறுதலை (Leadership Transition) நாம் சந்திக்கிறோம். நியாயாதிபதிகள் ஆட்சியிலி ருந்து தீர்க்கதரிசிகள் ஆட்சியும், தீர்க்கதரிசி ஆட்சியிலிருந்து ராஜாக்கள் ஆட்சிக்கும் கைமாறுகிறது. ஏலி ஒரு நியாயாதிபதி

(தீர்க்கதரிசியல்ல) ஏலியை கடைசி நியாயாதிபதி என்றும் கூறலாம். சாமுவேலை முதல் தீர்க்கதரிசி என்று அழைக்கலாம். முதல் மாறுதல் ஏலியினிடத்திலிருந்து ஆட்சி - தலைமைப் பொறுப்பு சாமுவேலுக்கு மாறுகிறது. இரண்டாவது சாமுவேலினிடத்திலிருந்து சவுல் ராஜா (முதல் ராஜா)வின் கையிற்கு மாறுகிறது. மூன்றாவது இப்புத்தகத்தின் இறுதியில் சவுலின் கையிலிருந்து தாவீதின் கையிற்கு ஆட்சி மாறுகிறது. அது மாத்திரமல்ல சாமுவேல் வரை ஆண்டவர் தீர்க்கதரிசிகள் மூலம் நியாயாதிபதிகள் மூலம் மக்களை ஆண்டு கொண்டு வந்தார். இதை Theocracy - என்று அழைக்கிறோம். ஆனால் இதற்கு பின்பு ஆண்டவரது நேரடி ஆளுகை தள்ளப்பட்டு ராஜாக்களின் நேரடி ஆளுகை (Monarchy) அமுலுக்கு வருகிறது.

திறவுகோல் வசனம் : பலியைப் பார்க்கிலும் ஆண்டவரது கட்டளைக்கு கீழ்ப்படிவதும், செவி கொடுத்தலும் உத்தமம் (15:22)

திறவு கோல் அதிகாரம் : 15-ம் அதிகாரம் சவுல் தள்ளப்படுதல் தாவீது அபிஷேகம் பண்ணப்படுதல்.

சவுல் : மக்களின் அழுத்தத்தினாலும் அவசரத்தினாலும் தெரிந்தெடுக்கப்பட்டவன்.

தாவீது : அவசரமில்லாமல் - தெளிவுடன் தெரிந்தெடுக்கப்பட்டவன் - அபிஷேகம் பண்ணப்பட்டவன் - காத்திருக்கும் ராஜா - waiting king's elect.

கருப்பொருள் : ஜெபமும் கீழ்ப்படிதலும்

அன்னாளின் ஜெபத்தின் மூலம் சாமுவேல் பிறந்தான். சாமுவேல் ஜெபத்தின் மூலம் இழந்த உடன்படிக்கை பெட்டி மீட்கப்பட்டது. எபனேசரில் பெலிஸ்தியர்மேல் வெற்றி.

கீழ்ப்படியாமையினால் சவுல் தன் ராஜ்ஜிய பாரத்தை இழக்கிறான்.

இயேசுகிறிஸ்து : சாமுவேல் இயேசுவிற்கு நிழலாட்டம் இவன் ஒரு தீர்க்கதரிசி நியாயாதிபதி. மக்களை ஆளுகிறவன். இவன் ஒரு ஆசாரியனும் கூட இந்த மூன்று தகுதிகளும் இயேசுவிற்கு நிழலாட்டமாயிருக்கிறது.

தாவீதும் இயேசுவிற்கு நிழலாட்டம். தாவீது ராஜா மேசியாவிற்கு ஒரு நிழலாட்டம். இயேசு வனாந்திரத்தில் சோதிக்கப்பட்டது போல தாவீதும் வனாந்திரத்தில் சவுல் ராஜாவால் சோதிக்கப்பட்டான். இயேசு மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவர் (ரோ 1:3) என்றும் தாவீதின் வேர் (வெளி 22:16) என்றும் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறோம். இயேசுவும் தாவீதும் - இருவரும் ஒரே ஊரில் (பெத்லகேம்) பிறந்தவர்கள். எனவே தாவீதும் இயேசுவிற்கு நிழலாட்டம்.

II சாமுவேல் - புத்தகம் 10

பெயர் :

இந்தப் புத்தகத்திற்கு 2 சாமுவேல் என்று பெயர் கொடுத்திருப்பது கொஞ்சம் கூட பொருத்தமானதல்ல. காரணம் 1 சாமுவேல் புத்தகம் 25ம் அதிகாரத்திலேயே சாமுவேல் மரித்து விடுகிறார். இதற்கு சரியான பெயர் "தாவீதின் ஆட்சிகாலம்". இந்தப் புத்தகத்தில் தாவீதின் ஆட்சிக்காலம் தான் விவரிக்கப்பட்டுள்ளது. 1 சாமுவேல் புத்தகத்தை முதல் (சவுல்) ராஜ்யம் என்றும் 2சாமுவேல் புத்தகத்தை இரண்டாவது (தாவீதின்) ராஜ்யம் என்றும் 1 ராஜாக்கள் முதல் 11 அதிகாரங்கள் - மூன்றாவது (சாலமோனின்) ராஜ்யம் என்றும் 1 ராஜாக்கள் 12 முதல் 2 ராஜாக்கள் புத்தகங்களை பிரிந்து போன யூதா, இஸ்ரவேல் ராஜ்யங்கள் என்றும் அழைக்கலாம்.

ஆசிரியர் :

1 நாளா :29:29 வசனத்தின்படி இப்புத்தகத்தை நாத்தான், காத் ஆகிய இருவரும் தான் எழுதியிருக்க வேண்டும். அதோடு 2 சாமு 1:18ம் வசனத்தின்படி இந்தப் புத்தகத்தைக் கொடுத்தவர் யாசேர் என்பவர் எழுதிய சில பகுதிகளையும் இப்புத்தகத்தில் சேர்த்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இப்புத்தகத்திற்கு நாத்தான், காத், யாசேர் என்ற மூன்று ஆசிரியர்கள் இருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

காலம் :

கி.மு. 900ம் ஆண்டில் இது தொகுக்கப்பட்டிருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது. ஆனால் இப்புத்தகம் தாவீதின் ஆட்சிக் காலத்தில் நடந்த சம்பவங்களை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. தாவீதின் 40 ஆண்டு ஆட்சிக்காலம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கி.மு 1011 முதல் 1004 வரை 7 ஆண்டுகள் அவன் எபிரோனை தலைநகராகக் கொண்டு யூதா கோத்திரத்தை மாத்திரம் ஆட்சி செய்கிறான். இந்த கால இடைவெளியில் இஸ்ரவேலின் 10 கோத்திரங்களை சவுலின் மகனாகிய இஸ்போசேத்து பொம்மை ராஜாவாக (உண்மையிலேயே ஆட்சி செய்தவன் அவனது படைத்தளபதி அப்னேர்) ஆட்சி செய்கிறான்.

கி.மு. 1004 முதல் கி.மு. 971 முடிய தாவீது முழு இஸ்ரவேல் ராஜ்ஜியத்தையும் எருசலேமை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்கிறான்.

இப்புத்தகத்தின் முக்கிய சம்பவங்கள்:

இப்புத்தகத்தின் சம்பவங்களை 3 பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. தாவீதின் வெற்றிகள்:

சவுல் ராஜா மரித்தவுடன் தாவீதை 12 கோத்திரமும் ராஜாவாக ஏற்க மறுத்துவிட்டன. யூதா, பெஞ்சமின், கோத்திரம் மட்டுமே தாவீதை ராஜாவாக ஏற்றுக் கொண்டது. மீதமுள்ள 10 கோத்திரங்களும் சவுலி ன் மகனாகிய இஸ்போசேத்து ராஜாவாக நியமிக்கப்பட்டான். ஆனால் இவன் ஒரு நொண்டி மாத்திரமல்ல; ஒரு பொம்மை ராஜா. படைத்தளபதி அப்னேரின் கையில்தான் முழு அதிகாரமும் இருந்தது. இருப்பினும் நாட்கள் செல்லச் செல்ல தாவீதின் கரம் ஓங்கி, சவுலின் குடும்பத்தாரின் பெலன் குறைந்தது. இறுதியில் 7 ஆண்டுகளுக்குப் பின்பு தாவீது இஸ்ரவேல் முழுவதிற்கும் ராஜாவாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறான் (5:3). இந்த தாவீது ராஜாவின் ஆட்சி. இஸ்ரவேலின் பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது. மற்ற எல்லா ராஜாக்களுக்கும் ஒரு முன்மாதிரியாக மாறினான்.

2. தாவீதின் வீழ்ச்சி :

இரண்டாவது பகுதி - தாவீது பத்சேபாள், உரியா விஷயத்தில் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தான். முதலில் விபச்சாரம் பின்பு கொலை. இது தாவீதின் வாழ்க்கையில் ஒரு தவறான திருப்புமுனை என்றால் மிகையாகாது. இந்திரா காந்திக்கு அலகாபாத் ஹைகோர்ட் தீர்ப்பும் அதன் விளைவாக அவர்கள் பிரகடனம் செய்த Emergency Period ஒரு பெரிய கரும்புள்ளி போல ராஜீவ் காந்திக்கு ஒரு போஃபோர்ஸ் விவகாரம்; அமெரிக்க ஜனாதிபதி நிக்சனுக்கு ஒரு Water Gate - விவகாரம் பில் கிளிண்டனுக்கு ஒரு பாலியல் விவகாரம். போல இந்த தாவீது ராஜாவிற்கு பத்சேபாள் பாலியல்விவகாரம் இது தாவீதின் ஆட்சியில் ஒரு பெரிய கரும்புள்ளி.

3. தாவீதிற்கு வந்த உபத்திரவங்கள்:

வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே

அறுப்பான். தாவீது செய்த பாவம் அவனையும், அவனது நாட்டையும் ஆட்டி அலைக்கழிக்கச் செய்தது. தாவீதின் மகனான அம்னோன் தனது சகோதரியை ஏமாற்றிக் கற்பழிக்கிறான். அந்த அம்னோனை தாவீதின் இன்னொரு மகனான அப்சலோம் கொலை செய்கிறான். இறுதியில் அப்சலோம் தாவீதை நாட்டை விட்டு துரத்துகிறான். தாவீதின் துன்பம் உச்சக்கட்டத்தை எட்டி, அவனது உபத்திரவம் என்ற பாத்திரம் நிரம்பி வழிகிறது.

திறவுகோல் வசனம் : 2 சாமு : 22:21

"கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாக எனக்குப்பதில் அளித்தார்; என் கைகளின் சுத்தத்திற்குத் தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்."

திறவுகோல் அதிகாரம் :

11ம் அதிகாரம். தாவீது பத்சேபாளிடம் பாவம் செய்த சம்பவம்

கருப்பொருள் :

கீழ்படிந்தால் ஆசீர்வாதம், கீழ்ப்படியாவிட்டால் சாபமும், தண்டனையும்.

இயேசுகிறிஸ்து : தாவீது



I ராஜாக்கள் - புத்தகம் 11

பெயர் : 1 சாமுவேல் புத்தகத்தை சவுலின் ஆட்சிக்காலம் என்றும் 2 சாமுவேல் புத்தகத்தின் சரித்திரத்தை தாவீதின் ஆட்சிக்காலம் என்றும் அழைப்போமானால், அடுத்து வரும் 1 ராஜாக்கள் புத்தகத்தின் சரித்திரத்தை 'சாலமோனின் ஆட்சிக்காலம்' என்று அழைப்பதில் தவறில்லை. இருப்பினும் இந்த 1 ராஜாக்கள் புத்தகத்தில் தான் சாலமோனின் ஆட்சிக்குப் பின்பு ஒன்றாக இருந்த இஸ்ரவேல் சமஸ்தானம் இரண்டாகப் பிரிகிறது. ஆங்கிலேயரின் ஆட்சிக்குப் பின்னால் இந்தியா இரண்டு தேசமாக பாகிஸ்தான், இந்தியா என்று பிரிந்தது போல இஸ்ரவேல் தேசமும் யூதா, இஸ்ரவேல் என்று இரண்டு ராஜ்யங்களாகப் பிரிகிறது.

காலம் : இப்புத்தகம் ஏறக்குறைய 120 ஆண்டுகள் கால இடைவெளியில் நடந்த சம்பவங்களை இது விவரிக்கிறது. சாலமோனின் ஆட்சியின் ஆரம்பத்திலிருந்து அகசியா ராஜாவின் ஆட்சிக்காலத்தின் முடிவு வரை அதாவது கி.மு. 931 முதல் 851-ம் ஆண்டு வரை நடந்த சம்பவங்கள். இதில் முக்கியமான திருப்பம். கி.மு.931ம் ஆண்டு. இந்த ஆண்டில்தான் (சாலமோன் மரித்த ஆண்டு) சவுல், தாவீது சாலமோன் என்ற மூன்று ராஜாக்கள் 120 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஒன்றுபட்ட ராஜ்ஜியம் இரண்டாக உடைகிறது; தெற்கில் யூதா (எருசலேம் தலைநகரம்), வடக்கில் இஸ்ரவேல் ராஜ்யம் (சமாரியா தலைநகரம்).

ஆசிரியர் : யார் எழுதியது என்று திட்டவட்டமாகக் கூற இயலாது. ஆனால் இதை தொகுத்தவர் (எழுதியவரல்ல) எரேமியா என்ற தீர்க்கதரிசி என்று அநேகரால் நம்பப்படுகிறது. இந்தப் புத்தகத்தை எழுதியவர் பல நூல்களை மேற்கோள்காட்டி அவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதியிருக்கிறார். உதாரணமாக சாலமோனின் நடபடிக்கைகள் அடங்கிய புத்தகம் (11:41) இஸ்ரவேல் ராஜாக்களின் புத்தகம் (14:19) மற்றும் யூதா ராஜாக்களின் புத்தகம் (14:29; 15:7).

மையக்கருத்து : ராஜாவும் ராஜ்யத்தின் மக்களும் ஆண்டவருக்கும் அவரது பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது; கீழ்ப்படியும் போது ஆண்டவரின் ஆசீர்வாதம் கீழ்ப்படிய மறுத்தால் ஆண்டவரது தண்டனை. சரித்திரத்தின் கண்ணோட்டத்தின் படி இப்புத்தகத்தில் சாலமோன் முதல் யூதாவின் ராஜாவாகிய யோசபாத் வரை யூதா தேசத்தில் நடந்த சம்பவங்களும்

இஸ்ரவேல் ராஜாவாகிய ஆகாபின் ஆட்சியில் இஸ்ரவேல் நாட்டில் நடந்த சம்பவங்களும் விளக்கப்பட்டிருக்கிறது.

முக்கிய தீர்க்கதரிசி : 1 சாமுவேல் 17ம் அதிகாரத்தில் தாவீது என்ற இளம் வாலிபன் இஸ்ரவேலின் சரித்திரத்திற்குள் - கோலியாத்தை வென்று மெய்சிலிர்க்க வைக்கும் (Dramatic Manner) வகையில் அறிமுகப் படுத்தப்படுகிறான். அதுபோலவே 1ராஜா 17ம் அதிகாரத்தில் எலியா என்ற தீர்க்கதரிசி அதே போன்று மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்படுகிறான். இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாபின் பாகால் தீர்க்கதரிசிக்களுக்கும், எலியா தீர்க்கதரிக்கும் இடையில் கர்மேல் பர்வத்தின் உச்சியில் நடந்த பலப்பரீட்சையில் எலியா வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்த சம்பவம் இஸ்ரவேல் சரித்திரத்தில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது.

திறவுகோல் வசனம் : 9:4,5

கர்த்தர் சாலமோனுக்கு தரிசனமாகி: நான் உனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நீ செய்து, தாவீது நடந்தது போல நடப்பாயானால் உன் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். (அதற்குமாறாக) நீங்கள் என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமற் போனால் உங்களை நிர்மூலமாக்கி, மற்ற மக்களுக்குள் உங்களை பழமொழியாகவும், வசைச் சொல்லாகவும் மாற்றுவேன்.

திறவுகோல் அதிகாரம் : அதிகாரம் 12

ஒன்றுபட்ட ராஜ்யம் இரண்டாகப் பிரியும் சம்பவம் இந்த 12ம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவசியமற்ற அர்த்தமற்ற வரிச்சுமையை மக்கள் மேல் திணித்தால் அந்த நாட்டில் கலவரமும், குழப்பமும் நிகழும். அதன் விளைவாக ஆட்சி கவிழும். தேசம் இரண்டாகப் பிரியும். உலகிலுள்ள எல்லா நாட்டிற்கும் ஆட்சியாளர்களுக்கும் சரித்திரம் கற்றுக் கொடுக்கும் ஒரு நல்ல பாடம்.

இதன் விளைவாக இரண்டு நாடுகள், இரண்டு ராஜாக்கள், இரண்டு தலைநகரங்கள் (எருசலேம், சமாரியா) இரண்டு மதங்கள் இரண்டு வழிபாடுகள் உருவாயிற்று.

இப்புத்தகத்தில் வரும் முக்கியமான சம்பவங்கள் :

a) 1-11 அதிகாரம் - சாலமோனின் ஆட்சி - 40 ஆண்டுகள் - எருசேலம் தலைநகர் - பொற்காலம் என்று கூறலாம்

b) 5-ம் அதிகாரம் - ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

c) 12-22 அதிகாரங்கள் - ராஜ்ஜியம் இரண்டாக பிரிக்கப்படுகிறது - மிகவும் குழப்பமான காலம் - மொத்தம் 90 ஆண்டுகள்.

i) இஸ்ரவேல் ராஜ்யம் - சமாரியா தலைநகர் - யெரோபியம், நாதாப், பாஷா, ஏலா, சிம்ரி, ஒம்ரி, ஆகாப் - 7 ராஜாக்கள் அக்கிரம ஆட்சிக்காலம்.

ii) யூதராஜ்யம் - எருசலேம் தலைநகர் - ரெகோபியாம், அபியாம், ஆசா, யோசபாத் - 4 ராஜாக்கள் - நல்லதொரு ஆட்சிக்காலம்.

ராஜாக்களின் புத்தகத்தைப் பற்றிய முக்கிய குறிப்பு :

யூதா ராஜாக்களின் ஆட்சியைப் பற்றி இப்புத்தகத்தில் விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட இப்புத்தகத்தில் இஸ்ரவேல் ராஜாக்களின் ஆட்சியைப் பற்றித்தான் அதிகமாக விவரிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது (1, 2 நாளாகமப்புத்தகத்தில் யூதா ராஜாக்களின் சரித்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் இஸ்ரவேல் ராஜாக்களைப் பற்றி சிறிதே விளக்கம் தரப்பட்டிருக்கிறது என்ற உண்மையை நாம் இங்கே அறிந்து கொள்வது நல்லது).

இயேசு கிறிஸ்து

1. மத்தேயு 12:42 சாலமோனைக்காட்டிலும் பெரியவர் இயேசு வந்திருக்கிறார்.

   சாலமோன் ஞானத்திற்கு முன்மாதிரியாக இருப்பதினாலும், 1கொரி 1:30 ம் வசனத்தின்படி இயேசு நமக்கு தேவனுடைய ஞானமாயிருப்பதினாலும் சாலமோன் இயேசுவிற்கு நிழலாட்டமாக ஒப்பிடலாம்.

2. எலியா தீர்க்கதரிசி - இவன் இயேசுவின் முன்னோடியாக யோவான் ஸ்நானகனுக்கு முன்னோடி எலியா பரலோகத்திற்கு ஏறிச் சென்றது, அவன் செய்த அற்புதங்கள் இயேசுவின் அற்புதங்களுக்கு நிழலாட்டமாக இருப்பதால் ஒரு வகையில் இந்த எலியாவையும் இயேசுவிற்கு நிழலாட்டம் என்று கூறினாலும் அது தவறல்ல.

II இராஜாக்கள் - புத்தகம் 12

பெயர் :

இப்புத்தகத்தில் பிரிக்கப்பட்ட 2 ராஜ்யங்களின் சரித்திரம் கொடுக்கப்பட்டுள்ளது பெயர் பொருத்தமானது தான். ஆனாலும் இப்புத்தகத்திற்கு "இஸ்ரவேல் மற்றும் யூதா ராஜாக்களின் சரித்திரம் - இரண்டாம் பகுதி" என்ற பெயர் சற்று பொருத்தமானது.

ஆசிரியர்

இதை எழுதியவர் எரேமியா தீர்க்கதரிசியாக இருக்கலாம் II ராஜா 24:18 முதல் 25:30 வரை உள்ள வசனங்களும் எரேமியா 52-ம் அதிகாரமும் ஒன்று தான்.

காலம்

முதல் 17 அதிகாரங்கள் கி.மு 853 முதல் 722 வரை உள்ள 131 வருடங்களில் நடந்த சம்பவங்களைக் குறிக்கிறது. இந்நாள் வரையிலும் என்று 17:34, 41 எழுதப்பட்டிருக்கிற காரணத்தினால் II ராஜாக்கள் புத்தகத்தின் பல பகுதிகள் பாபிலோனியர் படையெடுப்பிற்கு முந்தின காலக் கட்டத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இருப்பினும் கடைசி 2 அதிகாரங்களும் (24, 25) பாபிலோனிய படையெடுப்பிற்குப் பின்னால் - கி.மு 550-ல் எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் நாட்டின் ஒட்டு மொத்த சரித்திரம்

a) கி.மு 1043 - 931 பிரிக்கப்படாத ராஜ்யம் (சவுல், தாவீது, சாலமோன்) - 112 ஆண்டுகள் - தலைநகர் எருசலேம்.

b) **931 - 722** இஸ்ரவேல் (வட) ராஜ்யம் - சமாரியா தலைநகர் - 19 ராஜாக்கள் - 9 வித்தியாசமான குடும்பத்தினர் ஆட்சி 19 ராஜாக்களும் மோசமானவர்கள் - இதில் 8 ராஜாக்கள் முந்திய ராஜாவைக் கொலை செய்து ஆட்சியைக் கைப்பற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 209 ஆண்டுகள்.

c) **931 - 586** யூதா (தெற்கு) ராஜ்யம் - எருசலேம் தலைநகர் 20 ராஜாக்கள் - ஒரே குடும்பத்தினர் - தாவீதின் வம்சம் ஆட்சி (8 ராஜாக்கள் நல்லவர்கள்) 345 ஆண்டுகள்.

முக்கியமான சம்பவங்கள்

கி.மு. 722-ம் ஆண்டு அசீரியா ராஜா சல்மனார் இஸ்ரவேல் ராஜாவாகிய ஓசெயாவைத் தோற்கடித்து இஸ்ரவேல் மக்களை அசீரியா தேசத்திற்கு சிறைபிடித்துக் கொண்டு போனான். ஆனால் இந்த அசீரியா ராஜாவினால் அருகிலிருந்த யூதா ராஜ்யத்தை வெல்ல முடியவில்லை - என்பது குறிப்பிடத்தக்கது.

யூதாவின் வீழ்ச்சி - கி.மு 586

இஸ்ரவேல் ராஜ்ஜியம் வீழ்ச்சியடைந்த பின்பு 130 ஆண்டுகள் யூதா ராஜ்ஜியம் நிலைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. யூதாவை கி.மு. 931 முதல் கி.மு. 586 வரை 20 ராஜாக்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே தாவீதின் வம்சத்தார் தான். ஆனால் யூதாவின் 6வது ராஜாவாகிய அகசியாவின் தாயின் பெயர் அத்தாலி யாள். இந்த அத்தாலியாள், இஸ்ரவேல் ராஜாவாகிய ஆகாப் - யேசபேல் பெற்றோருக்குப் பிறந்த மகள். இவளுக்குள் இஸ்ரவேல் இரத்தம் ஓடியது. எனவே இந்த அத்தாலியாள் தனது மகனாகிய அகசியா ராஜா (யூதா ராஜா) மரித்தவுடன் தனது மகனுடைய மகன்கள் (தனது பேரன்கள்) அனைவரையும் கொன்று போட்டுவிட்டு இவள் யூதாவை 6 வருடம் ஆட்சி செய்கிறாள். ஆனால் அகசியாவின் ஒரு மகன் யோவாஸ் எப்படியோ தப்பித்துக்கொள்கிறான். இந்த அத்தாலியாளின் கழுகு பார்வையிலிருந்து தப்பி 6 வருஷம் கர்த்தருடைய ஆலயத்தில் ஒளித்து வைக்கப்பட்டு உயிரோடு காக்கப்பட்டு பின்பு ராஜாவாக மாறுகிறான். உடனே, அத்தாலியாள் கொலை செய்யப்படுகிறாள். எப்படியோ தாவீதிற்கு ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தம் உன் பரம்பரை எப்பொழுதும் ஆட்சி செய்யும் - என்ற வார்த்தை 6 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது.

இருப்பினும் யூதாவின் பாவத்தின் நிமித்தம் கி.மு. 586ம் ஆண்டு பாபிலோனிய ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமைக் கைப்பற்றுகிறான். யூதா மக்கள் பாபிலோனிற்கு சிறைபிடிக்கப்பட்டுப் போகிறார்கள்.

இப்புத்தகத்தில் முதல் 17 அதிகாரங்களில் இரண்டு ராஜ்ஜியங்களைக் குறித்த சரித்திரம் மாறி மாறி வருவதால் வாசிப்பவர்களுக்குச் சற்று குழப்பம் ஏற்படும்.

ஆனால் 17ம் அதிகாரத்தில் இஸ்ரவேல் ராஜ்ஜியம் அசீரியா ராஜாவினால் அழிக்கப்படுகிறது. அதன் பின்பு 18 முதல் 25 வரை உள்ளது யூதா ராஜ்ஜியத்தின் சரித்திரம் மாத்திரமே. எனவே இந்தப் பகுதியை (18 - 25) வாசிக்கும் போது இந்தக் குழப்பம் இருக்காது.

சவுல் கி.மு 1043 முதல் யூதாவின் கடைசி ராஜாவாகிய சிதேக்கியா கி.மு 586 வரை அதாவது 457 ஆண்டுகள் இஸ்ரவேல்-யூதா-ராஜாக்கள் ஆண்ட இந்த 457 ஆண்டுகள் கால இடைவெளியில் உலகத்தின் வல்லரசுகளில் பல மாற்றங்கள் நடந்திருக்கிறது. முதலில் எகிப்து உலக வல்லரசாக இருந்தது (இன்று அமெரிக்கா இருப்பது போல) பின்பு எகிப்தை வீழ்த்தி அசீரியா உலக வல்லரசாக மாறியது - இதைத் தொடர்ந்து சில ஆண்டுகள் கழித்து அசீரியாவை வீழ்த்தி பாபிலோன் உலக வல்லரசாக மாறியது.

தீர்க்கதரிசிகள்

எலியா, எலிசா, ஆமோஸ், ஓசியா ஆகிய இந்த 4 தீர்க்கதரிசிகளும் வட தேசமாகிய இஸ்ரவேல் நாட்டைச் சார்ந்தவர்கள்.

ஒபதியா, யோவேல், ஏசாயா, மீகா, நாகூம், செப்பனியா, எரேமியா, ஆபகூக் - ஆகிய 8 தீர்க்கதரிசிகளும் தென்தேசமாகிய யூதா நாட்டைச் சேர்ந்தவர்கள்.

திறவுகோல் அதிகாரங்கள்

17 - சமாரியாவின் வீழ்ச்சி

25 - எருசலேமின் வீழ்ச்சி

பாடம்

அரசன் எவ்வழியோ அவ்வழியே மக்களும். மோசமான ராஜா - மோசமான மக்கள் - ஆண்டவரது தண்டனை: நல்ல ராஜா - நல்ல ஆட்சி - நல்ல மக்கள் - ஆண்டவரது ஆசீர்வாதம்.

கிறிஸ்து

எலியா - யோவான் ஸ்நானகன்

எலிசா - இயேசு கிறிஸ்து

எலியா - யோவான் ஸ்நானகனைப் போல மக்களை விட்டுப் பிரிந்து பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவன்.

ஆனால் எலிசா - இயேசுவைப் போல மக்களோடு ஒருவனாக மக்கள் மத்தியிலேயே, மக்களின் அன்றாடத் தேவைகளைச் சந்திக்கிறான் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உதவுகிறான்.

1 நாளாகமம் - புத்தகம் 13

பெயர்

ஆரம்பகாலத்தில் 1 மற்றும் 2 நாளாகமப் புத்தகங்கள், "நாட்களின் சம்பவங்கள்" (The Events of Times) என்ற தலைப்பில் ஒரே புத்தகமாக இருந்தது. கி.மு. 3-ம் நூற்றாண்டில் எபிரேயு மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு கிரேக்கு மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட (Septuagint - செப்துஜின்ட்) போது இது 2 புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டது. அந்த சமயத்தில் இதற்கு கொடுக்கப்பட்ட பெயர் ஏனைய புத்தங்களில் (விசேஷமாக 2 சாமுவேல் புத்தகத்தில்) "கொடுக்கப்படாத சம்பவங்கள்" (Omitted events) "யூதா ராஜ்ஜியத்தைக் குறித்த ஒரு விசேஷித்த தொகுப்பு'' என்னும் பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

கி.பி. 385-405 காலகட்டத்தில் வாழ்ந்த புதிய ஏற்பாட்டின் எஸ்றா என்று அழைக்கப்படும் ஜெரோம் என்ற வேத பண்டிதர் முழு வேதாகமத்தையும் லத்தீன் மொழியில் (Vulgate) மொழிபெயர்த்த போது இந்தப் புத்தகத்திற்கு அவர் கொடுத்த பெயர் 'நாளாகமம்'.

ஆசிரியர்

இதை எஸ்றா தான் எழுதியிருக்க வேண்டும் அல்லது தொகுத்துக் கொடுத்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. இதில் கொடுக்கப்பட்டுள்ள முக்கியமான கருத்துகளை ஆராய்வோமானால் (ஆலயம், ஆசாரியத்துவம், தாவீது ராஜாவின் ஆலயம் கட்டுமானப்பணிகளில் ஆயத்தங்கள்) இதை எழுதியவர், தொகுத்தவர் ஒரு ஆசாரியனாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகும். 2 நாளாகமத்தின் கடைசி 2 வசனங்களும் (36 : 22,23) எஸ்றா புத்தகத்தின் முதல் 3 வசனங்களும் ஏறக்குறைய ஒன்றாக இருப்பது குறிப்பிடத்தக்கது. பழைய ஏற்பாட்டில் நாளாகமப் புத்தகமும், எஸ்றாவும் புதிய ஏற்பாட்டில் லூக்கா சுவிசேஷம், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகங்களும் - ஒரே ஆசிரியரால் (எஸ்றா, லூக்கா) அடுத்து அடுத்து எழுதப்பட்ட புத்தகங்கள் என்பதும் இங்கு குறிப்பிடுவது நல்லது.

இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள சம்பவங்களும் 2 சாமுவேல் புத்தகத்தில் எழுதப்பட்ட சம்பவங்களும் ஒன்றாக இருப்பினும் 2 சாமுவேல் புத்தகத்தில் சொல்லப்படாத சம்பவங்களை இந்த 1

நாளாகமப் புத்தகம் குறிப்பிடுகிறது. இந்த 1 நாளாகமப்புத்தகத்தை 2 சாமுவேல் புத்தகத்தின் 'Supplement' அதாவது 'தொடர்ச்சி - தொகுப்பு' என்று கூறலாம். அதாவது தாவீதின் ஆட்சிக்காலத்தில் கி.மு. 1004-971 ஆண்டுகள் நடந்த சம்பவங்களைப் பற்றி இப்புத்தகம் கூறினாலும், கி.மு. 500 ஆண்டில் வாழ்ந்த செருபாபேல் மற்றும் அவனது 2 பேரன்கள் பெயர்கள் தாவீதின் பரம்பரையில் கொடுக்கப்பட்ட காரணத்தினால் இப்புத்தகம் கி.மு. 450-ம் ஆண்டில் தொகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

யாருக்காக எழுதப்பட்டது

ஒரு புத்தகத்தின் மையக்கருத்தை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அது யாருக்காக எழுதப்பட்டது என்பதை நாம் அறிய வேண்டும்.

பாபிலோனில் இரண்டாவது சிறையிருப்பிற்குப்பின் தாயகம் திரும்பிய இஸ்ரவேல் மக்களை உற்சாகப் படுத்தவும், ஊக்குவிக்கவும், அவர்களை ஆலய வழிபாட்டிற்கு வழிதிருப்பும் நோக்கத்தோடு இப்புத்தகத்தை எஸ்றா எழுதியிருக்கிறார். 70 ஆண்டுகளாக 'ஆலய ஆராதனை' என்றால் என்னவென்று தெரியாமல் பாபிலோனில் வாழ்ந்து விட்டு தங்களது சொந்த மண்ணிற்குத் திரும்பிய இஸ்ரவேல் மக்கள் மத்தியில் எழுப்புதல் ஏற்படுவதற்காக எழுதப்பட்ட புத்தகங்கள் தான் 1 & 2 நாளாகமப் புத்தகங்கள். 2 நாளாகமப் புத்தகத்தில் 4 எழுப்புதல் சரித்திரம் விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் வசனம்

அவனை (தாவீதை) என் ஆலயத்திலும் என் ராஜியத்திலும் என்றென்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன். அவனுடைய ராஜ்யம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்" (17:14)

திறவுகோல் அதிகாரம் : 17-ம் அதிகாரம்

மையக்கருத்து

தேவன் தாவீதோடு பண்ணிய உடன்படிக்கை. ஆலயம் கட்டுவதற்கு ஆயத்தங்கள், ஆராதனை, ஆசாரியர்கள், லேவியர்கள் - இவர்களது கடமைகள்.

இப்புத்தகத்தின் தனித்தன்மை

1 & 2 சாமுவேல், 1 & 2 இராஜாக்கள் புத்தகங்கள் யூதா, இஸ்ரவேல் ஆகிய இரண்டு இராஜ்ஜியங்களில் நடந்த சம்பவங்களையும் விவரிக்கிறது. ஆனால் 1, 2 நாளாகமப் புத்தகங்கள் ஏறக்குறைய யூதா தேசத்தின் சரித்திரத்திற்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்கிறது.

கிறிஸ்து

தாவீது - ஆண்டவர் தாவீதோடு பண்ணிய நித்திய உடன்படிக்கையின் அடிப்படையில் மேசியா வந்தார்.

கிறிஸ்துவின் பரம்பரை

பழைய ஏற்பாட்டில் அதாவது எபிரேயு பைபிளில் கடைசியாக எழுதப்பட்ட புத்தகம் இந்த நாளாகமப் புத்தகம்; எனவே இப்புத்தகத்தில் இயேசுவின் பரம்பரையை விளக்குவதற்கு 10 அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது, காரணம் இப்புத்தகத்தின் (அதாவது பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம்) முடிவும் புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகமாகிய மத்தேயு புத்தகத்தின் ஆரம்பமும் இவ்வாறு - பரம்பரை தொகுப்புக்கள் வாயிலாக இணைக்கப்பட்டிருக்கிறது.



II நாளாகமம் - புத்தகம் 14

பெயர் : இப்புத்தகத்திற்கு "எழுப்புதலும் சீர்திருத்தமும்" "Revival and Reformation" என்ற பெயர் மிகப் பொருத்தமாக இருந்திருக்கும். வேதாகமப் பண்டிதர்கள் இதற்கு கொடுத்திருக்கும் இன்னொரு பெயர், "எழுத மறந்துவிட்ட சரித்திர சம்பவங்கள் History of Times omitted".

இப்புத்தகத்தில் உள்ள சம்பவங்களும் I மற்றும் II ராஜாக்கள் புத்தகங்களில் எழுதப்பட்ட சம்பவங்களும் ஏறக்குறைய ஒன்றுதான். ஆனால் இதை எழுதிய ஆசிரியர் ஒரு எழுப்புதல் பிரசங்கியாராக இருந்திருக்க வேண்டும். I,II ராஜாக்கள் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள வட இராஜ்ஜியமாகிய இஸ்ரவேல் ராஜ்ஜியத்தையும் அதை ஆண்ட ராஜாக்களின் சரித்திரத்தையும், இந்த எழுப்புதல் ஆசிரியர் ஒட்டு மொத்தமாக ஒதுக்கிவிட்டார். இவருக்கு அந்த வடராஜ்ஜியங்கள் பின்பற்றிவந்த சிலை வணக்கத்தையும், எருசலேமிற்கு வராமல் சமாரியாவிலேயே ஆராதனை செய்வதையும் இவர் முற்றிலுமாக வெறுத்திருக்கிறார்; பரிசுத்த கோபமும் தாபமும் இவரிடம் காணப்படுகிறது.

ஆசிரியர்: நாத்தான், காத், இத்தோ - இவர்கள் எழுதியிருக்க வேண்டும். அதை எஸ்றா தொகுத்திருக்க வேண்டும்.

காலம் : 1-9 அதிகாரங்கள் - கி.மு. 971 - 931 (40 ஆண்டுகள் சரித்திரம்) சாலமோனின் ஆட்சிக்காலம்

10-36 அதிகாரங்கள் - கி.மு. 931-538 (400 ஆண்டுகள் சரித்திரம்) யூதாவின் 20 ராஜாக்களின் ஆட்சிக்காலத்தின் தொகுப்பு. பாபிலோன் சிறையிருப்பிற்குப் பின்பு எருசலேமிற்கு திரும்பி வந்த இஸ்ரவேல் மக்களுக்காக இப்புத்தகம் எழுதப்பட்டது. ஆண்டவரது ஆலயத்தையும், ஆராதனையையும் பாபிலோனில் பார்த்திராத இஸ்ரவேலின் இளைய பரம்பரையினருக்கு ஆலயத்தின் மகிமையையும், ஆராதனையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதற்காக, படிப்பிப்பதற்காக இப்புத்தகம் எழுதப்பட்டது.

திறவுகோல் வசனம்

என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு சேமத்தைக் கொடுப்பேன். (2 நாளா. 7:14)

தம்மிடத்தில் உத்தம இருதயத்தோடு இருப்பவர்களிடத்தில் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும் பொருட்டு கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது (2 நாளா. 16:9).

மையக்கருத்து : எழுப்புதல், ஆலயம், ஆராதனை, 4 எழுப்புதல்கள் 1. ஆசா ராஜா காலத்தில் (15) 2. யோவாஸ் (23) 3. எசேக்கியா காலத்தில் (29-31) 4. யோசியா காலத்தில் (34,35)

இயேசு கிறிஸ்து : ஆலயம் (யோவான் 2:19) (மத்12:6)

யூதா ராஜாக்கள் : இப்புத்தகத்தின் 10 முதல் 30 அதிகாரங்கள் யூதாவின் 20 ஆட்சியாளர்களின் சரித்திரத்தை சித்தரிக்கிறது. இவற்றில் 70 சதவீதம் யூதாவின் 8 நல்ல ஆட்சியாளர்களைப் பற்றி எழுதப்பட்டுள்ளது, என்பதும் 30 சதவீதம் மாத்திரமே மீதமுள்ள 12 மோசமான யூதா ராஜாக்களின் சரித்திரம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

1. ரெகோபெயாம் (மோசம் - இருப்பினும் கர்த்தருக்கு முன்பாகத் தன்னை தாழ்த்துகிறான் - பரவாயில்லை - Fair)
2. அபியா (மோசம்- இருப்பினும் கர்த்தரை சார்ந்திருக்கிறான் - பரவாயில்லை - Fair)
3. ஆசா (அருமையானவன் - Excellent)
4. யோசபாத் (மிக நல்லவன் - Excellent)
5. யோதாம் (ஆகாப் ராஜாவின் சிநேகிதன் மிக மோசமானவன் Very bad)
6. அகசியா (அப்பா யோதாமைப்போலவே மிக மோசமானவன் - Very bad கொலை செய்யப்படுகிறான்)
7. அத்தாலியா (அகசியாவின் தாய் - இஸ்ரவேல் வம்சத்தை சேர்ந்தவள்- மிக மிக மோசமானவள் Very bad கொலை செய்யப்படுகிறாள். - தன் மகன் அகசியாவின் வம்சத்தை அழித்து ஆட்சியைக் கைப்பற்றியவள்).
8. யோவாஸ் (பரவாயில்லை - Fair)
9. அமத்சியா (பரவாயில்லை - Fair)
10. உசியா (ஆரம்பம் அருமை - முடிவு பரிதாபம் அழிவுக்கு முன்பு அகந்தை - குஷ்ட ரோகியாக மரித்தவன் பரவாயில்லை - Fair)

11. யோதாம் (நல்லவன் - Good)

12. ஆகாஸ் (மிக மிக மோசமானவன் Evil King)

13. எசேக்கியா (இவன் அப்பா மோசம். ஆனால் இவன் அருமையானவன் Excellent)

14. மனாசே (இவன் அப்பா நல்லவன் - இவனோ மிக மிக மோசமானவன் - wicked king) கொலை செய்யப்படுகிறான்

15. ஆமோன் (அப்பாவைப் போலவே பிள்ளை - மிகமிக மோசமானவன் - கொலை செய்யப்படுகிறான்)

16. யோசியா (எழுப்புதல் அரசன் - சீர்திருத்தவாதி - மிகமிக அருமையானவன் - Excellent)

17. யோவகாஸ் (3மாத ஆட்சி - மிக மோசமானவன் - எகிப்தின் ராஜாவால் கைதி செய்யப்பட்டு - எகிப்திற்குக் கொண்டு போகப்படுகிறான் - Very bad)

18. எலியாக்கீம் என்ற யோயாக்கீம் (யோவாகாசின் அண்ணன் - எகிப்து ராஜாவால் நியமிக்கப்பட்ட பொம்மை ராஜா - பாபிலோன் ராஜாவாகிய நெபுகாத் நேச்சரால் கைது செய்யப்பட்டு பாபிலோனுக்கு கைதியாக கொண்டு போகப்படுகிறான் - மிக மிக மோசமானவன் Very bad)

19. யோயாக்கின் (யோயாக்கீமின் மகன் - 8 வயதில் பாபிலோன் ராஜாவினால் நியமிக்கப்பட்ட பொம்மை ராஜா இறுதியில் பாபிலோனுக்கு கைதியாக கொண்டு போகப்படுகிறான் - மிக மோசமானவன்.

20. சிதேக்கியா (யோயாக்கீனுடைய சித்தப்பா - மிக மோசமானவன் - Very bad)



எஸ்றா - புத்தகம் 15

பெயர் : ஆரம்பத்தில் எஸ்றா புத்தகமும் நெகேமியா புத்தகமும் ஒன்றாக இருந்தது. எஸ்றா புத்தகத்தை முதலாம் எஸ்றா புத்தகம் என்றும் நெகேமியா புத்தகம் இரண்டாம் எஸ்றா என்றும் அழைக்கப்பட்டது.

நாளாகமப்புத்தகத்தின் தொடர்ச்சிதான் எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்கள். இதை இரண்டாவது யாத்திராகமப்புத்தகம் என்றும் பாபிலோனை இரண்டாவது எகிப்து என்றும் அழைத்தால் தவறு இல்லை. பாபிலோனிற்கு சிறை பிடிக்கப்பட்டுப் போனது 3 கட்டத்தில் (கி.மு. 606, 597, 586) நடந்தது என்பதும் அது போலவே பாபிலோனிலிருந்து யூதர்கள் திரும்பியதும் 3 கட்டத்தில் நடந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெர்சியா மன்னன் கோரேஸ் பாபிலோனை கி.மு.539-ம் ஆண்டு வீழ்த்தி ஆட்சியை கைப்பற்றினான். அடுத்த ஆண்டே யூதர்களை விடுதலையாக்கி எருசலேமிற்கு போக விரும்பும் யூதர்கள் போகலாம் என்று கோரேஸ்ராஜா ஆணை பிறப்பித்தான். அப்பொழுது வாழ்ந்த 25லட்ச யூதர்களில் 50,000 யூதர்கள் மாத்திரமே செருபாபேல் தலைமையில் முதன்முதலாக எருசலேமிற்கு திரும்பினார்கள்.

இரண்டாவதாக 81 ஆண்டுகள் கழித்து 2000 யூதர்கள் எஸ்றா தலைமையில் கி.மு. 457 -ல் பாபிலோனிலிருந்து எருசலேம் திரும்பினார்கள்.

13 ஆண்டுகள் கழித்து கி.மு. 444-ல் நெகேமியா தலைமையில் மூன்றாவது கூட்டம் பாபிலோனிலிருந்து எருசலேம் திரும்பியது.

இரண்டாவது ஆலயம் கட்டப்பட்ட சரித்திரம்

கி.மு. 538 -ல் எருசலேம் திரும்பிய யூதர்கள் செருபாபேல் தலைமையில் ஆலயம் கட்டத் தொடங்கினார்கள். கி.மு. 536 -ல் ஆலயத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்டது. ஆனாலும் எதிர்ப்பின் காரணத்தினால் கி.மு. 534 முதல் 520 வரை ஆலயக் கட்டுமானப்பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. கோரேஸ் ராஜாவின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆலயம் அடுத்து வந்த பெர்சிய ராஜாக்கள் சேம்பிஸ், மொர்திஸ் காலத்தில் 14 ஆண்டுகள் நிறுத்தி வைக்கப்பட்டது.

அடுத்து வந்த தரியு ராஜா காலத்தில் கோரேஸ் ராஜாவின் அரசாங்கம் ஆலயம் கட்ட அனுமதித்த அரசாங்கக் கட்டளையின் நகல் கிடைத்தது. இறுதியாக கி.மு.515ம் ஆண்டு ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.

ஆசிரியர் : நாளாகமப் புத்தகம், எஸ்றா, நெகேமியா ஆகிய புத்தகங்கள் அனைத்தையும் எஸ்றா தான் தொகுத்து எழுதினார். இந்த எஸ்றா ஒரு வேதாகமப் பண்டிதர். இவர் காலத்தில்தான் பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் தொகுப்பு முற்றுப் பெற்றதாக கருதப்படுகிறது.

நெகேமியா பல புத்தகங்கள் கொண்ட ஒரு நூலகம் வைத்திருந்தார். எஸ்றா அந்தப் புத்தகங்களையும், நெகேமியாவின் டைரியையும் ஆதாரமாக வைத்து நாளாகமம் எஸ்றா நெகேமியா ஆகிய புத்தகங்களை தொகுத்திருப்பார் என்று நம்பப்படுகிறது.

நெகேமியாவும், எஸ்றாவும் ஒரே காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள்.

இரண்டாவது ஆலயம் கட்டப்பட்ட பின்பு 60 ஆண்டுகள் கழித்துதான் எஸ்றா எருசலேமிற்கு வருகிறான் என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயம் கட்டி முடிக்கப்பட்டபோது எஸ்றாவும், நெகேமியாவும் பிறந்திருந்தார்களா என்பதே சந்தேகம்.

எஸ்றாவின் புத்தகத்தின் 6-ம் அதிகாரத்திற்கும் 7-ம் அதிகாரத்திற்கும் இடையில் 63 ஆண்டுகள் கால இடைவெளி இருப்பதை நாம் அறிந்து கொள்வது நல்லது. காரணம் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது (எஸ்றா 6-ம் அதிகாரம்) கி.மு.520-ம் ஆண்டு. ஆனால் எஸ்றா எருசலேமிற்கு (எஸ்றா 7ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டபடி) வந்தது கி.மு. 457ம் ஆண்டு.

புத்தகத்தின் மையக் கருத்து

ஏறக்குறைய 60 ஆண்டுகள் அன்னிய நாட்டில் இருந்து விட்டு தாயகம் திரும்பிய யூதர்களுக்கு ஆலய வழிபாட்டையும் ஆராதனையையும் நினைப்பூட்டுவது, அவர்களது ஆவிக்குரிய வாழ்க்கையை ஆதிநிலைக்கு கொண்டு வருவது. இதன் மூலம் அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டு மீண்டும் ஆண்டவரிடத்தில் திரும்புவது.

திறவுகோல் வசனம் : 1:3 7:10

திறவுகோல் அதிகாரம் 6-ம் அதிகாரம் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுதல்.

எஸ்றாவின் ஊழியம்

எருசலேமில் ஆலயம் கட்டப்பட்டு முடிந்தது. ஆனால் அதில் ஆராதனை நடத்துவதற்கும், பிரசங்கம் செய்வதற்கும் தகுதி வாய்ந்தவர்கள் இல்லை. அதற்காகவே எஸ்றாவை 7:10 -ம் வசனத்தின் படி வேதத்தை ஆராயவும் அதன்படி செய்யவும் அவனது இருதயத்தை ஆண்டவர் பக்குவப்படுத்தியிருந்தார்.

ஆலயம் கட்டுவதற்கு ஒரு செருபாபேல்; அதில் ஆராதனை நடத்துவதற்கு ஒரு எஸ்றா தேவைப்பட்டது. ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 60 ஆண்டுகள் கழித்துத்தான் ஆலய ஆராதனை நடத்த ஒரு நல்ல பாஸ்டர் வருவது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்து தாவீதின் வம்சத்தில் பிறந்த செருபாபேல் கிறிஸ்துவுக்கு ஒப்பனை.



நெகேமியா - புத்தகம் 16

பெயர் : யெகோவா என் ஆறுதல் - நெகேமியா

ஆதியில் எஸ்றா - நெகேமியா ஒரே புத்தகமாக இருந்தது. கி.பி. 4ம் நூற்றாண்டில் ஜெரோம் என்ற வேத பண்டிதர் இதை எஸ்றா என்றும் நெகேமியா என்றும் 2 புத்தகங்களாக பிரித்தார். காரணம் நெகே 1:1ன் படி இப்புத்தகத்தை நெகேமியா எழுதியதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

எழுதப்பட்ட காலம் : கி.மு. 446 - 430

எழுதப்பட்ட இடம் : பாலஸ்தீனம்

ஆசிரியர் : இதை எழுதியது நெகேமியா. இதில் முதல் 7 அதிகாரங்களும் நேரில் நம்மிடம் பேசுவது போல் எழுதப்பட்டுள்ளது. (ஆங்கிலத்தில் 1st person) அடுத்து வரும் அதிகாரங்கள் (8-13) மூன்றாம் நபரிடம் (ஆங்கிலத்தில் 3rd person) விளக்கம் கொடுப்பது போல நெகேமியா தனது டைரியில் குறிப்புகள் எழுதி வைத்து இப்புத்தகத்தை எழுதியிருக்க வேண்டும்.

எஸ்றாவும், மல்கியா தீர்க்கதரிசியும் நெகேமியா வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்கள். பெர்சியா மன்னன் ஆர்டெக்சார்தெஸ் 1 (கி.மு. 464 - 423) ஆண்ட காலத்தில் ராஜாவிற்கு பானபாத்திரக்காரனாக நெகேமியா பணியாற்றியவன். ராஜாவிற்கு கொடுக்கப்படும் எந்த பானமும், ஆகாரமும் இவன் மூலம் தான் கொடுக்கப்படும். அந்த அளவிற்கு இவன் ராஜாவின் நம்பிக்கைக்குப் பாத்திரவானாக இருந்திருக்கிறான் என்பது குறிப்பிடத்தக்கது. கி.மு 444 முதல் 432 வரை எருசலேம் கவர்னராகவும் பணியாற்றியிருக்கிறார். 52 நாட்களில் ஏறக்குறைய 5 கி.மீ சுற்றளவு உள்ள எருசலேம் பட்டணத்தின் சுவர்களைக் கட்டி எழுப்பி சாதனை படைத்தவன்.

திறவுகோல் வார்த்தை : ஜெபம் (1:4) பணி **(work)** (6:3) கிரியை இல்லா விசுவாசம் செத்தது.

மையக்கருத்து : ஜெபம் (Prayer), வேதனை (Pains), விடாமுயற்சி (Perseverance) இம்மூன்றும் வெற்றியின் முக்கியமான மூலதனங்கள். இடிந்து கிடக்கும் அலங்கத்தையும், சிறையிருப்பின் மூலம் சிதைந்து

போன இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கைகளையும் மீண்டும் கட்டி எழுப்பி பழைய உன்னத நிலைமைக்கு கொண்டுவருதல்.

திறவுகோல் அதிகாரம் : 9ம் அதிகாரம் மக்கள் தங்களது பாவங்களை பகிரங்கமாக அறிக்கையிட்டு ஆண்டவரிடத்தில் பாவமன்னிப்புப் பெற்று, ஆண்டவரோடு உடன்படிக்கை செய்து கொள்ளுதல்.

எஸ்றா இஸ்ரவேல் மக்கள் மத்தியில் ஆவிக்குரிய எழுப்புதலையும், விழிப்புணர்ச்சியையும் கொண்டு வந்தான். இந்த நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டி எழுப்பி அரசியல் மற்றும் பாதுகாப்பு ரீதியாக இஸ்ரவேல் மக்களைக் கட்டி எழுப்பினான். கி.மு. 580ம் ஆண்டு நெபுகாத்நேச்சரால் இடிக்கப்பட்ட எருசலேமின் அலங்கத்தை கி.மு. 464ம் ஆண்டு கட்டி எழுப்புகிறான்.

பாடம் : இப்புத்தகத்தின் வாயிலாக நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் - எதிர்ப்புகளைக் கண்டு நாம் பயப்படக்கூடாது. துணிந்து நமது வேலையைத் தொடர வேண்டும். சன்பெல்லாத், தொபியா போன்ற எதிரிகளின் பரியாசத்தை நாம் பொருட்படுத்தக்கூடாது.

இயேசு : நெகேமியா, எஸ்றா இருவருமே இயேசு கிறிஸ்துவிற்கு நிழலாட்டமாக இருக்கிறார்கள். எஸ்றா ஒரு ஆசாரியன் - நெகேமியா மக்களை ஆளுகை செய்யும் ஒரு ஆளுநர்.



எஸ்தர் - புத்தகம் 17

பெயர்: எஸ்தர் - வீனஸ் நட்சத்திரம்.

காலம்: கி.மு 516 - 506

இடம் : பெர்சியா சாம்ராஜ்யத்தின் தலைநகரமாகிய சூசான் நகரம்.

ஆசிரியர் : ஆசிரியர் யார் என்று திட்டவட்டமாக கூற இயலாது. ஆனால் எழுதியவர் நிச்சயம் ஒரு யூதராகத்தான் இருக்க வேண்டும் மொர்தேகாய் ஒருவேளை எழுதியிருக்கலாம். அவரது நாட்குறிப்பிலிருந்து எடுக்கப்பட்ட பல விஷயங்கள் இதில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒருவேளை எஸ்றா அல்லது நெகேமியா எழுதியிருக்க வேண்டும் அல்லது தொகுத்திருக்கலாம்.

எஸ்றா, நெகேமியா, எஸ்தர், ஆகாய் இப்புத்தகங்களை நீங்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமானால் பெர்சியாவின் பேரரசர்கள் ஆண்ட காலங்களை நீங்கள் அறிந்து கொள்வது நல்லது.

கோரேசு அரசன் கி.மு. 559 - 530 - செருபாபேல் தலைமையில் எருசலேம் சென்று ஆலயத்தின் அஸ்திபாரம் கி.மு 536 போடப்பட்டது.

கேம்பிகன் அரசன் கி.மு. 530 -522 - ஆலயப்பணி நிறுத்தப்பட்டது.

ஸ்மெர்திஸ் அரசர் கி.மு 522 - ஆலயப்பணி நிறுத்தப்பட்டது.

தரியு I கி.மு. 521 - 486 - ஆலயப்பணி கி.மு. 520ல் தொடங்கி கி.மு. 515ல் முற்றுப்பெற்றது.

அகாஸ்வேரு ராஜா கி.மு. 486 - கி.மு. 464 - 439ல் எஸ்தர் ராணியாக முடி சூட்டப்படுகிறாள்

அர்ட்டாக் செர்சஸ் - கி.மு. 464 - 423 எஸ்றா பானபாத்திரக்காரன்

தரியு II கி.மு. 423 - 404 - கோரேசு ராஜா கி.மு 539ம் ஆண்டு அக்டோபர் மாதம் பாபிலோன் ராஜாவை தோற்கடிக்கிறான். அடுத்த ஆண்டு கி.மு. 538ல் அவனது ஆளுகைக்குள்ளாக உள்ள யூதர்களுக்கு விடுதலை கொடுத்து, எருசலேம் போக விரும்புகிறவர்கள் போகலாம் என்று அறிவிக்கிறான்.

அகாஸ்வேரு ராஜா : ஒரு கோபக்காரன் திடீர் திடீரென முடிவு எடுக்கும் பழக்கம் உள்ளவன். உதாரணமாக யூதர்களை அழிப்பதற்கு ஒரு உத்தரவு பிறப்பிக்க ஆமான் வந்து கேட்டான். எதையும்

யோசிக்காமல் கையெழுத்துப் போட்ட பின் சில நாட்கள் கழித்து எல்லாம் தலை கீழாக மாறி யூதர்கள் தங்கள் எதிரிகளை அழிக்க கையொப்பம் இடுகிறான். அது மாத்திரமல்ல தன்னுடைய மனைவியையும் கூட திடீரென கோபப்பட்டு, தன் ராணியை குடிவெறி போதையில் பதவி இறக்கம் செய்து, ஒரு புது ராணி தேட ஆரம்பிக்கிறான். இந்த சம்பவத்திற்கு முன்பு இந்த அகாஸ்வேரு ராஜா ஒரு யுத்தத்தில் தோல்வியடைந்து விட்டு வந்த சமயத்தில் தான் இந்த எஸ்தர் 1:3ல் விருந்து வைத்து தனது தோல்வியை மறக்க முயற்சித்தான். தன் எதிரியை ஜெயிக்க முடியாத இவன் தனது முதல் மனைவியையாவது (ராணி வஸ்தியை) ஜெயிக்க விரும்பியிருப்பான். கி.மு.435 -ம் ஆண்டு சூசான் பட்டணம் முழுவதும் ஒரு தீயிற்கு இரையாகி அழிந்து விட்டது. இச்சம்பவம் பற்றி இப்புத்தகத்தில் குறிப்பிடாத காரணத்தினால் இப்புத்தகம் நிச்சயமாக கி.மு. 435-ம் ஆண்டிற்கு முன்பாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மையக்கருத்து : ஆண்டவர் தனது ஜனங்களை எப்படியாவது நிச்சயம் காப்பாற்றுவார். அதற்காக அவர் எப்படியாவது திட்டம் தீட்டுவார்; யாரையாவது உபயோகப்படுத்துவார்.

பிசாசு யூதகுலத்தை எப்படியாவது அடியோடு அழித்து விட்டால், மேசியா இவ்வுலகிற்கு வரமுடியாது என்று அறிந்து ஆமான் மூலம் யூத வம்சம் அனைத்தையும் அழிக்க முயற்சிக்கிறான்.

அது போலவே இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ஹிட்லர், ஐச்மேன் மூலமாக 60 லட்சம் யூதர்களை அழித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் ஹிட்லர் இரண்டாவது ஆமான்.

பாடம் : மற்றவர்களை அழிக்க நாம் நினைத்தால் நாம் அழிந்து போவோம். ஆமான் தான் வெட்டிய குழியில் அவனே விழுந்தான்.

திறவுகோல் வசனம் 4:14

நீ இந்தக்காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும், இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்காலமே, யாருக்குத் தெரியும் என்று சொல்லச் சொன்னான்.

இயேசு : எஸ்தர் - செத்தாலும் சாகிறேன் என்று யூத மக்களுக்காக பரிந்து பேச, தன் உயிரையே பணையும் வைக்க முன்வந்தாள்.

யோபு - புத்தகம் 18

பெயர் : 'யோபு' என்றால் 'பாலைவனம்' அல்லது 'நிச்சயமற்றவன்' என்று பொருள் இப்புத்தகத்திற்கு பொருத்தமான பெயர் யோபுவின் வாழ்க்கை சரித்திரம்.

மிகப் பழமையான சரித்திரம் (Oldest History)

யோபு என்ற மனிதன் ஒரு கற்பனைக்கதை அல்ல. யோபு என்ற மனிதனின் பொறுமையை கவனித்துப்பாருங்கள் என்று யாக்கோபு (5:11) எழுதுகிறார். ஆதி 46-13 ன் படி யோபு இசக்காருடைய மகன். இசக்கார் யாக்கோபுவின் மகன். ஆகவே யோபு யாக்கோபின் பேரன்.

யோபுவை அரிச்சந்திரனின் சரித்திரத்திற்கு ஒப்பிடலாம் ஆனால் யோபுவின் சரித்திரம் ஒரு கற்பனைக் கதை அல்ல அது நிஜம்.

காலகட்டம் : கி.மு. 1843-1703 இதில் கொடுக்கப்பட்டிருக்கிற பலி யிடுதல், ஆண்டவரை தொழுது கொள்ளும் முறை ஆபிரகாம் காலத்தைச் சேர்ந்தது. இப்புதகத்தில் நியாயப் பிரமாணம், ஆசரிப்புக்கூடாரம் - இவைகளைப் பற்றி எங்கும் குறிப்பிடவில்லை. அப்படியானால் இந்த புத்தகம் மோசே காலத்திற்கு முந்தியே எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆதியாகமத்திற்கும் யாத்திராகம புத்தகத்திற்கும் இடையில் இந்த யோபுவின் புத்தகம் இடம் பெற்றிருக்க வேண்டும். அல்லது யாத்திராகமம் முதல் அதிகாரத்திற்கும் இரண்டாம் அதிகாரத்திற்கும் இடையில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

பட்டிமன்றங்கள் : இப்புத்தகத்தில் பல பட்டி மன்றங்களைப் பற்றி வாசிக்கிறோம். முதல் பட்டி மன்றம் - தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையே பரலோகத்திலேயே நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து யோபுவிற்கும் அவனது 4 நண்பர்களுக்கும் இடையே வியாதிப்படுக்கையில் கிடக்கும் போதே - ஒருவேளை மருத்துவ மனையிலேயே இந்த 4 பட்டிமன்றங்களும் எலிகூ, எலிப்பாஸ், பில்தாத், சோபார் நடைபெறுகிறது. யோபு இந்த 4 பேர்களோடு "ஏன் இந்த வியாதியை தேவன் யோபுவிற்குக் கொடுத்தார்" என்ற கருத்தை மையமாகக் கொண்டு வாதாடுகிறான். இறுதியில் பட்டிமன்றத்தின் நடுவராக இருந்து ஆண்டவர் தனது தீர்ப்பைக் கூறுகிறார். இந்த பட்டிமன்றத்திலே பேசிய போட்டியாளர்கள் யோபு, அவனது 4 நண்பர்கள் - ஆகிய எல்லோருமே ஒட்டு மொத்தமாக தோற்றுப்போகிறார்கள். "தேவன் சகலத்தையும் செய்ய வல்லவர்

அதிகாரம் படைத்தவர். அவர் நினைத்ததை யாராலும் தடை செய்ய முடியாது" - இது தான் தேவனுடைய தீர்ப்பு.

யோபு "எனக்குத் தெரியாததையும், புத்திக்கு எட்டாததையும் கூறிஅலப்பினேன்" என்று அறிக்கையிடுகிறான். யோபுவின் 4 நண்பர்களையும் (இவர்கள் இவனது நண்பர்களா? அல்லது குற்றவாளிக் கூண்டில் நிறுத்திய எதிர்தரப்பு வக்கீல்களா) பார்த்து தேவன் "என்னைப்பற்றி யோபுபேசினது போல நீங்கள் நிதானமாய் பேசவில்லை" என்று தீர்ப்பு சொல்லுகிறார்.

இறுதியில் யோபு தான் செய்த பாவத்திற்காகவும், அவனது நண்பர்கள் அவனை (சொல்) என்ற 'கல்லில்' தாக்கிய குற்றத்திற்காகவும் தகனபலியிடுகிறான். தன்னையே தாக்கிப்பேசிய எதிர்கட்சிக்காரர்களுக்கு இவனே பலியிட்டு அவர்களது பாவங்களை மன்னிக்க பரிகாரம் தேடுகிறார்.

ஆசிரியர் : இதை யார் எழுதியது என்று தீர்க்கமாக சொல்ல முடியாது. யோபு, எலிகூ, மோசே, சாலமோன், ஏசாயா, எசேக்கியா, எரேமியா, பாரூக், எஸ்றா - இவர்களில் யாராவது ஒருவர் எழுதியிருக்கலாம். மோசே 40 ஆண்டுகள் வாழ்ந்த மீதியானியர் தேசமும் யோபுவின் ஊத்ஸ் தேசமும் அடுத்து அடுத்து அருகாமையில் இருப்பதால் வாய் வழியாக கதையாக பரம்பரை பரம்பரையாக வந்த இந்த யோபுவின் சரித்திரத்தை மோசேதான் எழுதியிருக்க வேண்டும் - என்று பலரால் நம்பப்படுகிறது.

இப்புத்தகம் பழமையான புத்தகம் : மோசேயின் புத்தகங்களுக்கு முன்பே இச்சரித்திரம் இருந்த காரணத்தால் - வேதாகமத்தின் மிகப்பழமையான புத்தகமாக இருப்பதால் இதுவே முதல் புத்தகமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இது கவிதை (Poetical) புத்தகத்தின் கீழ் இடம் பெறுவதால், இது வேதாகமத்தின் சரித்திரப் புத்தகங்களின் முடிவிலும் கவிதைப் புத்தகங்களின் முதல் இடத்திலும் அதாவது எஸ்தர் புத்தகத்திற்கு அடுத்தும் சங்கீதபுத்தகத்திற்கு முந்தியும் - இடம் பெற்றிருக்கிறது.

கருப்பொருள் : உபத்திரவத்தின் ரகசியம் - தேவன் நமக்கு உபத்திரவத்தை அனுப்புவதின் நோக்கம் - நம்மை நொறுக்குவதற்கு அல்ல. நம்மை ஊன்றக்கட்டுவதற்கு; நம்மை கீழே தள்ளுவதற்கு அல்ல நம்மை உயர்த்துவதற்கு (சங். 119:71).

நமது வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவத்திற்கும் ஒவ்வொரு கஷ்டத்திற்கும் - ஏன்? ஏன்? என்று நாம் கேள்வி கேட்பது

தவறு. ஒரு கருப்பு எருமை - பச்சைப் புல்லை மேய்ந்து விட்டு வெள்ளைப்பால் எப்படி கொடுக்கிறது? இக்கேள்விக்கு பதில் கிடைத்த பின்புதான் பாலைக் குடிப்பேன் - என்று சொல்வீர்களா? அப்படி நீங்கள் பிடிவாதம் பிடித்தால் இழப்பது நீங்கள் தான்.

திறவுகோல் வசனம் : அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் (யோபு. 13:15).

திறவுகோல் அதிகாரம் : 42-வது அதிகாரம் உச்சகட்டத்தை எட்டுகிறது. ஏன்?ஏன்?ஏன்? என்று அவன் எழுப்பிய 'கேள்வி - அலைகள்' ஓய்ந்து போய் - அவன் மனம் நதியைப்போல் அமைதியாயிற்று.

யோபுவின் புகார் : நமக்கும் உபத்திரவங்கள், சோதனைகள் வரும்போது யோபு கேட்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ள இதே கேள்விகளை நாம் கேட்காமலிருப்போமாக

1) ஆண்டவர் ஏன் என் ஜெபத்தைக் கேட்கவில்லை? (13:3,24).

2) ஆண்டவர் ஏன் என்னைத் தண்டிக்கிறார் (6:4; 7:20).

3) துன்மார்க்கனை ஏன் ஆண்டவர் ஆசீர்வதிக்கிறார்? (21:7).

கிறிஸ்து : என் மீட்பர் உயிரோடிருக்கிறார் (19:25-27) பலி செலுத்துதல் இயேசுவைக் குறிக்கிறது எங்களுக்கு மத்தியஸ்தன் இல்லையே? (9:33). என்ற இவர்களது ஏக்கத்தில் இரட்சகர் வெளிப்படுகிறார்.

யோபுவிற்கு வந்த கேள்விகள் நமக்கு வரக்கூடாது. காரணம் இயேசு (எபி. 4 : 15) நம்மைப் போலவே எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்ட படியினால் அவரே நமக்கு முன்மாதிரி - அவரே நமது மீட்பர், நமது மத்தியஸ்தர்.



சங்கீதம் - புத்தகம் 19

பெயர் : இந்தப் புத்தகத்திற்கு பல பெயர்கள் உண்டு. துதியின் புத்தகம் Book of praises, ஆராதனை புத்தகம். இன்றைய நாளில் நாம் உபயோகிக்கும் ஞானப்பாட்டு கீர்த்தனை புத்தகத்தைப் போல அந்தக் காலத்தில் இந்த சங்கீதப் புத்தகம் ஆலய ஆராதனை கீதப்புத்தகமாகப் பயன்படுத்தப்பட்டது.

எழுதப்பட்ட இடம் : பாலஸ்தீனம், பாபிலோன்

காலக்கட்டம்: வேதத்தில் உள்ள எல்லா புத்தகங்களிலும் மிகப்பெரிய புத்தகம் இந்த சங்கீத புத்தகம். அது மாத்திரமல்ல அதிக பட்சமான கால இடைவெளியில் எழுதப்பட்ட புத்தகமும் இதுதான். இதில் மோசே எழுதிய 90-ம் சங்கீதம் மோசேயின் காலத்தில் அதாவது கி.மு. 1410-ல் எழுதப்பட்டது. பாபிலோனில் சிறையிருப்பின் காலத்தில் வாழ்ந்த சிலர் சங்கீதங்களை கி.மு. 430-ல் எழுதியிருக்கிறார்கள். அப்படியானால் 1000 ஆண்டுகளாக இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு சங்கீதத்தையும் தொகுத்து பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் : இதில் உள்ள 100 சங்கீதங்களுக்கு ஆசிரியர் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 50 சங்கீதங்களுக்கு ஆசிரியர் பெயர் கொடுக்கப்படவில்லை.

மோசே - 1: தாவீது - 73 கோராகின் புத்திரர் - 10

ஆசாப் - 12 ஏமான் - 1 சாலமோன் - 2 ஏத்தான் - 1

இந்த சங்கீதங்களை ஒரு புத்தகமாகப் தொகுப்பதற்கு காரணமாயிருந்தவர்கள் - தாவீது, எசேக்கியா ராஜா, எஸ்றா.

ஐந்து பிரிவுகள் : இந்த சங்கீதப் புத்தகத்தை 5 பிரிவுகளாகப் பிரிக்கலாம். இந்த 5 பிரிவுகளையும் மோசேயின் 5 ஆகமங்களுடன் ஒப்பிட்டு பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் ஆமென் ஆமென் என்று சுட்டிக் காண்பிக்கப்பட்டிருக்கும்.

1. ஆதியாகமப்பிரிவு - சங்கீதங்கள் 1 முதல் 41 முடிய
2. யாத்திராகமப்பிரிவு - சங்கீதங்கள் 42 முதல் 72 முடிய
3. லேவியராகமப்பிரிவு - சங்கீதங்கள் 73 முதல் 89 முடிய
4. எண்ணாகமப்பிரிவு - சங்கீதங்கள் 90 முதல் 106 முடிய
5. உபாகமப் பிரிவு - சங்கீதங்கள் 107 முதல் 150 முடிய

திறவுகோல் வசனம் : என் வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக (19:14).

திறவுகோல் சங்கீதம் : 100ம் சங்கீதம் துதியும் ஆராதனையும் இரண்டுமே இதில் அடங்கியிருக்கிறது என்பது இந்த சங்கீதத்தின் சிறப்பு அம்சம்.

கருப்பொருள் : இப்புத்தகத்தின் உயிர் நாடி ஆராதனை. அந்த ஆராதனைக்கு தேவை. ஆண்டவரைத் துதிக்கும் துதியும், ஸ்தோத்திரமும்.

செய்தியை சரியாக புரிந்துகொள்ள ஒவ்வொரு சங்கீதத்தின் தலைப்பில் எழுதப்பட்டுள்ள காரணத்தையும், இச்சங்கீதம் எந்த பின்னணியில் எழுதப்பட்டது என்பதையும் வாசியுங்கள்.

இந்த சங்கீதப் புத்தகத்தில் உள்ள செய்தியை வேண்டுமானால் முதலாவது அந்த சங்கீதத்தின் தலைப்பில் ஏதாவது விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறதா - என்பதை பாருங்கள். உதாரணமாக 51-ம் சங்கீதத்தின் செய்தியை நீங்கள் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டுமானால் அதை தாவீது எந்த வித மனநிலையில், சூழ்நிலையில் எழுதினான் (பத்சேபாளிடத்தில் விபச்சாரம் செய்த பின்பு) இரண்டாவதாக சங்கீதத்தின் தலைப்பில் ஒன்றும் கொடுக்கப்படாத பட்சத்தில் அந்த சங்கீதத்திற்குள் ஏதாவது விஷயங்கள் எழுதப்பட்டிருக்கலாம். சங்கீதம் எழுதப்பட்ட இடம் ஒரு வேளை ஆலயமாக இருக்கலாம்: ஆராதனை வேளையாக இருக்கலாம்: அல்லது பாபிலோன் தேசத்தில் உள்ள ஆற்றின் அலரிச் செடியின் அருகிலே இருக்கலாம். அந்த குறிப்பிலிருந்து இந்த சங்கீதம் எதற்காக, எந்த மனநிலையில், எந்த சூழ்நிலையில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை தேடித்துருவி அச் சங்கீதத்தின் பிண்ணனியைக் கண்டு பிடியுங்கள்.

இன்றைக்கும் கூட சில பிரசித்தமான Hit Song பாடல்கள் - ஒரு குறிப்பிட்ட வாழ்க்கையின் இக்கட்டான சூழலில் - உடைந்து போன மனநிலையில் அந்த பாடலை தொகுத்தவர் எழுதியிருக்கலாம். இதே போலத்தான் இந்த சங்கீதப்புத்தகத்தில் எழுதப்பட்ட ஒவ்வொரு பாடலையும் நாம் பார்க்க வேண்டும். ஒவ்வொரு பாடலுக்கும் சங்கீதத்திற்கும் பின்னாலே ஒரு குட்டி கதை பின்னணி இருக்கலாம்.

கிறிஸ்து : இந்தப் புத்தகத்தில் வரப்போகிற மேசியா பற்றி பல குறிப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவரது உயிர்தெழுதல் (16:10) சங். 22:1 - என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்

- என்ற வசனத்தோடு அந்த 22-ம் சங்கீதம் முழுவதுமே இயேசு கிறிஸ்துவின் பாடுகள் பற்றியது.

34:20 எலும்புகள் முறிக்கப்படுவதில்லை

41:9 காட்டிக் கொடுக்கப்படுவார்

118:26 இரண்டாம் வருகை

சங்கீதம் 2, 45, 72, 110 - இயேசு ராஜாவாக அரசாளுகிறார்

சங்கீதம் 22 - இயேசுவின் பாடுகள்

சங்கீதம் 16 - இயேசுவின் உயிர்த்தெழுதல்

சங்கீதம் 68 - இயேசு பரத்திற்கு ஏறிப்போதல்

குறிப்பு : சேலா என்ற பதம் 72 தடவை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இது இன்னிசை கருவிகளை உபயோகப்படுத்தும் போது விட வேண்டிய ஒரு கால இடைவெளியை Pause-யை குறிக்கிறது.

இன்னொரு வகை பிரிவு

(1) 1 முதல் 41 சங்கீதங்களை ஆராதனை சங்கீதங்கள் (Song of Worship) என்று பிரிக்கலாம்.

(2) 42 முதல் 89 வரை உள்ள சங்கீதங்களை தேசிய உணர்வுகளைத் தூண்டக் கூடிய சங்கீதங்கள்.

(3) 90 முதல் 150 வரை உள்ள சங்கீதங்களை துதியின் சங்கீதங்கள் என்று பிரிக்கலாம்.

நீதி மொழிகள் - புத்தகம் 20

பெயர் : இந்தப் புத்தகத்தை ஞான போதனை புத்தகம் (Moral Lessons Books) என்று அழைப்பது சாலப் பொருந்தும். கடவுளுக்குப் பயப்படாத ஒரு உலகத்தில் கடவுளுக்குப் பிரியமான ஒரு வாழ்க்கையை நாம் எப்படி வாழ்வது என்ற நடைமுறை போதனைகளை போதிக்கிறது.

"சாலமோனின் நீதி மொழிகள்" என்ற பெயரும் இப்புத்தகத்திற்கு கொடுக்கலாம்.

இந்த 'ஞானபோதனைகள்' எபிரேய இலக்கியத்தில் மாத்திரம் இடம் பெறவில்லை. பல நாடுகளில் இதுபோன்ற பொதுவான போதனைகள் அடங்கிய இலக்கிய நூல்கள் உண்டு. நமது தமிழில் ஔவையார் எழுதிய ஆத்திச்சூடி, திருவள்ளுவர் எழுதிய திருக்குறள், மற்றும் நன்னூல், நீதி நெறிவிளக்கம் என்பன.

இந்த நூல்களுக்கும் சாலமோன் மற்றும் லேமுவேல் ஆகூர் எழுதிய இந்த நீதிமொழிகள் புத்தகத்திற்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. இவ்வகையான எல்லா "நன்னெறி" நூல்களும் சமுதாயத்திற்கு எது நல்லது எது கெட்டது என்று ஜாதி, மதம், இனம் வித்தியாசமின்றி அறிவுரை கூறுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பொருளடக்கம் : நாம் வாழும் சமுதாயம் அந்த சமுதாயத்தில் வாழும் சிறியோரும், பெரியோரும் மற்றவர்களோடு எப்படிப் பழக வேண்டும். அவர்களது கடமை என்ன, கடவுளுக்கு நாம் ஏன் பயப்படவேண்டும், பிள்ளைகள் பெற்றோருக்கு ஏன் கீழ்படியவேண்டும். வாலிபர்களது பொறுப்பு என்ன? வாலிபத்தை எப்படி பாதுகாப்பது, சோம்பேரியாக வாழாமல் கடுமையாக உழைக்க வேண்டும். ராஜாவிடத்திலும் அரசாங்கத்திடமும் நமது பொறுப்பு கடமை என்ன? - இந்த சத்தியங்களை இப்புத்தகம் போதிக்கிறது.

நமது அன்றாட வாழ்க்கையில் நம்மை எதிர்நோக்கியிருக்கும் சவால்களை எப்படிச் சந்திப்பது? வாழ்க்கையில் எப்படி வெற்றி பெறுவது? வாலிபர்கள் எதைத் தவிர்க்க வேண்டும். எதைத் தழுவிக் கொள்ள வேண்டும். வீட்டில் உள்ள ஒரு பெண் தனது குடும்பத்தைக்

கட்டி எழுப்புவது எப்படி? இது போன்ற பல நடைமுறை ஆலோசனைகளை நாம் இப்புத்தகத்தில் வாசிக்கலாம்.

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்ற பழமொழிக்கு மாறாக இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அனைத்து ஆலோசனைகளும் நடைமுறை வாழ்க்கைக்கு உதவக்கூடியவைகள்.

ஆசிரியர்கள் : 1 ராஜா 4:32 வசனத்தின் படி சாலோமோன் 3000 நீதி மொழிகளை எழுதி இருக்கிறார். ஆனால் அதில் 800 நீதிமொழிகள் மாத்திரமே இந்தப் புத்தகத்தில் 1-22, 25-29 அதிகாரங்களில் இடம் பெற்றிருக்கிறது. மொத்தம் உள்ள 31 அதிகாரங்களில் 27 அதிகாரங்கள் சாலோமோன் எழுதியவைகள். இந்த சாலோமோன் தன் வாழ்க்கையின் ஆரம்பத்தில் கடவுளுக்குப் பயந்த வாழ்க்கை வாழ்கிறான். அந்தக் கால கட்டத்தில் இந்த நீதிமொழிகள் எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அவனது பிந்தியவாழ்க்கை ஒரு பின்வாங்கிய தோல்வியடைந்த ஒரு வாழ்க்கை.

சாலமோன் வாழ்க்கை நமக்கு ஒரு வழிகாட்டியே தவிர ஒரு முன் மாதிரியான நாம் பின்பற்றக்கூடிய வாழ்க்கை அல்ல. (a guide post only and not an example to follow).

ஆம் இன்றைக்கும் கூட ஒரு சிலரது பிரசங்கத்தை நாம் பின்பற்றலாமே தவிர அவர்களைப் பின்பற்றக் கூடாது.

ஞானி : நீதி மொழிகள் 22:17 முதல் 24:34 வரை ஞானி ஒருவர் எழுதியது என்று வேதத்தில் (22:17) எழுதப்பட்டுள்ளது. இந்த ஞானி யார் என்று யாருக்கும் தெரியாது. ஒரு வேளை எகிப்து தேசத்தில் வாழ்ந்த சில ஞானிகள் - குறிப்பாக "அமேனிமோப்பா" என்ற ஞானி இதை கிமு 1000 - கி.மு. 600 கால இடைவெளியில் எழுதியிருக்கக் கூடும், என்று வேத அறிஞர்கள் கருதுகிறார்கள். ஞானிகள் ஒரு தேசத்தில் இருந்து இன்னொரு தேசத்துக்கு செல்வதும் அடுத்த தேசத்து ஞானிகளின் வார்த்தைகளைக் கேட்டு, தங்கள் ஞானத்தை வளர்த்துக் கொள்ள விரும்புவதும் அந்தக் காலத்து வழக்கமாக இருந்தது. அதனால்தான் சாலமோனின் ஞானத்தைக் கேட்டு அறிவதற்கு தூர தேசத்தில் இருந்து பலர் வந்திருக்கிறார்கள். அதுபோல சாலமோனும் அடுத்த தேசத்திற்குச் சென்று இந்த

ஞானியின் நீதிமொழிகளை தனது நீதிமொழிகளோடு சேர்த்து Edit தொகுத்திருக்கக்கூடும்.

ஆகூர் (30) லேமுவேல் (31)

30ம் அதிகாரத்தை எழுதிய ஆகூர் என்பவரும் அவர் குறிப்பிட்டுள்ள ஈத்தியேல், உளசாய் - என்ற இருவரும் இவர்கள் அனைவரும் யார் என்பது தெரியாது. இதில் உள்ள ஒரு விகர்ப்பம் என்ன தெரியுமா? இந்த ஆகூர் தனது உபதேச வாக்கியத்தைத் தொடங்கும் ஆரம்பம் வெகு மோசம்.

இந்த உலகத்திலே நான் ஒரு கடைந்தெடுத்த முட்டாள். எனக்கு புத்தியே சுத்தமாகக் கிடையாது என்று (30:2) ஆரம்பித்தாலும் அடுத்து வரும் வசனங்கள் எல்லாம் அதற்கு நேர்மாறாக ஞானம் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

ஒரு வஞ்சகப் புகழ்ச்சியாக தன்னை முட்டாள் என்று எழுதுகிறார் போல் தெரிகிறது.

அடுத்து 31ம் அதிகாரத்தை எழுதியவர் லேமுவேல் என்பவர் ஒரு ராஜா. ஆனால் எந்த நாட்டின் ராஜா என்பது தெரியவில்லை. இந்த ஆகூர், லேமுவேல் - இவர்களுக்கும் இஸ்ரவேல் மக்கள் பின்பற்றும் யெகோவா கடவுளுக்கும் எந்த சம்பந்தமும் உறவும் இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எழுதப்பட்ட தொகுக்கப்பட்ட காலம் கி.மு. 950-700

சாலமோன் வாழ்ந்தது கி.மு. 931 எனவே நீதிமொழிகள் 1 முதல் 22:16 வரையுள்ள நீதிமொழிகள் கி.மு. 931ல் எழுதப்பட்டது. ஆனால் சாலமோன் எழுதிய 25-29 அதிகாரங்கள் ஏறக்குறைய 230 ஆண்டுகள் கழித்து எசேக்கியா ராஜா காலத்தில் தொகுக்கப்பட்டது. (கி.மு 715 - 686)

திறவு கோல் வசனம்

வேத புத்தகத்தில் பல புத்தகங்கள் எழுதப்பட்டதன் நோக்கம் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இந்த நீதிமொழிகள் புத்தகம் எழுதப்பட்டதன் நோக்கம் (1.2-6) வசனங்களில் எழுதப்பட்டுள்ளது. இதை வாசிப்போர் ஞானத்தைப் பெற வேண்டும். புத்திமதிகளை

உணர வேண்டும். விவேகத்தையும், நிதானத்தையும் பெறவேண்டும். பேதைகள் வினாவுள்ளவர்களாய் மாற முடியும். வாலிபர்கள் நல் வழியில் நடப்பதற்காக, புத்திமான்கள் இன்னும் அதிக புத்தியை பெறவேண்டும். ஞானிகளின் வார்த்தைகளில் மறைந்து புதைந்து கிடக்கும் புதைபொருள்களை கண்டடைய வேண்டும். இது தான் இப்புத்தகத்தின் நோக்கம்.

ஒரு மனிதனுக்கு திறமை (Skill) இருக்கலாம். ஆனால் அந்த திறமை தவறான வழியில் பயன்படுத்தாமல், நல்ல வழியில் பயன்படுத்த வேண்டுமானால் அவனுக்கு ஒழுக்கமும், ஒழுங்கும் (Discipline) மிக முக்கியம். ஒழுங்கு இல்லாத திறமை மழை வெள்ளம் போல் சுனாமி போல் ஆபத்தானது. எதுவாயிருந்தாலும் கடவுளுக்குப் பயப்படுகிற பயம் தான் ரொம்ப முக்கியம். ஒழுங்குபடுத்தப்பட்ட திறமை இரண்டு கரைகளுக்கு இடையில் ஓடும் நதிபோல மற்றவர்களுக்கும் சமுதாயத்திற்கும் பயன்படக்கூடியது.

கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். (1:7)

உன் சுய புத்தியின்மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடு கர்த்தரில் நம்பிக்கையாயிரு (3:5)

கிறிஸ்து

8ம் அதிகாரத்தில் வரும் "உருவகப்படுத்தப்பட்ட ஞானம்" 8:26, 27ல் கொடுக்கப்பட்டுள்ள "அவர்" இயேசுவைக் குறிக்கிறது.

அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார். (1கொரி 1-31)



பிரசங்கி - புத்தகம் 21

புத்தகத்தின் சுருக்கம் - சாராம்சம்

மனித வாழ்க்கையைக் குறித்து ஒரு தத்துவ ஞானியின் தனிப்பட்ட கருத்துக்கள் அடங்கிய ஒரு புத்தகம் இது. மனிதன் எதற்காக இந்த உலகில் பிறந்தான், எதற்காக வாழ்கிறான், இறுதியாக எங்கு செல்லுகிறான் - இந்த கேள்விகளுக்கு இந்த தத்துவ ஞானியும் விடைதேட முயற்சிக்கிறார், ஆனால் இதுவரை யாரும் விடை கண்டு - பிடித்தது கிடையாது.

'மாயை' என்ற வார்த்தை 37 தடவை வருகிறது. 'சூரியனுக்குக் கீழே' என்ற வார்த்தை 29 தடவை வருகிறது. பிரசங்கி என்பவர் சபையாருக்கு முன்பு நின்று அவர்களுக்கு அறிவுரை கூறுபவர்.

புசித்து, குடித்து மகிழ்ந்திரு உயிரோடிருக்கும் போதே வாழ்க்கையை அனுபவிக்க கற்றுக்கொள். இதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை - என்ற தத்துவத்தை நமக்குப் போதிக்கிறார்.

சமுதாயத்திலும், சபையிலும் நிலவி வருகிற போட்டியினாலும், பொறாமையினாலும் வலியோர் நலிந்தோரை நசுக்கும் அநியாயத்தையும், அக்கிரமங்களையும் இவர் எடுத்துரைக்கிறார்.

எல்லாமே மாயை மனதிற்கு சஞ்சலம் - என்று இவர் அடிக்கடி புலம்பினாலும், அடிக்கடி கடவுளைப் பற்றிய சில நல்ல கருத்துக்களை நமக்கு எடுத்துரைக்கிறார். எல்லாம் மாயை, மாயை என்று புலம்புகிற ஒரு தத்துவ ஞானி எழுதிய புத்தகம் வேத புத்தகத்தில் ஏன் இடம் பெற்றிருக்கிறது என்றதொரு கேள்வி எழும்பும். இதற்கு நாம் கொடுக்கக்கூடிய ஒரே பதில் கீழே கொடுக்கப்பட்டுள்ள இப்புத்தகத்தின் முக்கியமான மையக்கருத்து.

"கடவுளுக்கு நீ பயப்பட வேண்டும், ஆண்டவரது கட்டளையை நீ கைக் கொள்ள கவனமாக இரு. உன் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் வேண்டுமானால், உன் வாழ்க்கைக்கு ஒரு இலட்சியம் தேவை. அதை நீ தேடினால், அதை கடவுள் தான் உனக்கு வெளிப்படுத்துவார். கடவுளுக்கு வெளியே, கடவுளுக்கு பயப்படாமல் நீ வாழுவாயானால் உன் வாழ்க்கை வெறும் மாயையாகத்தான் மாறிவிடும். எனவே

கடவுளை அண்டிக் கொள். அவரையே சார்ந்து கொள். உன் வாழ்க்கை மகிழ்ச்சியான வாழ்க்கையாக மலரும்."

ஆசிரியர் : 1:1,2 - வசனத்தின்படி இதை எழுதியவர் தாவீதின் குமாரனாகிய சாலமோன் ஞானி என்பதில் சந்தேகம் இல்லை.

காலம் : கி.மு. 935 சாலமோன் தனது இளமையில் உன்னதப்பாட்டையும், தனது நடுத்தரவயதில் நீதி மொழிகளையும், தனது முதுமைப்பருவத்தில் பிரசங்கி புத்தகத்தையும் எழுதியிருப்பார் என்று நம்பப்படுகிறது.

பிரசங்கியின் புத்தகத்தில் அவர் எழுதியிருக்கிற கருத்துக்களைப் படிக்கும் போது, இந்த சாலமோன் தனது இளமைப்பருவத்திலும், நடுத்தர வயதிலும் செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி தனது முதுமைப் பருவத்தில் அத்தவறுகளுக்கு பரிகாரம் தேடுவது போல் இப்புத்தகத்தை எழுதியது போல் தோன்றுகிறது.

திறவு கோல் வசனம் :

சூரியனுக்குக் கீழே காணப்படும் யாவுமே மாயை: மனதிற்கு சஞ்சலம்.

காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக் கொள். இதுவே எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை.

நன்மையோ தீமையோ எல்லாவற்றையும் தேவன் நியாயத்தீர்ப்பிற்கு கொண்டு வருவார் (12 : 13,14).

சாலமோனின் மனப் போராட்டம் - வாலிபப்பிராயத்தில் சிருஷ்டிகரை நினை என்று தனது வயதான காலத்தில் எழுதுகிறார். காரணம், இவர் வாலிபனாக இருந்த போது தனது சிருஷ்டிகரை நினைக்கத்தவறிவிட்டார். தனது தவறை தனது முதிர்வயதில் நினைத்துப்பார்த்து வருந்துகிறார். கெட்ட பிறகுதான் எட்டுப் புத்தி வரும் என்ற பழமொழி இவரது வாழ்க்கையில் மிக மிக உண்மை.

ஒரு வேளை என்றுமே தான் இளமையாக இருப்பேன் என்று நினைத்திருப்பார், தனக்கு முதிர் வயது வரும்போது தனது வாலிப உணர்வுகள், ஆசைகள் எல்லாம் ஒரு நாள் மறைந்து விடும் என்று இவர் எண்ணிப்பார்த்திருக்கவே மாட்டார். அதனால் தான் 1000

பெண்களை திருமணம் செய்திருக்கிறார். பயங்கரமான குடிகாரனாக இருந்திருக்கிறார். ஒருவேளை இவருக்கு வயதான காலத்தில் பாலிய நோய் ஏதாவது வந்திருக்கக் கூடும். அதனால் விரக்தியடைந்து எதையும் அனுபவிக்க இயலாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடும். அதனால் தான் ஒரு தத்துவ ஞானியாக மாறிவிட்டாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

ஒரு மனிதன் திருமணம் செய்து கொண்ட பின்பு ஒன்று அவன் சந்தோஷமாக வாழுவான் இல்லாவிட்டால் அவன் ஒரு தத்துவஞானியாக மாறுவான் - என்று அறிஞர் பெர்னாட் ஷா கூறியது நினைவிற்கு வருகிறது.

இயேசு கிறிஸ்து

ஞானிகளின் வார்த்தைகள் அனைத்தும் ஒரே மேய்ப்பனால் அளிக்கப்பட்டது (12:11). இங்கே குறிப்பிட்டுள்ள 'மேய்ப்பன்' இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது.



சாலமோனின் உன்னதப்பாட்டு - புத்தகம் 22

பெயர் :

இந்த புத்தகத்திற்கு பல வித்தியாசமான பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளது அவற்றில் சில "பாடல்களிலேயே மிக உன்னதமான பாடல்" - Song of songs - Best songs. Most beautiful songs. இன்னொரு பெயர், "சாலமோனின் பாடல்"

ஆசிரியர் :

இதை யார் எழுதியது என்பதைக் குறித்து பல சர்ச்சைகள் எழுந்துள்ளன. சாலமோன் எழுதியதாக 1:1 கூறுகிறது. இருப்பினும் இது சாலமோனுக்காக எழுதப்பட்டது; சாலமோனுக்காக அர்ப்பணிக்கப்பட்டது; சாலமோன் பெயரில் எழுதப்பட்டது; சாலமோனுக்கு சொந்தமானது - என்று 1:1 வசனத்திற்கு பல வியாக்கியானங்கள் எழுந்துள்ளன.

இருப்பினும் இப்புத்தகத்தில் 7 முறை சாலமோன் எழுதியது என்று சொல்லப்பட்டதினாலும், மேலும் சாலமோன் செடிகள் - ஒருவகை செடியை - அதாவது 'மந்தரகே' செடியை 'காதலர் செடி' என்று அழைக்கப்படுகிறது. ஆதி 36:14லும் உன்னதப்பாட்டில் 7:13ல் வரும் செடியும் இரண்டுமே Love Flowers காதல் மலர்கள் என்று அழைக்கப்படுகிறது. நமது நாட்டில் Love Birds - காதல் பறவைகள் காதலுக்கு உருவகமாக இருப்பது போல சாலமோன் காலத்தில் இந்த குறிப்பிட்ட செடி காதலை சித்தரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இந்த செடியில் உள்ள இலைகளைச் சாப்பிட்டால் காதல் உணர்வுகள் வரும் என்று அக்காலத்தில் நம்பப் பட்டது. பறவைகள் மற்றும் மிருகங்கள் பற்றி பல ஆராய்ச்சி செய்த அனுபவம் இருப்பதினாலும், இப்புத்தகத்தில் 21 வகையான செடிகளைப்பற்றியும், 15 வகையான மிருகங்களைப் பற்றியும் எழுதப்பட்டிருப்பதினாலும், இப்புத்தகத்தை சாலமோன் தான் எழுதியிருக்க வேண்டும், வேறு யாருமல்ல என்று வாதாடுபவர்களும் உண்டு.

இப்புத்தகம் ஒரு நாடகத்தில் வரும் பல காட்சிகள் போல எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட வசனத்தை

- யார் பேசுகிறார்கள் என்பது புரியாது. மேலோட்டமாக வாசிப்பவர்களுக்கு இது குழப்பத்தை உண்டு பண்ணும். இதை நிவர்த்தி செய்வதற்காக இப்பொழுது வரும் புதிய மொழிபெயர்ப்புகளில் இப்புத்தகத்தின் பல இடங்களில் யார் இந்த வார்த்தைகளை பேசுகிறார்கள் என்பது சிறிய தலைப்புகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது - குறிப்பிடத்தக்கது.

இந்த உன்னதப்பாட்டு நாடகத்தில் 3 முக்கிய கதாபாத்திரங்கள் வருகிறார்கள். சாலமோன் - மணவாளன்; சூனேமியாள் - மணப்பெண்; எருசலேம் குமாரத்திகள் - மணப்பெண்ணின் தோழிகள்.

உதாரணமாக முதல் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 2-4 வரை சூனேமியாள் பேசுகிறாள்; 5-ம் வசனத்தை எருசலேம் குமாரத்திகள் - மணப்பெண்ணின் தோழிகள் பேசுகிறார்கள். 6-7வரை சூனேமியாளும், 8-11 வசனங்களை மணவாளன் பேசுகிறாள்.

இப்படியாக இந்த 3 கதாபாத்திரங்களும் எந்த வசனத்தை யார் பேசுகிறார்கள் என்பதை தெளிவாக, துல்லியமாக புதிய மொழிபெயர்ப்புகளில், குட்டி தலைப்புகள் வடிவத்தில் கொடுக்கப்பட்டிருப்பதால் இப்புத்தகத்தை வாசிக்கும் போது கொஞ்சம் தெளிவாக புரியும்.

சூனேமியாள் பேசும் வசனங்கள் :

1:2-4, 5-7, 12-14, 16,17; 2:1, 3-6, -8-17; 3:1-4; 4:16; 5:2-8, 10-16; 6:2,3,11,12; 7:9-13; 8:1-3,6,7, 10-13,14.

மணவாளன் :

1:8-10,15; 2:2,7; 3:5; 4:1-5; 5:1; 6:4-10,13; 7:1-9; 8:4,5,13.

எருசலேம் குமாரத்தியாகிய தோழிகள் :

1:4,11; 3:6-11; 5:9; 6:1,13; 8:5,8,9.

நீங்கள் வைத்துள்ள வேதாகமத்தில் 3 வித்தியாசமான கலரில் குறித்துக் கொள்ளுங்கள்; அல்லது ஒவ்வொரு வசனத்தின் தலைப்பிலும் யார் யார் எந்தெந்த வசனத்தை பேசுகிறார்கள் என்பதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். இப்படி நீங்கள் கொஞ்சம் வீட்டுக்கணக்கு Homework போட்டால், இப்புத்தகத்தை படிக்கும் போது குழப்பம் குறையும்.

இப்புத்தகம் வேதாகமத்தில் எப்படி இடம் பெற்றது?

இப்புத்தகத்தில் 'கடவுள்' என்ற வார்த்தை எங்கேயும் இடம் பெறவில்லை. இது ஒரு காதல் கவிதைகளின் தொகுப்பு மாத்திரமே. ஒரு காதலுக்கும் காதலிக்கும் நடுவே மலரும் அன்பையும் காதலையும் சித்தரிக்கும் இப்புத்தகம். இப்புத்தகத்தில் எழுதப்பட்ட சில பகுதிகளை ஞாயிறு ஆராதனையில் எல்லோரும் கேட்கும்படி வாசிக்க முடியாத சில கொச்சையான பகுதிகள் அடங்கிய இப்புத்தகம் எப்படி வேதாகமத்தில் இடம் பெற்றது ?

கி.மு. 2 அல்லது 3-ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த யூத பண்டிதர்களும், கிறிஸ்தவ தலைவர்களும் இதை வேதாகமத்தில் ஒரு புத்தகமாக சேர்க்க மறுத்து விட்டார்கள். ஆனால் பல ஆண்டுகள் கழித்து, ஓசியா புத்தகத்தில் ஆண்டவர் தன்னை கணவனாகவும் இஸ்ரவேல் மக்களை மனைவியாகவும் சித்தரிப்பதைக் கண்ட யூதத் தலைவர்களும், கிறிஸ்தவ பண்டிதர்களும் இந்த உன்னத பாட்டில் உள்ள, கணவன் - மனைவி, காதலன் - காதலி உறவை, கடவுள் - இஸ்ரவேல் நடுவே உள்ள உறவாகவும், கிறிஸ்தவர்கள் இயேசு - சபை நடுவே உள்ள மணவாளன் மணவாட்டி உறவாக உருவாகப்படுத்தி இந்த உன்னதப்பாட்டு புத்தகத்தை வேதாகமத்தில் ஒரு புத்தகமாக ஏற்றுக் கொள்ள முன்வந்தனர். முஸ்லீம்கள் இப்புத்தகத்தில் எழுதப்பட்ட சில அசிங்கமான, பச்சையான வார்த்தைகளை மேற்கோள் காட்டி - இப்படிப்பட்ட வார்த்தைகள் அடங்கிய புத்தகம், எப்படி கடவுளுடைய வார்த்தை என்று அழைக்க முடியும் ? என்று கேள்வி எழுப்புகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொரு விளக்கம் :

சாலமோன், சூனேமியாளைக் காதலித்ததாகவும், ஆனால் அந்தப் பெண் அவளுடைய உறவினர் ஒருவனை காதலித்தாள், எனவே சாலமோனைக் காதலிக்க மறுத்தாள். இதை அறிந்த சாலமோன் அவளை எப்படியாவது அடைய அலைந்ததாகவும், இறுதியாக சூனேமியாளின் காதலை மதிக்கும் பொருட்டு அவளுடைய காதலனுக்கும் இவளுக்கும் சாலமோனே திருமணம் நடத்தி வைத்ததாகவும் - ஒரு கதை இருக்கிறது.

ஒரு கணவனுக்கும் - மனைவிக்கும் இடையே உள்ள உறவு உன்னமானது. அதை நாம் கொச்சைப்படுத்தக் கூடாது. மனித உறவுகளிலேயே மிக நெருக்கமான - இறுக்கமான உறவு, கணவன் - மனைவி உறவு. இதை விவரிப்பது தான் இப்புத்தகத்தின் முக்கிய நோக்கம். இந்த மனித உறவுகளிலேயே மிக உன்னதமான இந்த உறவில் - பழைய ஏற்பாட்டில் கடவுளுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே - புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்கும் அவரது சபைக்கும் இடையே நிலவும் உறவிற்கு நிழலாட்டமானது - என்று எடுத்துக் கொள்ளலாம்.

எழுதப்பட்ட கால கட்டம் :

சாலமோன் 3 புத்தகங்களை எழுதியிருக்கிறான். இவர் இளம் வாலிபனாக இருந்தபோது, இந்த உன்னதபாட்டையும், கொஞ்சம் நடுத்தர வயதானபோது நீதிமொழிகள் புத்தகத்தையும் ரொம்ப வயதாகி கிழவனாக மாறிய போது எல்லாம் மாயை, மனதிற்கு சஞ்சலம் என்று எழுதிய பிரசங்கி புத்தகத்தையும் எழுதியிருக்க வேண்டும் என்பது அநேக வேத பண்டிதர்களின் கணிப்பு.

இது உண்மையானால் இப்புத்தகத்தை சாலமோன், தான் ஆட்சிக்கு வந்த காலகட்டத்தில் எழுதியிருக்க வேண்டும். அதாவது கி.மு. 965-ம் ஆண்டு எழுதியிருக்கலாம். கி.மு. 970-931 வரை இவர் ஆட்சியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்து :

பழைய ஏற்பாட்டில் கடவுள் இஸ்ரவேல் மக்களின் நாயகர் (உன் சிருஷ்டிகரே உன் நாயகர் (ஏசா 54:5)) புதிய ஏற்பாட்டில் சபையை மணவாட்டி என (2 கொரி 11:2) அழைக்கப்படுகிறது. இப்புத்தகத்தில் வரும் மணவாளன் - இயேசு கிறிஸ்து.

திறவுகோல் வார்த்தை :

அன்பு - கணவனையும், மனைவியையும் ஒன்றாக பிணைக்கும் அன்பு.

திறவுகோல் வசனம் :

நான் எனது நேசருக்கு சொந்தமானவள். அவர் என்மேல் பிரியமாயிருக்கிறார். (7:10)

அன்பின் கிரயம் :

திரளான தண்ணீர்கள் நேசத்தில் அடங்கியுள்ள அன்பின் அனலை அவித்துப் போட முடியாது. வெள்ளங்கள் கூட அதை மூழ்கடிக்க முடியாது. அந்த அன்பை - தன் ஆஸ்திகளையெல்லாம் அள்ளிக் கொடுத்தாலும் ஒருவராலும் (சாலமோனால் கூட) அதை விலை கொடுத்து வாங்க முடியாது. (8:7)

திறவுகோல் அதிகாரம் :

இதில் உள்ள 8 அதிகாரங்களுமே திருமணத்தில் இணைக்கப்பட்ட கணவன் - மனைவிக்கு இடையே நிலவும் அன்பையே மையமாக வைத்து எழுதப்பட்டிருக்கிறது. எனவே திறவுகோல் அதிகாரம் ஒன்றும் தனியாக இல்லை.

ஒரு முக்கிய குறிப்பு :

ஏறக்குறைய 1000 பெண்களை தனக்கு மனைவிகளாக வைத்திருந்த சாலமோனை இப்புத்தகத்தில் வரும் மணவாளனாகவும், சூனேமியாளின் காதலனாகவும் கற்பனை செய்வது சற்று கடினம். அதுவும் சபல புத்தியுடைய சாலமோன் சூனேமியாள் மேல் தன் உயிரையே வைத்திருப்பதாகக் கற்பனை செய்வது சற்று வேடிக்கையாகவும், விகற்பமாகவும் தோன்றுகிறது. எனவே இப்புத்தகத்தில் வரும் மணவாளன் சூனேமியாளின் காதலன் - சாலமோன் அல்ல; அது நிச்சயயமாக அவனது உறவினனாக - அவளது உண்மையான காதலனாகத்தான் இருக்க வேண்டும். அது நிச்சயமாக சாலமோனாக இருக்க இயலாது - என்பது எனது கருத்து.



ஏசாயா - புத்தகம் 23

ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம்

முன்னுரை : இது ஒரு குட்டி பைபிள் என்று அழைக்கப்படுகிறது. காரணம் வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள். அது போல ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் உள்ள 66 அதிகாரங்களும் 66 புத்தகங்களைக் குறிக்கிறது. முதல் 39 அதிகாரங்களில் கண்டிப்புகளும், "உனக்கு ஐயோ" - என்ற பல சாபங்களும் வரவிருக்கும் ஆண்டவரது நியாயத்தீர்ப்புகளும் அடங்கியிருக்கும். முதல் 39 அதிகாரங்களும் பாபிலோனிய சிறையிருப்பிற்கு முன்பு நடந்த சம்பவங்களைக் குறிக்கிறது.

இதை அடுத்து வரும் 27 அதிகாரங்களும் (40-66) பாபிலோனிய சிறையிருப்பிற்குப் பின்பு வரப் போகும் மேசியா மூலம் வரும் இரட்சிப்பைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது.

காலம், இடம் : கி.பி. 740 - 680 உசியா (790 - 739) யோதாம் (739 - 731), ஆகாஸ் (731 - 715), எசேக்கியா (715 - 686) 4 யூதா ராஜாக்களின் காலத்தில் எருசலேமில் எழுதப்பட்டது.

ஆசிரியர் : இதை எழுதியவர் ஏசாயா தீர்க்கதரிசிதான். இருப்பினும் ஒரு சிலர் "ஏசாயா தீர்க்கதரிசி 1 - 39 அதிகாரங்களை மாத்திரம் தான் எழுதியிருக்க முடியும்; அடுத்து வரும் 40 - 66 அதிகாரங்களை வேறு யாரோ ஒருவர் பாபிலோனிய சிறையிருப்பின் கால கட்டத்திற்குப் பின்பு பாபிலோனிய சிறையிருப்பிற்குப் பின்பு எருசலேம் திரும்பிய யாரோ ஒருவர் தான் இதை எழுதியிருக்க வேண்டும். காரணம் ஏசாயா தீர்க்கதரிசி மரித்து 150 ஆண்டுகளுக்குப் பின்பு நடந்த சம்பவங்களை அதுவும் கோரேஸ் ராஜா என்று துல்லி யமாக ராஜாவின் பெயர் (45.1) கொடுக்கப்பட்டிருப்பதால் (40-66) அதிகாரங்களை ஏசாயா எழுதியிருக்க வாய்ப்பில்லை" என்று வாதிக்கிறார்கள். மொகமதியர்கள் இந்தியாவை ஆண்ட காலகட்டத்தில் (கி.பி. 1700) வாழ்ந்த ஒரு சரித்திர ஆசிரியர் எப்படி 'இந்திராகாந்தி' ஆட்சியைப்பற்றி எழுத இயலும்.

இருப்பினும் புதிய ஏற்பாட்டில் - இயேசு கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசன வசனங்கள் ஏசாயா புத்தகத்திலிருந்து தான் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. இயேசுவும் பல முறை ஏசாயா தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டியிருக்கிறார். அப்படியானால் இரண்டு ஆசிரியர்கள் இதை எழுதியிருக்க முடியாது. பல தீர்க்கதரிசனங்களை எழுதிய

ஏசாயா தீர்க்கதரிசிக்கு கோரேஸ் ராஜாவின் பெயரை துல்லியமாக ஆண்டவர் ஏன் வெளிப்படுத்தியிருக்கக் கூடாது. எனவே ஏசாயா புத்தகத்தில் உள்ள 66 அதிகாரங்களையும் ஏசாயா தீர்க்கதரிசி ஒருவர் தான் எழுதியிருக்கிறார் என்பது இன்னொரு வாதம்.

ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை வாசித்துப் பார்த்தால் அதில் இரட்சிப்பு என்ற வார்த்தை அடிக்கடி (26) வருவதாலும் இயேசுவின் பிறப்பு, பாடுகள், இரண்டாம் வருகை நிறைய இருப்பதால் இப்புத்தகத்தை **பழைய ஏற்பாட்டில் உள்ள 'புதிய ஏற்பாடு' புத்தகம்** என்றும் **ஏசாயா தீர்க்க தரிசியை பழைய ஏற்பாட்டின் பவுல் அப்போஸ்தலன்** என்றும் அழைக்கலாம். இப்புத்தகத்தை **"ஏசாயா எழுதிய சுவிசேஷம்"** (Gospel according to Isaiah) என்று அழைத்தால் அது மிகையாகாது.

ஏசாயா தீர்க்கதரிசி ஒரு தீர்க்கதரிசி மாத்திரமல்ல, அவன் ஒரு கவிஞன் (Poet); அவரை வேதாகமத்தின் 'ஷேக்ஸ்பியர்' என்று சிலர் அழைக்கிறார்கள். வேதாகமத்தில் உள்ள 66 புத்தகங்களிலும் சொல் வளமும், இலக்கிய வளமும் பொங்கிவழியும் புத்தகம் இந்த ஏசாயா தீர்க்கதரிசன புத்தகம் தான் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது.

திறவுகோல் வசனம் :

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா....... சமதானப்பிரபு (9:6).

நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பிப்போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார் (53:6).

திறவுகோல் அதிகாரம் : 53-ம் அதிகாரம்

ஏசாயா தீர்க்கதரிசி யூதாவை ஆண்ட ராஜாக்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். இருப்பினும் அந்த ராஜாக்கள் தவறு செய்தபோது, வன்மையாகக் கண்டித்தான். உதாரணமாக, அசீரியா ராஜா சன்னகெரிப் எசேக்கியா ராஜா மேல் படையெடுத்து வந்த போது, ஏசாயா எசேக்கியாவுக்கு பக்கபலமாக நின்று, சன்னகரிப் ராஜாவை பின் வாங்கி ஓடச் செய்தார். அதே சமயத்தில் இந்த எசேக்கியா ராஜா பாபிலோனிலிருந்து வந்தவர்களுக்குத் தனது அரண்மனையையும், பொக்கிஷத்தையும் எல்லாவற்றையும் திறந்து காண்பித்தான். பாபிலோனிலிருந்து வந்தவர்கள் போனபின்பு, ஏசாயா இந்த

எசேக்கியா ராஜாவைக் கடுமையாகச் சாடுகிறான். 'நீ அவர்களுக்குக் காண்பித்த எல்லா பொக்கிஷத்தையும் அந்த பாபிலோனியர் உன்னிடத்திலிருந்து ஒரு நாள் எடுத்துக் கொண்டு போவார்கள்". என்று சாபம் போடுகிறான்.

எனவே யூதா ராஜாக்களுக்குத் தங்களை அடிக்கடி கண்டித்து பேசும் ஏசாயா தீர்க்கதரிசியை அவ்வளவாகப் பிடிக்காது.

எசேக்கியா ராஜாவிற்கு பிறகு அவனது மகன் மனாசே ராஜாவாக பதவி ஏற்றான். இவன் ஒரு பொல்லாதவன். இந்த பொல்லாத மனாசே வயது முதிர்ந்த ஏசாயா தீர்க்கதரிசியின் உடலை ரம்பத்தால் இரண்டு துண்டாக அறுத்து கொன்று விட்டான் என்று யூதர்களின் வேதப்புத்தகம் கூறுகிறது.

கருப்பொருள் : ஆண்டவரது நியாயத்தீர்ப்பும், தண்டனையும் அவரது இரட்சிப்பின் திட்டமும்.

இயேசு கிறிஸ்து : இயேசுவின் முதலாம் வருகையைப் பற்றி அதிகபட்சமான தீர்க்கதரிசன வசனங்கள் இப்புத்தகத்தில் தான் காணப்படுகிறது. சில உதாரணங்கள் ஏசாயாவின் தீர்க்கதரிசன வசனமும், புதிய ஏற்பாட்டில் அதின் நிறைவேறுதலும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதல் வருகை

7 : 14 (மத் 1 : 22,23) 9 : 1,2 (மத் 4 : 12-16)

9 : 6 (லூக் 2 : 11) 11 : 1 (லூக் 3 : 23)

53 : 12 (மாற் 15 : 28) 61 : 1,2 (லூக் 4 : 17-19)

இரண்டாம் வருகை

4 : 2 11 : 2-6 32 : 1-8 61 : 2,3



எரேமியா - புத்தகம் - 24

அறிமுகம் : எரேமியா தனது ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்ரவேல் ராஜ்யம் அழிக்கப்பட்டு விட்டது. எனவே எரேமியாவின் ஊழியமும், தீர்க்கதரிசனமும் முழுக்க முழுக்க, யூதா தேசத்தைப் பற்றியதாகவே இருந்தது. உடைந்த இருதயம் கொண்ட தீர்க்கதரிசி உடைந்து போன புத்தகத்தின் மூலம் உடைந்து கொண்டிருந்த யூதா தேசத்திற்கு தீர்க்கதரிசனம் உரைத்தான்.

முக்கியமான செய்தி : எதிரிகள் மூலமாக யூதா தேசத்தை நோக்கி வந்து கொண்டிருந்ததானஅழிவிலிருந்து தப்புவதற்கு ஒரு சிறந்த வழி - ஆண்டவரிடத்திலும் அவர் அனுப்பிய பாபிலோனிய ராஜாவாகிய நெபுக்காத்நேச்சாரிடத்திலும் சரண் அடைதல்.

ஆசிரியர் : இதில் உள்ள முதல் 51-அதிகாரங்களையும் எரேமியா சொல்லச் சொல்ல அந்த செய்திகளை எரேமியாவின் உதவியாளனாகிய பாருக் எழுதினான். இப்புத்தகத்தின் கடைசி அதிகாரமாகிய 52-ம் அதிகாரத்தை எரேமியா எழுதவில்லை. ஏற்கனவே எழுதப்பட்டிருந்த 2 ராஜா 24 : 18 - 25 : 30 பகுதியை எடுத்து எரேமியா 52-வது அதிகாரமாக யூதா தேசத்தின் சரித்திரத்தின் தொடர்ச்சிக்காக பாருக்கினால் இணைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எருசலேமிலிருந்து 3கி.மீ தொலைவிலுள்ள ஆசாரியர்களின் பட்டணமாகிய 'ஆனதோத்' என்ற ஊரில் இல்க்கியா என்ற ஆசாரியனுக்குப் பிறந்தவன் இந்த எரேமியா. எருசலேம் பட்டணம் எதிரிகளினால் அழிக்கப்பட்டு, சுட்டெரிக்கப்படப் போகிறது - என்ற உண்மைக்கு ஆதாரமாக, நிருபணமாக "நீ திருமணம் செய்ய வேண்டாம்" என்றும் "எந்த விருந்து வீட்டிற்கும் போகக் கூடாது" - என்றும் ஆண்டவர் எரேமியாவிற்குக் கட்டளை கொடுத்திருந்தார் (16 : 2,8). எரேமியாவிற்கு ஆண்டவர் விதித்த இந்த 2 நிபந்தனைகளும் ஒரு தீர்க்கதரிசி தனது தனிப்பட்ட வாழ்க்கையில் சுயகட்டுப்பாடும், தியாகமும் செய்ய முன்வர வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்துகிறது.

எரேமியாவிற்கு வந்த எதிர்ப்புகள்

'எரேமியா என்றால் எதிர்ப்பு' என்றும் 'எதிர்ப்பு என்றால் எரேமியா' என்றும் சொல்லும் அளவிற்கு எரேமியா எல்லா மக்களாலும் வெறுக்கப்பட்டான்: ஒதுக்கப்பட்டான். அவனது சொந்த ஊர் மக்களே அவனை மிரட்டினார்கள்; எருசலேமிலுள்ள ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் அவனை குற்றம் சாட்டி நியாயம் விசாரித்தார்கள்; கள்ளத் தீர்க்கதரிசியாகிய அனேனியாவினால் ஒரு பொது இடத்தில் அடிக்கப்பட்டான், கேவலப்படுத்தப்பட்டான்; கையிலும், காலிலும் விலங்குகள் மாட்டப்பட்டான்; பாழுங்கிணற்றுக்குள் போடப்பட்டான்: தனிமையான ஒரு சிறையில் அடைக்கப்பட்டான். பலமுறை இந்த ஊழியமே வேண்டாம் என்று ஆண்டவரிடத்தில் சொல்லி ராஜினாமா செய்ய முன் வந்தான். இருப்பினும் 40 ஆண்டுகள் தொடர்ந்து கஷ்டத்தின் மத்தியிலும் உபத்திரத்தின் மத்தியிலும் எதிர் நீச்சல் போட்டான்.

திறவுகோல் வசனம் :

என் வாக்குக்குச் செவி கொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்.

அவர்களோ அதைக் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போய், தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைகளின்படியும் கடினத்தின்படியும் நடந்து, முன்னிட்டல்ல பின்னிட்டே போனார்கள் (7 : 23,24).

திறவுகோல் அதிகாரம் :

பொன்னான வாக்குத்தத்தங்களும் அருமையான ஆசீர்வாதங்களும் நிறைந்த 31-ம் அதிகாரம்.

மறுபடியும் உன்னைக் கட்டுவேன்: புறப்படு எழுந்திரு: சீயோனில் உள்ள கர்த்தரிடத்திற்கு திரும்புவாய். இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருப்பேன்.

காலம் : செப்பனியா, ஆபகூக், தானியேல், எசேக்கியல் போன்ற தீர்க்கதரிசிகள் வாழ்ந்த காலத்தில் எரேமியா வாழ்ந்தவன்.

கி.மு. 627 முதல் கி.மு. 580 வரை ஏறக்குறைய 40 ஆண்டுகள் ஊழியம் செய்தார். ஏற்கனவே இஸ்ரவேல் தேசம் அசீரியா ராஜாவினால் 100 ஆண்டுகளுக்கு முன்பு அழிக்கப்பட்டு விட்டது. இப்பொழுது மீதமுள்ள யூதா தேசத்தின் மேல் ஆண்டவரின் ஆக்கினை, அழிவு என்ற கார் மேகங்கள் சூழ்ந்து கொண்டது.

எரேமியாவின் முதல் 18 ஆண்டுகள் (கி.மு 627 - 609) அவ்வளவு பிரச்சனை இல்லை. காரணம் அந்த கால கட்டத்தில் யூதாவை அரசாண்ட யோசியா ஒரு நல்ல அரசன். யூதாவை ஆண்ட கடைசி நல்ல அரசனும் இவன்தான். யோசியா எகிப்து ராஜாவாகிய நேகோவோடு வம்பை விலைக்கு வாங்குவது போல, இவனாகவே வழியச் சென்று போரிட்டு கி.மு. 609-ம் ஆண்டில் நேகோவினால் கொல்லப்படுகிறான். கி.மு. 609 முதல் கி.மு. 580 ஆண்டு வரை 29 ஆண்டுகளும் யூதா தேசத்தில் பயங்கரமான குழப்பம் நிலவியது. அக்கிரமும், அநியாயமும் தலைவிரித்து ஆடியது.

யோசியாவிற்குப் பிறகு அவனது மகன் யோயோக்கீம் யூதாவிற்கு ராஜாவானான். ஆனால் இவன் தன் அப்பாவைக் கொன்ற எகிப்து ராஜாவின் கைப்பொம்மையாக கி.மு. 605 வரை யூதாவை ஆண்டான். ஆனால் பாபிலோன் ராஜாவாகிய நெபுகாத்நேச்சர் 605-ம் ஆண்டு எகிப்தை வென்றான். இதனால் இதுவரை எகிப்தின் பொம்மையாக இருந்த யோயாக்கீம் இப்பொழுது பாபிலோனின் கைப்பாவையாக மாறினான். பாபிலோன் ராஜாவிற்கு அடங்கிப்போ, அடங்கிப்போ - என்ற எரேமியாவின் எச்சரிப்பின் ஆலோசனையை இவன் மீறி, பாபிலோன் ராஜாவிற்கு விரோதமாகச் செயல்பட திட்டமிட்டான். இதை அறிந்த பாபிலோன் ராஜா இந்த யோயாக்கீமை பதவியிலிருந்து நீக்கிவிட்டான். அடுத்து அவனது மகன் யோயாக்கீன் யூதாவின் ராஜாவாக மாறினான். ஆனால் 3 மாதங்கள் கழித்து பாபிலோன் ராஜா எருசலேமைக் கைப்பற்றி, யோயாக்கீனை பாபிலோனுக்கு சிறை பிடித்துக் கொண்டு போனான். யோயாக்கீனுக்குப் பதிலாக இவனது சித்தப்பா மத்தனியாவை ராஜாவாக அமர்த்தி அவனது பெயரை சிதேக்கியா என்று மாற்றினான்.

இந்த சிதேக்கியாவும் (கி.மு 597 - 586) எரேமியாவின் ஆலோசனையைக் கேட்காமல், பாபிலோன் ராஜாவிற்கு விரோதமாக செயல்பட ஆரம்பித்தான். அனனியா (எரேமியாவை முகத்தில் அறைந்தவன்) என்ற கள்ளத்தீர்க்கதரிசியின் வார்த்தையை நம்பி எகிப்துடன் உடன்படிக்கை செய்ய ஆரம்பித்தான். இதை அறிந்த பாபிலோன் ராஜா கி.மு. 586-ல் எருசலேமை முற்றிலுமாக அழித்துவிட்டு, சிதேக்கியாவின் இரண்டு கண்களையும் குருடாக்கிவிட்டு, பாபிலோனுக்கு சிறைப்பிடித்துப் போய் விட்டான். இதோடு யூதா ராஜியம் முடிவிற்கு வந்தது.

இன்றைய சூழ்நிலையில் எரேமியா தீர்க்கதரிசனம்

கி.மு. 6-ம் நூற்றாண்டில் எரேமியா உரைத்த தீர்க்கதரிசனத்தை இன்றைய 21-ம் நூற்றாண்டின் வெளிச்சத்தில் வைத்து ஆராய்வோமானால் அது கீழே கொடுக்கப்பட்டபடிதான் தோற்றமளித்திருக்கும்.

உதாரணமாக இந்தியா மீது அண்டை நாடான சீனா படையெடுத்து வருவதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். அப்பொழுது ஒரு கிறிஸ்தவ போதகர் இந்தியர்களைப் பார்த்து, "இந்தியர்களே, சீனாவிடம் சரணடைந்து விடுங்கள் இதுதான் ஆண்டவரது தெய்வீக ஆலோசனை. அதுதான் உங்களுக்கு நல்லது. புதுடெல்லியும், சென்னையும் சீனர்களின் சீற்றத்திற்கும், அவர்களின் அக்கினிக்கும் இரையாகும்" - என்று தீர்க்கதரிசனம் உரைத்தால் என்ன நடக்கும்? இவரை அரசாங்கம் 'தேசத்துரோகி' என்று அழைத்து சிறையிலடைத்தால் அது ஆச்சரியம் இல்லையே.

இதுதான் அந்தக் காலத்திலும் நடந்திருக்கிறது - என்பதை இந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் புரிந்து கொள்வது நல்லது.

கிறிஸ்து :

இதோ, நாட்கள் வரும் என்று கர்த்தர் உரைக்கிறார். அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப் பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம் பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம் பண்ணும். அவரது பெயர் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதாகும். (23:5,6)

எரேமியாவின் சாபம் : எரேமியா யோசியாவின் குமாரனான யோயாக்கீமைப் பார்த்து, "உன் வித்தில் ஒருவன் கூட வாழ்வடைந்து யூதாவில் அரசாளப் போவதில்லை, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கப் போவதில்லை" (22:30) என்று சாபம் போட்டான்.

இந்த யோயாக்கீம் தாவீதின் மகனாகிய சாலொமோன் வம்ச வழியில் வந்து இயேசு கிறிஸ்துவின் சட்டப்படியான தகப்பன் யோசேப்பின் முற்பிதாவாக மாறினான் என்பது குறிப்பிடத்தக்கது. அப்படியானால் இந்த யோசேப்பின் பரம்பரையில் இனிமேல் யூதாவில் ராஜாவாக, தாவீதின் சிங்காசனத்தில் அமருவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

ஆனால் இயேசு கிறிஸ்துவை சரீரப்பிரகாரமாக பெற்றெடுத்த தாயாகிய மரியாளின் பரம்பரை (லூக்கா 3:23-38) இந்த எரேமியாவின் சாபத்திற்கு உட்படவில்லை - என்பதை நாம் நினைவிற் கொள்வது நல்லது. இந்த மரியாளின் வம்ச பரம்பரையும் யோசேப்பின் வம்ச பரம்பரையும் தாவீதின் மகன்கள் சாலொமோன் - நாத்தான் இவர்களிடத்தில் இரண்டு கிளைகளாகப் பிரிந்து - சாலொமோன் - யோயாக்கீம் வழியாக யோசேப்பும்: தாவீதின் இன்னொரு மகனாகிய நாத்தான் வழியாக மரியாளின் தகப்பானகிய ஏலியும் பிறக்கிறார்கள். இந்த ஏலியின் பரம்பரையிலிருந்து தான் எதிர்காலத்தில் தாவீதின் சிங்காசனத்தில் அமருவார்கள்.



எரேமியாவின் புலம்பல் - புத்தகம் 25

முன்னுரை - காலம் :

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் பட்டணத்தை ஜனவரி கி.மு. 588 முதல் ஜுலை 586 வரை முற்றுகையிட்டான். அதன் விளைவாக 19 ஜுலை 586-ல் எருசலேம் பட்டணம் வீழ்ச்சியடைந்தது. எருசலேம் பட்டணமும் அங்கிருந்த (சாலொமோன் கட்டிய) ஆலயமும் ஆகஸ்டு 15ம் தேதி சுட்டெரிக்கப்பட்டது. எருசலேம் பட்டணம் சூரையாடப்பட்டது. ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் கொல்லப்பட்டார்கள். பலர் கைதிகளாக பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டு போனார்கள். அழுகையும் கூக்குரலும் பட்டணம் முழுவதும் ஒலித்தது. இரத்தம் ஆறாக ஓடியது.

இதை தன் கண்களினால் கண்ட எரேமியா தீர்க்கதரிசி - எருசலேம் பட்டணத்தின் இறுதிச்சடங்கு (National Funeral) என்ற தலைப்பில் ஒப்பாரி பாடல்(Dirges)களை அடுக்கு மொழியில் - அடுக்காக சொற்றொடர்களை பயன்படுத்தி (Acrostic) எபிரேயு மொழியில் எழுதுகிறார்.

அடுக்கு சொற்றொடர் : ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் இருப்பது போல, எபிரேயு மொழிக்கு 22 எழுத்துக்கள் உண்டு. இப்புத்தகத்தின் 1,2,4,5 அதிகாரங்களும் ஒவ்வொன்றிலும் 22 வசனங்கள் உண்டு. இந்த 22 வசனங்களும் முதல் வசனம் முதல் எழுத்திலும் (A)2-வது வசனம் இரண்டாவது (B) எழுத்திலும்...............22வது வசனம் கடைசி (Z)எழுத்திலும் தொடங்குகிறது. அதாவது ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய எல்லாத் துன்பங்களும், இன்னல்களும் (A to Z)எருசலேம் பட்டணத்தின் அழிவில் அடங்கியிருக்கிறது என்ற உண்மையை எரேமியா இந்த ஒப்பாரியின் மூலம் கூறுகிறார்.

3-ம் அதிகாரத்தில் மொத்தம் 66 வசனங்கள் உள்ளது. இதன் சொற்றொடரின் விசேஷம் முதல் 3 வசனங்களும் (1-3) முதல் எழுத்திலும்(A), அடுத்து வரும் 3 வசனங்களும் (4-6) 2-வது எழுத்திலும் ஆரம்பித்து கடைசி (63-66) வசனங்கள் எபிரேயுவின் கடைசி எழுத்தி(Z))லும் தொடங்குகிறது.

ஆசிரியர் : இதை எழுதியது எரேமியா என்பதில் யாதொரு கருத்து வேறுபாடும் இருந்ததில்லை.

திறவு கோல் வசனங்கள் : 2:5,6 & 3:22,23,26 இஸ்ரவேலுக்கு ஆண்டவர் ஒரு எதிரியாக மாறி, இஸ்ரவேல் மக்களையும், அதிலுள்ள அரண்மனையையும் அழித்தார். தோட்டத்திற்கு வேலி போட்டவரே, அந்த வேலியை பலவந்தமாக பிடுங்கிப் போட்டார்.

ஆனாலும் இஸ்ரவேல் கர்த்தருடைய நம்பிக்கைக்காக காத்திருக்கிறது.

நாம் நிர்மூலமாகாமல் இருப்பது கர்த்தருடைய கிருபை. அவரது இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலை தோறும் புதியவைகள்; அவரது உண்மை பெரிதாயிருக்கிறது.

மையக்கருத்து : எரேமியா தீர்க்கதரிசி உரைத்த தீர்க்கதரிசனம் சிறிது காலதாமதம் ஆனாலும் இறுதியில் நிறைவேறியது. ஆண்டவரது வார்த்தைகள் நிறைவேற காலதாமதம் ஆகலாம். இருப்பினும் இறுதியாக அது நிறைவேறியே தீரும். இது முதலாவது மையக் கருத்து.

இரண்டாவது கருத்து : பாவத்தின் நிமித்தம் ஆண்டவர் கொடுத்த தண்டனை அநியாயமானதல்ல; இன்றைய சூழலிலும், ஆண்டவர் மனிதனுக்கு கொடுக்கும் தண்டனையும் நீதியானது, நியாயமானது என்று அறிக்கையிடுதல்.

மூன்றாவது : எப்படியாவது ஒரு நாள் இஸ்ரவேல் மக்களை ஆண்டவர் நினைவு கூர்ந்து மீண்டும் அவர் இரங்கி, அவர்களை பழைய நிலைமைக்கு உயர்த்துவார் என்றதொரு எதிர்கால நம்பிக்கை.

எரேமியாவின் மேன்மையான குணம் : பாபிலோன் மூலம் எருசலேமிற்கு அழிவு வரப்போகிறது - புலி வரப்போகிறது, புலி வரப்போகிறது - என்று எரேமியா எத்தனையோ முறை எச்சரித்தான். ஆனால் மக்கள் அவனை எள்ளி நகையாடினார்கள். அவனை கைது செய்து சிறையிலும் பாழுங்கிணற்றிலும் போட்டார்கள். ஆனால் என்ன நடந்தது. பாபிலோன் என்ற புலி ஒருநாள் வந்து அவர்களை அழித்துவிட்டது.

ஆனால் எரேமியா சொன்ன அனைத்து தீர்க்கதரிசனங்களும் அப்படியே 100க்கு 100 நிறைவேறியது. இப்பொழுது அந்த அழிவு வந்து விட்டது. எரேமியா ஒரு சராசரி, சாதாரண மனிதனாக இருந்திருந்தால், "உங்களுக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும், நான் இதைச் சொன்ன போதெல்லாம் நீங்கள் என்னை கொல்லப்பார்த்தீர்கள். இப்பொழுது எப்படியிருக்கு" - என்று கூறி, கைக்கொட்டி சிரித்திருப்பான். தான் சொன்ன தீர்க்க தரிசனத்தின்படி நினிவே பட்டணம் அழிக்கப்படாததால் முக்கி, முணங்கி,

ஆண்டவரோடு சண்டை போட்டு விட்டுப் போன யோனாவாக இந்த எரேமியா இருந்திருந்தால், இதைத்தான் - இந்த காட்சியைத் தான் நான் பார்க்க விரும்பினேன்" - என்று மகிழ்ச்சியோடு கூறியிருப்பான்.

ஆனால் எரேமியா அப்படிப்பட்ட பழிவாங்கும் மனப்பான்மையுள்ளவன் அல்ல. "டேய், நீ நல்லா படிக்கா விட்டால், கெட்டுப் போவடா; நாசமாய் போய் விடுவாய்; நாசமாய் போகப் போகிறாய்" என்று அப்பா தனது மோசமான, உருப்படியில்லாத மகனை அடிக்கடி திட்டுகிறார்; எச்சரிக்கிறார். ஆனால் அதை மகன் அசட்டை பண்ணுகிறான். பல ஆண்டுகள் கழித்து அப்பா சொன்னது போலவே மகன் அழிந்து போகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அப்பா என்ன செய்வார்? தான் சொன்னது போல மகன் நாசமாய்ப் போனதைக் குறித்து மகிழ்ச்சியடைவாரா? நிச்சயமாக இல்லை.

அழிந்து போன தன் மகனோடு சேர்ந்து இவரும் அழுவார். "ஐயோ என்ன செய்வது, இது நமது தலைவிதி; இப்படி நாசமாய் போகனும்னு ஆண்டவன் நம்ம தலையிலே எழுதி வச்சிறுக்கிறான்" என்று பெற்றோர் அழிந்து போன தன் மகனோடு சேர்ந்து அழுவார்கள், புலம்புவார்கள். இதைத் தான் எரேமியாவும் செய்தான். எருசலேம் பட்டணத்தின் அழிவு அவனை மிகவும் பாதித்து விட்டது. அதன் விளைவாக எரிந்து கொண்டிருக்கிற அக்கினியும் ,அழிவும், மக்களின் கூக்குரலும் - தன்னை சூழ்ந்திருக்கிற ஒரு சூழலில் எருசலேம் பட்டணத்தின் ஒரு மூலையில் (வீட்டிற்குள் உட்காருவது ஆபத்து) உட்கார்ந்து இந்த ஒப்பாரிப் பாடல்களை எழுதியிருக்கிறான்.

கிறிஸ்து : சுமார் 600 ஆண்டுகள் இடை வெளியில், எரேமியாவும், இயேசு கிறிஸ்துவும் இருவருமே எருசலேம் பட்டணத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டார்கள் (மத் 23:37,38). சில ஆண்டுகள் கழித்து இருவரது கூற்றும் நிறைவேற்றப்பட்டது. எருசலேம் பட்டணம் எரேமியா காலத்தில் கி.மு. 586-ல் நெபுகாத்நேச்சாரலும், இயேசுவின் காலத்தில் கி.பி. 70-ம் ஆண்டில், ரோமப் பேரரசன் தீத்து அரசனாலும் அழிக்கப்பட்டது. எப்படி எரேமியா மனிதர்களால் அவதூறாகப் பேசப்பட்டாரோ, அடிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டாரோ அதே போல இயேசுவும் அவரது எதிரிகளால் துன்புறுத்தப்பட்டார். இருவருமே பாடுகள், துக்கம் நிறைந்தவர்களாக தோற்றமளிக்கிறார்கள். எனவே எரேமியா இயேசுவின் முன் மாதிரி.

எசேக்கியல் - புத்தகம் 26

கால கட்டம் : கி.மு. 592-570 : எசேக்கியல் தீர்க்கதரிசி கி.மு. 622-ம் ஆண்டு பிறந்து தனது 25-வது வயதின் போது கி.மு. 597-ல் பாபிலோனுக்கு சிறைக் கைதியாக கொண்டு செல்லப்பட்டார். நாடு கடத்தப்பட்டு பாபிலோனில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருந்து யூதா மக்கள் மத்தியில் கி.மு. 592 முதல் 570 வரை 22 ஆண்டுகள் தனது 30 வயது முதல் 52 வயது வரை தீர்க்க தரிசனம் உரைத்தார். இந்த எசேக்கியல் தீர்க்கதரிசியின் ஊழியம் எரேமியா தீர்க்கதரிசியின் ஊழியத்திற்கு பின்பும் தானியேல் தீர்க்கதரிசியின் ஊழியத்திற்கு முன்பும் - இருவரது இடைப்பட்ட காலத்தில் நடந்தது. எசேக்கியலும், தானியேலும் ஏறக்குறைய ஒரே வயது உள்ளவர்கள். ஆனால் எரேமியா இவர்களுக்கு 20 வயது மூத்தவர்.

வேதத்தில் உள்ள 66 புத்தகங்களில் ரகசியங்கள் அடங்கிய புதிரான புத்தகங்கள் மூன்று - எசேக்கியல், தானியேல், வெளிப்படுத்தல்.

ஆசிரியர் : எசேக்கியல்

விசேஷித்தவைகள் : கர்த்தர் இதை சொல்கிறார் என்ற வார்த்தை இதில் பல தடவை வருகிறது. வேதத்திலுள்ள எல்லா புத்தகங்களிலும் இதில் தான் அதிகபட்சமாக ஆவியானவருடைய வெளிப்பாடு (Maximum Divine Inspiration) காணப்படுகிறது.

நாடகங்களில் முகபாவனை மூலமாக ஒரு செய்தி கொடுப்பது வழக்கம். அதேபோல இப்புத்தகத்தில் 'செய்கை வாயிலாக சில செய்திகள் மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. இன்றைய கால கட்டத்தில் 'கொடும் பாவி' எரிப்பது போல. வேதபுத்தகத்தில் மொத்தம் 40 'செய்கை வழி செய்தி' அடையாளங்கள் உள்ளன. உதாரணமாக ஓசியா தீர்க்கதரிசி ஒரு வேசியை திருமணம் செய்வது, ஏசாயா தீர்க்கதரிசி நிர்வாணமாக நடப்பது (20 : 1-6) தாவீது யோனத்தான் சந்தித்த போது அம்பு எய்து செய்தியை வெளிப்படுத்துவது. இவ்வகையான 40 அடையாளங்களில் 25 இந்த எசேக்கியல் புத்தகத்தில் காணப்படுகிறது.

இப்படிப்பட்ட 'செய்கை வாயில் செய்தி' பாவனைகள் மூலமாக எசேக்கியல் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார். இடது பக்கமாய் 396 நாட்களும் வலது பக்கமாய் 40 நாட்களும் படுப்பது எவ்வளவு கஷ்டம். பின்பு மனைவியை இழந்த போது, துக்கங் கொண்டாடக் கூடாது இதுவும் ஒரு பெரிய தண்டனை. கயிறுகளால் கட்டப்பட்டு மல்லாக்காய்ப் படுத்திருப்பது. எலும்புப் பள்ளத்தாக்கில்

எலும்புகளைப் பார்த்து தீர்க்க தரிசனம் உரைப்பதும் அவைகள் ஒரு சேனையாக எழுந்து நிற்பது. இப்படிப்பட்ட காட்சிகள் ஒருவருக்கு இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும்.

மையக் கருத்து : அந்நிய தேசத்தில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் யூதா தேசத்து மக்களை எச்சரிப்பது. மக்களின் பாவத்தின் நிமித்தமும், ஆண்டவரை விட்டு பின் வாங்கியதின் நிமித்தமும் எருசேலேம் இன்னும் சில ஆண்டுகளில் வீழ்ச்சியடையப் போகிறது என்று எச்சரித்தார் (4-24 அதிகாரங்கள்)

அடுத்து வரும் 25-32 அதிகாரங்களில் யூதாவைச் சுற்றிலும் உள்ள புறஜாதியாரது தேசங்களை ஆண்டவர் எப்படி தண்டிக்கப் போகிறார் - என்ற செய்தி

மூன்றாவது பகுதி (33-48), யூதா மக்களுக்கு நல்லதொரு எதிர்காலம் வரும். மக்களை ஆண்டவர் சந்திக்கப் போகிறார். 37-ம் அதிகாரத்தில் எலும்புப் பள்ளத்தின் தரிசனத்தின் மூலமாக ஆண்டவர் மீண்டும் எருசலேமை கட்டி எழுப்புவார். இன்று சிறையிருப்பில் வாடிக் கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் ஆண்டவர் எழுப்புதலை உண்டாக்கி, உடைந்து போன உள்ளத்துடன் உலர்ந்த எலும்புகளைப போல காணப்படும் இஸ்ரவேல் மக்களை ஆண்டவர் ஒரு பெருத்த சேனையாக எழும்பி நிற்கச் செய்வார். சோர்ந்து போக வேண்டாம். இடிக்கப்பட்ட ஆலயம் மீண்டும் கட்டப்படும். புதிய ஆராதனை - 1000 வருட அரசாட்சியின் போது நடைபெறும். ஆராதனைக்கு ஒப்பனையாக - மக்களை விட்டு விலகிப்போன ஆண்டவரது மகிமை மீண்டும் அந்த ஆலயத்திற்குள் தோன்றும். சிறையிருப்பின் தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எசேக்கியல் 1000 கி.மீ. தொலைவில் உள்ள எருசலேமிற்கு ஆவியில் சென்று புதிய ஆலயம் கட்டப்படுவதையும் அதனுடைய நீளம், அகலம், உயரம், எத்தனை அறைகள் என்று கற்பனை செய்து நேரில் பார்த்த சிவில் இன்ஜினீயர் போல - ஆலயத்தை விவரிக்கிறார்.

திறவுகோல் வசனம்

நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து உங்கள் சய தேசத்திற்கு கொண்டு வருவேன். அங்கு குடியிருப்பீர்கள். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். நான் உங்கள் தேவனாயிருப்பேன் (36:24, 28)

கிறிஸ்து : உயர்ந்த கேதுருவின் நுனிக்கிளைகளில் ஒன்றை எடுத்து இஸ்ரவேலின் உயரமான பர்வத்தில் நாட்டுவேன். அது கொப்புகளை விட்டு கனி தந்து மகிமையான கேதுருவாகும். அதின் கீழே சகலவித பட்சிகளும் தங்கி அதன் நிழலிலே தாபரிக்கும். (17:22-24)

தானியேல் - புத்தகம் 27

முன்னுரை : தானியேல் 16 வயதாக இருக்கும் போது கி.மு. 605-ம் ஆண்டு பாபிலோனிற்கு சிறைப்பிடிக்கப்பட்டுப் போனார். புறஜாதியாரைப் பற்றியும் யூதர்களைப் பற்றியும் உலகத்தின் முடிவு சம்பவங்களைப் பற்றியும் தேவனுடைய தீர்க்கதரிசனத்தை உலகிற்கு எடுத்துரைக்கும் பொறுப்பு தானியேலுக்கு கொடுக்கப்பட்டது. இப்புத்தகத்தில் உள்ள மொத்தம் 12 அதிகாரங்களில் 9 அதிகாரங்கள் தானியேல் கண்ட தரிசனங்களைப் பற்றியது (மரம், மிருகங்கள், காட்சிகள்) என்பது குறிப்பிடத்தக்கது.

எந்த பாஷையில் :

1-ம் அதிகாரம் எபிரேயு மொழியிலும் 2 முதல் 7 முடிய அராமிக் மொழியிலும் எழுதப்பட்டது. 8 முதல் 12 முடிய எபிரேயு மொழியில் எழுதப்பட்டது.

ஆசிரியர் :

இதை எழுதியது தானியேல் என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும் இதில் எழுதப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் மிக மிகத் துல்லியமாக (தோராயமாக அல்ல) எழுதப்பட்டிருப்பதால் இந்தப் புத்தகத்தை தானியேல் எழுதியிருக்க வாய்ப்பில்லை. இந்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின பின்பு தான் எழுதப்பட்டிருக்க முடியும். எனவே, இப்புத்தகம் கி.மு. 6-ம் நூற்றாண்டில் தானியேல் வாழ்ந்த காலகட்டத்தில் எழுதப்படவில்லை. 400 ஆண்டுள் கழித்து கி.மு. 2-ம் நூற்றாண்டில் தான் எழுதப்பட்டிருக்க முடியும். எனவே தானியேல் இந்தப் பகுதியை எழுதியிருக்க முடியாது என்பது அவர்களது தர்க்கம். உதாரணமாக மகா அலெக்சாண்டர் மூலம் கிரேக்க சாம்ராஜ்யம் தோன்றுவதைக் குறித்தும் அவனுக்குப் பின் அந்த சாம்ராஜ்யம் 4 ராஜ்யங்களாகப் பிரியும் - என்றும் இந்த தானியேல் தீர்க்க தரிசனம் உரைப்பதால் மகா அலெக்சாண்டரின் மறைவிற்குப் பின், அவனது நான்கு படைத்தளபதிக்கும் அவனது ராஜ்யத்தை நான்குபங்காகப் பிரித்து ஆளுகை செய்தார்கள். இதை எப்படி இவர் இந்த அளவிற்கு சரியாக நேரில் பார்த்தாற் போல் தீர்க்கதரிசனத்தை தானியேல் எழுதியிருக்க முடியும்? - இந்தச்

சம்பவங்கள் நடந்த பின்பு வாழ்ந்த யாரோ ஒருவர் தான் இப்படி துல்லியமாக எழுதியிருக்க முடியும் என்பது அவர்களது வாதம அது அப்படியில்லை, நிச்சயமாக இதை தானியேல் தான் எழுதியிருக்கிறார்; அவ்வளவு துல்லியமாக ஏன் ஒரு தீர்க்கதரிசி எழுதக்கூடாது என்பது இன்னொரு வாதம்.

தானியேலின் சரித்திரம் ஏறக்குறைய யோசேப்பின் சரித்திரம் போன்றது. இருவரும் எந்த ஒரு குறையும், தவறும்செய்யாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காலம் :

அதுவரை உலக வல்லரசாக இருந்த அசீரியாவை கி.மு. 612-ம் ஆண்டு பாபிலோன் வென்று அசீரியாவின் தலைநகரமாகிய நினிவே பட்டணத்தை அழித்தது. 7 ஆண்டுகள் கழித்து எகிப்தையும் வென்று பாபிலோன் ஒரு புதிய வல்லரசாக மாறியது. கி.மு. 587-ம் ஆண்டு எருசலேமே வீழ்த்தி யூதா தேசத்தைக் கைப்பற்றியது.

நேபுகாத்நேச்சாரது ஆட்சிக்குப்பின் அவனது மகன் பெல்ஷாத்சார் ஆட்சி செய்தான். ஆனால் சுவற்றில் எழுதப்பட்ட கையெழுத்துக்களுக்கு தானியேல் அர்த்தம் கூறிய அன்று ராத்திரி பெல்ஷாத்சார் கொல்லப்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது. இதுவரை பாபிலோன் ராஜாவின் கையில் இருந்த ஆட்சி இப்பொழுது பெர்சியா ராஜாவாகிய தரியுவின் அதிகாரத்தின் கீழ் ஆட்சி கைமாறுகிறது. தரியு ராஜாவிற்குப் பின் அவனது மகன் கோரேஸ் ராஜா வருகிறான். கோரேஸ் ராஜாவின் முதல் வருடத்தில் தான் "யூதர்கள் தங்களது நாட்டிற்குச் சென்று ஆலயத்தைக் கட்டலாம்" என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது, செருபாபேல் தலைமையில் ஒரு கூட்ட மக்கள் ஆலயம் கட்ட எருசலேமிற்குச் செல்கிறார்கள்.

இந்தக் கோரேஸ் ராஜாவின் 9-ம் வருடத்தில் தான் ஏறக்குறைய கி.மு. 530-ம் ஆண்டு தான் இந்த தானியேல் புத்தகம் எழுதப்பட்டது.

7-ம் அதிகாரத்தில் சொல்லப்படும் நான்கு மிருகங்களும் 4 சாம்ராஜ்யங்களைக் குறிக்கிறது - பாபிலோன், மேதியா - பெர்சியா, கிரேக்க சாம்ராஜ்யம், ரோம சாம்ராஜ்யம்.

திறவுகோல் வசனம் :

தேவன் ஆளுகை செய்கிறார். ஒவ்வொரு நாட்டின் சரித்திரத்தையும் ஆண்டவர் தான் நிர்ணயிக்கிறார். 2:20-22; 2:44.

அவர் காலங்களையும், சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளை அவர் அறிவார். வெளிச்சம் அவருடையது.

திறவுகோல் அதிகாரம் :

இப்புத்தகத்தில் (9:24-27) கூறப்படும் 70 வாரங்களில் 69 வாரங்கள் இயேசுவின் முதல் வருகையின் போது நிறைவேறியது. கடைசி 70வது வாரம் இயேசுவின் இரண்டாம் வருகையின் போது நிறைவேறக் காத்திருக்கிறது.

கிறிஸ்து 9:25, 26 மேசியா வருகை :

2:34 கைகளால் பெயர்க்கப்படாத கல் பெயர்ந்து உருண்டு வந்து இந்த பூமியின் ராஜாக்களைச் சிதறடிக்கும். 10:5-9 இயேசு கிறிஸ்து எப்படி இந்த உலகத்தில் மீண்டும் தோன்றுவார் என்று விவரிக்கிறது.



ஓசியா - புத்தகம் 28

முன்னுரை : பழைய ஏற்பாட்டை 5 பகுதிகளாகப் பிரிக்கிறோம். முதல் 5 புத்தகங்களும் மோசேயின் ஆகமங்கள், இரண்டாவது சரித்திரப்புத்தகங்கள் - 12-யோசுவா முதல் எஸ்தர் புத்தகம் முடிய, மூன்றாவது கவிதைப் புத்தகங்கள் - யோபு முதல் உன்னதப்பாட்டு முடிய - 5 புத்தகங்கள், நான்காவது பெரிய தீர்க்க தரிசன புத்தகங்கள் - ஏசாயா முதல் தானியேல் முடிய 5 புத்தகங்கள், ஐந்தாவது பகுதி சிறிய தீர்க்க தரிசனப் புத்தகங்கள் ஓசியா முதல் மல்கியா முடிய - 12 புத்தகங்கள்.

எனவே பழைய ஏற்பாட்டின் 5-வது பகுதியாகிய சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள் வரிசையில் முதலில் வருவது இந்த ஓசியா புத்தகம்.

ஆசிரியர் : இதை எழுதியவர் ஓசியா என்பதில் சந்தேகமில்லை. இவர் வடதேசமாகிய இஸ்ரவேல் நாட்டைச் சேர்ந்தவர். ஏசாயா, மீகா தீர்க்கதரிசிகள் வாழ்ந்த காலத்தவர். இவருடைய செய்தி இஸ்ரவேல் மக்களுக்காக எழுதப்பட்டது.

விகாரமான உருவகம் : பொதுவாக சராசரி கிறிஸ்தவனால் ஏற்றுக் கொள்ள முடியாத - ஜீரணிக்க முடியாத ஒரு உருவகம் இப்புத்தகத்தில் காணப்படுகிறது. செய்கை வாயிலாக செய்தியை மக்களுக்கு அறிவிப்பதை பல யூத எழுத்தாளர்கள் கையாண்டிருக்கிறார்கள். உதாரணமாக எசேக்கியேல் - உன் அன்பான மனைவியை எடுத்துக் கொள்வேன் - துக்கப் படாதே - ஒரு பக்கமாக படுத்துக்கொள் - புத்தகச் சுருளை சாப்பிடுதல் - இது போன்ற செயல்களை நாம் ஏற்றுக் கொள்வதில் கஷ்டம் இல்லை; மனதில் தயக்கம் இல்லை.

ஆனால் ஓசியாவை ஆண்டவர் அழைத்து - ஒரு வேசியை திருமணம் செய் - என்று கட்டளையிடுகிறார். ஓசியாவும் போய் கோமேர் என்ற வேசியை திருமணம் செய்து பிள்ளைகளையும் பெறுகிறார். இதை நாம் ஏற்றுக் கொள்வது சற்று கடினம். இந்த சம்பவத்தை சிலர் ஓசியா உருவகமாகத்தான் சொல்கிறார்- சரீரப்பிரகாரமாக ஒரு வேசியை திருமணம் செய்யவில்லை என்று சிலர் தர்க்கம் செய்கிறார்கள், ஓசியா செய்த இத்தர்க்கத்திற்குரிய செயலை நாம் ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் முக்கியமல்ல; ஆனால் இச்செயலில் அடங்கியிருக்கிற செய்திதான் முக்கியமானது - என்பதை நாம் மறக்கக் கூடாது.

ஓசியாவின் மனைவி கோமேர் தன் கணவனுக்கு எவ்வாறு துரோகம் பண்ணினாளோ - அதுபோலவே இஸ்ரவேல் மக்கள் அவர்களது தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக நடந்து - கோமேர் திருமணம் ஆன பின்பு வேறே மனிதர்களிடத்தில் போனது போல - இஸ்ரவேல் மக்கள் வேறு தெய்வங்களை நாடிப் போய் விட்டார்கள். - என்ற செய்தியைத்தான் இஸ்ரவேல் மக்களுக்கு ஓசியா எடுத்துரைத்தார். தனது மனைவி தன்னைவிட்டு ஓடிப்போய் இன்னொரு மனதினோடு வாழ்ந்தால் ஒரு கணவனின் மனம் எப்படி வேதனைப்படுமோ அவ்வாறே ஆண்டவருடைய இருதயமும் வேதனைப்படும்.

மையக்கருத்து : ஆண்டவரை விட்டுப் பின் வாங்குவது - ஆவிக்குரிய விபச்சாரம் செய்வது - ஆண்டவர் உண்மையான புருஷள் - இஸ்ரவேல் மக்கள் - கற்பை இழந்த கோமேர்.

எப்பிராயீம் : இப்புத்தகத்தில் இஸ்ரவேல் மக்களை குறிப்பிடுவதற்காக இஸ்ரவேல் என்ற பதத்திற்குப் பதிலாக இஸ்ரவேலின் 10 கோத்திரங்களில் மிகப்பெரிய கோத்திரமாகிய எப்பிராயீம் என்ற பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவை 'டெல்லி' என்றும் அமெரிக்காவை 'வாஷிங்டன்' என்றும் பாகிஸ்தானை 'இஸ்லாமாபாத்' என்றும் அந்தந்த நாட்டின் தலைநகரத்தின் பெயரை உபயோகப்படுத்துவது போல, இஸ்ரவேலுக்குப் பதிலாக எப்பிராயீம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் வசனம் : அநியாயத்தை உழுதீர்கள், தீவினையை அறுத்தீர்கள்; பொய்யின் கனிகளைப் புசித்தீர்கள் (10:13) இஸ்ரவேலே, நீ ஏன் உன் அக்கிரமத்தில் விழவேண்டும்; கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு, உன் தேவானகிய கர்த்தரிடத்தில் திரும்பு (14:1)

திறவுகோல் அதிகாரம் : 4வது அதிகாரம். என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள் (4:6).

ஓசியாவின் காலம் : 40 ஆண்டுகள் கி.மு. 755 முதல் 710 வரை தீர்க்கதரிசனம் உரைத்தார். ஏசாயா தீர்க்கதரிசியும் (1:1) ஓசியா தீர்க்கதரிசியும் (1:1) இணையாக ஒரே கால கட்டத்தில் உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ராஜாக்கள் யூதாவை ஆண்ட காலத்தில் வாழ்ந்தவர்கள். ஏசாயா யூதா தேசத்தைக் குறித்தும், ஓசியா இஸ்ரவேல் தேசத்தைக் குறித்தும் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். யூதா ராஜாவாகிய

எசேக்கியாவின் 5-வது ஆண்டு அரசாட்சியின் போது தான் அதாவது கி.மு. 720-ம் ஆண்டு இஸ்ரவேல் தேசத்தை அசீரியா ராஜா கைப்பற்றினார். இஸ்ரவேல் தேசம் அழிந்த பின்பு 136 ஆண்டுகள் யூதா தேசம் தொடர்ந்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

யூதா தேசத்தின் ஆட்சி நிலையாக இருந்தது. ஆனால் இஸ்ரவேல் தேசத்தின் ஆட்சி பீடம் அடிக்கடி நிலைதடுமாறியது. இஸ்ரவேலை ஆண்ட கடைசி 6 ராஜாக்களில் 4 ராஜாக்கள் கொலை செய்யப்பட்டார்கள். ஒருவன் கைதி செய்யப்பட்டு அசீரியா தேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டான்.

ஒரு தேசத்தின் ஆட்சி அடிக்கடி கைமாறுமானால், சீக்கிரத்தில் அந்த தேசம் கவிழப் போகிறது என்று அர்த்தம். அதுதான் இஸ்ரவேல் தேசத்திற்கும் இறுதியாக நடந்தது. இந்தியாவில் ஆட்சி நிலைத்து நிற்கிறது. ஆனால் பாகிஸ்தானில் ஆட்சி அடிக்கடி கைமாறுகிறது. அங்கே ஒரே குழப்பம். அங்கு நிலவும் ஆட்சி நிலையற்றது - என்பது தான் அதன் அர்த்தம்.

ஓசியா - எரேமியா ஒற்றுமை : ஓசியாவிற்கு பிறகு ஏறக்குறைய 100 ஆண்டுகள் கழித்து எரேமியா பிறக்கிறான். ஆனால் இருவருக்கும் ஒரு மாபெரும் ஒற்றுமை. கி.மு. 720-ம் ஆண்டு இஸ்ரவேல் தேசம் வீழ்ச்சியடைந்தது. இஸ்ரவேல் தேசம் வீழ்ச்சியடையும் காலகட்டத்தில் வாழ்ந்த ஓசியா இஸ்ரவேல் மக்களை எப்படி கடைசி மணி வேளையில் 11-வது மணி நேரத்தில் மனத்திரும்புங்கள். உங்கள் ஆண்டவர் தண்டிக்கப் போகிறார் - நியாயம் விசாரிக்கப் போகிறார். விரைவில் அழிவு வரப்போகிறது என்று பிரசங்கித்தாரோ அதைப் போலவே எரேமியா தென் தேசமாகிய யூதா தேசத்திற்கு கடைசி மணி நேரத்தில் - யூதா மக்களை எச்சரித்து - யூதா தேசம் விரைவில் அழியப் போகிறது என்று தீர்க்க தரிசனம் உரைத்தார். ஓசியா வட தேசத்து இஸ்ரவேல் மக்களுக்கு எதைப் பிரசங்கித்தாரோ அதே செய்தியை 100 ஆண்டுகள் கழித்து எரேமியா தென் தேசமாகிய யூதா மக்களுக்குப் பிரசங்கித்தார். இஸ்ரவேல் தேசம் கி.மு. 720-ல் அசீரியா ராஜாவால் பிடிக்கப்பட்டது; யூதா தேசத்தை கி.மு. 586-ல் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கைப்பற்றினான்.

உருவகங்கள் : இரட்சண்ய பயணம் Pilgrim's Progress என்ற புத்தகத்தை எழுதிய ஜான் பனியனைப் போல இந்த ஓசியாவும் புனைப்பெயர் இடுவதிலும், உருவகப்படுத்தி எழுதுவதிலும் சிலேடைகளை எழுதுவதிலும் தனித்திறன் பெற்றவர்.

அதில் சில உதாரணங்கள் :

1. திருப்பிப் போடாத அப்பம் (7:8)
2. அந்நியர் உன் பெலத்தை (மாட்டில் ஒட்டிக் கொண்டிருக்கும் உண்ணியைப் போல) உறிஞ்சுகிறார்கள் (7:9)
3. உன்னில் நரைமயிர் இங்கும் அங்கும் காணப்படுகிறது (7:9)
4. விரும்பப்படாத பாத்திரம் (8:8)
5. கள்ளத் தராசு (கள்ளத்தராசு கி.மு. 8-ம் நூற்றாண்டிலேயே புழக்கத்தில் இருந்திருக்கிறது) (12:7)
6. அடங்காத கிடாரி (4:16)

கிறிஸ்து : "எகிப்திலிருந்து என் குமாரனை வரவழைத்தேன்" என்ற மத் 2:15-ஆம் வசனம் ஓசியா 11:1லிருந்து எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. யாக்கோபும் அவனது சந்ததியும் அடைக்கலம் தேடி எகிப்து தேசத்திற்குச் சென்றது போலவே இயேசு கிறிஸ்துவும் பாலகனாகப் பிறந்த போது எகிப்து தேசத்திற்கு - ஏரோதின் அழிவிலிருந்து அடைக்கலம் தேடிச் சென்றதும் - இரண்டும் ஒன்று தான்.

ஓசியா எப்படி கோமேர் என்ற தனது மனைவியை அடிமைத்தன வியாபாரத்திலிருந்து மீட்டுக் கொண்டு வந்து திருமணம் செய்து கொண்டாரோ அதே போலத்தான் இயேசுவும் நம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து அவரது இரத்தத்தை கிரயம் செலுத்தி நம்மை மீட்டு மணவாட்டி சபையாக ஏற்றுக் கொண்டார்.



யோவேல் - புத்தகம் 29

ஆசிரியர் : யோவேல் என்ற வார்த்தையின் அர்த்தம் "ஆண்டவரால் ஏவப்பட்டவன்" என்று பொருள்.

கருப்பொருள் : 'கர்த்தருடைய நாள்' இப்புத்தகத்தின் மையப் பொருள். இப்புத்தகத்தில் 3 அதிகாரங்கள் இருந்தாலும் இதை இரண்டு பகுதிகளாக மாத்திரம் தான் பிரிக்க முடியும். முதல் பகுதி (அதிகாரம் 1) வெட்டுக்கிளிகள் யூதா நாட்டிற்கு விளைவித்த மகா பெரிய சேதம், நமது நாட்டில் குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்டு அந்த மாநிலத்தையும், நமது தேசத்தையும் நிலை குலையச் செய்தது போல, இந்த யோவேல் வாழ்ந்த யூதா தேசத்திலும் திடீரென வெட்டுக்கிளிகள் படையெடுத்து வந்து ஒரே நாளில் நாட்டையே நாசப்படுத்திவிட்டது. பச்சையாயிருந்த எல்லா பயிர்களையும் அவைகள் சாப்பிட்டு, நாட்டின் பொருளாதாரத்தையே சீர்குலைத்துவிட்டுப் போய் விட்டது.

இப்புத்தகத்தின் இரண்டாவது பகுதி (2,3 அதிகாரங்கள்) 'கர்த்தருடைய நாள்'. யூதா தேசத்திற்கு வெட்டுக்கிளிகள் மூலம் ஏற்பட்ட நாசத்தை - ஒரு முன்னோடியாக ஒரு சிகப்பு எச்சரிப்பாக வைத்து எதிர் காலத்தில் 250 ஆண்டுகளுக்கு பின்பு பாபிலோனியரால் யூதா தேசத்திற்கு வரவிருக்கும் மிகப்பெரிய அழிவைக் குறித்து எச்சரிக்க இந்த வெட்டுக்கிளிகள் மூலம் ஏற்பட்ட நாசத்தை ஒரு உதாரணமாக பயன்படுத்துகிறார். அநேக ஆண்டுகள் கழித்து யூதா தேசத்தின் மேல் வரப்போகும் அழிவோடு ஒப்பிடும்போது இப்போது ஏற்பட்டுள்ள சேதம் ஒன்றுமேயில்லை என்று யோவேல் தீர்க்கதரிசி உரைக்கிறார்.

'சீயோனைப் பற்றியும் கர்த்தருடைய ஆலயத்தைப் பற்றியும் யோவேல் அடிக்கடி குறிப்பிடுகிற காரணத்தால் இவர் எருசலேம் பட்டணத்திற்கு அருகில் உள்ள ஒரு ஊரில் வாழ்ந்திருக்கலாம் என்பது பலரது யூகம்.

காலம் : இந்த யோவேல் தீர்க்கதரிசி வாழ்ந்த காலம் ஒரு தர்க்கத்திற்குரியது. பொதுவாக எபிரேயு எழுத்தாளர்கள் ஒரு புத்தகத்தை எழுதும் போது தாங்கள் எந்த ராஜாவின் காலத்தில் வாழ்ந்தோம் என்பதை குறிப்பிடுவது வழக்கம். ஆனால் இதற்கு இந்த யோவேல் ஒரு விதி விலக்கு. இதன் காரணமாக இந்த யோவேல் கி.மு. 800ல் வாழ்ந்திருக்கலாம் அல்லது கி.மு. 300ல் சிறையிருப்பிற்குப் பின்பு வாழ்ந்திருக்கலாம் என்று இப்படி 500 ஆண்டுகள் வித்தியாசத்தில் கணிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

யோவேல் 3:16ம், ஆமோஸ் 1:2ம் மற்றும் யோ 3:18ம் ஆமோஸ் 9:13 ஒரே மாதிரி இருப்பதால் ஆமோஸ் எழுதிய தீர்க்கதரிசனத்தை யோவேல் மேற்கோள் காட்டியதால், யோவேல் ஆமோஸ் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர் என்று சிலர் யூகிக்கிறார்கள். இந்த யூகம் அவ்வளவு சரியல்ல, யோவேல் சொன்ன தீர்க்கதரிசனத்தை அப்போஸ்தலனாகிய பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் மேற்கோள் காட்டிய ஒரே காரணத்திற்காக பவுலும் யோவேலும் ஒரே காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் என்று கூற முடியுமா ? நிச்சயமாக இல்லை.

யோவேல் தனது தீர்க்கதரிசன புத்தகத்தில் ராஜாவைப் பற்றியோ, யூதா தேசம், இஸ்ரவேல் தேசம் என்றோ எங்குமே குறிப்பிடவில்லை. ஆனால் ஆசாரியர்கள், ஆலயம், சீயோன் என்று அடிக்கடி குறிப்பிடுகிற காரணத்தால் இந்த யோவேல் தீர்க்கதரிசி சிறையிருப்பிற்குப் பின்பு, எருசலேமில் இரண்டாவது ஆலயம் கட்டின பின்பு (கி.மு. 515) தான் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

திறவுகோல் வசனங்கள் : பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு மேற்கோள் காட்டிய வசனங்கள்

1) மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். வாலிபர் தரிசனம் காண்பார்கள்: மூப்பர்கள் சொப்பனம் காண்பார்கள் (2:28)

2) கர்த்தருடைய நாள் பெரிதும் மகாபயங்கரமுமாயிருக்கும்: அதைச் சகிக்கிறவன் யார்?

இப்புத்தகத்தில் கிறிஸ்து : 'நான் போன பின்பு தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை அனுப்புவேன்' என்று இயேசு கூறிய வார்த்தையின் படியே பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது.

புறஜாதியாரோடு இயேசு யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே வழக்காடுவார் (3:2,3)

முக்கியமான சம்பவங்களும் தலைப்புக்களும்:

(a) வெட்டுக்கிளிகளினால் வந்த நாசம் (1:4-9)

(b) பஞ்சத்தினால் வந்த கொடுமை (1:10-20)

(c) எதிரிகளின் படையெடுப்பு (2:1-10)

(d) இருப்பினும் எதிர் காலத்தில் ஆண்டவர் அவர்களை விடுதலையாக்குவார் (2:18-20)

(e) தீர்மானப் பள்ளத்தாக்கு (3:16)

'ஆமோஸ்' - புத்தகம் 30

ஆமோஸ் : இதை எழுதிய ஆசிரியராகிய ஆமோஸ் ஒரு தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் குமாரனும் அல்ல. இவன் ஒரு ஆடு மேய்க்கிறவன் - அத்திமரங்களை வளர்க்கும் ஒரு விவசாயி. இவனது பெயரின் அர்த்தம் "பாரம் சுமப்பவன்". தனது பெயருக்கு ஏற்றபடி இஸ்ரவேல் மக்கள் மேல் வந்த ஆக்கினையை சுமந்து கொண்டு தீர்க்கதரிசனம் உரைத்தவன். இவனது ஊர் எருசலேமிலிருந்து 12 மைல் தொலைவில் இருந்தது. இவன் யூதா தேசத்தைச் சேர்ந்தவன். ஆனால் இவனது தீர்க்கதரிசனம் அனைத்தும் வட தேசமாகிய இஸ்ரவேல் தேசத்தைப் பற்றியே இருந்தது.

இவன் வளர்த்த ஆடுகள் ஒரு விசேஷித்த சிறந்த ரக உல்லன் (Wool) தயாரிக்க உபயோகப்படுத்தப்பட்டது. அதுபோல அத்தி மரக்கனிகளை தயாரிப்பதிலும் இந்த ஆமோஸ் விசேஷித்தவன். காயாக இருக்கும் போதே அதில் ஒரு ஓட்டையைப் போட்டு, உள்ளே இருக்கும் பூச்சிகளை வெளியேற்றி, பின்பு பழுக்க வைக்கும் பக்குவம் - இவரது விவசாய தொழிலின் தனித்திறமை. இப்படியாக ஆடு வளர்ப்பிலும், தோட்டத் தொழிலும் விசேஷித்த முறைகளை கையாளப் பழகியவன். சுருக்கமாக இவன் ஒரு சிறு தொழில் நிறுவனர் (Small Scale Industrialist).

காலம் : யூதாவில் உசியா ராஜா (கி.மு. 767-739) ஆண்டு கொண்டிருந்தான்; இஸ்ரவேல் தேசத்தை யெரோபெயாம் - 2 (கி.மு. 782 - 753) ஆண்டு கொண்டிருந்தான். ஓபதியா, யோவேல், யோனா போன்ற தீர்க்கதரிசிகளுக்குப் பின்பு வந்தவன் இந்த ஆமோஸ்.

கி.மு. 763-ம் ஆண்டு ஒரு சூரிய கிரகணம் நடந்திருப்பதாக வான சாஸ்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். 8,9-ம் வசனத்தில் பட்டப்பகலில் சூரியனை மறையச் செய்து உலகை இருளால் சூழச் செய்தீர். ஆமோஸ் இதைப்பற்றி குறிப்பிடுகிறார். அடுத்து 7:11ல் ஒரு பூமி அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறதை இவர் குறிப்பிடுகிறார். 200 ஆண்டுகளுக்குப் பின்பு வாழ்ந்த சகரியா தீர்க்கதரிசியும் (14.5) இந்த பூமி அதிர்ச்சியைப் பற்றி குறிப்பிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

செய்தி : ஆமோஸ் வாழ்ந்த காலத்தில் தென்தேசமாகிய யூதாவும் வடதேசமாகிய இஸ்ரவேலும்- இரண்டுமே மகா செழிப்பாக வாழ்ந்து வந்தன. அசிரியா, பாபிலோன், சிரியா, எகிப்து ஆகிய எதிரி தேசங்கள் அனைத்தும் மிகவும் மோசமான பெலவீனமடைந்த ஒரு நிலையில்

வாழ்ந்து வந்தன. எனவே இவர்கள் மூலம் எந்த வித ஆபத்தும் அச்சுறுத்தலும் இல்லை.

இரு நாடுகளும் செல்வத்தோடும் செழிப்போடும் வாழ்ந்த காரணத்தினால் ஆவிக்குரிய வாழ்க்கையில் சற்று மெத்தனமாகவே இருந்தன. ஆனால் ஆமோஸ் வடதேசமாகிய இஸ்ரவலே் தேசத்திற்குத் தான் அழிவு வரப்போகிறது - என்று கடுமையாக எச்சரித்தான். அநியாயம், அக்கிரமம், விக்கிரக ஆராதனை - இவைகளைக் குறித்து ஆமோஸ் கடுமையாக சாடினான். மனிதர்கள் ஒரு ஜோடி செருப்பிற்காக விலைக்கு விற்கப்பட்டார்கள். தரித்திரர்கள், ஏழைகள் வஞ்சிக்கப்பட்டார்கள். பல சமுதாய சீர் கேடுகளை அவன் வெளிப்படையாக எடுத்துரைத்தான். எனவே அநேகருக்கு ஆமோசைப் பிடிக்காது.

திறவுகோல் வசனம்

இஸ்ரவேல் மக்களே! கேளுங்கள்; உங்களுக்கு எதிராக ஆண்டவர் உரைக்கும் வார்த்தையைக் கேளுங்கள். "உலகத்திலுள்ள எல்லா மக்கள் இனத்தவருக்குள்ளும் உங்களைத் தான் நான் சிறப்பான இனமாக தெரிந்து கொண்டேன். ஆகையால், உங்கள் தீச் செயல் அனைத்திற்காகவும் நான் உங்களைத் தண்டிப்பேன்" (3:1,2). இதோ நாட்கள் வரும். நாட்டிற்குள் பஞ்சத்தை அனுப்புவேன்; உணவு கிடைக்காத பஞ்சம் அல்ல; ஆண்டவரது வசனம் கிடைக்காத பஞ்சம் அது (8:11).

புத்தகத்தின் சாரம் :

உன் தேவனாகிய கர்த்தரை நீ சந்திக்க ஆயத்தப்படு (4:12). இப்புத்தகத்தை 4 பிரிவுகளாக பிரிக்கலாம். 1) எட்டு தீர்க்கதரிசனங்கள் (1,2) 7 முறை அக்கினியை அனுப்புவேன் என்று ஆண்டவர் கூறுகிறார் (2) 3,4,5 அதிகாரங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேள் என்று ஆரம்பிக்கிற மூன்று பிரசங்கங்கள். (3) ஐந்து தரிசனங்கள் (7,8,9 அதிகாரங்கள்) (4) ஐந்து வாக்குத்தத்தங்கள் (9:11-15).

கிறிஸ்து : பலிபீடத்தருகில் ஆண்டவர் நிற்பதைக் கண்டேன் (9:1) கர்த்தர் என்பது அவரது நாமம் (9:6).

பாவம் செய்யும் அரசை ஆண்டவரின் கண்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்ற (9:8) ஆமோசின் தீர்க்கதரிசனம் இன்றைய உலகத்திலுள்ள எல்லா நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் ஒரு எச்சரிப்பு விடுக்கிறது.

ஒபதியா - புத்தகம் 31

"உன் எதிரி கீழே விழுந்தால் கைகொட்டி சிரிக்காதே" இது தான் இப்புத்தகத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் பாடம்.

தொன்று தொட்டு, ஆதி முதல் கொண்டே ஏதோமியரும் இஸ்ரவேலரும் சபதமிட்ட அண்டை நாட்டு பகைஞர்கள் (Vowed enemies) ஏசாவும் யாக்கோபும் ரெபேக்காளின் வயிற்றுக்குள் இருக்கும் போது இந்த சண்டை தொடங்கிவிட்டது. ஏசாவை யாக்கோபு அவனது புத்திர சுவீகாரத்தை வஞ்சித்துப் பெற்றது தான் இந்த பகைக்கு வித்து. ஏசாவும் யாக்கோபும் பெரியவர்களான போது பகையை மறந்து இருவரும் ஒன்றாக இணைந்தது என்னவோ உண்மை தான். ஆனாலும் தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்ற பழமொழிக்கினங்க அவர்களின் வம்சத்தினர் பரம எதிரிகளாக மாறிவிட்டனர்.

ஆசிரியர் : இதை எழுதியவர் ஒபதியா என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. பழைய ஏற்பாட்டில் 13 ஒபதியாக்களைப் பற்றி வாசிக்கிறோம். (1) ஆகாப் ராஜா காலத்தில் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை குகையில் ஒளித்து வைத்த ஆகாப் ராஜாவின் அரண்மனை அதிகாரி (1 ராஜா 18:3) (2) வேத வசனத்தை தெரு தெருவாக போதிப்பதற்காக யோசபாத் ராஜாவினால் அனுப்பப்பட்டவன் (2 நாளா 17:7) (3) யோசியா ராஜா காலத்தில் ஆலயத்தைப் பழுது பார்க்க அனுப்பப்பட்டவன் (2 நாளா 34:12) (4) நெகேமியா காலத்தில் வாழ்ந்த ஆசாரியன் (நெகே 10:5) இந்த முக்கியமான 4 ஒபேதியாக்களில் எந்த ஒபதியா இதை எழுதியவர் என்பது திட்டவட்டமாக தெரியவில்லை.

காலம் : இது எழுதப்பட்ட காலத்தைக் கணிப்பதற்கு இருக்கும் ஒரே ஆதாரம் 10 முதல் 14 வசனங்கள் மாத்திரமே. இந்த 5 வசனங்களில் எருசலேம் எப்படி கொள்ளையாடப்பட்டது என்று விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்நிய நாட்டினர் (எந்த தேசத்தார் என்பது கொடுக்கப்படவில்லை) வந்து எருசலேமை கொள்ளையிட்டனர் அதைப் பார்த்து ஏதோமியர் மகிழ்ச்சியடைந்தனர். எதிரிகள் இஸ்ரவேல் மக்களை கொடுமைப்படுத்தி கொள்ளையடித்த போது இந்த ஏதோமியரும் அந்நிய நாட்டாரோடு சேர்ந்து கொள்ளையடித்தனர்.

இச்சம்பவங்கள் கி.மு. 586ல் நெபுகாத்நேச்சரால் எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்ட போது நடந்திருக்கலாம் என்று யூகிக்கலாம்.

இந்த ஒபதியா புத்தகத்தில் எந்த ராஜாவின் பெயரும் கொடுக்கப்படாத காரணத்தால், இப்புத்தகம் ராஜாக்களின் ஆட்சி முடிந்த பின்பு எழுதப்பட்டிருக்கலாம் என்பது எனது கணிப்பு. மொத்தம் 4 முறை எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது முறையாக அழிக்கப்பட்டது. கி.மு. 586ம் ஆண்டு பாபிலோனிய ராஜா நெபுகாத் நேச்சர் படையெடுத்து வந்து யூதா தேசத்தையும் எருசலேம் பட்டணத்தையும் அழித்து சூரையாடினான். இதில் கூட ஒரு சந்தேகம் முளைக்கிறது. குழப்பம் ஆரம்பமாகிறது.

நெபுகாத்நேச்சர் எருசலேமை அழிக்கும்போது அவன் சீட்டுப் போட வாய்ப்பும் இல்லை: அவசியமும் இல்லை. 11ம் வசனத்தில் எருசலேம் பட்டணத்தின் பேரில் சீட்டுப் போட்டதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். சீட்டுப் போட்டதாக குறிப்பு இருக்கிற காரணத்தால் ஒரு ஆராய்ச்சியாளர் கி.மு. 845ம் ஆண்டில் (எலிசா வாழ்ந்த காலம்) பெலிஸ்தியர்கள் படையெடுத்து வந்து எருசலேம் பட்டணத்தை அழித்த சம்பவமாக இருக்கலாம் என்று கூறுகிறார். அது ராஜாக்கள் ஆட்சி செய்த காலம். அது உண்மையானால் ஏன் ராஜாவின் பெயரை ஒபதியா குறிப்பிடவில்லை? ஏதோமியர்கள் பல ஆண்டுகள் யூதா தேசத்தின் ஆளுகைக்குள் தான் இருந்தார்கள். ஆனாலும் கி.மு. 845ம் ஆண்டு ஏதோம் யூதாவிலிருந்து விடுதலை பெற்று சுயாதீனமாய் இருந்தது. ஒபதியா புத்தகம் எழுதப்பட்ட போது ஏதோமியர் விடுதலை பெற்ற ஒரு குட்டி நாடாக யூதாவின் தென்கிழக்குப் பகுதியில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

திறவு கோல் வசனம் : நீ உன் சகோதரனாகிய யாக்கோபுக்குச் செய்த கொடுமையின் நிமித்தம் வெட்கப்படுவாய்: நீ முற்றிலும் சங்கரிக்கப்பட்டு போவாய். ஏதோம் ஒரு நாள் நியாயம் தீர்க்கப்படும் (10,21)

நீதியின் பாடம் : உனது எதிரிகள் கஷ்டப்படும் போது அதைப் பார்த்து உள்ளூர மகிழாதே; பெருமைப்படாதே.

எதிரிக்கு குழி வெட்டியவன் அந்த குழியிலே விழுவான்.

முக்கிய பகுதி : ஏதோமின் நியாயத்தீர்ப்பு; ஏதோம் அழிக்கப்பட்டு எருசலேம் மீண்டும் கட்டப்படும் என்ற ஆண்டவரது வாக்குறுதி (21)

வாக்குத்தத்தம் : யாக்கோபை அக்கினியாகவும்; ஏசா வம்சத்தை வைக்கோலாகவும் மாற்றுவேன் (18)

கிறிஸ்து : ஏசாவை நியாயம் தீர்ப்பவர்: யாக்கோபிற்கு இரட்சகர் சீயோன் பர்வதத்தின் மேல் வந்து இறங்குவார் (21)

யோனா - புத்தகம் 32

பழைய ஏற்பாட்டில் முதல் 5 புத்தகங்கள் மோசேயின் ஆகமங்கள், 6-12 (யோசுவா முதல் எஸ்தர்வரை) சரித்திரப் புத்தகங்கள், 13-17 (யோபு முதல் உன்னதப்பாட்டு வரை) சங்கீதப் (Poetical) புத்தகங்கள், 18-39 (ஏசாயா முதல் மல்கியா வரை) தீர்க்கதரிசன புத்தகங்கள் என்று பிரிக்கிறோம்.

1) யோனா புத்தகம் - தீர்க்க தரிசன புத்தகம் அல்ல; இது ஒரு சரித்திரப் புத்தகம்

இந்த யோனா புத்தகம் தீர்க்கதரிசன புத்தக வரிசையில் வருகிறது. ஆனால் என்னுடைய கருத்து இது ஒரு தீர்க்கதரிசன புத்தகம் அல்ல. ஆனால் ஒரு சரித்திரப் புத்தகம். இதில் தீர்க்கதரிசன வசனங்கள் "இன்னும் 40 நாளில் நினிவே அழிக்கப்படும்" என்று ஐந்து வார்த்தைகள் மாத்திரம் தான் தீர்க்கதரிசனம் மற்ற எல்லாம் சரித்திரம் தான். இந்த யோனா புத்தகம் சரித்திரப்புத்தக வரிசையில் எஸ்தர் புத்தகத்திற்கு முன்பு அல்லது பின்பு இதை வரிசைப்படுத்தியிருக்க வேண்டும் - என்பது எனது கருத்து.

2) ஆசிரியர் மற்றும் எழுதப்பட்ட காலம்

இதை ஆக்கியோன் யோனா என்பதில் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. இந்த யோனாவைப்பற்றி II இராஜா 14-25ம் வசனத்தில் சொல்லப்பட்டிருப்பது - குறிப்பிடத்தக்கது. இந்த யோனா இஸ்ரவேல் ராஜாவாகிய யெரோபியாம் - சமாரியாவை அரசாண்ட காலகட்டத்தில் (கி.மு. 782 - 753) கி.மு. 8-ம் நாற்றாண்டில் வாழ்ந்தவன். மரித்துப்போன சாறிபாத் விதவையின் மகனை எலியா தீர்க்கதரிசி உயிரோடு எழுப்பிய சம்பவத்தை 1 ராஜா 17 : 8-24ல் வாசிக்கிறோம். **மரித்து உயிரோடு எழுப்பப்பட்ட சாறிபாத் விதவையின் மகன் தான் இந்தயோனா என்று யூதர்களின் மரபுக்கதை ஒன்று கூறுகிறது.**

3. இப்புத்தகம் எழுதப்பட்டதின் உள்நோக்கம்

இதற்கு மாறாக இந்த யோனா கி.மு. 8-ம் நூற்றாண்டில் வாழவில்லை: இவர் கி.மு. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்: யூதர்களின் குறுகிய மனப்பான்மையையும், ஆண்டவர் யூதர்களுக்கு மாத்திரம் தான் சொந்தம் - எங்கள் யெகோவா தெய்வம் யூதர்களை மாத்திரம்

தான் நேசிக்கிறார் - வேறு யாரையும் அல்ல என்ற யூதர்களின் குறுகிய, சுயமான கண்ணோட்ட கொள்கையை தகர்த்து ஆண்டவர் எல்லா மக்களையும் நேசிக்கிறார். ஆண்டவரது அன்பு அகில உலகலாவியது என்ற உண்மையை வலியுறுத்துவதற்காக கி.மு. 4-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சமாரியரால் எழுதப்பட்டது என்று சிலர் தர்க்கம் செய்கிறார்கள். இதற்குக் காரணம் - நெகேமியா, எஸ்றா புத்தகங்களை நாம் வாசித்தால் "ஆண்டவர் யூதர்களுக்கு மாத்திரம் தான் சொந்தம்" என்ற **Narrow Nationalism** குறுகிய தேசிய வாத கொள்கை வெளிப்படுகிறது. யூதர் அல்லாத பெண்களை - யூதர்கள் விவாகரத்து செய்ய வேண்டும் என்ற கொள்கையை தவறு என்று நிருபிக்க இந்த யோனா புத்தகத்தை யாரோ ஒரு சமாரியன் எழுதியிருக்க வேண்டும். இதை நிரூபிக்க "இந்த யோனா புத்தகம் மூன்றாம் நபர் IIIrd Personல் எழுதப்பட்டிருப்பதை சுட்டிக் காட்டுகிறார்கள்.

யோனா புத்தகம் ஒரு உண்மையை நமக்கு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வேதப் புத்தகத்தின் ஆண்டவர் யூதர்களுக்கு மாத்திரம் சொந்தமானவர் அல்ல: அவர் யூதர் அல்லாத எல்லா மக்களுக்கும் சொந்தமானவர்.

நினிவே பட்டணம் அசீரியாவின் தலைநகரம் இஸ்ரவேல் நாட்டின் பரம எதிரி - பாகிஸ்தான் இந்தியாவின் பிரதான எதிரியாக இருப்பது போல இஸ்ரவேல் நாட்டின் பரம்பரை எதிரி இந்த அசிரீயா. இந்த அசீரியாவின் தலை நகர் நினிவே இந்தியனுக்கு ஒரு 'இஸ்லாமபாத்' (பாகிஸ்தான் தலைநகரம்) போல ஒரு இஸ்ரவேலனுக்கு நினிவே பட்டணம். இந்த கால கட்டத்தில் - அசீரியா நாடு அதைச் சுற்றிலும் உள்ள எல்லா நாட்டினருக்கும் ஒரு சிம்ப சொப்பனம். பெலத்தைக் காட்டிலும் இந்த அசீரியா ராணுவத்தினர் அன்றைய ஆப்பிரிக்காவின் இடிஅமீன் போலவும், இன்றைய இந்தியாவின் குஜராத் நரேந்திரா மோடி போலவும் எதிரிகளை தண்டிப்பதிலும் சித்திரவதை செய்வதிலும் கை தேர்ந்தவர்கள். தாங்கள் வென்ற தேசத்தின் போர் வீரர்களை கொடுமைப்படுத்துவதிலும், தாங்கள் வென்ற தேசத்தின் குடும்பங்களை சிதறடிப்பதிலும் இவர்கள் தங்களுக்கென்று சரித்திரத்தில் தனிச்சிறப்பைப் பெற்றவர்கள்.

மையக்கருத்து: யூதர் அல்லாத மக்களும் ஆண்டவரது இரட்சிப்பின் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற உண்மையை இது வலியுறுத்துகிறது.

திறவு கோல் வசனம்: நீர் இரக்கமும், மனஉருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவர்; அழிக்க நினைப்பார்; பிறகு அவரது மனதை மாற்றிக் கொள்வார் (4:2)

திறவு கோல் அதிகாரம்: 3-ம் அதிகாரம் இந்த உலகத்தில் நாம் இதுவரை கண்டிராத, சரித்திரத்தில் வாசித்திராத ஒரு மாபெரும் எழுப்புதல். ஐந்து வார்த்தைகள் அடங்கிய மிகச்சுருக்கமான ஒரு பிரசங்கத்தால் 1,20,000 பேர்கள் மனம் திரும்பினார்கள். மனிதர்கள், மிருகங்கள் கூட மனத்திரும்பினார்கள். மோசமான; சுருக்கமான ஒரு பிரசங்கம் பிரசங்கம் ஆனால் அற்புதமான ஒரு விளைவு.

யோனாவைத் தவிர மற்ற எல்லாமே கீழ்ப்படிந்தன

இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள உயிருள்ள, உயிரில்லா எல்லாமே ஒழுங்காய் தங்களது கடமையை நிறைவேற்றியது; கடலில் வந்த புயல், கப்பலில் போடப்பட்ட சீட்டு, மாலுமிகள், மீன், நினிவே மக்கள், செடி, புழு, கிழக்குக்காற்று - இவை அனைத்தும் ஆண்டவர் சொன்னபடியே கேட்டது; கீழ்ப்படிந்தது.

ஆனால் யோனா மாத்திரம் ஆண்டவரது வார்த்தைக்கும் கட்டளைக்கும் கீழ்ப்படிய மறுத்தான்.

இப்படி ஆயிரக்கனக்கான மக்களை கொடுமைப்படுத்தி சித்திரவதை செய்த அசீரியா தேசத்தை ஆண்டவர் தண்டிப்பார் - அதைத் தனது கண்களினால் காணவேண்டும் என்று யோனா விரும்பியது இயற்கை தான். ஆனால் நாடு, இனம், மொழி, நிறம் - இப்படிப்பட்ட எல்லைகளையும், மனிதன் போட்டுள்ள வேலிகளையும் தாண்டி ஒரு தீர்க்கதரிசி இருக்க வேண்டும் - என்ற உண்மையை ஆண்டவர் அடிக்கோடிட்டுக் காட்ட விரும்புகிறார்.

பழைய ஏற்பாட்டில் உள்ள 39 புத்தகங்களில் இந்த புத்தகம் தான் யூதர் அல்லாத (புறஜாதியாருக்காக) ஒரு அந்நிய நாட்டைப் பற்றிய -அதுவும் பரம எதிரியின் நாட்டின் சரித்திரம் - என்பது குறிப்பிடத்தக்கது மாத்திரமல்ல ஆச்சரியப்படத்தக்கது. இந்த எபிரேய

எழுத்தாளர்கள் எதிரி நாட்டின் சரித்திரத்திற்கு எப்படி அவர்களது வேதத்தில் இடம் கொடுத்தார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. எதிரிகளை - அசீரியா நாட்டு மக்களை பாராட்டக்கூடிய சம்பவங்கள் அடங்கிய ஒரு சரித்திர புத்தகத்தை இந்த யூதர்கள் எப்படி அனுமதித்தார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

நினிவே பட்டணத்தார் மனந்திரும்ப உதவிய சில சம்பவங்கள்.

யோனாவின் ஒரு குட்டி பிரசங்கம் மூலம் 1,20,000 பேர்கள் மனம் திரும்பியதிற்கு இன்னொரு காரணம் இருக்கிறது. கி.மு. 773 முதல் 755 வரை நினிவே பட்டணத்தை ஆண்ட அசூரிதன் என்ற ராஜாவின் அரசாட்சியின் போது சுமார் கி.மு. 750-ம் ஆண்டில் நினிவே பட்டணத்தார் மனந்திரும்பிய இன்னொரு சம்பவம் நடந்திருக்கிறது. இது நடப்பதற்கு முன்பு கி.மு. 765-வது ஆண்டும் கி.மு. 759-வது ஆண்டும் இரண்டு மாபெரும் கொள்ளை நோய் இந்த நினிவே மக்களை தாக்கியிருக்கிறது. எப்படி கொள்ளை நோயினாலும் சூரிய கிரகணத்தாலும் பாதிக்கப்பட்டு, கடவுள் நம்மை தண்டிக்கிறார் என்ற உணர்வு மக்களிடையே பரவலாக இருந்ததினால் இருதயம் நொறுக்கப்பட்டு கடவுள் பயத்தினால் பீடிக்கப்பட்டிருந்த மக்களுக்கு - யோனாவின் பிரசங்கம் - எழுப்புதல் தீயை பற்ற வைக்கும் ஒரு சிறு தீக்குச்சியாக மாறியது.

கிறிஸ்து : யோனா தீர்க்கதரிசி ஒருவரைத்தான் இயேசு தன்னோடு முழுமையுமாக ஒப்பிட்டு பேசினார். யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் இல்லை. யோனா மீனின் வயிற்றில் 3 நாள் இரவு பகலாக இருந்தது போல தானும் 3 நாட்கள் பூமிக்குள் இருப்பேன் - என்று கூறுகிறார் (மத். 12 : 39-41).



'மீகா' - புத்தகம் 33

பெயர் : இதற்கு மீகாயாகூ, மீகாய் என்ற பெயர்களும் உண்டு. இதனுடைய அர்த்தம் "யெகோவா தெய்வத்தைப் போல் வேறு தெய்வம் இல்லை".

மையப்பொருள் : இந்த மீகா தீர்க்கதரிசி - சமுதாயத்தில் நடக்கும் தவறுகளை தட்டிக்கேட்கிறார். பணக்காரர்கள் ஏழைகளை வஞ்சிப்பதையும், அதிகாரத்தில் இருப்பவர்கள் மற்றவர்களை கொடுமைப்படுத்துவதையும் கடுமையாக சாடுகிறார்.

தங்களது அரசியல் அதிகாரத்தையும் சமுதாய அந்தஸ்தையும் பயன்படுத்தி, ஏழை எளியவர்களை கொடுமைப்படுத்தி தங்களுக்கு சொத்தை சம்பாதிக்கும் பிரபுக்களையும், அரசாங்க அதிகாரத்தில் அமர்ந்திருப்பவர்களையும் கடுமையாக சாடுகிறார்.

உங்கள் கையில் வல்லமை (அதிகாரம்) இருப்பதால் அடுத்தவர்களது வயல்களையும் வீடுகளையும் பறித்து அவர்களது சொத்துக்களையும் சுதந்திரத்தையும் அபகரிக்கிறீர்கள் (2:2) என்று கடுமையாக சாடுகிறார்.

தீர்க்கதரிசனம் உரைப்பவர்களும், ஆசாரியர்களும், நியாயம் விசாரிக்கும் நீதிபதிகளும் அனைவருமே லஞ்சம் வாங்கி, பணக்காரர்கள் ஏழைகளை ஒடுக்குவதற்கும், அடக்குவதற்கும் ஏமாற்றுவதற்கும் வஞ்சிப்பதற்கும் உதவி செய்கிறார்கள். வியாபாரிகள் பொய் தராசுகளை பயன்படுத்தி கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். "வியாபாரிகள் கள்ளத்தராசும் கள்ளப்படிக்கற்களும் உபயோகிக்கிறார்கள்". (6:10,11) "நியாயாதிபதி கைக்கூலி கேட்கிறான்" (7:3).

பணக்காரர்கள் மற்றும் பிரபுக்கள் ஏழை எளியவர்களை எப்படி சுரண்டுவது, கொள்ளையடிப்பது, கொடுமைப்படுத்துவது என்பதை திடீரென்று செய்யாமல் இரவில் தங்கள் படுக்கைகளின் மேல் படுத்து இரவில் திட்டமிட்டு, அதை அதிகாலையில் நடப்பிக்கிறார்கள் (2:1).

இவரது தீர்க்கதரிசனத்தில் மூன்றில் ஒரு பகுதி நாட்டில் நடக்கும் அநீதிகளையும், அக்கிரமங்களையும் அதற்கு காரணமாயிருப்பவர்களையும் கண்டித்து, எச்சரிப்பது. இரண்டாவது பகுதி, அப்படி அநியாயம், அக்கிரமம் செய்பவர்கள் மீது ஆண்டவர் கொடுக்கப்போகும் நியாயத்தீர்ப்பும், தண்டனையும்: மூன்றாவது

பகுதியில் இப்படிப்பட்ட அக்கிரமக்காரர்களை ஆண்டவர் நியாயந் தீர்ப்பார்: ஆண்டவர் மீண்டும் யூதாவை கட்டி எழுப்பி, ஆசீர்வதிப்பார் என்று கூறுகிறார்.

ஆசிரியர் : இதை எழுதியவர் மீகா. தென் ராஜ்ஜியமாகிய யூதாவிற்கும் எருசலேமிற்கும் விரோதமாக தீர்க்கதரிசனம் உரைத்தவர்.

இந்த மீகா தீர்க்கதரிசி, ஏசாயா வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர் - இருப்பினும் ஏசாயா தீர்க்கதரிசி அரசின் நிர்வாகத்திலும் அரசியலிலும் முழுவதுமாக ஈடுபட்டவர். அசீரியா ராஜாவாகிய சனகெரிப் படையெடுத்து வந்தபோது இந்த ஏசாயா எசேக்கியாவைப் பார்த்து, "பயப்படாதே, நான் இவனை திரும்பவும் அவனது தேசத்திற்கு மீண்டும் அனுப்புவேன். நீ பயப்படாதே", என்று அரசியலில் நேரிடையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஆனால் இந்த மீகா அந்த அளவிற்கு அரசியல் விவகாரத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாவிட்டாலும், நாட்டில் நடக்கும் அக்கிரமங்களை இன்றைய சில பத்திரிகை ஆசிரியர்களை போல பெரிய இடத்துத் தவறுகளை தைரியமாக சுட்டிக்காட்டினார்.

காலம் : சரியாக, துல்லியமாக சொல்ல வேண்டுமானால் இவரது தீர்க்க தரிசன ஊழியம் கி.மு. 735 முதல் 710 வரை ஓசியா, ஏசாயா தீர்க்கதரிசிகள் வாழ்ந்த காலத்தில் இவர் வாழ்ந்தவர்.

யூதாவின் நல்ல ராஜாவாகிய உசியா (763-739)விற்குப் பிறகு அவனது மகன் யோதாம் (739-731) ஆகாஸ் (731-715) எசேக்கியா (715-686) ஆகிய 3 ராஜாக்களின் ஆட்சி காலத்தில் வாழ்ந்தவன். இவர்களில் ஆகாஸ் படுமோசமான ராஜா. அசீரியா யூதாமேல் படையெடுத்து வந்தது. ஆனாலும் யூதாவை வெல்ல முடியவில்லை.

இருப்பினும் கி.மு. 722ல் வட ராஜ்ஜியமாகிய இஸ்ரவேல் அசீரியா ராஜாவினால் பிடிக்கப்பட்டு, சமாரியா வீழ்ச்சியடைந்தது. ஆனால் அசீரியா ராஜாவினால் தென்தேசமாகிய யூதாவை வெல்ல முடியவில்லை என்பதும் இந்த காலகட்டத்தில் பாபிலோன் தேசமும் அசீரியாவின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் வசனம் : 6:8: 7:18

ஓ, மானிடா, நல்லது எது என அவர் உனக்கு காட்டியிருக்கின்றாரே! நீ நேர்மையாக நடக்க வேண்டும்

மற்றவர்களுக்கு நீ இரக்கம் காட்ட வேண்டும்: உன் கடவுளுக்கு முன்பாக நீ தாழ்மையாக நடக்க வேண்டும். இதைத்தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கிறார் (6:8).

திறவுகோல் அதிகாரங்கள் 6,7 அதிகாரங்கள்

6-ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருப்பது சற்று சுவராஸ்யமாயிருக்கிறது. ஆண்டவரே வந்து வானாதி வானங்களுக்கும், மலைகளுக்கும் நடுவிலே நின்று கொண்டு, "ஓ மலைகளே குன்றுகளே, இந்த அநியாயத்தைக் கேளுங்கள். இந்த இஸ்ரவேல், யூதா மக்களுக்கும் எனக்கும் உள்ள வழக்கை தீர்த்து வையுங்கள்" - என்று ஆண்டவரே ஒரு நீதிமன்றத்தை நியமித்து, அதில் தனக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் நடுவிலே உள்ள வழக்கை விசாரிக்கும்படியாக ஆண்டவர் வானாதிவானங்களுக்கு அப்பீல் கொடுக்கிறார்.

"என் ஜனமே! நான் உனக்கு என்ன செய்தேன்? என்னை ஏன் இப்படி வேதனைப்படுத்துகிறாய்?" (6:3).

தன்னை வேதனைப்படுத்துகிற தமது மகனைப் பார்த்து தாய், "ஏண்டா, இப்படி எங்களை சித்ரவதை செய்கிறாய். நானும் உன் அப்பாவும் என்னடா உனக்குச் செய்யல? உன்னை படிக்க வைக்கவில்லையா, உன்னை சரியாக வளர்க்கவில்லையா? நீ கேட்டதெல்லாம் கொடுத்தோமே. உனக்கு நாங்கள் செய்யாதது என்ன இருக்கு? அப்படியிருக்கும்போது, ஏண்டா இப்படி கேவலமாக நடந்து எங்களை வேதனையடைய செய்கிறாய்?" - என்று தாயும் தகப்பனும் தாங்கள் பெற்ற பிள்ளைகளிடம் வழக்காடுவது போல உருவகப்படுத்தி இந்த 6-ம் அதிகாரம் எழுதப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து : கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் ஏரோது அரண்மனைக்குச் சென்று, யூதர்களுக்கு ராஜாவாக பிறக்கிறவர் எங்கே பிறப்பார் என்பதை ஏரோது விசாரித்தபோது மத். 2:5,6-ம் வசனங்கள் மீகா புத்தகத்திலிருந்து (5:2) எடுக்கப்பட்டது என்பது இப்புத்தகத்தின் விசேஷித்த காரியம்.

"பெத்லகேமே நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும் இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிலிருந்து புறப்பட்டு வருவார்" (5:2).

நாகூம் - புத்தகம் 34

பெயர் :

கோயம்புத்தூரை சுருக்கமாக கோவை என்று அழைப்பது போல, நெகேமியா என்ற பெயரின் சுருக்கம்தான் இந்த நாகூம்.

இந்த புத்தகத்திற்கு வெகு பொருத்தமான தலைப்பு, "அசீரியா நாட்டின் தலைநகரமாகிய நினிவே பட்டணத்தின் அழிவு". எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்ட போது எரேமியா ஒரு இரங்கல் பாடல் "எரேமியாவின் புலம்பல் (உண்மையிலேயே அது எருசலேமின் புலம்பல்) என்ற தலைப்பில் ஒரு ஒப்பாரி பாடல் எழுதினார். யோனாவின் பிரசங்கத்தினால் நினிவே பட்டணம் அழுது புலம்பி இரட்டு உடுத்தி மனந்திரும்பிய காரணத்தினால், அழிவின் விளிம்பிலிருந்து நினிவே பட்டணம் காப்பாற்றப்பட்டது.

ஆனால் நாட்கள் செல்ல, செல்ல, ஏறக்குறைய 100 ஆண்டுகள் கழித்து - யோனாவின் காலத்தில் எழுந்த எழுப்புதல் தீ அணைந்து, சாம்பலாகி - கழுதை கரைந்து கட்டெறும்பானது போல அந்த நினிவே பட்டணம் தன்னைத்தானே அழித்துக் கொள்வதற்கு தன்னை தீவிரமாக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தது.

ஆசிரியர் : இந்த நாகூம் யூதா நாட்டைச் சேர்ந்தவன். இவனது ஊர் எருசலேம் பட்டணத்திற்கும் காசாவிற்கும் நடுவே உள்ள 'எல்கோஷி' என்ற ஊர்.

எழுதப்பட்ட காலம் : இது கி.மு. 650-ம் ஆண்டில் எழுதப்பட்டிருக்கலாம். இந்த கால கட்டத்தில் வடதேசத்தின் தலை நகரமாகிய சமாரியாவை கி.மு. 722ல் இரண்டாம் சார்கோன் என்ற அசீரியாவின் ராஜா அழித்து. இஸ்ரவேலின் 10 கோத்திரங்களையும் சிறைபிடித்து பல நாடுகளில் சிதறடித்து சித்திரவதை செய்தான். சமாரியா வீழ்ச்சியடைந்து 21 ஆண்டுகள் கழித்து அசீரியாவை ஆண்ட சனகெரிப் ராஜா தென் தேசத்து ராஜாவாகிய எசேக்கியாவை தோற்கடிக்க யூதாவை முற்றுகையிட்டான். இருப்பினும் தோல்வியடைந்து நாடு திரும்பி சொந்த மண்ணில் கொல்லப்பட்டான். கி.மு. 660-ம் ஆண்டில் அசீரியாவை ஆண்ட 'அஷுர்பானிபால்' என்ற ராஜா அசீரியாவின் எல்லைகளை விரிவாக்கினான். தனது தலைநகரமாகிய நினிவேயைச் சுற்றிலும் பிரம்மாண்டமான கோட்டையைக் கட்டினான். 100 அடி உயரமும் 100 அடி அகலமும் கொண்ட கோட்டையைக் கட்டினான். இந்த 100 அடி உயரமுள்ள

கோட்டைச் சுவற்றின் மேல் இன்னும் 100 அடி உயரமுள்ள கோபுரங்களை ஆங்காங்கே கட்டினான். இந்த கோட்டையை சுற்றிலும் 150 அடி அகலம் 60 அடி ஆழம் உள்ள பாதுகாப்பு அகழிகளை வெட்டி அவற்றை தண்ணீரினால் நிரப்பினான். நினிவே இந்த உலகிலேயே பலமுள்ள நகரம் என்று அந்தகாலத்தில் அழைக்கப்பட்டது. இருப்பினும் அஷூர்பானிபாலின் மரணத்திற்குப் பின்பு அவனது மகன்கள் காலத்தில் அதன் வல்லமை குன்றி விட்டது. எனவே கி.மு. 612ம் ஆண்டில் பாபிலோனிய ராஜாவினால் இந்த நினிவே முற்றிலுமாக அழிக்கப்பட்டது. டைக்ரஸ் நதியின் கரையில் கட்டப்பட்ட நினிவேயின் 200 அடி சுவர்கள் இடிந்து விழுந்து நதியின் தண்ணீர் நினிவே பட்டணத்திற்குள் சென்று பாதிப்பட்டணத்தை அழித்து விட்டது.

நினிவே பட்டணம் அழிந்த பின்புதான் இப்புத்தகம் எழுதப்பட்டது என்று சிலர் தர்க்கித்தாலும், இப்பட்டணம் அழிவதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்பாகவே - அது வல்லமை பொருந்திய பட்டணமாக கொடி கட்டி பறந்த காலகட்டத்திலேயே, நாகூம் இதன் எதிர்கால அழிவை தீர்க்க தரிசனமாக எழுதினார் என்பது தான் அநேகரது கருத்து.

திறவுகோல் வார்த்தை : நினிவேயின் மேல் ஆண்டவரது நியாயத்தீர்ப்பு.

இந்த உலகத்திலேயே அதிக வல்லமை பொருந்திய ஒரு நகரம் அந்த கி.மு. 650 ஆண்டில் இருந்திருக்குமானால் அது நினிவே பட்டணம் தான். எப்படி டைட்டானிக் கப்பல் உடைக்கப்பட முடியாத ஒரு கப்பல் என்று பெயர் பெற்றிருந்ததோ அதுபோலவே இந்த நினிவே பட்டணமும் யாராலும், ஈ, காகம் கூட ஊடுருவ முடியாத ஒரு பாதுகாப்பான நகரம் என்று பெயர் பெற்றிருந்தது. அப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் - நினிவே பட்டணம் கொடி கட்டி பறந்த அந்த காலத்தில் - நாகூம் என்ற தீர்க்கதரிசி இந்த பட்டணம் பூண்டோடு அழிக்கப்படும். இது இருந்த இடம் யாருக்கும் தெரியாமல் போகும் (3:5-7) என்று தீர்க்கதரிசனம் உரைத்தது சற்று ஆச்சரியமாகவே இருக்கிறது. இதோ நான் உனக்கு (நினிவேக்கு) விரோதமாக வந்து, உன் வஸ்திரத்தின் ஓரங்களை எடுத்து, உன் அவமானத்தையும் பார்க்கும்படி செய்வேன். "நினிவே பாழாய்ப் போனது: அதற்காகப் புலம்புவோர் யாரேனும் உண்டோ? என்று சொல்லுவார்கள்.

அசீரியா தேசத்து ராஜா கி.மு. 722ல் சமாரியாவை அழித்து நாசப்படுத்தினான். இஸ்ரவேலின் 10 கோத்திரங்களும் சித்திரவதை

செய்யப்பட்டார்கள். சிறைப்பிடித்த கைதிகளை சிதறடிப்பதிலும், சித்திரவதை செய்வதிலும் இந்த அசீரியர்கள் வல்லுனர்கள்: இரக்கமற்றவர்கள் - என்பது உலகமும், சரித்திரமும் அறிந்த ஒரு கசப்பான உண்மை. எனவே ஆண்டவர் பழிக்கு பழி நினிவே பட்டணத்தின் மேல் வாங்குவார் என்பது தான் நாகூமின் மையக் கருத்து. அசீரியா ராஜ்யம் ஒரு நாள் கவிழும். அப்பொழுது யூதா மக்கள் களிப்படைவார்கள் (1:15:2:2) வெற்றி, வெற்றி என்று யூதா முழங்கும் இனிமேல் தீயவன் (அசீரியன்) உன் நடுவில் வரவே மாட்டான். அவன் முற்றிலும் அழிந்து விட்டான்.

ஆண்டவர் பழி வாங்குபவர்: தம் எதிரிகளை பழி வாங்குவார். ஆனாலும் அவர் அதை பொறுமையுடனும் தமது வல்லமையுடனும் செய்வார் (1:2,3).

யுத்தகளத்தை வீடியோ எடுத்தாற் போல்

நினிவே பட்டணம் எப்படி அழிக்கப்படும் என்பதை அதாவது யுத்த களத்தில் நடக்கும் சம்பவத்தை நேரில் வீடியோ காட்சி படம் பிடித்து காட்டுவது போல நாகூம் அதை விவரிக்கிறார். 2:8-13 வசனங்களை நீங்கள் வாசித்துப்பாருங்கள். யுத்த களத்தின் சம்பவங்களை - இதுவரை வேதப்புத்தகத்தில் யுத்த களத்தில் நடக்கும் சம்பவங்களை இவ்வளவு தத்ரூபமாக யாருமே விவரித்தது கிடையாது. பெண்கள் மார்பில் அடித்துக் கொண்டு புலம்புவதையும், டைக்ரஸ் நதி கரைபுரண்டு ஓடி அரணான சுவர்களை சாய்ப்பதும் - ராஜாவின் அரண்மனையிலுள்ள கருவூலங்களில் உள்ள விலையேறப் பெற்ற வெள்ளி, பொன், கொள்ளையாடப்படுவதையும் ஏதோ நேரில் பார்த்தாற்போல் தத்ரூபமாக விளக்குகிறார்.

கிறிஸ்து : 1:2-8 வசனங்களில் சினம் கொள்ளும் ஆண்டவராக, கடலை அதட்டும் அதிகாரம் உடையவராக வெளிப்படுகிறார். கடலையும், சீறிவந்த புயலையும் அதட்டிய அதிகாரமுள்ள இயேசுவை சித்தரிக்கிறது.

ஆபகூக் - புத்தகம் 35

ஆசிரியர் : இப்புத்தகத்தை எழுதியவர் ஆபகூக். இப்புத்தகத்தின் முடிவில் - இது பாடகர் தலைவருக்கு இசைக் கருவியுடனும் Musical Notes உடனும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இவர் ஆலய ஆராதனை நடத்தும் போதகராகவும் Choir Master ஆகவும் இருந்திருக்கலாம் என்று சிலர் யூகிக்கிறார்கள்.

காலம் : யூதா தேசம் தனது மரண கட்டத்தை நோக்கி போய்க் கொண்டிருந்தது - யூதா தேசத்தின் அழிவிற்கு முந்திய சில ஆண்டுகளுக்கு முன்பாக ஆபகூக் வாழ்ந்திருக்க வேண்டும். யூதாவின் 18-வது ராஜாவாகிய யோயாக்கீம் ஆண்ட கால கட்டத்தில் வாழ்ந்திருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது. கி.மு. 607-ம் ஆண்டில் இது எழுதப்பட்டிருக்கலாம்.

மையக்கருத்து : ஆபகூக் தீர்க்கதரிசியின் மிகப் பெரிய குழப்பம் - எப்படி ஆண்டவர் அக்கிரமம் செய்கிறவர்களை இத்தனை காலமாக தண்டியாமல் விட்டு வைத்திருக்கிறார்.

இப்புத்தகத்தை 3 பகுதியாகப் பிரிக்கலாம். முதலாவது பகுதி 1: 1 முதல் 2:4 வரை ஆண்டவரிடத்தில் ஒரு மாணவன் வகுப்பறையில் ஆசிரியரிடம் கேள்வி கேட்பது போல இவர் சரமாரியாக கேள்வி கேட்கிறார். அதற்கு ஆண்டவர் பொறுமையாக பதில் கொடுக்கிறார்.

இரண்டாவது பகுதி : அக்கிரமம் செய்கிற மக்கள் கூட்டத்தின் மேல் ஆண்டவர் அனுப்பப் போகும் நியாயத்தீர்ப்பைப்பற்றி (2:5-20) விளக்குகிறார்.

மூன்றாவது பகுதி : என்ன நடந்தாலும் எது நடந்தாலும் நான் ஆண்டவரை விட்டுப் போக மாட்டேன் - என்றதொரு உறுதியான விசுவாச மன்றாட்டு ஜெபம் (3வது அதிகாரம்)

திறவுகோல் வசனம்:

மார்ட்டின் லூத்தரின் புரட்சிக்கு வித்திட்ட பகுதி விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் (2:4) என்ற வசனம் இப்புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது இங்கு குறிபிடத்தக்கது. பாவ மன்னிப்பு பெறுவதற்காக பல படிகளை ஏறிக்கொண்டிருந்த மார்ட்டின் லூத்தரை இந்த வசனம்தான் மாற்றியது.

எல்லாவற்றையும் வெல்லும் விசுவாசம்

2 (2) அத்திமரம் துளிர் விடாமல் போனாலும்; திராட்ச செடியில் கனிகள் அற்றுப்போனாலும் .... நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் (3 : 17,18).

உலகம் முழுவதும் ஆண்டவரது வார்த்தை பரவும் என்பதற்கு ஒரு தீர்க்கதரிசனம்.

சமுத்திரம் தண்ணீரால் நிறைந்திருப்பது போல், இந்த பூமியும் கர்த்தரை அறியும் அறிவினால் நிறைந்திருக்கும் (2:14).

ஆக்கியோனின் அங்கலாய்ப்பு

முதல் இரண்டு அதிகாரங்களிலும் ஆபகூக் ஆண்டவரிடம் கேள்வி கேட்பதும் அதற்கு ஆண்டவர் பதில் சொல்வதுமாக இருக்கிறது.

கேள்வி ஒன்று: அக்கிரமக்காரர்கள் நேர்மையுள்ளவர்களை அடித்து துன்புறுத்துகிறார்கள். நீதி தடம் புரண்டு காணப்படுகிறது. ஏன் ஆண்டவரே இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறீர்?

ஆண்டவர் பதில் : நான் செய்யப் போகிற காரியத்தை நீ கொஞ்சம் பொறுத்திருந்து கவனித்துப்பார். தங்களது வலிமையே தங்களது கடவுள் என்று நினைத்துக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தார் காற்றைப்போல் மறைந்து விடுவார்கள்.

கேள்வி இண்டு : பொல்லாத கயவர்கள் தங்களைக் காட்டிலும் நேர்மையானவர்களை விழுங்கும் போது, நீர் ஏன் மௌனமாய் இருக்கிறீர். இந்த கொடியவர்கள் பாமர மக்களை கொன்று குவிக்க வேண்டுமா?

ஆண்டவரது பதில் : எனக்கு சித்தமானதை நான் குறித்த காலத்தில் நிறைவேற்றுவேன். அது நிறைவேற சிறிது காலம் தாமதமாகும். ஆனாலும் நிச்சயமாக அது நிறைவேறும். ஆனவக்காரர்கள் நிலைத்து நிற்க போவதில்லை. அவர்களது பேராசை என்ற பாதாளத்தில் அவர்களே தாங்களாகவே விழுவார்கள்.

திறவுகோல் அதிகாரம் : மூன்றாம் அதிகாரம் இப்புத்தகத்தின் மாபெரும் திருப்பம். முதல் இரண்டு அதிகாரமும் கேள்வியும்,

சந்தேகமும் தீர்க்கதரிசியை சுற்றி வளைந்து கொண்டது. தீமையைப் பார்க்க விரும்பாத சுத்தக் கண்ணுடையவர் அல்லவா நீர்? பின்பு ஏன் உமது கண் முன்பு நடக்கிற அக்கிரமத்தை நீர் பாராமல், கேளாமல் இருக்கிறீர்? இப்படி குழப்பமும், சந்தேகமும் நிறைந்தவராய் இவர் ஆண்டவரிடம் இரண்டு முறை புலம்புகிறார். ஏன்? ஏன்? என்று கேள்வி கேட்கிறார். இரண்டு முறையும் ஆண்டவரது பதிலைக் கேட்டு இவர் திருப்தியடைந்ததாக தெரியவில்லை, பார்லிமெண்டில், பிரதம மந்திரியின் பதிலைக்கேட்டு திருப்தியடையாத எதிர்கட்சி தலைவரைப் போல. ஆனால் 3-ம் அதிகாரத்தில் இவர் மனம் மாறி, ஆண்டவர் நமது வாழ்க்கையில் என்ன செய்தாலும், நமது நன்மைக்காகத் தான் செய்வார் - என்றதொரு ஆழமான அசைக்க முடியாத விசுவாசம் இவரது மனதை ஆட்கொள்கிறது. ஆண்டவரைத் துதிக்க ஆரம்பித்து விடுகிறார். ஆண்டவரைப் போற்றிப் புகழும் வேதப்பகுதிகளுள் இந்த ஆபகூக் 3-ம் அதிகாரம் ஒரு தலை சிறந்த பாடலாக வேதப்பண்டிதர்களால் மதிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேகத் தோடு ஆரம்பித்த ஆபகூக் ஒரு சங்கீதத் தோடு முடிக்கிறார்.

கிறிஸ்து : 'இரட்சிப்பு' என்ற சொல் 3 தடவை (3:13,18) இப்புத்தகத்தில் வருகிறது. இயேசு வரும்போது இந்தப்பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிரப்பப்படும் (2:14).



செப்பனியா - புத்தகம் 36

இஸ்ரவேல் தேசம் இந்த கால கட்டத்தில் அசீரியா ராஜாவால் அழிக்கப்பட்டுவிட்டது. தற்சமயம் யூதா தேசம் மாத்திரம் உள்ளது. இந்த யூதா தேசம் அடிக்கடி ஆவிக்குரிய மறுமலர்ச்சியையும், எழுப்புதலையும் சந்தித்திருக்கிறது. முதலாவதாக யோசபாத் ராஜா காலத்திலும் (2 நாளா 17-19), இரண்டாவதாக எசேக்கியா ராஜா காலத்திலும் (2 நாளா 29-30), மூன்றாவதாக யோசியா ராஜா காலத்திலும் (2 நாளா 34-35) யூதா தேசத்தில் எழுப்புதல் ஏற்பட்டது.

இந்த செப்பனியா புத்தகத்தில் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் யோசியா ராஜா காலத்தில் ஏற்பட்ட எழுப்புதலைத் தூண்டிவிட முக்கிய காரணமாக இருந்திருக்கலாம்.

ஆசிரியர்

இப்புத்தகத்தை எழுதியது செப்பனியா தான். அதில் எவ்வித தர்க்கமும் கிடையாது. செப்பனியா என்றால் 'ஒளித்து வைக்கப்பட்டவன்' என்று பொருள். அதாவது யோசியாவிற்கு முந்தி யூதாவை அரசாண்ட மனாசே என்பவன் ரொம்ப மோசமானவன். அவனது கழுகுப் பார்வைக்குப் படாமல் செப்பனியா 'மறைக்கப்பட்டவன்' என்று பொருள்.

இந்த செப்பனியா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவின் கொள்ளுப் பேரனுடைய மகன். ராஜ பரம்பரையில் எழுந்த ஒரே தீர்க்கதரிசி.

காலகட்டம்

யோசியா ராஜாவின் ஆட்சிக்காலத்தில் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. நினிவே பட்டணம் அழிக்கப்பட்ட வரலாறு இதில் எழுதப்படவில்லை. எனவே நினிவே பட்டணம் அழிக்கப்பட்ட கி.மு. 612-ம் ஆண்டிற்குச் சற்று முன்னதாக கி.மு. 640-615 முடிய இருந்திருக்கலாம்.

யோசியாவிற்கு முன்பு யூதாவை ஆண்ட மனாசே, ஆமோன் மன்னர்கள் இருவருமே ரொம்ப ரொம்ப மோசமானவர்கள். இவர்கள் செய்த அட்டூழியத்தின் அடிச்சுவடுகள் இன்னும் யூதா தேசத்தில் காணப்பட்ட கால கட்டம் அது. யோசியாவின் தகப்பன் ஆமோன்

செய்த அட்டூழியத்தைப் பொறுக்க முடியாத அவனது ஊழியக்காரர் சிலர் அவனைக் கொன்று விட்டார்கள். இருப்பினும் தேசத்து மக்கள் ஒன்று திரண்டு ஆமோன் ராஜாவைக் கொன்ற ஊழியர்களை வெட்டிப் போட்டு, அவனது இடத்தில் ஆமோனின் 8 வயது மகன் யோசியாவை ராஜாவாக்கினார்கள்.

தனது 20வது வயதில் (12வது வருட அரசாட்சி) நாட்டில் உள்ள அன்னிய தெய்வங்களை அழித்தான். அன்னிய தீர்க்கதரிசிகளின் எலும்புகளை அவர்களது தெய்வத்தின் பலிபீடத்திலேயே எரித்தான். அந்த சமயத்தில் தான் எல்க்கியா என்ற தீர்க்கதரிசி காணாமற் போன மோசேயின் நியாயப் பிரமாண புத்தகத்தைக் கர்த்தருடைய ஆலயத்தில் கண்டெடுத்தான். இப்படிப்பட்ட எழுப்புதலுக்கு மூல காரணமாயிருந்தது இந்த செப்பனியாவின் தீர்க்கதரிசனங்கள்.

எரேமியா, ஆபகூக், செப்பனியா இவர்கள் மூவரும் ஒரே கால கட்டத்தில் வாழ்ந்த கடைசி மணி நேரத்தில் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் (11th hour prophets).

இந்த செப்பனியா தீர்க்கதரிசனம் உரைத்த பின்பு ஏறக்குறைய 25 ஆண்டுகள் கழித்து அதாவது கி.மு. 586-ல் எருசலேம் பட்டணம் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரால் அழிக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் வார்த்தை

கர்த்தருடைய நாள் - கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு

திறவு கோல் வசனம்

கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது. அந்நாள் உக்கிரத்தின் நாள்: இக்கட்டும், இடுக்கமுமான நாள். அழிவும் பாழ்க்கடிப்புமான நாள். மப்பும் மந்தாரமுமான நாள்.

செய்தி

எல்லா மக்களையும் ஆண்டவர் தண்டிப்பார். யூதர்களையும், புற இனத்தவரையும் தண்டிப்பார் யூதனோ, அல்லது யூதர் அல்லாதவரோ, யார் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டாலும் அவர்களை ஆண்டவர் ஆசீர்வதிப்பார். கர்த்தருடைய நாமத்தை

அவர்கள் அனைவரும் ஒருமனப்பட்டு தொழுது கொள்வார்கள் (3:9,10)

திறவுகோல் அதிகாரம்

3-ம் அதிகாரத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. முதலாவது பகுதி நியாயத்தீர்ப்பு. எல்லா நாடுகளும் மனந்திரும்ப வேண்டும். அதன்பின்பு ஆண்டவர் இஸ்ரவேலை பூமியிலுள்ள எல்லா நாடுகளுக்கும் புகழ்ச்சியாகவும், கீர்த்தியாகவும் உயர்த்துவார்.

கிறிஸ்து

மத் 13:41-ம் வசனத்தில் இயேசு சொன்ன "ராஜ்யத்தில் உள்ள எல்லா இடறல்களும் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்" என்று சொன்ன வார்த்தைகள் செப். 1:3-ம் வசனத்திலிருந்து எடுக்கப்பட்டது. அது போல மத். 24:29-ல் இயேசு குறிப்பிடும் 'சூரியன்' அந்தகாரப்படும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து கீழே விழும் செப். 1:15-ல் உள்ள தீர்க்கதரிசினம்.

இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார் - என்ற 3:15-ம் வசனம் இயேசுவைக் குறிக்கிறது.



ஆகாய் - புத்தகம் 37

பெயர் : ஆகாய் என்ற பெயரின் அர்த்தம் - பண்டிகை

அறிமுகம் : ஆகாய் தீர்க்கதரிசியையும், சகரியா தீர்க்கதரிசியையும் "ஆலயம் கட்ட ஊக்குவித்த தீர்க்கதரிசிகள்" (Temple Prophets) என்று அழைப்பது சாலப் பொருந்தும். முந்தின ஆலயத்தை உங்களில் யார் பார்த்திருக்கிறீர்கள் (2:3) என்று இவர் கேட்பதிலிருந்து ஒரு வேளை இவர் சிறையிருப்பிற்கு - அதாவது கி.மு. 588க்கு முன்பு யூதாவில் பிறந்திருக்கலாம் என்று யூகிக்கலாம். அது உண்மையானால் இவர் இப்பொழுது கி.மு. 520ல் தீர்க்கதரிசனம் உரைக்கும் கால கட்டத்தில் இவருக்கு 75 வயது. அது தவறாக இருப்பின் இவர் சிறையிருப்பின் காலத்தில் பாபிலோனில் பிறந்திருக்கலாம். இந்த ஆகாய் தீர்க்கதரிசி எதற்காக தீர்க்கதரிசனம் உரைத்தார். இதனுடைய பிண்னணி என்ன என்பதை நாம் அறிந்து கொண்டால்தான் இவரது தீர்க்கதரிசன வார்த்தைகளை நாம் முழுவதுமாக சரியாக புரிந்து கொள்ள முடியும்.

காலக்கட்டம் : கி.மு. 538ம் ஆண்டு பெர்சியாவின் கோரேஸ் ராஜா எருசலேமின் ஆலயம் கட்டப்பட கட்டளை பிறப்பித்தான் (எஸ்ரா 1:1) கி.மு. 536ம் ஆண்டு செருபாபேல் தலைமையில் ஒரு குழு எருசலேம் சென்று ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்டது. இருப்பினும் அங்கு வாழ்ந்த சமாரியர்கள் ஆலயம் கட்டும் பணியை தடை செய்தார்கள்.

எனவே கி.மு. 534ம் ஆண்டு ஆலயக்கட்டுமானப் பணி கைவிடப்பட்டது. யூதர்கள் மனம் சோர்ந்து போய், ஆண்டவரது ஆலயம் கட்டுவதற்குத் தடைவந்து விட்டது. ஒரு வேளை ஆலயம் கட்டுவது ஆண்டவரது சித்தம் இல்லையோ அல்லது ஆண்டவரது நேரம் காலம் இன்னும் வரவில்லையோ என்று சாக்குப்போக்குச் சொல்லிக் கொண்டு "சரி நமது வீட்டையாவது கட்டுவோம்" என்று தங்களைத் தாங்களே தேற்றிக் கொண்டு தங்களது வீட்டைக் கட்ட ஆரம்பித்தார்கள். ஆலயம் கட்டுவதற்காக எருசலேம் போகிறோம் என்று சொல்லி பாபிலோனை விட்டு வந்தவர்கள் அனைவரும் இப்பொழுது ஆள் ஆளுக்கு மும்முரமாக சொந்த வீடு கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அஸ்திபாரம் போட்ட நிலையில் அப்படியே பாதியில் நிற்கும் ஆண்டவரது ஆலயத்தைப் பற்றி யாரும் அக்கரை காண்பிக்கவில்லை.

கி.மு. 536ல் அஸ்திபாரம் போடப்பட்டு, 16 ஆண்டுகளாய் கி.மு. 520வரை ஆலயம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. இப்படிப்பட்ட

பிண்ணனியில்தான் ஆகாய் தீர்க்கதரிசி எருசலேம் பட்டணத்திற்கு கி.மு. 520ல் வருகிறார், வந்து பார்த்தால், ஆண்டவர் ஆலயம் பாதியில் நிற்கிறது. ஆனால் யூதர்கள் தங்களது வீடுகளை மாடிமேல் மாடி கட்டி வாழ்ந்து கொண்டிருந்தார்கள். கேட்டால் ஆலயத்தைக் கட்டுவதற்கு காலம், நேரம் இன்னும் வரவில்லை - என்று சாக்கு சொன்னார்கள். என்னுடைய வீடு பாழாய்க் கிடக்கும் போது அவனவன் மச்சுப் பாவப்பட்ட வீட்டில் குடியிருக்கும் காலம் இதுவா - என்று இவர் கர்ஜிக்கிறார்: கண்டிக்கிறார். இவர்களை கண்டிப்பதற்கும், அவர்களை ஆலயம் கட்டும் பணியை மீண்டும் தொடங்குவதற்கு உற்சாகப்படுத்தவும் ஆகாய், சகரியா இரண்டு தீர்க்கதரிசிகளை ஆண்டவர் எழுப்பினார். இதில் ஆகாய் மூத்தவர் சகரியா சற்று இளமை.

16 ஆண்டுகளுக்குப் பின்பு ஆலயக் கட்டுமானப் பணி மீண்டும் கி.மு. 520ம் ஆண்டு தொடங்கப்பட்டு 4 ஆண்டுகளுக்குப் பின்பு கி.மு. 516ம் ஆண்டு (எஸ்றா 6:15) முடிக்கப்பட்டது. இந்த ஆலயத்திற்குள் உடன்படிக்கை பெட்டி - ஷெக்கீனா தேவ மகிமை, ஊரிம் தும்மீம் - இவைகள் வைக்கப்படவில்லை - என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது கட்டப்பட்ட ஆலயத்தை சாலமோன் கட்டிய ஆலயத்தோடு ஒப்பிட்டால் - மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் காணப்பட்டது. பார்ப்பதற்கு இது சாதாரணமாகத் தான் இருந்தது. எனவே அதைக் கட்டி எழுப்பிய மக்கள் - அதில் ஒரு சிலர் சாலமோன் ஆலயத்தையும் அதின் மகிமையையும் பார்த்தவர்கள் சோர்ந்து போனார்கள்.

இவர்களை உற்சாகப்படுத்தும் நோக்கத்தோடுதான் ஆகாய் தீர்க்கதரிசி, "முந்தின ஆலயத்தின் மகிமையைக் காட்டிலும் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும்" என்று தீர்க்கதரிசனம் கூறுகிறார். இருப்பினும் அதில் ஒரு உண்மை இல்லாமல் போகவில்லை. இந்தப் பிந்தின ஆலயத்தில் தான் இயேசு கிறிஸ்து தேவகுமாரன் உள்ளே நுழைந்து அதை மகிமைப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் வசனம் : என்னுடைய வீடு பாழாய்க் கிடக்கும் போது நீங்கள் மச்சுப்பாவப்பட்ட வீட்டில் குடியிருக்கும் காலம் இதுவோ?

உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் (1:4,7)

முக்கியமான செய்தி : ஆகாய் தீர்க்கதரிசி மக்களுக்கு விடுத்த முக்கியமான செய்தி - ஆலயமா? வீடா? இதில் எது முக்கியம் என்று தெரிவு செய்யுங்கள். மக்களுடைய முக்கியத்துவப் பட்டியலில் நிறைய முரண்பாடுகள், குளறுபடிகள் காணப்பட்டது. இதனால்தான் ஆலயம் கட்டி முடிக்கப்படாததற்கு முக்கிய காரணம்.

நீங்கள் ஒரு போதகர். ஒரு ஆலயம் கட்ட ஆரம்பிக்கிறீர்கள். அது பாதியில் அப்படியே நிற்கிறது. அப்படியானால் உங்களது சபையாருக்குத் தேவை ஆகாய் தீர்க்கதரிசியின் செய்தி. இவரது செய்தியின் சாராம்சம்.

மக்களின் சுய நல தன்மையை பயங்கரமாக சாடுகிறார். ஒரேயடியாக கண்டிக்காமல், கடிந்து கொண்ட பின்பு கர்த்தர் உங்களோடு இருக்கிறார் என்று இவர் அவர்களை உற்சாக மூட்டுகிறார். மூன்றாவது, மலைக்குச் சென்று மரங்களை வெட்டிக் கொண்டு வாருங்கள். கடினமாக உழைக்கும்படியாக சவால் விடுகிறார். நான்காவதாக "இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்" (2:19) என்ற ஆண்டவரது வாக்குத்தத்தை செய்தியாக உரைக்கிறார். ஆம்! ஒரு காரியம் ஒரு திட்டம் நிறைவேற வேண்டுமானால் - கண்டிப்பு, உற்சாகமூட்டுதல், கடின உழைப்பு, ஆண்டவரது வாக்குத் தத்தம் - என்ற 4 மூலதனங்களும் தேவைப்படுகிறது.

கிறிஸ்து : இதில் வரும் 'செருபாபேல்' ராஜ வம்சத்தை சேர்ந்தவன். இவன் இயேசு கிறிஸ்துவின் நிழலாட்டம். அவன் முத்திரை மோதிரம். இந்த முத்திரை மோதிரம் கீழே போடப்பட்டிருக்கிறது. மரியாள் - யோசேப்பு இரண்டு பேர்களின் வம்சாவளிகளையும் இந்த செருபாபேல் - கீழே படத்தில் கொடுக்கப்பட்டபடி - இரண்டையும் ஒன்றாக இணைக்கும் முக்கிய பங்கு வகிக்கிறார்.

முத்திரை மோதிரம் - செருபாபேல்



சகரியா - புத்தகம் 38

ஆசிரியர் : சகரியா என்பதின் அர்த்தம் "தேவன் நினைவு கூர்ந்தார்". பொதுவாக முதல் குழந்தை ஆண் குழந்தையாக இருப்பின் யூதர்கள் ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் வண்ணம், 'சகரியா' என்ற பெயரை தங்கள் பிள்ளைக்கு சூடுவது வழக்கம். அதனால் தான் 'சகரியா' என்ற பெயரில் பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் 29 சகரியாக்களைப் பார்க்கிறோம். ஆண்டவர் இஸ்ரவேல் மக்களின் முற்பிதாக்களுக்கு அளித்த வாக்குத்தத்தை நினைவு கூர்ந்ததை இந்தப் புத்தகத்தில் அடிக்கடி வாசிக்கிறோம்.

சகரியா பாபிலோனில் சிறையிருப்பின் காலத்தில் பிறந்தவர். தீர்க்கதரிசி ஆகாய். யூதாவின் கவர்னர் செருபாபேல், பிரதான ஆசாரியன் யோசுவா - இந்த சகரியா அனைவருக்கும் இவர் ரொம்ப ஜுனியர். 2 : 4ல் குறிப்பிடப்பட்டுள்ள இளம் வாலிபன் இவர்தான். மத்தேயு 23:35 வசனத்தில் "ஆலயத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே கொலை செய்யப்பட்ட சகரியா தான் இப்புத்தகத்தின் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. 2 நாளா 24:20,21-ம் வசனத்தின் படி கொலை செய்யப்பட்ட ஆசாரியன் சகரியா இவரல்ல. சகரியா தான் இப்புத்தகம் முழுவதையும் எழுதியவர் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. இவர் ஒரு ஆசாரியர் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

எழுதப்பட்ட கால கட்டம் :

ஆகாய் தீர்க்கதரிசன புத்தகமும் சகரியா புத்தகமும் ஒரே கால கட்டத்தில் கி.மு. 520 - 518ல் எழுதப்பட்டது. கி.மு. 538ல் செருபாபேல் தலைமையில் எருசலேமிற்கு திரும்பி வந்த யூதர்கள் ஆலயம் கட்ட அஸ்திபாரம் போட்டார்கள். ஆனால் பல காரணத்தினால் ஆலயக்கட்டுமானப்பணி நின்று விட்டது. எனவே, கி.மு. 520ம் ஆண்டு எருசலேமிற்கு வந்த சகரியா ஆகாய் தீர்க்கதரிசியோடு இணைந்து யூதர்களை - ஆகாய் கடுமையாக சாடியது போல - இவர் சாடாமல் நாசூக்காக அவர்களை உற்சாகப்படுத்தி - ஆலயக்கட்டுமானப் பணியை மீண்டும் தொடரும்படியாக உற்சாகமூட்டுகிறார்.

மையக் கருத்து : ஆலயம் கட்டுவது உங்களது எதிர் காலத்தையே கட்டி எழுப்புவதற்கு சமானம். நீங்கள் கட்டும் ஆலயத்திற்கு மேசியா வருவார். அவர் உங்களை இரட்சிப்பார். எனவே ஆலயக் கட்டுமானப் பணியை தொடருங்கள்.

திறவுகோல் வசனம் : 9:9

சீயோன் குமாரத்தியே, களிகூரு; கெம்பீரி; இதோ உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் இரட்சிக்கிறவராக, தாழ்மையுள்ளவராக கழுதையின் மேலும், கழுதைக் குட்டியாகிய மரியின் மேலும் ஏறி வருகிறார் (சக. 9:9).

திறவுகோல் அதிகாரம் : 14-ம் அதிகாரம். இப்புத்தகத்தின் உச்சகட்ட தீர்க்கதரிசனமாக 14-ம் அதிகாரத்தில் எவ்வாறு தேவன் தனது எருசலேம் பட்டணத்திற்காக போராடி, எதிரிகளை மேற்கொண்டு எருசலேமில் தனது பூலோக ஆட்சியை ஆரம்பிக்கப் போகிறார் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது.

புத்தகத்தின் சாராம்சம் :

ஆண்டவரால் மறைக்கப்பட்ட தெய்வீக செய்திகளை மக்களுக்கு விளக்குவதற்காக உருவகங்கள், தரிசனங்கள் இவற்றை பயன்படுத்துவது பல மதத்தினரின் வழக்கம். இந்த முறையை Apocalyptic என்று அழைக்கிறோம். வேதத்தில் தானியேல், வெளிப்படுத்தல் புத்தகங்கள் உருவகம், தரிசனங்கள் -இவைகள் அதிகபட்சமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. யோசேப்பு, தானியேல் (உதாரணமாக நெபுகாத்நேச்சர், பார்வோன் கண்ட கனவுகள்) இந்த உருவகங்களையும், காட்சிகளையும் மக்களுக்கும் ராஜாவிற்கும் விளக்கினார்கள். எசேக்கியல், யோவேல், சகரியா, ஏசாயா புத்தகங்களிலும் இதுபோன்ற உருவகங்கள் தரிசனங்கள் மூலம் தேவனுடைய செய்திகள் கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த Apocalyptic முறை இந்த சகரியா புத்தகத்தில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது.

சகரியா புத்தகத்தை 3 பகுதிகளாக பிரிக்கலாம்
(a) முதல் பகுதி : 1 முதல் 6 அதிகாரங்களில் 8 தரிசனங்கள். கி.மு. 519-ம் ஆண்டு, பிப்ரவரி 15-ம் தேதி இரவு அவருக்கு சரியாக தூக்கம் வரவில்லை. அந்த இரவில் 8 தரிசனங்களையும் காண்கிறார். இந்த காட்சிகள் அவருக்குப் புரியவில்லை. அதற்கு தேவ தூதன் ஒவ்வொரு தரிசனத்திற்கும் விளக்கம் கொடுக்கிறார். இவற்றில் இயேசுவின் முதல் வருகையும் இரண்டாம் வருகையும் கலந்து காணப்படுகின்றன. இவற்றில் முதல் 5 தரிசனங்களும் மக்களுக்கு ஆறுதலையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது. ஆனால் இதைத் தொடர்ந்து வருகிற கடைசி 3 தரிசனங்களும் வரப்போகும் நியாயத்தீர்ப்பைச் சித்தரிக்கிறது. இதில் ஆலயம் கட்டி எழுப்பப்படும்

என்று ஆண்டவர் வாக்குறுதி கொடுக்கிறார். பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என் ஆவியினால் ஆகும் என்று உற்சாகப்படுத்துகிறார்.

(b) இரண்டாவது பகுதி : 7,8 அதிகாரங்கள். இதில் நான்கு முக்கிய செய்திகள் அடங்கியிருக்கிறது. (I) உங்களது உபவாசமும், மதச்சடங்குகளும் வெறும் கண் துடைப்பு - மாய்மாலம் என்று கடுமையாக சாடுகிறார் (7:4-7) (II) கீழ்ப்படியாமையினால் தேசம் பாழாய்ப் போகும் (7:8-14) (III) இருப்பினும் ஆண்டவர் உங்களை மீண்டும் சந்திப்பார்; உங்கள் மத்தியில் வாசம் பண்ணுவார் (8:1-17) (IV) மீண்டும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் கிட்டும் (8:18-23)

(c) மூன்றாவது பகுதி (9-14) அதிகாரங்கள் - இரண்டு பாரங்கள் (i) முதல் பாரம் (9-11) மேசியாவின் முதல் வருகையும் அவர் மக்களால் புறக்கணிக்கப்படுதல். மகா அலெக்சாண்டர் (கிரேக்க அரசன்) வெற்றி, பின்பு மக்கப்பேயர் என்ற யூதன் கிரேக்கரை வென்று மீண்டும் ஆட்சிக்கு வருவது பற்றி தீர்க்க தரிசனம் (ii) இரண்டாவது பாரம் மேசியாவின் இரண்டாம் வருகையும் அவர் இஸ்ரவேலுக்கு ராஜாவாக உலகமுழுவதையும் ஆளுகை செய்வது (14-வது அதிகாரம்).

கிறிஸ்து : இப்புத்தகத்தில் இயேசு கிறிஸ்து மேசியாவாக பல இடங்களில் வெளிப்படுகிறார்.

(1) கர்த்தருடைய தூதனாக (3:1,2) (2) தளிர் எனப்படும் என் தாசன் (3) ஏழு கண்களுடைய கல் (4) ஆசாரியராக சிங்காசனத்தில் ஆளுகை செய்பவர் (6:13) (5) கழுதைக் குட்டியாகிய மறியின் மேல் பவனி வரும் ராஜா (9:9) (6) கோடிக்கல், கூடாரத்தின் முளை, யுத்த வில் (10:4) (7) குயவனிடத்தில் எறியப்பட்ட 30 வெள்ளிக் காசுவிற்கு விற்கப்பட்ட நல்ல மேய்ப்பன் (11:12,13) (8) பாவத்தையும் அழுக்கையும் நீக்க திறக்கப்பட்ட ஊற்று (13:1) (9) வெட்டப்பட்ட மேய்ப்பன் (13:7) (10) பூமியின் மீது ஒரே ராஜா ஒரே கர்த்தர், ஒரே நாமம் (14:9).



மல்கியா - புத்தகம் 39

ஆசிரியர் : இவரது பெயர் (1:1) ஒரே ஒருமுறை தான் பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இவரது அப்பா பெயர் கூட கொடுக்கப்படவில்லை. இந்த மல்கியா புத்தகம் பழைய ஏற்பாட்டின் கடைசி தீர்க்கதரிசன புத்தகம். இவர் நெகேமியா காலத்தில் வாழ்ந்தவர். கி.மு. 516-ல் ஆலயம் கட்டப்பட்டது. ஏறக்குறைய 60 ஆண்டுகள் கழித்து கி.மு. 457-ல் எஸ்றா எருசலேமிற்கு வந்தான். 13 ஆண்டுகள் கழித்து கி.மு. 444-ல் நெகேமியா எருசலேமிற்கு வந்தான். எருசலேமின் வாசல்களைக் கட்டி முடித்துவிட்டு கி.மு. 432ல் தனது அரண்மனை பணிக்கு திரும்பினான். மீண்டும் கி.மு. 425-ல் எருசலேமிற்கு வந்து பல சீர்திருத்த நடவடிக்கைகளை (உதாரணமாக அந்நிய பெண்களை திருமணம் செய்தவர்களை அடித்து, உதைத்து, பிரித்தான்) நெகேமியா மேற்கொண்டான்.

இந்த மல்கியா இந்த இடைபட்ட கால கட்டத்தில் (கி.மு. 432-425) அதாவது நெகேமியா எருசலேமில் இல்லாத இடைக்காலத்தில் இப்புத்தகத்தை எழுதியிருக்க வேண்டும்.

கவர்னர் என்ற வார்த்தைக்கு இவர் 'பெக்கா' என்ற பதத்தை உபயோகப்படுத்தியுள்ளார். எனவே இந்த புத்தகம் பெர்சியர்கள் ஆட்சி (கி.மு. 539-333) செய்த காலகட்டத்தில் இதை எழுதியிருக்கிறார் என்பது புலனாகிறது. அது மாத்திரமல்ல 2வது ஆலயம் கட்டப்பட்டு பலி செலுத்தப்பட்டு வந்த காலத்தில் எழுதப்பட்டது.

ஏன் கடைசி புத்தகமாக ஆக்கப்பட்டது?

இதோ என் தூதனை அனுப்புகிறேன். அவன் எனக்கு முன்பாகப் போய் வழியை ஆயத்தம் பண்ணுவான் (3:1).

கர்த்தருடைய நாளுக்கு முன்பாக, இதோ எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். அவன் பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடம் திருப்புவான் (4:5,6) என்ற வசனங்களோடு பழைய ஏற்பாடு முற்றுப் பெறுகிறது.

மேலே கொடுக்கப்பட்ட வசனங்கள் வரப் போகிற எலியாவை - அதாவது யோவான் ஸ்நானகனைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவே யோவான் ஸ்நானகன் தான் வரப் போகும் எலியா - என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த மல்கியா தீர்க்கதரிசிக்கு பின்பு 400 ஆண்டுகள் நிசப்தத்திற்கு - அமைதிக்குப் பின்பு (400 Years Silent Period) அடுத்த

தீர்க்கதரிசன குரல் யோவான் ஸ்நானகன் எழுப்பிய "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்ற குரல்.

எனவே மல்கியா புத்தகம் கடைசி புத்தகமாக வைக்கப்பட்டுள்ளது. மல்கியா புத்தகத்தை படித்து முடித்து விட்டு வேதாகமத்தை நாம் திருப்பியவுடன் மத்தேயுவில் யோவான் ஸ்நானகனுடைய குரல் கேட்கிறது.

சாராம்சம் : 2-வது ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு ஏறக்குறைய 80 ஆண்டுகள் முடிந்து விட்டது. ஆண்டவர் என்னத்தை நமக்கு பெரிசா செய்திட்டார் என்று இஸ்ரவேல் மக்கள் - முக்கியமாக ஆண்டவருக்கு சேவை செய்வதினால் என்ன பிரயோஜனம் - என்ற எண்ணம் ஆசாரியர்கள் மத்தியில் பரவலாக நிலவி வந்தது. அதற்கு மாறாக பெர்சியன் கவர்னரிடத்தில் அரசாங்க வேலை பார்ப்பது எவ்வளவு மதிப்பானது மேலானது. கவர்னருக்கு காணிக்கை கொடுக்கும் போது வெகு கவனமாக நல்ல, பழுதில்லாத ஆட்டை காணிக்கையாக படைத்தார்கள், ஆனால் ஆண்டவருக்கோ ஒரு நொண்டியான, வியாதிப்பட்ட ஆடுகளை காணிக்கையாக படைத்தார்கள். இவ்வகையான மனப்பான்மையை கடமைக்காக காணிக்கை படைப்பதையும் ஆராதனையை வெறும் சடங்காச்சாரமாக செய்யும் பழக்கத்தையும் - இந்த மல்கியா தீர்க்கதரிசி கடுமையாக சாடினார்.

2-வது அதிகாரத்தில் ஆசாரியர்களை வெகு கடுமையாக சாடுகிறார். ஆசாரியன் உதட்டில் மக்கள் கர்த்தருடைய வார்த்தையை தேடுகிறார்கள். ஆனால் நீங்களோ அதற்கு நேர் மாறாக இருக்கிறீர்கள். எனவே உங்களுக்கு வரவிருக்கும் ஆசீர்வாதங்களை ஆண்டவர் சாபங்களாக மாற்றுவார்.

கேள்வி - பதில் முறை : இதில் கேள்வி - பதில் முறையை வெகுவாக பயன்படுத்துகிறார்.

உதாரணம் : மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? எதினால் வஞ்சித்தோம் என்று (கொஞ்சம் திமிராக) கேட்கிறீர்கள். தசம பாகத்திலும் காணிக்கையிலும் என்னை வஞ்சிக்கிறீர்கள் (3:8).

நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் உங்கள் எஜமான் என்பது உண்மையானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? (1:6)

இப்படி கேள்வி கேட்டு அதற்கு பதில் உரைப்பது மக்களின் கவனத்தை ஈர்க்கும் சக்தி படைத்தது. மக்களை சற்று உசிப்பிவிட்டு,

சிந்தி வைக்கும் திறன் கொண்டது.

திறவு கோல் வசனம் : உங்கள் வார்த்தைகளினால் கர்த்தரை வருத்தப்படுத்துகிறீர்கள் (2:17)

திறவு கோல் அதிகாரம் : 3-வது அதிகாரம். இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன் அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம் பண்ணுவான் (3:1)

கிறிஸ்து : இதோ என் தூதன் ஆண்டவருக்கு வழியை ஆயத்தம் பண்ணுவான். அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ வருகிறார் (3:1).

பழைய ஏற்பாட்டின் முடிவு :

பழைய ஏற்பாட்டின் கடைசி வசனம் மல்கியா 4 : 6 ஒரு சாபத்தோடு முடிகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. "நான் பூமியை சங்காரத்தால் அழிப்பேன்" என்று முடிகிறது. ஆங்கில வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டின் கடைசி வார்த்தை 'சாபம் - Curse' என்று முடிகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பழைய ஏற்பாடு சாபத்தோடு முற்றுப் பெற்றாலும் அந்த சாபத்தை இயேசு கிறிஸ்துவின் மூலம் நீக்கி, மனித குலத்திற்கு ஆசீர்வாதத்தைக் கொடுப்பது தான் ஆண்டவரது இரட்சிப்பின் திட்டம் என்பதை நாம் மறக்க கூடாது.



மத்தேயு சுவிசேஷம் - புத்தகம் 40

யூதர்களுக்காக எழுதப்பட்ட இயேசுவின் வாழ்க்கை வரலாறு.

பெயர் : "மத்தேயு சுவிசேஷம்" என்ற தலைப்பில் பல குழப்பங்கள் இருக்கிறது. மத்தேயு சுவிசேஷம் என்ற தலைப்பை அச்சடித்து ஒரு மொழியினத்தவர் மத்தியில் கொடுத்த போது அவர்கள் அதை வாசித்துவிட்டு, "இதில் இயேசுவைப் பற்றித் தான் கொடுக்கப்பட்டுள்ளது. மத்தேயுவைப் பற்றி ஒன்றுமே கொடுக்கப்படவில்லை" - என்று கூறினார்களாம். சரியான தலைப்பு "மத்தேயு என்பவர் எழுதிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு".

ஆசிரியர் : மத்தேயு அதாவது "கர்த்தர் தந்த ஈவு" என்ற அர்த்தமுள்ள இவருக்கு லேவி என்ற இன்னொரு பெயரும் உண்டு. இது ஒரு யூதன் (மத்தேயு) இன்னொரு யூதனைப்பற்றி (இயேசு) யூத மக்களுக்காக எழுதப்பட்ட இயேசுவின் வாழ்க்கை வரலாறு. வரி வசூலிப்பதற்காக ரோமப்பேரரசினால் இந்த மத்தேயு கப்பர் நகூமில் நியமிக்கப்பட்டவர். வரி வசூலிப்பவர்களை பொதுவாக மக்கள் வெறுப்பார்கள். 12 அப்போஸ்தலர்களில் இவரும் ஒருவர்.

இயேசு பிரசங்கித்தது அராமிக் மொழியில். அராமிக் மொழிதான் உண்மையிலேயே மூல பாஷை. ஆனால் எல்லாப் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. அதாவது வேதத்தின் மூல பாஷை என்று கிறிஸ்தவர்கள் அனைவரும் கருதுகிற கிரேக்க மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களே மொழிபெயர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மத்தேயு என்பவர் இயேசுவின் சில பிரசங்கக் குறிப்புக்களை அராமிக்கில் எழுதி வைத்துக் கொண்டு பின்பு அதை அப்படியே கிரேக்க மொழியில் எழுதினார் என்பது தான் அநேகரது கூற்று.

காலம் : 4 சுவிசேஷ புத்தகங்களும் எழுதப்பட்ட கால கட்டத்தை கணிப்பது மிகக் கடினம். மத்தேயு சுவிசேஷம் மாற்கு சுவிசேஷத்தின் சாராம்சத்தைச் சார்ந்தது என்று சிலர் தர்க்கிப்பது உண்மையானால், இந்த மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்டது கி.பி. 58-68. இடம் : சிரியா அந்தியோகியா அல்லது பாலஸ்தீனம்.

திறவு கோல் வார்த்தை : இந்த தீர்க்கதரிசன வார்த்தை நிறைவேற இவைகள் நடந்தது. யாருக்காக எழுதப்பட்டது? மத்தேயு சுவிசேஷம் முழுக்க முழுக்க யூதர்களுக்காக அவர்களது கவனத்தைக் கவருவதற்காக எழுதப்பட்டது. இயேசுவின் வாழ்க்கை அனைத்தும் பழைய ஏற்பாட்டில் உள்ள தீர்க்கதரிசன வசனங்களின் நிறைவேறுதல் தான் என்ற உண்மையை இதில் மத்தேயு யூத

மக்களுக்கு அடிக் கோடிட்டுக் காண்பிக்க விரும்புகிறார். உதாரணமாக இன்றைய இந்து மக்களுக்கு "ரிக் வேத, சாம வேத" வார்த்தைகள் நிறைவேறும் படியாக இது நடந்தது என்று எழுதினால் அவர்கள் எப்படி மகிழ்ச்சி அடைவார்களோ, அதே போல இந்த யூதர்களுக்கு பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன வார்த்தைகள். மத்தேயு ஏறக்குறைய 40 பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன வசனங்களை தனது சுவிசேஷத்தில் கையாளுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சாராம்சம் : மத்தேயு சுவிசேஷத்தில் இயேசுவை யூதர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் மேசியாவாக, ராஜாவாக சித்தரிக்கிறார். இப்புத்தகத்தில் 5 முக்கிய **Discourses** - மேடைப் பிரசங்கங்கள் அடங்கியிருக்கிறது (a) மலைப்பிரசங்கம் (5-7) **(b)** சீஷர்களுக்கு ஆலோசனைகள் (10) **(c)** பரலோக ராஜ்ஜியத்தின் உவமைகள் (13), **(d)** சீஷத்துவத்தின் நிபந்தனைகள் (18), கடைசியாக **(e)** ஒலிவ மலையின் பிரசங்கம் (24,25).

ஆரம்ப முதல் கடைசி வரை இயேசுவை ராஜாவாகவே மத்தேயு சித்தரிக்கிறார். ராஜாவின் பிறப்பு, வளர்ப்பு, அபிஷேகம், யூதர்களின் புறக்கணிப்பு. இறுதியாக வெற்றிடமாக காட்சியளிக்கும் கல்லறை, உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை - இவையெல்லாம் இயேசுவே மெய்யான மேசியா - ராஜா என்பதை ஆணித்தரமாக நிரூபிக்கும் நோக்கத்தோடு இவற்றை எழுதுகிறார்.

புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகம் : இந்த மத்தேயு சுவிசேஷம் இயேசுவின் வம்ச வரலாற்றில் ஆரம்பிக்கிறது. இந்த வம்சவரலாற்றில் தொடங்கும் இப்புத்தகம் - பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைக்கும் ஒரு பாலமாக கருதப்பட்ட காரணத்தினால் தான் இதை புதிய ஏற்பாட்டின் முதல் புத்தகமாக வைக்கப்பட்டது.

கிறிஸ்து : ஒவ்வொரு புத்தகத்திலும் கிறிஸ்து எந்தவசனத்தின் மூலம் வெளிப்படுகிறார் என்று எழுதினோம். ஆனால் இந்தப் புத்தகத்திலும் மற்ற 3 சுவிசேஷங்களிலும், புத்தகம் முழுவதுமே இயேசுதான். என்பதை நாம் மறக்கக் கூடாது.

மத்தேயு சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டுள்ள இயேசுவின் வம்ச வரலாறு - யோசேப்பின் வம்ச வரலாறு, லூக்கா சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வம்ச வரலாறு மரியாளின் வம்ச வரலாறு. சரீரப்பிரகாரமாக இயேசுவிற்கும் யோசேப்பிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இயேசு கிறிஸ்து வம்சாவளி அடிப்படையில் (Legal) யோசேப்பின் மகன். இரத்தஉறவின் அடிப்படையில் மரியாளின் மகன்.

மாற்கு சுவிசேஷம் - புத்தகம் 41

அறிமுகம் : இப்புத்தகத்தின் மையக் கருத்து 10:45ல் கொடுக்கப்பட்டுள்ளது. மனுஷ குமாரன் ஊழியம் கொள்ள வரவில்லை, அவர் ஊழியம் செய்யவும், தன் ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.

மாற்கு இப்புத்தகத்தில் இயேசுவை, "ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு விரைந்து சென்று தன் பணியை நிறை வேற்றும் ஒரு ஊழியனாக Servant - ஆக சித்தரிக்கிறார்.

செயல்கள் நிறைந்த ஒரு சுவிசேஷம் action packed Gospel நீண்ட பிரசங்கங்கள் இப்புத்தகத்தில் இடம் பெறவில்லை 'உடனே' (Immediately) என்ற வார்த்தை அதிகமாகக் காணப்படுகிறது நமது பிரசங்கத்தைக் காட்டிலும் நமது செயல்கள் தான் முக்கியம், அவைகள் தான் அதிகமாக பேசும் என்ற கருத்து வெள்ளிக்கம்பியைப் போல காணப்படுகிறது.

புத்தகப் பெயர் : இப்புத்தகத்தை எழுதியவர் யோவான் மாற்கு. ஆனால் ஏற்கனவே யோவான் சுவிசேஷம் இருக்கிறது. எனவே இப்புத்தகத்திற்கு யோவான் மாற்கு என்ற பெயர் கொடுத்தால் கொஞ்சம் குழப்பம் வரும் என்று கருதி 'மாற்கு' என்ற பெயர் மாத்திரம் பயன்படுத்தி 'மாற்கு சுவிசேஷம்' என்று பெயர் கொடுக்கப் பட்டுள்ளது.

ஆசிரியர் : இதை எழுதியவர் 'ஜான் மாற்கு' என்பதில் சந்தேகம் இல்லை, பவுலின் முதல் மிஷனெரிப் பயணத்தில் பவுல் பர்னபாஸ் உடன் 3வது நபராக பயணம் சென்றவர். ஏதோ ஒரு காரணத்தினால் (ஒரு வேளை பிரசங்கம் பண்ண chance கொடுக்கவில்லை - தனக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை?) பாதி வழியிலே சொல்லாமல் ஓடி வந்தவர். இவரது அவசர செய்கையினால் பவுலும் பர்னபாசும் சண்டைபோட்டு பிரிய வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியது இங்கு குறிப்பிடத்தக்கது இவர் பர்னபாசின் cousin அதாவது ஒன்றுவிட்ட சகோதரர் (கொலோ 4:10). இவர் பேதுருவிற்கு ரொம்ப நெருக்கமானவர். பேதுரு இவரை 1 பேது 5:13ல் 'என் மகன் மாற்கு' என்று அழைக்கிறார். மாற்குவின் தாய் பெயர் மரியா, திருச்சபையின்

ஆரம்ப காலத்தில் இவர்களது இல்லத்தில் கிறிஸ்தவர்கள் வழிபட்டு வந்தனர் (அப். 12:12) என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாற்கு சுவிசேஷத்தை பல வேதப்பண்டிதர்கள் பேதுருவின் சுவிசேஷம் என்று அழைக்கிறார்கள். காரணம் இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்ட பல சம்பவங்களை இந்த மாற்கு, பேதுருவின் மூலம் தான் சேகரித்துள்ளார்.

பவுல் மாற்கு மேல் கோபப்பட்டது உண்மைதான், இருப்பினும், ஏறக்குறைய 12 ஆண்டுகள் கழித்து பவுல் ரோம் பட்டணத்தில் முதல் முறையாக வீட்டுக்காவலில் House arrest அடைக்கப்பட்டபோது மாற்கு தன்னுடன் இருப்பதாக குறிப்பிடுகிறார் (கொலோ 4:10, பிலேமோன் 24). அது மாத்திரமல்ல, பவுல் 2வது முறையாக ரோம் பட்டணத்தில் சிறையில் அடைக்கப்பட்ட போது (இந்த முறை தூக்குத் தண்டனை பெற்ற கைதிகள் அடைக்கப்படும் உள் சிறையில் inner cell தான் சாவதற்கு முன்பு எழுதிய கடைசி கடிதமாகிய 2 தீமோ நிருபத்தில் (4:11) மாற்கு எனக்கு மிகவும் பயனுள்ளவர். அவரைக் கூட்டிக் கொண்டு வா என்று தீமோத்தேயுவைக் கேட்டுக் கொள்கிறார். எனவே பவுல் மனதில் மாற்கு மேல் எந்த கோபமும் இல்லை என்பது தெளிவாகிறது.

கால கட்டம் : 4 சுவிசேஷங்களில் இந்த மாற்கு சுவிசேஷம் தான் முதன் முதலாக எழுதப்பட்டது என்பது அநேக வேதப் பண்டிதர்களின் கூற்று. பேதுரு மரிப்பதற்கு (கி.பி. 64) முன்பு எழுதப்பட்டிருக்க வேண்டும். தோராயமாக கி.பி. 55-64 கால கட்டத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

திறவுகோல் : இயேசு - ஊழியம் செய்கிறவர் 'உடனே' என்ற வார்த்தை 42 முறை வருகிறது.

இப்புத்தகம் யூதர்களுக்காக எழுதப்படவில்லை. ரோமாபுரியில் வாழும் யூதர் அல்லாத புறஜாதி விசுவாசிகளுக்காக எழுதப்பட்டது. அதனால் தான் இயேசுவின் வம்சவரலாறு, வேத வாக்கியங்கள் நிறைவேறுதல் - இவைகளைப் பற்றி மாற்கு எங்கும் குறிப்பிடவேயில்லை.

இயேசுவின் அற்புதங்களுக்கு (18) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அற்புதங்கள் மூலம் இயேசுவின்

வல்லமையையும் அவரது அன்பையும் வெளிபடுத்த விரும்புகிறார். புற ஜாதியாருக்கு இயேசுவை 'மனுஷ குமாரனாக' வெளிப்படுத்துகிறார்.

திறவுகோல் வசனம் : மானிட மகன் தொண்டு ஏற்பதற்காக வராமல் தொண்டு செய்வதற்காகவே வந்தார். (10:45)

திறவுகோல் அதிகாரம் : 8வது அதிகாரம் - இந்த சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து சம்பவங்களுக்கும் ஒரு முக்கியமான திருப்புமுனை. மக்கள் பலர் பலவாறு என்னைப் பற்றி கூறினாலும் நீங்கள் என்னை யார் என்று கூறுகிறீர்கள் என்று இயேசுவின் சீஷர்களை நேரிடையாகக் கேட்டார். அதற்கு பேதுரு "நீர் நாங்கள் எதிர்பார்த்த மேசியா" என்று அறிக்கையிடுகிறான். இதைத் தொடர்ந்து இயேசு தனது பாடுகளையும், மரணத்தையும் குறித்து பேசத் தொடங்குகிறார்.

கிறிஸ்து : இயேசு - மனுஷ குமாரனாக - ஊழியம் செய்கிறவராக - சுகம் அளிக்கிறவராக - மேசியாவாக சித்தரிக்கப்படுகிறார்.



லூக்கா சுவிசேஷம் - புத்தகம் 42

புத்தக அறிமுகம் : மத்தேயுவில் இயேசுவை மேசியாவாக யூதர்களின் ராஜாவாக பார்க்கிறோம். மாற்கு இயேசுவை ஒரு ஊழியனாக Servant -ஆக சித்தரிக்கிறார். லூக்கா சுவிசேஷத்தில் இயேசு மனுஷகுமாரனாக son of man -ஆக சித்தரிக்கப்படுகிறார். இந்த லூக்கா புத்தகத்தில் இயேசுவின் மனுஷீகத்தன்மை அதிகமாக வெளிவருகிறது. இயேசுவின் பிறப்பு, அவரது வம்ச வரலாறு - இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. யூதரல்லாதவர்களுக்காக முக்கியமாக கிரேக்கர்களுக்காக இப்புத்தகம் எழுதப்பட்டது. மத்தேயு யூதர்களுக்காக எழுதப்பட்டது. மாற்கு ரோமர்களுக்காக எழுதப்பட்டது. லூக்கா கிரேக்கர்களுக்காக எழுதப்பட்டது.

ஆசிரியர் : இதை எழுதியவர் வைத்தியனாகிய லூக்கா என்பதில் சந்தேகம் இல்லை. இந்த லூக்கா சுவிசேஷம் அப்போஸ்தலர் நடபடிக்கை புத்தகமும் - இரண்டுமே தெயோப்பிலுவிற்கு எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தெயோப்பிலு யார் என்ற விபரம் நமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அவர் சமுதாயத்தில் மிகுந்த மதிப்பும், மரியாதையும் உள்ளவர். ஒரு வேளை இந்த இரண்டு புத்தகங்களையும் வெளியிடுவதில் பணம் கொடுத்து sponsor பண்ணியிருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள்.

இந்த லூக்கா பவுலுக்கு நெருங்கிய உறவினராக இருக்கலாம். ரோம் நகரில் பவுல் முதல் சிறையிருப்பின் போது பவுல் எழுதிய கொலோசேயர் நிருபத்தில் இவரை பவுல் அன்பான லூக்கா வைத்தியன் (கொலோ 4:14), (பிலமோன் 24) என்று குறிப்பிடுகிறார். பவுலின் 2-வது சிறையிருப்பின் காலத்தில் அதாவது தான் மரிப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு அவர் எழுதிய கடைசி நிருபத்தில் "லூக்கா மாத்திரமே என்னோடு இருக்கிறார்" என்று குறிப்பிடுகிறார் (2 தீமோ 4:11). மரண மேகங்கள் பவுலை சூழ்ந்திருந்த ஒரு ஆபத்தான சூழ்நிலையில் தன்னோடு இருந்த ஒரே நபர் லூக்கா தான் என்று பவுல் மனம் உருக எழுதுகிறார்.

லூக்கா யூதர் அல்ல என்பது பலரது கருத்து (ஒரு வேளை அவர் யூதராக இருப்பின் அவர் சுத்தமான யூதனாக இருந்திருக்க முடியாது - கிரேக்க - யூதர் கலப்படம் அதாவது ஹெல்லினிஸ்டிக் யூதர் Hellenistic Jew அது உண்மையானால் புதிய ஏற்பாட்டில் உள்ள ஒரே யூதரல்லாத ஆசிரியர் இந்த லூக்கா தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு கிரேக்க மொழிதான் தாய் மொழி. அப் 1 : 19 வசனத்தில் அவர்களுடைய பாஷையிலே என்று கூறுவதிலிருந்து இவர் யூதரல்ல என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். அநேக அராமிக் வார்த்தைகளுக்குப் பதிலாக கிரேக்க சொற்களை இவர் பயன்படுத்துகிறார்.

தனது சுவிசேஷத்தில் இவர் எழுதியுள்ள எல்லா சம்பவங்களுமே இவர் மற்றவர்கள் மூலம் சேகரித்ததே தவிர, இவர் நேரில் பார்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் நேரில் பார்த்த பல சாட்சிகள், எழுதப்பட்ட சில குறிப்புக்கள் - பல ஊருக்குச் சென்று நேரில் விசாரித்த விபரங்கள் - இவைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் இவர் தனது சுவிசேஷ புத்தகத்தை எழுதினார்.

<u>எழுதப்பட்ட காலம்</u> : பவுலின் முதல் சிறையிருப்பின் கால கட்டத்தில் அதாவது கி.பி. 60 - 62 ஆண்டுகளில் இந்தப்புத்தகம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

<u>திறவுகோல் வார்த்தை</u>: மனுஷ குமாரனாகிய இயேசு இந்தப் புத்தகத்தில் இயேசுவின் மனித தன்மைகளுக்கும், அவரது உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதி முதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து அறிந்து அவற்றை ஒழுங்காய், வரிசையாய் எழுதுவது - இதன் மூலம் யூதரல்லாத கிரேக்கர்களுக்காக, புறஜாதியாராகிய விசுவாசிகள் பெலப்படும் நோக்கத்தோடு எழுதப்பட்டது,

இதில் 24 அதிகாரங்கள் மாத்திரமே இருப்பினும் (மத்தேயு 28 அதிகாரங்கள்) மொத்தத்தில் இந்த லூக்கா சுவிசேஷம் தான் 4 சுவிசேஷங்களில் மிகப்பெரியது (மொத்த வசனங்கள் அடிப்படையில்) என்பது குறிப்பிடத்தக்கது.

<u>திறவுகோல் வசனம்</u>: இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்தார் (19:10)

<u>திறவுகோல் அதிகாரம்</u>: 15 - ம் அதிகாரம் - இதில் மூன்று முத்தான உவமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன (1) காணாமற்போன ஆடு (2) காணாமற்போன காசு (3) காணாமற்போன மகன்

<u>புத்தகத்தின் 4 பிரிவுகள்</u> : இதை 4 பிரிவுகளாக பிரிக்கலாம். 1) மனுஷ குமாரனின் ஆரம்பம் (1-4) (2) இவரது ஊழியம் (4-9) (3) வரும் எதிர்ப்புக்கள் (9-19) (4) சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுதல் (19-24)

இப்புத்தகத்தின் விசேஷப் பகுதிகள் :

1) பெண்களை கனப்படுத்துகிறது. பெண்களின் பங்கு வலி யுறுத்தப்படுகிறது. மரியாள், மார்த்தாள், எருசலேம் குமாரத்திகள் - ஒரு வேளை பாரதியார் போல் இவர் பெண்களுக்கு சம உரிமை கேட்டு குரல் எழுப்புகிறாரோ என்ற சந்தேகம் வரும். அளவிற்கு பெண்களின் பங்கு இதில் வலியுறுத்தப்படுகிறது.

2) ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பரிசேயன் ஆயக்காரன் ஜெபம், பரமண்டல ஜெபம், கெத்சமனே தோட்ட ஜெபம், சிலுவையில் கள்ளனின் ஜெபம். (etc)

3) தாழ்த்தப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், ஏழை, விதவைகள், சமாரியர்கள், பாவிகள், வரிவசூலிப்பவர்கள், ஆதரவற்று அலையும் குருடனான பிச்சைக்காரன் - சிலுவையில் தொங்கும் கள்ளன் - பாவியான ஸ்திரீ - இப்படிப்பட்ட வர்களுடைய தேவைகளையும் இயேசு சந்திக்கிறார் (யூதர்களின் தேவைகளையும் மாத்திரமல்ல) என்ற உண்மையை - அதாவது சுவிசேஷம் உலகத்தின் அனைத்து மக்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது - என்ற உண்மையை வலியுறுத்துகிறார். இந்த ஆழமான கருத்துக்களை இவர் நிச்சயமாக பவுல் மூலமாக பெற்றிருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மை. அதனால்தான் லூக்கா சுவிசேஷத்தை அநேகர் 'பவுலின் சுவிசேஷம்' என்று அழைக்கிறார்கள். அதுபோல மாற்கு பல உண்மைகளை பேதுரு மூலமாக பெற்றுக் கொண்டார். என்ற காரணத்தால் மாற்கு சுவிசேஷத்தை பேதுருவின் சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிறது.

கிறிஸ்து : இப்புத்தகம் முழுவதுமே இயேசுவின் வரலாறு.



யோவான் சுவிசேஷம் - புத்தகம் 43

<u>அறிமுகம் :</u> எந்த காசுக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. இரண்டுமே வித்தியாசமானவைகள்: இரண்டுமே சரியானவைகள் தான். அதுபோலவே லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவை ஒரு மனித குமாரனாகப் பார்க்கிறோம். ஆனால் அதே இயேசுவை யோவான் எழுதின சுவிசேஷத்தில் முழுக்க முழுக்க தெய்வ குமாரனாகப் பார்க்கிறோம். ஆனால் இயேசு ஒருவரே: காசு ஒன்று தான் பக்கங்கள் இரண்டு.

மத்தேயு தனது சுவிசேஷ புத்தகத்தில் இயேசுவை ராஜாவாக யூதர்களின் மேசியாவாக சித்தரிக்கிறார்: மாற்கு இயேசுவை ஆண்டவருடைய ஊழியக்காரனாக (Servant of God) சித்தரிக்கிறார்: லூக்கா இயேசுவின் மனிதத் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து அவரை மனித குமாரனாக காண்பிக்கிறார். இறுதியாக யோவான் இயேசுவை தெய்வ குமாரனாக நமக்கு வெளிப்படுத்துகிறார். இந்த 4 சுவிசேஷங்களிலும் இயேசுவை 4 வித்தியாசமான கோணங்களில் நாம் பார்க்க முடிகிறது.

இந்த யோவான் சுவிசேஷத்தில் நடைமுறை சம்பவங்களுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மாறாக இயேசுவின் பிரசங்கங்கள்தான் இதில் அதிகமாக இடம் பெற்றிருக்கின்றன. நேர் மாறாக, மாற்கு சுவிசேஷம் செயல்கள், சம்பவங்கள் நிறைய உண்டு. அவ்வளவாக பிரசங்கங்கள் இருக்காது. மாற்கு சுவிசேஷத்தை "Action Packed Gospel" செயல்கள் நிறைந்த சுவிசேஷம் என்று விவரிப்போமானால் யோவான் சுவிசேஷத்தை "Sermon Saturated Gospel" பிரசங்கங்கள் அடங்கிய சுவிசேஷம் என்று சொல்லலாம்.

<u>ஆசிரியர் :</u> இதை எழுதியவர் யோவான் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. இந்த யோவானையும் அவருடைய சகோதரர் யாக்கோபையும் "இடி முழக்கத்தின் குமாரர்கள்" என்று இயேசு அழைக்கிறார் (மாற்கு 3:17) ஏன் என்று விளக்கம் கொடுக்கப்படவில்லை. இவர்களுடைய அம்மா சலோமி - இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது கூடவே இருந்தார்கள். யோவானைப் பார்த்து இயேசு "மரியாள்தான் இனிமேல் உன் தாய்" என்று சொன்ன போது யோவானின் உண்மையான அம்மாவும் அவர் அருகில் நின்று கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

யோவான் ஸ்நானகனை அநேக 'கலிலேயர்கள்' பின்பற்றினார்கள். அந்தக் கூட்டத்தில் யோவானும் ஒருவர். அவர்கள் ஒட்டு மொத்தமாக இயேசுவை பின்பற்றினார்கள்.

யோவானும் அவரது சகோதரர் யாக்கோபும் அதோடு பேதுருவும் இயேசுவின் Inner Circle - உள் குழுவில் அங்கத்தினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உதாரணமாக மறுரூப மலைக்கு இந்த உள் குழுவில் உள்ள மூவரை மாத்திரம்தான் இயேசு அழைத்து சென்றார்.

வேதத்தில் உள்ள 66 புத்தகங்களில் அதிகபட்சமாக எழுதியது பவுல் - 13(14) புத்தகங்கள் எழுதினார். இதற்கு அடுத்தபடியாக மோசேயும், யோவானும் தலா 5 புத்தகங்கள்எழுதியுள்ளனர்.

<u>**கால கட்டம்**</u> : இந்த யோவான் 5 புத்தகங்களை எழுதியிருந்தாலும் இவர் முதன் முதலாக எழுதியது இந்த யோவான் சுவிசேஷ புத்தகம்தான். இதை ஏறக்குறைய கி.பி. 60-90க்குள் எழுதியிருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது. இதை 'எபேசு' பட்டணத்திலிருந்து எழுதப்பட்டது என்பது அநேகருடைய கருத்து.

<u>**பொருளடக்கம்**</u> : இப்புத்தகத்தில் இயேசு செய்த 7 அற்புதங்களும், இயேசுவின் தெய்வீகத்தன்மையை நிரூபிக்கும் "நானே .... I am" என்ற பிரசங்கங்களிலும் அடங்கியுள்ளன. நானே (1) ஜீவ அப்பம் (2) நல்ல மேய்ப்பன் (3) உயிர்த்தெழுதல் (4) வழி (5) திராட்சசெடி (7) உலகத்தின் வெளிச்சம்.

இப்புத்தகத்தில் யோவானின் பிரதான நோக்கம் இயேசு தேவ குமாரன் என்றும் அவரது தெய்வீகதன்மையை உலகிற்கு நிரூபித்து, வெளிப்படுத்துவது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது (1:1) ஆபிரகாம் பிறக்கும் முன்பே நான் இருந்தேன் (8:58) நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் (10:30) என்னைக் காண்பதும் என் பிதாவைக் காண்பதும் ஒன்றுதான் (14:9) என் ஆண்டவரே, என் கடவுளே (20:28) என்று தோமா கதறினான்.

இப்புத்தகத்தின் இன்னொரு விசேஷம் இப்புத்தகத்தின் 50 சதவீதம் இயேசுவின் மரணத்திற்கு ஒரு நாளுக்கு முன்பு நடந்த சம்பவமும் அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களும் அடங்கியிருக்கிறது. உதாரணமாக பண்டிகை நாளில் இயேசு தன் சீஷர்களோடு பங்கெடுக்கும் இராப்போஜன விருந்து - கடைசி பஸ்காவை அனுசரிப்பது சீடரின் கால்களைக் கழுவுதல் இந்த சம்பவங்கள் - மொத்தம் 21 அதிகாரங்கள் அடங்கிய யோவான் சுவிசேஷத்தில் 13-ம் அதிகாரத்தின் (13/21) தொடக்கத்திலேயே

வருகிறது. மத்தேயுவில் 26/28-ம் அதிகாரத்திலும் மாற்குவில் 14/16-லும் லூக்காவில் 22/24-லும் இச்சம்பவம் கொடுக்கப்பட்டுள்ளது.

யோவான் 13-ம் அதிகாரத்தின் முதல் வசனத்தை இயேசு பிரசங்கித்தபோது - அவரது சிலுவை மரணத்திற்கு இன்னும் சரியாக 24 மணி நேரம் தான் இருக்கிறது. சிலுவை மரணத்திற்கு முந்திய நாள் Eve of Crucifixion.

<u>**திறவுகோல் வசனம்**</u> : இப்புத்தகத்தில் அடிக்கடி காணப்படும் வார்த்தை - விசுவாசிக்கும்படி - நம்பும்படி.

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், அந்த விசுவாசத்தின் மூலம் அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை பெறும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (20:31).

இப்புத்தகத்தின் இன்னொரு முக்கியமான, அடிக்கடி வலியுறுத்தும்படி ஒரு செய்தி

நீ விசுவாசித்தால் உனக்கு நித்திய ஜீவன் (அதோடு நிற்காமல்) - அப்படி நீ விசுவாசிக்காத பட்சத்தில் உனக்கு ஆண்டவரது ஆக்கினைத் தீர்ப்பு என்று (3:36: 5:24-29, 10:27-29) யோவான் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற அடிப்படையில் சற்று கடுமையாக திட்டவட்டமாக எழுதுகிறார் - என்பது குறிப்பிடத்தக்கது.

<u>**யோவான் 3:16**</u> யோவான் சுவிசேஷத்தை பற்றி அறிமுகம் எழுதும் போது யோவான் 3:16-ம் வசனத்தைப் பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்த உலகத்திலேயே அதிகமாக பிரசங்கிக்கப்பட்ட எழுதப்பட்ட, மொழிபெயர்க்கப்பட்ட வசனம் 3:16

<u>**இன்னொரு விசேஷம்**</u> : இந்த சுவிசேஷ புத்தகத்தில் தான் சம்பாஷணை அதிகமாக இடம் பெற்றுள்ளது. இயேசு நிக்கொதேமு (3-ம் அதிகாரம்) மற்றும் இயேசு சமாரிய பெண் (4ம் அதிகாரம்) இரண்டுமே சற்று நீண்ட சம்பாஷணைகள்.

மாற்கு சுவிசேஷத்தில் இயேசுவின் செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால் யோவான் சுவிசேஷத்தில் இயேசுவின் வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இப்புத்தகத்தில் 50 சதவீதம் இயேசுவின் வார்த்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. மற்ற 3 சுவிசேஷங்களையும் Synoptic Gospels என்று அதாவது சம்பவங்களை ஒன்றின் பின் ஒன்றாக அடுத்து அடுத்து கொடுத்து ஏறக்குறைய ஒரே மாதிரி

விளக்கம் கொடுக்கும் சுவிசேஷங்கள் என்று அழைக்கிறோம். ஆனால் இந்த யோவான் சுவிசேஷம் இயேசுவின் வாழ்க்கை சரிதையை தொகுத்துக் கொடுப்பதைக் காட்டிலும் அவர் 'ஆற்றிய பிரசங்கங்களை' - ஒவ்வொரு தலைப்பின் கீழும் கொடுப்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கிறது. எனவே இந்த யோவான் சுவிசேஷத்தை Topical Gospel - பிரசங்க தலைப்புக்கள் அடங்கிய சுவிசேஷம் என்று வேதப்பண்டிதர்கள் அழைக்கிறார்கள்.

உதாரணமாக காந்திஜியின் வாழ்க்கை வரலாற்றை சிலர் ஒன்றின் பின் ஒன்றாக தொகுத்து எழுதுவார்கள். ஆனால் இன்னும் சிலர் காந்திஜியின் கொள்கைகள் என்ன என்ன என்பதைக் கொடுப்பதே முக்கிய நோக்கமாக புத்தகம் எழுதுவார்கள். அவர்களுக்கு அடுத்து அடுத்து நடக்கும் Chronological சம்பவங்கள் முக்கியமல்ல: அவர் ஆற்றிய சொற்பொழிவையும் கருத்துக்களையும் மையமாக வைத்து எழுதுவார்கள். யோவான் சுவிசேஷம் Topical பிந்திய வகையைச் சேர்ந்தது. மற்ற 3 சுவிசேஷங்களும் Synoptic முந்திய வகையைச் சேர்ந்தது.



அப்போஸ்தலர் நடவடிக்கைகள் - புத்தகம் 44

பெயர் : இப்புத்தகத்திற்கு அப்போஸ்தலர் நடபடிக்கைகள் என்ற தலைப்பு அவ்வளவு பொருத்தமாக இல்லை. "ஆதி திருச்சபையின் ஆரம்ப வரலாறு" என்ற பெயர் பொருத்தமாக இருக்கும் என்பது எனது கருத்து. அது உண்மையும் கூட.

ஆசிரியர் : லூக்கா என்ற வைத்தியர் கனம் பொருந்திய தியோப்போலுவுக்கு எழுதிய இரண்டாவது நூல் இது.

நோக்கம் : இயேசுவோ அல்லது அவரது சீடர்களோ ரோமப் பேரரசிற்கு எந்த தீங்கும் செய்யவில்லை: பவுல் யூதமக்களுக்கு எந்த தவறும் செய்யவில்லை. இந்த இரண்டு உண்மைகளை நிரூபிப்பதற்காக இப்புத்தகம் எழுதப்பட்டது என்பது சிலரது கருத்து.

இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு போனவுடன், அந்த வெற்றிடத்தை நிரப்ப பரிசுத்த ஆவியானவர் பூமியில் ஊற்றப்பட்டார். யூத மார்க்கத்தார் மோசேயின் நியாயப் பிரமாணம் தான் முக்கியம்: விருத்த சேதனம் பண்ண வேண்டும். என்ற கொள்கைகளை உடைய யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்துவின் பிரமாணம் வேறுபட்டது என்பதை மக்களுக்கு உணர வைப்பது மிகக் கடினம். யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களாக மாறிய யூத கிறிஸ்தவர்களும் இதை ஏற்றுக் கொள்ள சற்று தயங்கினார்கள். முக்கியமாக என்னதான் அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினாலும், விருத்தசேதனத்திற்கும், மோசேயின் பிரமாணங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற உள் உணர்வும் அவர்கள் ரத்தத்திலேயே ஊறியது. இவற்றை விட்டு விட அவர்கள் மனம் இடம் கொடுக்கவில்லை. அதனால்தான் அப். 15-ம் அதிகாரத்தில் மிகப்பெரிய சர்ச்சையும் தர்க்கமும் உருவாகியது. கிறிஸ்தவர்கள் - விருத்த சேதனைத்தை கைக் கொள்வதா? உதறித்தள்ளுவதா? யூத மார்க்கமா? கிறிஸ்தவமா? நியாயப் பிரமாணமா? கிருபை பிரமாணமா? என்ற காரசாரமான விவாதம் நமது பார்லிமெண்டில் நடப்பது போல நடந்தது. இறுதியில் விருத்த சேதனம் தேவையில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது. அன்று நடந்த முதல் Church council ஆலோசனை சங்கத்தின் இந்த முடிவு சபையின் சரித்திரத்தையே மாற்றியமைத்தது.

இயேசுவின் நற்செய்தியை பரப்பும் மாபெரும் பொறுப்பு யூதர்களிடமிருந்து யூதர்கள் அல்லாத மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது - இந்த புத்தகத்தில் நாம் காணும் முக்கிய திருப்பம். இயேசுவின் இரட்சிப்பு உலக முழுவதற்கும் சொந்தமானது. யூதர்களுக்கு மாத்திரமல்ல - என்ற கருத்தை சபையின் சங்கம் ஏற்றுக் கொண்டது.

காலம் : இப்புத்தகம் கி.மு 62-ல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது அநேகருடைய கணிப்பு.

மையக் கருத்து : பழைய ஏற்பாட்டில் மோசேயின் 5 புத்தகங்கள், மற்றும் 12 சரித்திரப் புத்தகங்கள் 4000 ஆண்டு இடைவெளியில் அதாவது ஆதாம் முதல் பாபிலோனிய சிறைப்பிடிப்பு வரை நடந்த சம்பவங்களை விளக்குகிறது. ஆனால் புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு சரித்திரப் புத்தகம் (4 சுவிசேஷங்கள் சரிதைப் புத்தகங்கள்) தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கிற எல்லா நிருபங்களையும் அதன் பின்னணிகளையும் அதன் கால கட்டங்களையும் விளக்கும் காலக் கண்ணாடிதான் இப்புத்தகம். அதாவது நிருபங்களையும், இயேசுவின் வாழ்க்கை சரித்திரம் அடங்கிய 4 சுவிசேஷங்களையும் புதிய ஏற்பாட்டில் உள்ள ஏனைய 22 புத்தகங்களையும் இணைக்கும் சரித்திர பாலமாக (Historical link) இப்புத்தகம் அமைகிறது.

இப்புத்தகத்தில் ஆசிரியர், "நாங்கள் பயணம் செய்தோம்", "நாங்கள் தங்கியிருந்தோம்" "நாங்கள் போதித்தோம்" என்று எழுதுகிற காரணத்தினால் - லூக்கா, பவுல், பர்னபாஸ், மாற்கு, சீலா - இவர்களுடைய மிஷனெரி குழுவில் இதை எழுதிய ஆசிரியராகிய லூக்காவும் ஒரு அங்கத்தினராக இருந்திருக்கிறார் என்ற உண்மை புலனாகிறது.

பவுலும் - பர்னபாஸும் சண்டைபோட்டு பிரிந்த போது, இந்த லூக்கா, பவுலுடன் சேர்ந்து கொள்கிறார். (பர்னபாஸ் செய்த ஊழியம் உலகிற்கு தெரியாமலேயே போய்விட்டது) இதிலிருந்து இந்த லூக்கா பவுலின் நெருங்கிய நண்பராகவோ அல்லது உறவினராகவோ இருக்கலாம் என்பதை சற்று யூகிக்கலாம்.

புத்தக சுருக்கம் :

இயேசு பரத்திற்கு போனபின்பு பரிசுத்த ஆவியானவர் ஆதி அப்போஸ்தலர்களை கருவியாக, வாயாக - Mouth Piece ஆக வைத்து திருச்சபையைக் கட்டும் பணியின் முழு பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அப்போஸ்தலர்களோடு சேர்ந்து பரிசுத்த ஆவியானவரும் கிரியையும் நடப்பிக்கிறார்.

முதல் 12 அதிகாரங்களில் Home - Church எருசலேமில் சபை உருவாகிறது. இதில் பேதுரு மையமாக தலைமைப் பொறுப்பு எடுக்கிறார். இதில் எருசலேம் தலைநகராக - மையமாக, செயல்படுகிறது.

ஆனால் அடுத்து வரும் 13-28 அதிகாரங்களில் சுவிசேஷம் அகில உலகிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதில் பவுல் மையமாக - அவரது தலைமையில் செயல்படுகிறது. இதற்கு சீரியா தேசத்தில் உள்ள அந்தியோகியா தலைமை செயலகமாக செயல்படுகிறது.

ஆம் சுவிசேஷம் எருசலேமில் ஆரம்பித்து (1-8 அதிகாரங்கள்) யூதாவிலும், சமாரியாவிலும் (8-12) பின்பு உலகமெங்கும் (13-28) பரவுகிறது.

பவுலின் மிஷனெரி பயணங்கள் :

முதல் மிஷனெரிப் பயணம்

கி.மு. 48, 49 கலாத்திய மாநிலத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளுகிறார் - அந்தியோகியா, இக்கோனியா, லிஸ்திரா, தெர்பி (13:1 to 14:28).

இரண்டாவது மிஷனரிப் பயணம் : (15:36 to 18:22)

கி.மு. 50, 51, 52 கலாத்தியா மாநிலத்தில் ஆரம்பித்தவர் திடீரென ரூட்டை (Route) மாற்றி பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் மகா அலெக்ஸாண்டரின் நாடான மெக்கதோனியாவிற்கு போகிறார் - பிலிப்பு தெசலோனிக்கியா, பெராயா, ஏதன்ஸ், கொரிந்து பட்டணங்களுக்கு பயணமாகிறார்.

மூன்றாவது மிஷனெரிப் பயணம் : (18:23 to 21:16) கி.மு. 53-57 ஆசியாவில் உள்ள எபேசு பட்டணம் செல்கிறார்.

ஒவ்வொரு மிஷனெரிப் பயணத்தின் முடிவில் பவுல் எருசலேம் திரும்புவது வழக்கம். ஆனால் இந்த 3-வது மிஷனெரிப் பயணத்தின் போது அநேக விசுவாசிகள் பவுலை எருசலேம் பட்டணத்திற்கு திரும்பிப் போக வேண்டாம் என்று கடுமையாக எச்சரித்தார்கள். "வோர்ம்" என்ற பட்டணத்திற்கு போக வேண்டாம் என்று எத்தனையோ பேர்கள் எச்சரித்தாலும், நான் கட்டாயம் அங்கு போய், போப்பிற்கு முன் நின்று பதில் சொல்வேன் என்று சொன்ன மார்ட்டின் லூத்தரைப் போல, இந்த பவுல் எருசலேமிற்குப் போவதை யாராலும் தடுக்க முடியவில்லை.

திறவுகோல் வசனம் :

சபையின் வளர்ச்சி 1:8 "பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா, சமாரியா உலகத்தின் கடைசி எல்லைவரையும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்".

திறவுகோல் அதிகாரம் : 2வது அதிகாரம் பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது. பயந்து, ஒளிந்து கொண்டு, தொடை நடுங்கியாக இருந்த ஆதி அப்போஸ்தலர்கள், சீஷர்கள் கூட்டம் உலகத்தைக் கலக்கியவர்களாக மாறினார்கள். காரணம் பரிசுத்த ஆவியின் மூலம் அவர்கள் பெற்ற அக்கினி அபிஷேகம்.

கிறிஸ்து : இதில் 18 முக்கியமான பிரசங்கங்கள் அடங்கியிருக்கின்றன. விசேஷமாக பேதுரு பெந்தேகோஸ்தே நாளில் ஆற்றிய பிரசங்கம், மரிப்பதற்கு சற்று முன்பு ஸ்தேவான் ஆற்றிய நீண்ட பிரசங்கம், பெலிக்ஸ் முன்பு பவுல் ஆற்றிய பிரசங்கம், மார்ஸ் மேடை பிரசங்கம் இப்படி 18 பிரசங்கங்கள் அடங்கியிருக்கிறது. எல்லாப் பிரசங்களின் மையமும் "உயிர்த்தெழுந்த இயேசு". "நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசு" என்ற தலைப்புத் தான் மையமாக இருந்தது. "நாம் இரட்சிக்கப்பட இயேசுவைத் தவிர வேறொரு நாமம் கொடுக்கப்படவில்லை". (4:12)

பவுலின் நிருபங்கள் அறிமுகம்

புதிய ஏற்பாட்டில் உள்ள 27 புத்தகங்களில் 13 புத்தகங்களை பவுல் எழுதியிருக்கிறார். புதிய ஏற்பாட்டின் சபைக்கு இந்த பவுல் ஆண்டவரால் அளிக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம். பவுல் புதிய ஏற்பாட்டிற்கு இலக்கணம் எழுதிய அகத்திய முனிவர் என்றால் அது மிகையாகாது. இவரது மனமாற்றம் கி.பி. 34-ல் நடந்தது. ஆனால் இவர் முழுமூச்சாக ஆண்டவரது பணியில் இறங்கியது கி.பி. 48-ம் ஆண்டில்தான். இந்த 14 ஆண்டு கால இடைவெளியில் பவுல் 3 ஆண்டுகள் தமஸ்கு பட்டணத்தில் தங்கிவிட்டார். இதைத் தொடர்ந்து அவர் தனது சொந்த ஊராகிய தர்சு பட்டணத்தில் யாருக்கும் தெரியாமல் தனிமையில் 10 ஆண்டு வாழ்ந்தார். இந்த 14 ஆண்டுகால இடைவெளியில் ஆண்டவரது பணிக்காக தன்னை ஆயத்தப்படுத்த பயன்படுத்தியிருப்பார்.

பவுல் அப்போஸ்தலனது வாழ்க்கையை இரண்டு பகுதியாக பிரிக்கலாம். முதலாவது மிஷனெரியாகிய பவுல்; இரண்டாவது சிறைக் கைதியாகிய பவுல்.

கி.பி. 48-ம் ஆண்டு இவரது ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு, கி.பி. 68-ம் ஆண்டு நீரோ மன்னனால் சிரச்சேதம் பண்ணப்பட்டார். இவரது ஊழியக் காலம் மொத்தம் 20 ஆண்டுகள்தான். இந்த 20 ஆண்டு கால ஊழியத்தில் ஆண்டவருக்காக மாபெரும் சாம்ராஜ்யத்தையே உருவாக்கினார் என்றால் மிகையாகாது. மெக்கதோனியா மன்னனான மகா அலெக்ஸாண்டர் தனக்கென ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தை உருவாக்கினார். ஆனால் அவன் மரித்த அடுத்த ஆண்டே அந்த சாம்ராஜ்யம் 4 துண்டுகளாக உடைந்தது. ஆனால் பவுல் ஆண்டவருக்காக உருவாக்கிய சாம்ராஜ்யம் இன்றும் நிலைத்து நின்று உலகம் எங்கும் விரிவாகிக் கொண்டு வருகிறது. பவுலுக்காக அவருக்கு ஆண்டவர் கொடுத்த தரிசனத்திற்காக நாம் அனைவரும் ஆண்டவருக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

இவர் எழுதிய 13 நிருபங்கள் எழுதப்பட்ட காலங்கள் - பின்னனி:

மிஷனெரியாக, மிஷனெரி பயணத்தின் போது எழுதிய நிருபங்கள்.

சபைகளுக்காக எழுதப்பட்ட நிருபங்கள்

(a) கலாத்தியர் நிருபம் - தனது முதல் மிஷனெரி பயணத்தின் போது (கி.பி 49) எழுதினார் - சபைக்கு எழுதப்பட்டது.

(b) I, II தெசலோனேக்கியர் நிருபங்கள் - இவரது இரண்டாவது மிஷனரிப் பயணத்தின்போது (கி.பி 51) எழுதப்பட்டது - சபைக்கு எழுதப்பட்டது.

(c) I, II கொரிந்தியர், ரோமர் - இந்த நிருபங்கள் பவுலின் 3-வது மிஷனெரி பயணத்தின் போது (கி.பி. 57) எழுதப்பட்டது - இந்த 3 நிருபங்களும் சபைக்காக எழுதப்பட்டது.

எப்படி பவுல் தனது மிஷனெரி பயணத்தின் போது ஆங்காங்கே கொஞ்ச நாள் தங்கி-நேரம் கிடைக்கும் போதெல்லாம் இந்த நிருபங்களை எழுதினாரோ - இதே போலத்தான் மோசேயும் இஸ்ரவேல் மக்களை வனாந்தர பயணத்தின்போது முதல் 5 ஆகமங்களையும் அவ்வப்போது நேரம் எடுத்து எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

II சிறைக் கைதியாக இருக்கும்போது எழுதிய நிருபங்கள்

சிறைச்சாலையில் இருந்து கொண்டு எழுதிய நிருபங்களை - Prison Epistles - சிறையிலிருந்து எழுதப்பட்ட நிருபங்கள் - என்று அழைக்கிறோம். இதை முற்றிலும் சரிவர நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமானால் பவுலுக்கு ரோமப் பேரரசு அளித்த 3 வித்தியாசமான 'சிறைகளை' நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

(a) முதலாவது கி.பி. 60-62 வரை இவர் ஒரு வீட்டிற்குள் கைதியாக (House arrest) வைக்கப்பட்டிருந்தார். இந்த காலகட்டத்தில் தான் **எபேசியர், கொலோசெயர், பிலிப்பியர், பிலமோன்** - ஆகிய 4 நிருபங்களை எழுதினார். இதில் முதல் **3 நிருபங்களும் சபைகளுக்கு** எழுதப்பட்டது. 4வது நிருபம் - பிலமோன் ஒரு தனிப்பட்ட நபருக்கு எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இன்று பர்மா-மியான்மர் நாட்டின் சுதந்திர போராளியும் சமாதானத்திற்காக நோபல் பரிசு வாங்கிய பெண்மணி ஆங்க் சேன் சூயி சிறைக் கைதியாக ரங்கூனில் தனது 60வது பிறந்த நாளை வீட்டுக்காவலில் கொண்டாடியது போல.

(b) இந்த House arrest - காலக்கெடு முடிந்த பின்பு, பவுலுக்கு சற்று Freedom சுயாதீனம் - விடுதலை வழங்கப்பட்டது. இன்றைய காலக் கட்டத்தில் நாம் இதை Bail பெயிலில் வெளிவந்தது போல, அந்த முதலாம் நூற்றாண்டின் கால கட்டத்தில் பவுல் பெயிலில் வெளிவந்திருக்கிறார். இந்த 4 ஆண்டு காலத்தில் அவருக்கு எந்த அளவிற்கு சுயாதீனம், சுதந்திரம் கொடுக்கப்பட்டது என்பது நமக்குத் தெரியவில்லை.

இந்த சமயத்தில்தான் அவர் **I தீமோத்தேயு, தீத்து** - ஆகிய 2 நிருபங்களையும் முறையே கி.பி. 62, 66-ல் எழுதினார். இந்த 2 நிருபங்களுமே **தனிப்பட்ட நபர்களுக்கு எழுதியது மாத்திரமல்ல. இரண்டுமே போதகர்களுக்காக எழுதப்பட்ட - Pastoral Epistles - என்பது** குறிப்பிடத்தக்கது. தீமோத்தேயு கொஞ்சம் பயந்த சுபாவம் உள்ளவர். எனவே பிரச்சனை அவ்வளவாக இல்லாத எபேசு பட்டணத்தில் இவரை பாஸ்டராக போட்டார். ஆனால் தீத்து கொஞ்சம் தைரியசாலி - அதனால் தான் அவரை, பெருந்தீனிக்காரரும், ஓயாப் பொய்யருமான கிரேத்தா தீவு மக்களிடையே பாஸ்டராக பவுல் நியமித்தார்.

(c) பவுலுக்கு அளிக்கப்பட்ட சுதந்திர காலம் விரைவில் முடிவுக்கு வந்தது. இதற்கு காரணம் கிறிஸ்தவ மார்க்கம் விரைவில் பரவுவதை தடைசெய்ய நீரோ மன்னன் திடீரென முடிவு எடுத்து பவுலுக்கு மரண தண்டனை நியமித்து விடுகிறான். மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் சிறையின் உள் பகுதியில் மிகுந்த பாதுகாப்போடு வைக்கப்பட்டிருந்தார்கள். இதன் விளைவாக யாரும் பவுலைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. தனது நாட்கள் எண்ணப்பட்டது என்பதை நன்கு உணர்ந்த அவர் தனது மரணத்திற்கு சில நாட்களுக்கு முன்பாக அவர் கடைசியாக எழுதிய நிருபம்தான் **II தீமோத்தேயு. இந்த நிருபத்தில் அவரது மரண வாசனையை நீங்கள் நுகரமுடியும்.** தான் பானபலியாக வார்க்கப்பட அவர் ஆயத்தமாக இருந்தார். இந்த II தீமோத்தேயு நிருபம் தனிப்பட்ட நபருக்கு எழுதப்பட்டது மாத்திரமல்ல; **இது ஒரு Pastoral Epistle -போதகருக்கு எழுதப்பட்ட நிருபம்.**

பவுலின் 13 நிருபங்களையும் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

I சபைகளுக்கு எழுதப்பட்டவைகள் :

1) ரோமர் 2) I கொரிந்தியர் 3) II கொரிந்தியர் 4) கலாத்தியர் 5) எபேசியர் 6) பிலிப்பியர் 7) கொலோசியர் 8) I தெசலோனிக்கியர் 9) II தெசலோனிக்கியர்

II போதகர்களுக்கு எழுதப்பட்டவைகள் :

10) I தீமோத்தேயு 11) II தீமோத்தேயு 12) தீத்து

III தனிப்பட்ட நபருக்கு எழுதியவை :

13) பிலமோன் நிரூபம் ஆக மொத்தம் 13 நிரூபங்கள்

இந்த 13 நிருபங்களில், எபேசியர், கொலோசியர், பிலிப்பியர், பிலமோன், I தீமோத்தேயு, தீத்து - ஆகிய இந்த 6 நிரூபங்களையும் பவுல் House Arrest -ல் இருக்கும் போது எழுதினார். ஆனால் II தீமோத்தேயு மாத்திரம் மரண தண்டனை கொடுக்கப்பட்டபின்பு, உள்சிறையில் - Innermost Cell -லிருந்து கொண்டு எழுதினார். இந்த 7 நிருபங்களை Prison Epistles - சிறைச்சாலை நிருபங்கள் என்று அழைக்கப்படுகிறது.

பவுல் எழுதியது 13 நிருபங்கள் தான், ஆனால் 14-வது நிருபமாகிய எபிரேயர் நிருபம் - பவுல் எழுதியிருக்கலாம் என்று சிலர் வாதிக்கிறார்கள். பெரும்பாலோர் எபிரேயர் நிருபத்தை பவுல் எழுதவில்லை என்று வாதிக்கிறார்கள். எனவே இந்த சர்ச்சையை ஒருமுடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்தோடுதான் - இந்த எபிரேயர் நிருபத்தை பவுலின் 13 நிருபங்களின் முடிவிலும் அடுத்துவரும் General Epistles - பொதுவான நிருபங்களின் தொடக்கத்திலும் பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த எபிரேயர் நிருபம் பவுல்தான் எழுதினார் என்று விவாதிப்பவர்களுக்கு பவுலின் நிருபங்களின் 14-வது நிருபமாக அமையும்: மாறாக இது பவுல் எழுதவில்லை என்று விவாதிப்பவர்களுக்கு இது பொதுவான நிருபத்தின் முதல் புத்தகமாக மாறும்படியும், Pauline Epistle and General Epistle - இரண்டிற்கும் நடுவில் Sandwich ஆக சொருகப்பட்டுள்ளது.

ரோமர் - புத்தகம் 45

1. முகவுரை :

பவுல் அடியார் எழுதிய 13 நிருபங்களில், இந்த ரோமர் நிருபம் நடையிலும், கருத்து ஆழத்திலும் முதன்மையாக கருதப்படுகிறது. நான்கு சுவிசேஷங்களும் இயேசு கிறிஸ்து எப்படி சிலுவையில் அறையப்பட்டார் எப்படி உயிர்த்தெழுந்தார் என்பதை விளக்குகிறது. ஆனால் இந்த ரோமர் நிருபம் இயேசு கிறிஸ்து எதற்காக சிலுவையில் அறையப்பட்டார் எதற்காக உயிர்த்தெழுந்தார் - ஒரு சாதாரண கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் இந்த இரண்டும் எப்படிப்பட்ட மாறுதல்களையும், பாதிப்புக்களையும் உண்டு பண்ணுகிறது - என்ற விபரங்களை இங்கு நாம் காணலாம்.

இது ஒரு நிருபம் மாத்திரமல்ல; இது ஒரு கட்டுரை - ஆன்மீக கோட்பாடுகள் அடங்கிய கட்டுரை; அது மாத்திரமல்ல இதில் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அநேக நடைமுறை சத்தியங்கள் அடங்கியிருக்கின்றன. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது - பல அடிப்படை உண்மைகளை - கோட்பாடுகளை உள்ளத்தில் ஏற்றுக் கொள்வது மாத்திரமல்ல. நாம் நம்பும் அந்த உண்மைகளை அன்றாட வாழ்க்கையில் நாம் வாழ்ந்து காட்ட வேண்டும் - என்ற நடைமுறை கருத்து இந்த நிருபத்தில் வலியுறுத்தப்படுகிறது.

இந்த புத்தகத்தை "Gospel according to Paul" - 'பவுல் எழுதிய சுவிசேஷம்' - என்று சிலர் இந்த புத்தகத்திற்கு தலைப்பு கொடுக்கிறார்கள் - இதற்கு கிறிஸ்தவ 'விசுவாசத்தின் கத்தீட்ரல்' 'விசுவாசத்தின் உச்சிகோபுரம்' என்ற இன்னொரு பெயரும் உண்டு.

2. ரோமர் பட்டணம் :

இந்த ரோம் பட்டணம் கி.மு. 753ல் கட்டப்பட்டது. அந்த நாட்களில் இந்த உலகிலேயே மிகப்பெரிய நகரம் என்று கருதப்பட்டது. ஒரு கல்வெட்டின் குறிப்பின்படி இப்பட்டணத்தில் 40 லட்சம் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். உலகிலேயே மிகப்பெரிய ஐசுவரியவான்களும் மிகப்பெரிய தரித்தரர்களும் கேவலமானவர்களும் ஒன்றாக வாழ்ந்த இடம்.

3. ரோம சபை :

இந்த ரோமர் சபையை யார் ஸ்தாபித்தார்கள் என்பது தெரியவில்லை. பெந்தேகோஸ்தே நாளில் சிலர் வந்து இயேசுவை நம்பியிருக்கலாம். இவர்கள் ரோம்பட்டணத்திற்குச் சென்று

விசுவாசிகளாக மாறியிருக்கலாம். கி.பி. 49ல் இங்கு கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கலவரம் மூண்டதால் - அப்பொழுது ரோம சக்கரவர்த்தியாக இருந்த கிளாடியஸ் (Cladius) ரோம் பட்டணத்தில் வாழ்ந்த எல்லா கிறிஸ்தவர்களையும் வெளியேறும்படி உத்தரவிட்டான். அப்படி வெளியேறியவர்களில் ஆக்கிலா - பிர்ஸ்கில்லா தம்பதியாரும் அடங்குவர் (அப் 18:1-4) சில ஆண்டுகள் கழித்து வெளியேறிய விசுவாசிகள் மீண்டும் ரோம் பட்டணத்திற்கு வந்திருக்கக் கூடும். ரோமன் கத்தோலிக்கர்களுக்கு இந்த ரோம் சபையை ஸ்தாபித்தது பேதுரு - என்ற உண்மை பேதுருவை முதல் போப் ஆண்டவராக ஆட்சியில் அமர்த்தியதற்கு அத்தாட்சி - அஸ்திபாரம். ஆனால் பேதுரு ரோம் நகருக்கு வந்ததாக வேதத்தில் எந்த ஆதாரமும் கிடையாது. அந்த ரோம் சபையை பவுல் ஸ்தாபிக்கவும் கிடையாது; அதை அவர் நேரில் சென்று சந்தித்ததும் கிடையாது.

4. ஆசிரியர் :

இதை எழுதியது பவுல் என்பதில் தர்க்கமே கிடையாது. இதை கி.பி. 55-56ல் எழுதியிருக்க வேண்டும்.

5. எழுதப்பட்ட பின்னணி :

தனது 3வது மிஷனெரிப் பயணத்தில் கடைசியில் கிரேக்க நாட்டில் - கொரிந்து பட்டணத்தில் காயு (ரோ 16:23) வீட்டில் விருந்தினராக தங்கியிருக்கும் போது இதை எழுதியிருக்கிறார். இந்த ரோம் சபையில் யூத கிறிஸ்தவர்களும் யூதரல்லாத கிறிஸ்தவர்களும் விசுவாசிகளாக இருந்து வந்தனர். இந்த இரு பிரிவினருக்கும் இடையே அடிக்கடி பூசல்கள், கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தது. யூத கிறிஸ்தவர்கள் - மோசேயின் பிரமாணத்தை தொடர்ந்து பின்பற்றி வந்தனர். ஆனால் யூதரல்லாத கிறிஸ்தவர்கள் மோசேயின் பிரமாணத்தைப் பின்பற்றவில்லை.

இந்த பிரச்சினையை பவுல் தனது நிருபத்தில் திறமையாக சாதுரியமாக கையாளுகிறார். தனது நிருபத்தில் - காவேரி தண்ணீர் பிரச்சனையை பிரதம மந்திரி கையாளுவது போல் பவுல் யூதர்களையும் யூதரல்லாதவர்களையும் புண்படுத்தாத படிக்கு - இயேசு வந்த பின்பு மோசேயின் பிராமணம் அவசியமில்லை. விசுவாசம் தான் முக்கியம். இதற்கு ஆபிரகாமின் விசுவாசத்தை மேற்கோள் காட்டுகிறார். அதற்காக மோசேயின் பிரமாணம் அவசியமில்லை - என்றோ அல்லது, யூதர்கள் தேவனுடைய

திட்டத்தில் இடம் பெறவில்லையென்றோ நாம் சொல்லக்கூடாது - என்று எழுதி இரு தரப்பாரையும் பிரியப்படுத்துகிறார்.

6. **a) சாராம்சம் :**

முதல் 11 - அதிகாரங்கள் அனைத்தும் கிறிஸ்தவ Theology - கோட்பாடுகள் நிறைந்தது. விசுவாசம், நீதிமான்களாக்கப்படுதல், நியாயப் பிரமாணம், பாவம், எல்லோரும் பாவம் செய்து தேவனுடைய தண்டனைக்குப் பாத்திரவான்கள் - என்ற கருத்துக்கள் இதில் அடிக்கடி வலியுறுத்தப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை சத்தியங்கள் இப்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

6. **b) இரண்டாம் பகுதி :**

(12-16) - நடைமுறைப்பகுதி : நமது இரட்சிப்பின் அனுபவம் நாம் வாழும் சமுதாயத்தில் வெளிப்பட வேண்டும். வாயில் அறிக்கை பண்ணினால் மாத்திரம் போதாது, வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்ட வேண்டும். கிறிஸ்தவ போதனைகள் - இரட்சிப்பு, நீதிமானாக்கப்படுதல் - இவைகள் அனைத்தும் ஏட்டுச் சுரைக்காயாக இருந்தால் மாத்திரம் போதாது - அது கறிக்கும் உதவ வேண்டும். வாழ்க்கை மாற்றப்பட வேண்டும். மாறுதல் இருக்க வேண்டும். இந்த மாறுதல் இல்லையென்றால் இரட்சிப்பு இல்லையென்பதல்ல; ஆனால் மாறுதல் இயற்கை. கிறிஸ்தவன் பாவத்திலிருந்து தான் விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே தவிர, அரசாங்கத்திற்கு கீழ்ப்படிவதிலிருந்தோ, வரிசெலுத்துவதிலிருந்தோ விடுதலையாக்கப்பட்டதாக தவறாக புரிந்து கொள்ளக்கூடாது.

6. **c) ரோமர் 16ம் அதிகாரம் :**

ரோம் சபையை இந்த பவுல் ஒருமுறைகூட நேரில் சென்று பார்க்காத போது, அந்த சபைக்கு எழுதும் கடிதத்தில் உள்ள 16ம் அதிகாரத்தில் 26 பேர்களின் பெயர்களை எழுதி வாழ்த்துதல் எப்படி சொல்ல முடியும். எனவே இந்த 16ம் அதிகாரத்தில் அடங்கியுள்ள வாழ்த்துதல் - இவர் இன்னொரு சபைக்காக - ஒருவேளை எபேசு - சபைக்காக வாழ்த்துதல் சொல்லி - இக்கடிதத்தை எடுத்துச் சென்ற Phoeba - பெய்பா விடம் கொடுத்துவிட - அந்த சகோதரி வேறோரு சபைக்கு கொடுக்க வேண்டிய கடிதத்தை - இந்த ரோமருக்கு எழுதின கடிதத்தோடு - இணைத்து விட்டதாக - அநேக வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். அவர் மிஷினெரிப் பயணத்தின் போது சந்தித்த இந்த நபர்களுக்கு அவர் வாழ்த்துதல் சொல்லும் இக்கடிதம் வேறு - ரோமர் நிருபம் வேறு என்பது இவர்களது தர்க்கம். ஒரு சில Originals மூல

நூல்களில் - இந்த 16ம் அதிகாரம் ரோமர் நிருபத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

7. a) திறவுகோல் வசனம் :

முன்பு யூதரிலும் - பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவன் எவனோ, அவனுக்கு இரட்சிப்பு உண்டு. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் (1:16,17).

7. b) திறவுகோல் அதிகாரங்கள் :

6,7,8, அதிகாரங்கள். ஆன்மீக வாழக்கையின் அஸ்திபாரங்கள் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. - பாவத்திலிருந்து எப்படி விடுதலை பெறுவது; வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி? பரிசுத்த ஆவியின் வல்லமையை எப்படி நாம் அடைவது கிறிஸ்துவின் சாயலை அணிவது எப்படி - இதுபோன்ற சத்தியங்கள் இதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

8. கிறிஸ்து :

கிறிஸ்து 2-வது ஆதாம். இயேசுவின் மரணம், இயேசுவின் உயிர்த்தெழுதல் - இவைகள் அனைத்தும் இயேசுவைக் குறிக்கிறது.



I கொரிந்தியர் - புத்தகம் 46

தலைப்பு : இப்புத்தகம் கொரிந்தியருக்கு எழுதிய முதல் நிருபம் என்று அழைக்கப்பட்டாலும், இதே நிருபத்தில் 5 : 9-ல் பவுல் ஏற்கனவே ஒரு நிருபம் எழுதியிருந்ததாக குறிப்பிடுகிறார். அது என்ன வென்று யாருக்கும் தெரியாது. அப்படியானால் உண்மையிலேயே இப்புத்தகத்தை 2வது நிருபம் என்றும் 2வது நிருபத்தை 3வது நிருபம் என்றும் அழைப்பது தான் சரி. அதுமாத்திரமல்ல, இதற்குச் சரியான பொருத்தமான தலைப்பு "கொரிந்து சபையின் மாமிசீக பிரச்சனைகளும் பவுலின் ஆன்மீக தீர்வுகளும்".

பின்னணி : பவுல் தனது 2வது மிஷனெரி பயணத்தின் போது தெசலோனிக்கியா பட்டணத்திலிருந்து யூதர்களுக்கு தப்பி ஓடிவந்து பெரோயா பட்டணத்திற்கு ஓடினார். யூதர்கள் பவுலை மோப்பம் பிடித்து பெரோயா பட்டணத்திற்கும் வந்து விடவே அவர் உடனே தப்பி அத்தேனே பட்டணத்திற்கு அவசரமாக ஓடிப்போகிறார். அங்கே திமோத்தேயு, சீலா இவர்களது வருகைக்காக காத்திருக்கிறார். காரணம் இவர் அவசரமாக தப்பி ஓடி வந்து விட்டார். பின்பு அத்தேன பட்டணத்திலிருந்து கொரிந்து பட்டணத்திற்கு வருகிறார்.

இந்த கொரிந்து பட்டணத்தில் தங்கிக் கொண்டு 1, 2 தெசலோனிக்கியர் நிருபங்களை எழுதுகிறார். அங்கு ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவோடு ஐக்கியம் கொள்கிறார். முதலில் யூதர்களின் ஜெப ஆலயத்தில் சில நாட்கள் தங்கியிருந்து அவர்களோடு விவாதித்தார். யூதர்கள் அவரது போதனைகளை ஏற்றுக் கொள்ள மறுத்ததால் பவுல் தனது யூத ஜெப ஆலய தங்கும் இடத்தை காலி பண்ணிக் கொண்டு Justus வீட்டில் போய் 18 மாதங்கள் தங்கினார். அதற்குப் பின்பு ஆக்கில்லா. பிரிஸ்கில்லா தம்பதியினர் மூலம் அறிமுகமான அப்பொல்லோ பிரசங்கி கொரிந்து பட்டணத்திற்கு வந்து பிரசங்கம் பண்ணுகிறார் அப்பொல்லோ அழகாகப் பேசுவார். இந்த அதிரடிப் பேச்சாளர், அப்பொல்லோ இந்த கொரிந்து சபை செய்த பல பாவமான தீய செயல்களைக் குறித்து ஏன் கண்டிக்கவில்லை என்பது தெரியவில்லை.

கொரிந்து பட்டணம் : அந்த நாளில் அகாயா நாட்டின் முக்கியமான பட்டணம். பவுலின் நாட்களில் இப்பட்டணத்தில் 7 லட்சம் மக்கள் வாழ்ந்தார்கள். இதில் 5 லட்சம் மக்கள் அடிமைகள். இந்தப்

பட்டணத்தில் பல தெய்வங்கள், பல விதமான வழிபாடுகள் நடைமுறையில் இருந்து வந்தன. இதில் 'வறியரோதுவி' என்ற 1000 தெய்வதாசிகளை உள் அடக்கிய அப்ரோதித் என்ற 'காதல் பெண் தெய்வ வழிபாடு' மிகவும் பிரசித்தம் பெற்றது. எனவே இப்பட்டணத்தில் வழிபாடு சார்ந்த வாணிகம் செழித்து வளர்ந்தது. இங்கு வாழும் மக்கள் மிக மோசமான தன்மையும், ஈனத்தொழிலாகிய விபச்சாரத்தொழிலில் ஈடுபட்டு வந்தனர். அந்தக் காலத்தில் ரொம்ப மோசமான, கேவலமான ஒரு வாழ்க்கை வாழ்ந்தவர்களை-'இவன் ஒரு கொரிந்தியன்' என்ற வழக்கச் சொல் பயன்படுத்தப்பட்டது. இங்கு ரோமர்கள் ஆட்சி செய்ததால் லத்தீன் மொழி அரசாங்க மொழியாகவும், கிரேக்க மொழி பொதுவான நடைமுறை மொழியாகவும் இருந்து வந்தது.

இந்த நிருபம் எந்த பின்னனியில் எழுதப்பட்டது?

பவுல் கொரிந்து பட்டணத்தில் 18 மாதங்கள் தங்கி விட்டு மக்கெதோனியா நாட்டிலுள்ள எபேசு பட்டணத்திற்கு வந்து தங்கினார். அப்பொழுது கொரிந்து பட்டணத்தில் உள்ள 'குலோயி' குடும்பத்தினர் (1:11) எபேசு பட்டணத்திற்குவந்து பவுலிடம் கொரிந்து பட்டணத்திலுள்ள சபையில் தற்சமயம் நிலவி வரும் பிரிவினை, பிரச்சனைகளை விளக்கிக் கூறினார்கள்.

இந்தப் பிரச்சனைகளுக்கு பவுல் தீர்வு காணும் நோக்கத் தோடு இந்த நிருபத்தை அவர் எழுதினார்.

ஆசிரியர் : இதை எழுதியது பவுல் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

காலம் : கி.பி. 56-ம் ஆண்டு

திறவுகோல் வசனம் : உங்கள் உடல் பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயம் என்று உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் உங்களுக்குச் சொந்தமல்ல: கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலால் கடவுளுக்கு பெருமையை சேருங்கள். (6:19,20)

திறவுகோல் அதிகாரம் : பல பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த நிருபத்தில் - பயங்கரமான இருளின் மத்தியில் வானத்தில் தோன்றும் ஒரு பிரகாசமான நட்சத்திரம் போல் - அன்பு பற்றிய 13-ம் அதிகாரம் இப்புத்தகத்தில் ஒரு வெள்ளிக் கம்பி போல பிரகாசிக்கிறது.

"உங்களிடையே விபச்சாரம் பிரசித்தமாயிருப்பதை கேள்விப்படுகிறேன். உங்களில் ஒருவன் தன் தகப்பனின் மனைவியை வைத்திருக்கும் கேவலத்தைக் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்டவனை சபையை விட்டு நீக்காதபடி இறுமாப்பாக இருக்கிறீர்கள்" என்று 5ம் அதிகாரத்தில் கடுமையாக சாடி எழுதிய பவுல் 13-ம் அதிகாரத்தில் இப்படிப்பட்ட ஒப்பற்ற 'அன்பின் கவிதை' ஒன்றை எழுதியிருக்கிறார் என்றால் ஆச்சரியமாக இருக்கிறது. கோபமும், தாபமும், எரிச்சலும் வரக்கூடிய ஒரு சூழ் நிலையில் இவர் 'அன்பின்' உச்ச கட்டத்தை எட்டியது ஆச்சரியமே. நம்மிடம் ஒரு பேப்பரைக் கொடுத்து 'அன்பைப்பற்றி ஒரு 10 வரிகள் எழுதுங்கள் என்று சொன்னால் நாம் திணறுவோம். என்னைக் கேட்டால், இந்த உலகத்திலேயே 'அன்பைப் பற்றி எழுதப்பட்ட மிகச் சிறந்த கவிதை இது என்று சொன்னால் மிகையாகாது. இந்த ஒரு கவிதைக்காக - Literature - துறையில் பவுலுக்கு நோபல் பரிசு கொடுத்தாலும் தகும் - என்பது எனது கருத்து.

2. இந்த நிருபம் எழுதப்பட்டதற்கு இன்னொரு காரணம், கொரிந்து பட்டணத்தின் சபையிலிருந்து 3 பேர்கள் அடங்கிய ஒரு குழு அச்சபையார் எழுதிய ஒரு கடிதத்தை (16:17) எடுத்துக் கொண்டு வந்தனர். அக்கடிதத்தில் கொரிந்து சபையில் தற்சமயம் நிலவும் பிரச்சனைகள் என்ன, என்னவென்று எழுதி, இதற்கு தீர்வும் ஆலோசனையும் சொல்லும் படியாக பவுலைக் கேட்டுக் கொண்டார்கள். இக்கடிதத்தில் எழுதப்பட்ட பிரச்சனைகளோடு, இக்கடிதத்தைக் கொண்டு வந்த ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு - மூவர் மூலமாகவும் இன்னும் சில பிரச்சனைகளை பவுல் நேரில் கேட்டு அறிந்து கொண்டார். இப்படியாக தான் அறிந்து கொண்ட எல்லா சபைப்பிரச்சனைகளுக்கும் ஆலோசனை அளிப்பதுதான் இக்கடிதத்தின் முக்கிய நோக்கம் 7:1ல் இப்போது நீங்கள் எழுதிக் கேட்ட காரியங்களைக் குறித்துப் பார்ப்போம் - என்று பவுல் குறிப்பிடுவதை கவனிக்கத் தவற வேண்டாம்.

கொரிந்து சபையில் இருந்த பிரச்சனைகள்.

இந்த கொரிந்து சபை ஒரு பிரச்சனை நிறைந்த சபை. சிலை வணக்கத்தின் பின்னணியிலிருந்து உருவான இந்த சபையில் பிரச்சனைகளுக்கு பஞ்சமே இல்லை. இந்த கொரிந்து சபையில் இருந்த பிரச்சனைகள் இன்றைய 21-ம் நூற்றாண்டின் சபையிலும் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

a) சபையில் பிரிவினைகள் b) கோர்ட்டில் போடப்பட்ட வழக்குகள் c) Immorality- விபச்சாரமும், வேசித்தனமும் d) கேள்விக்குரிய சில பழக்க வழக்கங்கள் உதாரணம் : விக்கிரகத்திற்கு படைக்கப்பட்ட பொருளை சாப்பிடலாமா? சாப்பிடக்கூடாதா? e) கர்த்தருடைய பந்தியை - சாக்குவைத்து - ஆலயத்தில் விருந்துண்ணுவது குடிப்பது f) ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய சில சந்தேகங்கள்.

இப்புத்தகத்தின் மையக் கருத்து : சிலுவையின் உபதேசம் ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பிரதிபலிக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவன் சமுதாயத்தில் ஒரு வித்தியாசமானவன், மாறுபட்டவன். அவன் சமுதாயத்தில் ஒரு முன் மாதிரி. கிறிஸ்துதான் உங்களுக்காக மரித்தார். பவுலும் அல்ல: அப்பொல்லோவு மல்ல. உங்கள் சரீரம் கிறிஸ்துவிற்குச் சொந்தம் அதைக் கொண்டு போய் வேசியோடு, விக்கிரகத்தோடு இணைக்க முடியுமா? கொரிந்தியரே யோசித்துப் பாருங்கள்.

கொரிந்தியரின் 3 விதமான பிரச்சனைகளும் - அதற்கு பவுலின் தீர்வுகளும்.

a) 1-4 அதிகாரங்கள் குலோயி வீட்டார் மூலம் பவுலின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட - பிளவுகளும் பிரிவினைகளும் பிரச்சனைகளும். (Pauls Concern)

கொரிந்து சபையின் குலோயி குடும்பத்தினர் பவுலை எபேசு பட்டணத்தில் சந்தித்த போது பவுலின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட பிரச்சனைகள் - பிரசங்கிகள் அவர்களது விசிறிகள் பிரச்சனை. நான் பவுலின் group நான் அப்பொல்லோ சபை, நான் பேதுருவைச் சேர்ந்தவன் - என்ற சபைபாகுபாடுகள் பிரிவினை சக்திகள்-இவைகள் இன்றும் நம்மத்தியில் இருக்கிறது. இப்பிரிவினைகளுக்காக பவுல் தனது வருத்தத்தை (Concern) தெரிவிக்கிறார்.

b) விபச்சாரம் - ஒழுக்கக்கேடு பிரச்சனை (5,6 அதிகாரங்கள்) (Pauls Condemnation)

1. சபையின் அங்கத்தினர் ஒருவன் விபச்சாரக் காரணமாக இருந்தால் சபையை விட்டு நீக்குங்கள். இன்றைக்கும் இந்தப் பிரச்சனை நம் மத்தியில் இருக்கிறதா?

2. இந்த கொரிந்து சபையார் ஒருவர் மேல் ஒருவர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்த பிரச்சனை - இதே பிரச்சனை இந்த 21-ம்

நூற்றாண்டிலும் இருக்கிறதா? இந்த விபச்சார பாவத்திற்காக பவுல் தனது கடுமையான மன வேதனையை (Condemnation) வெளிப்படுத்தி அவர்களை கடுமையாக சாடுகிறார்.

c) மூன்றாவது பிரிவு - 7 முதல் 16 அதிகாரங்கள் (Pauls Counsel)

அவர்களது உண்மையான சந்தேகங்களை பவுல் நீக்க முற்படுகிறார். திருமணம் செய்யலாமா? செய்யக் கூடாதா? அவிசுவாசியான கணவன், மனைவி - என்ன செய்வது? விவாக ரத்து பற்றி கருத்து என்ன? விவாகரத்து செய்து விட்டு மீண்டும் திருமணம் செய்யலாமா?

உயிர்த்தெழுதல் உண்டா? இல்லையா? ஆண்டவர் நமக்குக் கொடுத்திருக்கிற வித்தியாசமான வரங்களைக் குறித்து உங்கள் கருத்து என்ன?

விக்கிரகத்திற்கு படைக்கப்பட்ட உணவை அதாவது பிரசாதத்தை நாம் சாப்பிடலாமா? சாப்பிடக் கூடாதா? சாப்பிட்டால் அது தவறா?

இந்த 3-வது பகுதியில் கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்தும் Genuine உண்மையான, வரவேற்கத் தகுந்த கேள்விகள். இதற்கு பவுல் பதில் கொடுக்கிறார். இவரது பதிலில் - சில சமயம் - இது என்னுடைய சொந்த கருத்து கர்த்தருடையதல்ல என்றும் சில கருத்துக்கள் இது கர்த்தருடையது என்றும் எழுதியிருக்கிறார் - என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 3வது பகுதியில் பவுல் கொரிந்தியருக்கு தனது மேலான Counsel-லை ஆலோசனைகளை எடுத்துரைக்கிறார்.

கிறிஸ்து: கிறிஸ்துவுடனே கூட நீங்கள் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். அவரே நமக்கு எல்லாம் (1:30).



II கொரிந்தியர் - புத்தகம் 47

ஆசிரியர் : இதை எழுதியவர் பவுல் என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது.

காலம் : கி.பி. 56

பின்னணி : பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் கடிதம் கொரிந்து சபையார் மத்தியில் பெரும் பரபரப்பையும் சர்ச்சையையும் கிளப்பி விட்டது. இதற்கு நடுவில் கள்ளத் தீர்க்கதரிசிகள், சிலர் கொரிந்து சபையாருக்குள் நுழைந்து பவுலைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் கூறினர். உதாரணமாக பவுலுக்கு சரளமாக பேசத் தெரியாது அவருக்கு அப்போஸ்தலனாகும் தகுதி கிடையாது, நேர்மையற்றவர், கர்வம் பிடித்தவர் பார்ப்பதற்கு குட்டை - Personality தோற்றமே இல்லாதவர் இப்படியாக பவுலைப் பற்றி பல விஷமத்தனமான தகவல்களை, கருத்துக்களை கொரிந்து சபையார் மத்தியில் பரப்பி விட்டனர். இதை யெல்லாம் கேள்விப்பட்ட பவுல் மனமுடைந்து போய்விட்டார். அவர் மனம் புண்பட்டவராக இந்த 2 வது நிருபத்தை எழுதுகிறார்.

மையக் கருத்து : இந்த 2வது நிருபம் முழுவதும் பவுல் தன்னைப்பற்றியும், தனது ஊழியத்தையும், தனது அழைப்பைப் பற்றியும் இம்மக்களுக்கு விளக்க முயற்சிக்கிறார்.

1-9 அதிகாரங்களில் பயன்படுத்தும் பாணியும் தோரணையும் 10-ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் முற்றிலுமாக மாறுகிறது. இதனால் 10-13 அதிகாரங்கள் வேறு ஒரு கடிதத்தைக் சேர்ந்தது என்று சிலர் வாதிக்கின்றனர். ஆனால் இதற்கு தகுந்த ஆதாரம் இல்லை. முதலாம் நிருபத்திற்கும் இரண்டாவது நிருபத்திற்கும் இடையில் இன்னொரு நிருபம் எழுதியிருந்தால், அது 2வது நிருபத்தின் ஆரம்பத்திலேயே சேர்க்கப்பட்டிருக்குமே தவிர இறுதிப்பகுதியில் அல்ல என்பது பலரது எதிர்வாதம்.

நோக்கம் : இக்கடிதத்தின் இன்னொரு நோக்கம் முதல் கடிதத்திற்கு சிலர் செவி சாய்த்து, கீழ்ப்படிந்ததைக் குறித்து பவுல் தீத்து மூலமாகக் கேள்விப்பட்டார். அவர்களது மனமாற்றத்திற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துவது - ஒரு முக்கியமான நோக்கம்.

இரண்டாவது நோக்கம் : (10 முதல் 13 அதிகாரங்கள்) பவுலின் எதிர்ப்பாளர்கள் பலர் அச்சபையில் இருந்திருக்கிறார்கள். இந்த பகுதியில் அவர்களது குற்றச் சாட்டுக்களுக்கு சற்று காரசாரமாக பதில்

கொடுக்கிறார். "நாங்கள் மாம்சத்தின்படி நடக்கிறோம் என்று சிலர் எண்ணுகிறார்கள்" - என்று 10:2-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். பவுல் கோபத்தின் உச்ச கட்டத்தில், "நான் எழுதுவது சற்று புத்தியீனமாக இருக்கலாம். தயவு செய்து சகித்துக் கொள்ளுங்கள் என்று (11:1) குறிப்பிடுகிறார்.

திறவுகோல் வசனங்கள் : இந்த நிருபத்தின் முக்கியமான நோக்கம் - தனக்கு ஆண்டவர் அளித்துள்ள அப்போஸ்தல அதிகாரத்தையும் ஊழியத்தையும் நிருபனம் செய்வது தான் பவுலின் முக்கியமான நோக்கம். இது 10-13 அதிகாரங்களில் தான் பவுலின் தர்க்கம் உச்ச கட்டத்தை அடைகிறது. தனது எதிர்ப்பாளர்களின் வார்த்தைகளினாலும் விமர்சனத்தாலும் சீற்றமடைந்த பவுலை நாம் இந்த நிருபத்தில் பார்க்க முடியும். தான் எழுதும் இக்கடிதம், ஒரு நாள் வேதாகமத்தில் இடம் பெறும், முழு உலகமும் இதை வாசிக்கப் போகிறது - என்பதை பவுல் எதிர்பார்த்திருக்க மாட்டார் - என்பது எனது கருத்து. அப்படி யாராவது அவரிடம் சொல்லியிருந்தால், அவர் இவ்வளவு கோபமாக, எழுதியிருக்க மாட்டார்.

தனது முதல் கடிதத்தைப் படித்து விட்டு, சிலர் மனந்திருந்தியதைக் குறித்து பவுல் அம்மக்களை பாராட்டுகிறார்.

முதல் பகுதி (1-7 அதிகாரங்கள்)

முதல் 7 அதிகாரங்களில், முதல் கடிதத்தின் எதிரொலியாக மனந்திரும்பிய சிலரை, மன்னித்து சபையில் சேர்த்துக் கொள்ளும் படியாக பவுல் சபையாரிடம் வேண்டுகோள் விடுக்கிறார். (2:5-13). கொரிந்து பட்டணத்திற்கு வருவதற்கான தனது திட்டத்தில் ஏன் கால தாமதம் ஏற்பட்டது என்பதையும் விளக்குகிறார்.

இரண்டாவது பகுதி (8,9 அதிகாரங்கள்)

இரண்டாவது பகுதியில் (8,9 அதிகாரங்கள்) ஆண்டவருக்காக கொடுப்பதனுடைய முக்கியத்துவத்தை விளக்குகிறார். புதிய ஏற்பாட்டில் ஆண்டவருக்காக கொடுப்பதைப் பற்றி வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற மிகவும் விரிவான விளக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் மக்கெதோனியா விசுவாசிகள் (நமது தமிழ்நாட்டில் திருநெல்வேலிவிசுவாசிகள் போல) கொடுப்பதில் முதன்மையாக சிறந்தோங்கி காணப்பட்டனர். அந்த மக்கெதோனியா விசுவாசிகளை மேற்கோள்காட்டி கொரிந்து சபையாரையும் - அவர்கள் வாக்குக் கொடுத்த படியே கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கிறார். அதோடு, யூதேயாவிலுள்ள ஏழை விசுவாசிகளின்

தேவைகள் சந்திக்கப்படுவதற்காக அங்குள்ள சபையார் முன்வரும்படியாக அழைப்புக் கொடுக்கிறார் (8,9).

உற்சாகமாக கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார் (9,7) இதில் ஆண்டவருக்கு நாம் எப்படி கொடுக்க வேண்டும், எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை 8,9 வது அதிகாரங்களில் விளக்குகிறார்.

மூன்றாவது பகுதி : (10-13 அதிகாரங்கள்)

இந்த பகுதியில் பவுல் தனது ஊழியத்தையும், தன்னையும் தாக்கிப் பேசிய தனது எதிர்ப்பாளர்களுக்கு - பார்லிமெண்டில் எதிர்கட்சியினரின் தாக்குதலுக்கும், குற்றச் சாட்டிற்கும் பிரதம மந்திரி பதில் கொடுப்பது போல - பவுல் தனது அப்போஸ்தல ஸ்தானத்தையும், ஊழியத்தையும் விளக்கி தன் அழைப்பை உறுதிப்படுத்துகிறார். கிறிஸ்துவிற்காக தான் எவ்வளவு பாடுகள், துன்பங்கள், இன்னல்கள் அனுபவித்திருப்பதை வெளிப்படையாகச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகிறார்.

ஒரு ஊழியத்தை ஸ்தாபித்தவரைப் பற்றி சுற்றிலும் இருக்கிறவர்கள் - கேவலமாக அவதூறாக பேசும் போது, அவரது மனம் எப்படி வேதனையடையும் என்பதற்கு இங்கே பவுல் - தான் பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், அவமானங்கள், தியாகங்கள் பட்டியல் போட்டு விளக்குகிறார். பவுலை கேவலமாக, அவதூறாக பேசிய கூட்டத்தார் இன்றைய 21-ம் நூற்றாண்டிலும் ஒவ்வொரு சபையிலும் ஊழியத்திலும் இருக்கிறார்கள் என்பதை இந்த 3வது பகுதி (10-3 அதிகாரங்கள்) நிருபிக்கின்றன.

கிறிஸ்து இப்புத்தகத்தில் கிறிஸ்து விசுவாசிகளின் ஆறுதலாக (1:5), வெற்றிச்சின்னமாக (2:14), வெளிச்சமாக (4:6), நியாயாதிபதியாக (5:10), ஒப்புரவாளராக (5:19), ஈவாக (9:15) சித்தரிக்கப்பட்டிருக்கிறார்.



கலாத்தியர் - புத்தகம் 48

புத்தக அறிமுகம் :

பவுல் எழுதிய 13 நிருபங்களில் இந்த நிருபம் மாத்திரம் தான் 'சபைகளுக்கு' என்று எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தங்களது கிறிஸ்தவ வாழ்க்கையை 'விசுவாசம்' என்ற கப்பலில் ஆரம்பித்த இந்த கலாத்தியர் அந்த கப்பலில் இருந்த 'விசுவாசம்' என்ற சரக்குகளை கடலில் தூக்கி எறிந்து விட்டு திசைமாறிச் சென்று யூதமார்க்கம் என்ற துறைமுகத்தில் "கிரியைகள் - நியாயப்பிரமாணம்" என்ற புதிய சரக்குகளை ஏற்றிக் கொண்டு வித்தியாசமான ஒரு மார்க்கத்தில் சென்று கொண்டிருந்தார்கள். இதைத்தான் பவுல் "புத்தியில்லாத கலாத்தியரே" என்று கோபத்தோடு அவர்களைக் கடிந்து கொள்ளுகிறார். (என்ன தான் தவறு செய்தாலும் ஒரு நாட்டினரை புத்தியில்லாதவர்களே என்று பவுல் அழைப்பது சரியல்ல: நாகரீகமல்ல என்பது எனது சொந்த கருத்து).

நியாயப்பிரமாணம் மனிதனை குற்றவாளிக்கூண்டிலே நிறுத்தும் ஒரு வக்கீல். அந்த குற்றவாளிக் கூண்டிலிருந்து வெளியே கொண்டுவருவது தான் கிருபை. இயேசு அளிக்கும் இந்த 'சுயாதீனம்' பாவம் செய்வதற்கு கொடுக்கப்படும் 'லைசன்ஸ்' அல்ல. மாறாக இந்த சுயாதீனம் ஆவியின் கனிகளைக் கொடுக்கும் ஒரு உரமாக மாற வேண்டும். இதைத்தான் பவுல் இந்த நிருபத்தில் வலியுறுத்துகிறார்.

காலம் : பவுல் தனது முதல் மிஷனெரி பயணத்தின் போது பர்னபாஸ் - உடன் சென்ற போது (அப் 13:13-14:23) இந்த கலாத்திய சபைகள் உருவாக்கப்பட்டது. இந்த நிரூபத்தை பவுல் தன் சொந்த கையினால் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒன்று எபேசு பட்டணத்திலிருந்து கொண்டு கி.பி. 53-56 காலகட்டத்தில் எழுதியிருக்க வேண்டும் அல்லது மக்கெதோனியாவிலிருந்து கி.பி. 56-ல் எழுதியிருக்க வேண்டும் என்பது பலரது கருத்து.

பின்னணி : கலாத்தியா மாகாணத்தில் உள்ள சபைகளுக்குள் யூதமார்க்கத்தார் சென்று அதை கிறிஸ்தவ விசுவாசத்தை விட்டு விலகச் செய்து யூதமார்க்கத்திற்கு திசை திருப்பி விட்டதாக பவுல் கேள்விப்பட்டு இந்த நிரூபத்தை எழுதுகிறார்.

"யூதமார்க்கம்" என்ற தொட்டிலிலிருந்து தான் கிறிஸ்தவ மார்க்கம் (இஸ்லாம் மார்க்கமும்) பிறந்தது. இது உண்மைதான். ஆனால் அதே தொட்டில் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு கல்லறையாக மாறும் அபாயமும்

ஏற்பட்டிருந்தது. இதை முறியடிக்கத்தான் பவுல் இந்த நிருபத்தில் ஆபிரகாமிற்கு பிறந்த இரண்டு பிள்ளைகளையும் ஈசாக்கு - இஸ்மாயில் அவர்களைப் பெற்றெடுத்த சாராள், ஆகார் இவர்களை திருஷ்டாந்தமாக எழுதுகிறார்.

நியாயப்பிரமாணம் ஆகாரைக் குறிக்கிறது. அடிமைப் பெண்ணின் மூலமாகத் தான் இஸ்மவேல் பிறந்தான். ஆனால் ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் மகன்: முறையான மனைவியாகிய சாராளின் மூலம் பிறந்தவன். ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் பிள்ளை - பிறந்த பின்பு இஸ்மவேலும் ஆகாரும் ஆபிரகாமின் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டார்கள் அது போல இயேசு கிறிஸ்து - வந்த பின்பு அடிமைத்தனத்தின் அச்சாரமாக இருக்கும் நியாயப்பிரமாணம் வீட்டை விட்டு துரத்தப்பட வேண்டும். இயேசுவின் மூலம் சுயாதீனம் நமக்குக் கிடைத்த பின்பு ஆன்மீக அடிமைத்தனத்திற்கு வழிநடத்தும் நியாயப்பிரமாணம் நமது வீட்டை விட்டு, வாழ்க்கையை விட்டு விரட்டியடிக்கப்பட வேண்டும்.

திறவுகோல் வசனம் : "கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன் ஆயினும் இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார் (2:20)".

ஆகையால், நீங்கள் மறுபடியும் (யூதமார்க்கத்தின்) அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து உங்களுக்கு அருளியிருக்கிற சுயாதீன நிலைமையில் நிலை கொண்டிருங்கள் (5:1).

சாராம்சம் : விசுவாசத்தின் மூலம் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். (Justification by faith) என்ற கருத்து இந்த நிருபத்தில் வெள்ளி இழைக் கம்பியைப் போல ஓடுகிறது.

சுவிசேஷத்தின் மூலம் கிருபையும் சுயாதீனமும் கொடுக்கப்படுகிறது.

இந்த கிருபையின் சுவிசேஷத்தை பவுல் இந்த நிருபத்தில் 1,2 அதிகாரங்களில் அதை தாக்குகிறவர்களுக்கு பதில் கொடுக்கிறார்.

இந்த கிருபா சுவிசேஷத்தை 3,4 அதிகாரங்களில் விளக்கம் அளிக்கிறார். இறுதியாக கிருபை சுவிசேஷத்தை 5,6 அதிகாரங்களில் நடைமுறை வாழ்க்கையில் அதை எப்படி செயல்படுத்த முடியும் என்று விளக்குகிறார்.

கிறிஸ்து : கிறஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டேன். நானல்ல கிறிஸ்துவே என்னில் ஜீவிக்கிறார் (2:20) மரத்தில் தொங்கியவர் (3:13) கிறிஸ்து இயேசுவிற்கு சொந்தமானவர்கள் (5:24)

எபேசியர் - புத்தகம் 49

எபேசியர் நிருபம் - முன்னுரை

ஒரு கழுகுக் குஞ்சு கோழிக் குஞ்சுகளுடன் தரையில் வீசப்பட்ட உணவை பொறுக்கிக் கொண்டிருந்தது. தான் ஒரு கழுகுக் குஞ்சு - விண்ணில் சிறகடித்துப் பறந்து கன்மலையின் உச்சியில் வாழ வேண்டியவன் - தரையில் மண்டிபோட்டு இரை பொறுக்கும் அவல நிலை தனக்கு அவசியமில்லை. இந்த உண்மைகள் எல்லாம் அறியாத அப்பாவியாக இருந்த அந்த கழுகுக் குஞ்சு போலத்தான் இந்த எபேசு பட்டணத்தில் வாழ்ந்து வந்த விசுவாசிகளும். தாங்கள் யார், எங்கே இருக்க வேண்டியவர்கள் - என்ற உண்மைகளை அறியாமல் வாழ்ந்து வந்தனர்.

இந்த உண்மைகளைத்தான் எபேசு சபையாருக்கு பவுல் எழுதுகிறார். ஆவிக்குரிய உலகில் உன்னதமான உயரமான இடத்தில் அமர வேண்டிய நீங்கள் தரையில் உட்கார்ந்திருக்கலாமா? கோடீஸ்வரர்களாக, மில்லியனர்களாக வாழ வேண்டிய நீங்கள் தெருவில் அலைந்து திரியும் பிச்சைக் காரர்களைப் போல வாழலாமா? என்று கேட்கிறார்.

எபேசியர் நிருபத்தின் 1-3 அதிகாரங்களில் ஒற்றுமையை மையக் கருத்தாக வலியுறுத்தி - மனித குலத்தை மாத்திரமல்ல, ஆண்டவர் தனது எல்லா படைப்புகளையும் கிறிஸ்துவின் தலைமையில் அவரது ஆளுகைக் குள்ளாக கொண்டு வருவது தான் ஆண்டவரது திட்டம் என்று கூறுகிறார். பாவத்தில் சிக்கி இருந்த மனிதனை - ஆண்டவர் மன்னித்து, விடுதலை கொடுத்து, பரிசுத்த ஆவியினால் முத்திரையிட்டு அதை உறுதிப் படுத்தியிருக்கிறார்.

இரண்டாவது பகுதியில் (4-6) ஆண்டவரோடு நல்லுறவை வைத்துள்ள ஒவ்வொருவரும் அதை தங்களது குடும்ப வாழ்க்கையில், சமுதாய வாழ்க்கையில் அந்த தெய்வீக உறவையும், அன்பையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

இது கடிதம் அல்ல: ஒரு கட்டுரை

ஒரு சிலர் இதை ஒரு கடிதம் என்று சொல்லுவதைக் காட்டிலும் இதை ஒரு இறையியல் கட்டுரை என்று கூறுவதுதான் சாலப்பொருந்தும் - என்று விவாதிக்கின்றனர். காரணம் இதில் Personal greetings தனிப்பட்ட நபர்களை வாழ்த்தும் வாழ்த்துக்கள் இந்த நிருபத்தில் இடம் பெறவில்லை. எனவே இந்த நிருபம் எல்லா சபைகளுக்கும் அனுப்பப்பட்ட ஒரு Circular ஒரு சுற்றறிக்கை என்பது

சிலரது கருத்து. அது உண்மையாக இருந்தாலும், இந்த நிருபத்தில் எபேசு பட்டணத்தைப் பற்றி குறிப்பிட்டிருப்பதால், தொடக்கத்தில் இது எபேசு பட்டணத்தாரை மனதில் வைத்து இந்த நிருபம் எழுதப்பட்டாலும், காலாவட்டத்தில் இது எல்லா சபையாருக்கும் அனுப்பப்பட்ட ஒரு சுற்றறிக்கையாக மாறியிருக்கலாம்.

விசேஷித்த காரியம்

இந்த எபேசு நிருபத்தில் மற்ற நிருபங்களோடு ஒப்பிடும்போது - இதில் யாரையும் பவுல் கடிந்து கொள்ளவில்லை; யாராவது செய்த தவறுகள் இதில் இடம் பெறவில்லை - என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்

இதை எழுதியவர் பவுல் அப்போஸ்தலன் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் சமீப காலத்து ஆராய்வால் வேறொருவர் இதை எழுதியிருக்கக்கூடும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்நூலின் கருத்தோட்டமும், நடையும் சொற்களும் பவுல் எழுதிய ஏனைய நிருபங்களிலிருந்து சற்று மாறுபட்டு காணப்படுகிறது.

இந்நூலில் காணப்படும் ஆழமான இறையியல் கருத்துக்கள் - கி.பி. 80ம் ஆண்டிற்குப் பின்பு தோன்றியவைகள். எனவே, பிற்காலத்தில் வாழ்ந்த ஒருவர் பவுலின் பெயரால் எழுதி இருக்கவேண்டும் என்கின்றனர் வேறுசிலர்.

இருப்பினும் இந்நிருபத்தின் ஆரம்பத்திலேயே இதை பவுல் எழுதியது என்று திட்டவட்டமாக கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், இந்நூலை எழுதியவர் பவுல்தான் என்பது தான் உண்மையான, நிலையான கருத்து.

காலம்

தனது 2வது மிஷனெரிப் பயணத்தின் முடிவில் பவுல் எபேசுப் பட்டணத்திற்கு சென்றார். அங்கு பிரிஸ்கில்லாவையும், ஆக்கில்லாவையும் விட்டுச் சென்றார். ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் புகழ்பெற்ற 'டயானா' ஆலயம் இங்கு தான் இருக்கிறது. தனது 3வது மிஷனெரி பயணத்தின் போது இங்கு 3 ஆண்டுகள் பவுல் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

பவுலின் சிறைச்சாலை நிருபங்களில் (எபேசியர், பிலிப்பியர், கொலொசெயர், பிலமோன்) - எபேசியர் முதல் இடத்தை வகிக்கிறது - காலக் கட்டம் கிபி 60-62.

கிறிஸ்து

கிறிஸ்து நம்மை தெரிந்தெடுத்தார். நம்மை மகனாக தத்தெடுத்தார்; இரட்சித்தார்; தந்தையின் சொத்து அனைத்தும் மகனுக்கு உயில் எழுதிக் கொடுப்பது போல இயேசு கிறிஸ்துவிற்கு சொந்தமான அனைத்து (வானத்திலும், பூமியிலும்) அதிகாரங்களையும் நமக்கு power of attorney எழுதிக் கொடுத்தார். அதை முத்திரையிட்டார். (1:4,5,6,7,11,13) ஒட்டு மொத்தமாக பார்த்தால் - இயேசுவோடு கூட நாம் உட்காரும்படியாக விண்ணுலகில் அவருக்கு அருகில் நம்மை சிங்காசனத்தில் உட்கார வைத்திருக்கிறார். (2:6)

திறவுகோல் வசனங்கள் (4:1-3)

இயேசுகிறிஸ்து இவ்வளவாக நம்மை இரட்சித்து, அவரோடு கூட பரலோகத்தில் சமமாக உட்காரும் அளவிற்கு நம்மை உயர்த்தியிருக்கும் ஒரு உன்னதமான நிலையில் வாழும் நீங்கள் - அந்த அழைப்பிற்கு பாத்திரவான்களாக உங்கள் அன்றாட வாழ்க்கையில் நடந்து கொள்ளுங்கள். உங்கள் பொறுப்பை உணர்ந்து வாழக்கற்றுக் கொள்ளுங்கள்.

"ஆகையால் உங்களை நான் கெஞ்சிக்கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால்" நீங்கள் பெற்றுக் கொண்ட அழைப்பிற்கு ஏற்ப வாழுங்கள். மனத்தாழ்மையோடும், கனிவோடும், பொறுமையோடும், அமைதியோடும் அன்புடனும் வாழ்ந்து உங்களுக்குள் உள்ள ஒருமைப்பாட்டை, ஒற்றுமையை காத்துக் கொள்ள முழு முயற்சி செய்யுங்கள். (4:1-3).

திறவுகோல் அதிகாரம்

6ஆம் அதிகாரம், ஆவிக்குரிய போராட்டம் உங்களுக்கு உண்டு கர்த்தரிலும் அவரது வல்லமையிலும் பெலப்படுங்கள் (6:10)

சாராம்சம்

இப்புத்தகம் பரலோகத்தில் இயேசுவோடு உட்காருவதில் ஆரம்பித்து - முடியும்போது - இயேசுவோடு பரலோகத்தில் உட்காருவதற்கு முன்பு - இந்த பூலோகத்தில் உங்கள் சக கிறிஸ்தவர்களோடு, சகோதர சகோதரிகளோடு சண்டை போடாமல் அமைதியுடனும், ஒற்றுமையுடனும் முதலாவது வாழக் கற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவுரை கூறப்படுகிறது. அதாவது இந்த நிருபம் பரலோகத்தில் ஆரம்பித்து பூமியிலுள்ள நமது வீட்டிலும், வீதியிலும், சபையிலும் முடிவடைகிறது.

பிலிப்பியர் - புத்தகம் 50

பின்னனி

பவுல் துரோவா பட்டணத்தில் இருந்தபோது ஒரு தரிசனத்தில் மெக்கதோனியா நாட்டிற்கு வரும்படி அழைப்பைப் பெறுகிறார். பவுல் அங்கு பிலிப்பு பட்டணத்திற்கு சென்ற போது லீதியாள் தொடப்படுகிறாள். (ஐரோப்பா கண்டத்தின் முதல் கிறிஸ்தவள்) பின்பு பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, பின்பு நில நடுக்கம் ஏற்பட்டு, சிறைக் காவலாளியும் குடும்பமும் இரட்சிக்கப்படுகிறார்கள். (அப். 16) இவரது 2வது மிஷனெரி பயணத்தின் போது இந்த பிலிப்பு பட்டணத்தில் சபை உருவாக்கப்படுகிறது.

பின்பு ரோம் பட்டணத்தில் இவர் சிறையிலடைக்கப்பட்ட காலத்தில், இந்த பிலிப்பி பட்டணத்தார் பணம் சேகரித்து எப்பாப்-பிராத்தீத்து மூலம் அனுப்புகிறார்கள். (4:18) இந்த உதவியைப் பெற்றுக் கொண்ட பவுல் அவர்களுக்கு Thanks Letter நன்றிக் கடிதம் எழுதுகிறார். அது தான் இந்த நிருபம். பணம் கொண்டு வந்த எப்பிராத்தீத்து மிகவும் சுகவீனமாகிவிடுகிறார். அவர் சுகமடைந்த பின்பு இந்த நிருபத்தை பவுல் கொடுத்து அனுப்புகிறார். (2:25-30) இது சிறையிலிருந்து எழுதப்பட்ட நிருபம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் : இதைப் பவுல் தான் எழுதினார் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

காலகட்டம் : ரோம் பட்டணத்தில் பவுல் சிறைப்பட்டிருந்த காலக் கட்டத்தில் (கி.பி. 60-64) இதை எழுதி இருக்க வேண்டும். கி.பி. 62ம் ஆண்டு எழுதி இருக்கலாம்.

மையக்கருத்து : இது ஒரு நன்றிக் கடிதம் என்பதை நாம் மறக்கக்கூடாது. இக் கடிதத்தில் இரண்டு முக்கியமான கருத்துக்களை பவுல் வலியுறுத்துகிறார். a) ஒற்றுமை (Oneness) (b) மகிழ்ச்சி சிறையில் இருந்துக் கொண்டு, வெளியே இருக்கும் விசுவாசிகளை சந்தோஷமாயிருங்கள்: சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்: என்று எழுதுகிறார். வெற்றியும் மகிழ்ச்சியும் பெருக்கெடுத்து ஓடுவதை இக் கடிதத்தில் நீங்கள் காணலாம்.

திறவு கோல் வசனங்கள்

"கிறிஸ்து எனக்கு ஜீவன்: சாவு எனக்கு ஆதாயம்" (1:21) என்ற வசனத்திலிருந்து, ரோமப் பேரரசின் கொடுங்கோல் மன்னன் நீரோ தனக்கு நிச்சயம் மரண தண்டனைதான் கொடுப்பான் என்று பவுல் எதிர்பார்த்தார் என்பதை நாம் ஓரளவு புரிந்து கொள்வது கடினமல்ல.

"கிறிஸ்துவிலிருந்த சிந்தையே உங்களுக்குள்ளும் இருப்பதாக" என்று 2:5ல் குறிப்பிடுகிறார். இதில் சபையாருக்குள் ஒற்றுமை, ஒருமைப்பாடு இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகின்றார்.

வாழ்ந்திருக்கவும் தெரியும்: தாழ்ந்திருக்கவும் நான் அறிவேன். எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன் - என்று எழுதி கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆழமான தத்துவத்தை அவர் வலியுறுத்துகிறார். பட்டினியாயிருக்கவும், வயிறார உண்ணவும், குறையோ, நிறைவோ எதையும் சமாளிக்க நான் கற்றிருக்கிறேன் - என்ற வார்த்தைகளிலிருந்து அவரது பொருளாதாரம் குறைவு பட்டு, சாப்பாட்டிற்கு கூட கஷ்டப்பட்ட ஒரு நிலையை நாம் இன்று கணிக்க முடிகிறது. ஆனாலும் எல்லாவித சூழலிலும் நான் மகிழ்ச்சியாகவே இருக்கிறேன் என்று அவர் எழுதுவது நமக்கும் பிலப்பி பட்டணத்து விசுவாசிகளுக்கும் சவாலாக இருக்கிறது.

திறவு கோல் அதிகாரம் : 2-வது அதிகாரம். இந்த அதிகாரத்தில் இயேசுவின் தாழ்மையை அவர் விளக்கமாக எழுதுகிறார். இங்கு ஒற்றுமையையும், தாழ்மையையும் மையமாக வைத்து எழுதுகிறார்.

கடவுளுக்கு சமமாக இருக்க வேண்டிய இயேசுவே தன்னைத்தானே தாழ்த்தியிருக்கிறார். அவரே நமக்கு முன் மாதிரி. நீங்களும் இயேசுவின் மனத் தாழ்மையை - அவரது சிந்தையை தரித்துக் கொள்ளுங்கள் (2:6)

முறுமுறுக்காமலும், வாதாடாமலும் எல்லாவற்றையும் பொறுமையோடும், ஒற்றுமையோடும் செய்யுங்கள் (2:14)

கிறிஸ்து மனிதனுக்கு சேவைசெய்யும் ஒரு தொண்டனாக மாறி இருக்கும் போது, நீங்களும் அவரது தாழ்மையை தரித்துக் கொள்ளுங்கள். இந்த கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக் கொள்ளுங்கள் (2:5) யூதமார்க்கத்தாரைக் குறித்து பிலிப்பியரை (3:1-21) கடுமையாக எச்சரிக்கிறார். தான் அனுப்பும் தீமோத்தேயுவையும் எப்பாப்பிராத்தீத்துவையும் ஏற்றுக்கொள்ளும்படி பிலிப்பு பட்டணத்தின் சபையாரை வேண்டிக்கொள்ளுகிறார்.

மகிழ்ச்சி : மகிழ்ச்சி என்ற சொல் 16 முறை இந்த நிருபத்தில் வருகிறது. எனவே இந்த நிருபத்திற்கு "மகிழ்ச்சி நிருபம்" என்று பெயர் சூட்டினால் பொருத்தமாக இருக்கும்.

கிறிஸ்து : கிறிஸ்து எனக்கு ஜீவன் (1:21)

கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக் கொள்ளுங்கள் (2:5) நமது சரீரத்தை மகிமையான சரீரமாக மாற்றுவார் (3:21) என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு. (4:13) என்று டார்சன் குரல் எழுப்புகிறார்.

கொலோசெயர் - புத்தகம் 51

புத்தக அறிமுகம் :

எபேசியர் நிருபம் - கிறிஸ்துவின் சபையைப்பற்றி (Church of Christ) விளக்கம் கூறுகிறது. ஆனால் இந்த கொலோசெயர் நிருபம் சபையின் கிறிஸ்துவைப் பற்றி (Christ of the Church) விளக்கம் அளிக்கிறது. முந்தியது சரீரத்தையும் பிந்தியது (கொலோசெயர்) தலையைப் (Head) பற்றியும் விவரிக்கிறது.

முதல் 1,2 அதிகாரங்கள் கிறிஸ்தவ கொள்கை - விளக்கம் (Doctrinal) கொண்டது இரண்டாவது பகுதி 3,4 அதிகாரங்கள் நடைமுறை விளக்கம் (Practical) கொண்டது.

இந்த நிருபத்தில் பவுல் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவிற்கு முதல் ஸ்தானத்தை அளிப்பதின் அவசியத்தை வலியுறுத்துகிறார். கிறிஸ்துவிற்குள் நாம் வேர்கொள்ள வேண்டும்," அவருக்குள் கட்டப்பட வேண்டும். அவரது அன்பை ஆடையாக அணிந்து கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவிற்குள் ஒருவன் பூரணமாக்கப்படுகிறான். அவனுக்கு எந்த குறைவும் இல்லை. லவோதிக்கா சபையிலும் இந்த நிருபம் வாசிக்கப்பட வேண்டும் என்று பவுல் எழுதியிருக்கிற (4:16) காரணத்தினால் இந்த நிருபத்திற்கு "கொலோசெயர் - லவோதிக்கியா நிருபம்" என்று தலைப்புக் கொடுப்பது சாலப் பொருந்தும்.

ஆசிரியர் : இதை எழுதியது பவுல் தான் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இருப்பினும் இதில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள பல கிரேக்க சொற்கள் மற்ற எந்த நிருபங்களிலும் உபயோகப்படுத்தப்படாத காரணத்தினால் இதை பவுல் எழுதியிருக்க வாய்ப்பில்லை என்று சிலர் வாதிக்கிறார்கள். இருப்பினும் இப்பட்டணத்தில் அடிக்கடி உலாவி வந்த அந்நிய, கள்ளப் போதனைகளை கடிந்து கொள்ளும் (2:8-23) ஒரு ஆதங்கத்தில் இந்த புதிய கிரேக்க சொற்களை பவுல் பயன்படுத்தியிருக்கலாம் - என்பது பலரது கணிப்பு.

எழுதப்பட்ட காலம் : இந்த கொலோசெயர், எபேசியர், பிலமோன் - ஆகிய 3 நிருபங்களும் ஒரே காலகட்டத்தில், ஒரே சூழ்நிலையில் எழுதப்பட்டது - என்பது குறிப்பிடத்தக்கது. ரோமாபுரியில் பவுல் சிறையிலடைக்கப்பட்ட சமயத்தில் (கி.பி.60-64) இவைகள் எழுதப்பட்டது. எனவே இதை பவுல் கி.பி. 61-ம் ஆண்டு எழுதி - தீகிக்கு, ஒநேசுமு (4:7,9) கரங்களில் கொடுத்து அனுப்புகிறார்.

பின்னணி : இந்த கொலோசு பட்டணத்திற்கு பவுல் ஒரு தடவை கூட நேரில் சென்றது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. எப்பாப்பிரா என்ற பவுலின் உடன் ஊழியர் இதை ஸ்தாபித்தவர்.

இந்த நிரூபம் எழுதப்படுவதற்கு எப்பாப்பிரா முக்கிய தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும். தான்ஸ்தாபித்த 'கொலோசு' சபையில் பல கொளருபடிகள். கொள்கை குழப்பங்கள் நிலவுவதை இந்த எப்பாப்பிரா பவுலை ரோமாபுரிசிறையில் சந்தித்த போது சொல்லியிருக்க வேண்டும். இதைக் கேட்ட பவுல் இதை நிவர்த்தி செய்யும் நோக்கத்தோடு இந்த நிரூபத்தை எழுதியிருக்க வேண்டும்.

'கொலோசு' சபையில் நிலவிய கொள்கை குழப்பங்கள். அந்நிய போதனைகள்.

பவுலின் பல நிரூங்கள் எழுதப்பட்டதற்கு முக்கிய காரணங்கள் - அந்த சபையார் மத்தியில் நிலவிய அந்நிய போதனைகளும், கொள்கை - கொளருபடிகளும் தான். இந்த சபையார் மத்தியில் இருந்த கொள்கை குழப்பங்களைப் பற்றி பவுல் 2-ம் அதிகாரத்தில் 8-ம் வசனத்தில் இப்படியாக குறிப்பிடுகிறார்.

மாயமான தந்திரத்தினாலும், லௌகீக ஞானத்திலும் உங்களை யாரும் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கிறார் - 'அது' பாரம்பரியம். உலக வழிபாடுகள் - பற்றியது என்று மேம்போக்காக குறிப்பிடுகிறார். இந்த தவறான உபதேசங்கள் என்ன என்பது நமக்கு தெரியவில்லை. ஆனால் அவைகள் தேவ தூதர்களை ஆராதிப்பது, அதாவது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே தேவதூதர்களை பாலமாக பயன்படுத்த உதவும் வழிபாடு; ஒரு சில உணவுகளை சாப்பிடக் கூடாது, ருசி கூட பார்க்கக் கூடாது, விருத்த சேதனத்தைச் சார்ந்த யூத பாரம்பரிய வழக்கங்கள், ஒருவித மாய்மாலமான தாழ்மையை கடைபிடித்தல், சரீரத்தை கேவலமாக கருதுதல், ஆராதனையில் அபூர்வ மாய ஜாலம் நிறைந்த அனுபவங்களை பெறுதல் இயற்கையை கடவுளாக வணங்குதல் - இதுபோன்ற தவறான போதனைகளை கிறிஸ்துவின் சபைக்குள் கொண்டுவர முயலும் நபர்களை கடுமையாக சாடுகிறார். இதை சரிசெய்வதை இந்த நிரூபத்தின் பிரதான நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. இயேசு கிறிஸ்துவிற்குள் சகலமும் - பூமியில் உள்ளவைகளும்; பூமிக்கு அப்பாற்பட்ட அண்டசராசரங்களும் அடங்கியிருக்கின்றன. கிறிஸ்து பூரணத்தின் சகல பரிபூரணம். அவருக்குள் எல்லாமே அடங்கியிருக்கின்றன. இந்த 'கொலோசு' சபை ஒரு யூதரல்லாத கிறிஸ்தவர்கள் அடங்கியுள்ள சபை என்பது குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் வசனம் : கடவுளின் பரிபூரணமும் சகல துரைத்தனமும், அதிகாரங்களும் கிறிஸ்துவிற்குள் வாசமாயிருக்கிறது (2:9)

அவருக்குள் சகல ஞானம், அறிவு என்ற பொக்கிஷங்கள் எல்லாமே அடங்கியிருக்கின்றன (2:3)

கிறிஸ்துவுடனே உயிர்த் தெழுந்தது உண்மையானால் மேலானவைகளையே நாடுங்கள் - பூமியில் உள்ளவைகள் அல்ல. (3:1)

மையக் கருத்து : கிறிஸ்துவை மையப் பொருளாக வைத்து எழுதப்பட்ட வேத புத்தகங்கள் அனைத்திலும் இந்தப் புத்தகமே முதல் இடம் வகிக்கிறது - என்றால் அது மிகையாகாது. கிறிஸ்துவின் முக்கியத்துவத்தை சற்று மட்டுப்படுத்த (devalue) முயற்சிக்கும் சில கொள்கைகளை முறியடிக்கும் நோக்கத்தோடு இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவே முதன்மையானவர்.

இதில் இரண்டு மையக்கருத்துக்கள் வெள்ளி - கம்பிபோல இதில் ஓடுவதை நாம் காண முடியும். முதல் கருத்து (1,2) கிறிஸ்துவின் முக்கியத்துவம் - இரண்டாவது (3,4) ஒவ்வொரு கிறிஸ்தவனும் அந்த கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து நடப்பதின் முக்கியத்துவம்.

நமது அன்றாட வாழ்க்கையிலும், நடத்தையிலும், சொல்லிலும், செயலிலும் நாம் கிறிஸ்துவிற்கு முதல் இடத்தை கொடுக்க கற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவிற்குள் வேர் ஊன்றி கட்டப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவது நாம் நம்பும் கிறிஸ்துவை நமது சொந்த நடைமுறை வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட வேண்டும். கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுந்தது உண்மையானால், நாம் பூமிக்குரியவைகளை நாடாமல், தேடாமல், பரலோகத்திற்குரிய மேலான காரியங்களையே நாம் நாட வேண்டும், தேட வேண்டும். பூமிக்குரியவைகளின் மேல் நாம் ஆசை வைப்பது தவறு.

கிறிஸ்து : வேதாமத்திலுள்ள 66 புத்தகங்களிலும் அதிகமாக கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரே புத்தகம் இந்த கொலோசெயருக்கு எழுதப்பட்ட புத்தகம் - என்றால் மிகையாகாது.

சர்வசிருஷ்டிக்கும் எஜமானன் (1:16,17)

கடவுளின் பரிபூரணத்தின் பூரணமும் கிறிஸ்துவிற்குள் வாசமாயிருக்கிறது (2:9)

அண்ட சராசரத்தின் அதிகாரி (1:16)

1 தெசலோனிக்கேயர் - புத்தகம் 52

புத்தக அறிமுகம் :

நீங்கள் ஒரு ஊருக்குப் போய் அங்குள்ள கிறிஸ்தவ சபையில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இதைக் கேள்விப்பட்ட சிலர் உங்களைத் தாக்குவதற்காக அங்கு வருகிறார்கள். இதை அறிந்த சபையார் உங்களை மறைத்து, கலவரக்காரர்களின் தாக்குதலிலிருந்து உங்களைக் காப்பாற்றி வேறு ஊருக்கு உங்களை அனுப்பி விடுகிறார்கள். நீங்கள் தப்பி ஓடிய பின்பு. அந்த சபையாரை அந்த எதிரிகள் பயமுறுத்திக் கொண்டே இருக்கிறார்கள் அச்சபையார் அச்சுறுத்தலுக்கு அஞ்சி வாழ்கிறார்கள். கதவை யாராவது தட்டினால், கதவை திறந்தால் அடி, உதையாக கிடைக்கலாம். அல்லது மரணமாகக் கூட இருக்கலாம். இது தான் தெசலோனிக்கியா சபையாருக்கு நடந்தது. அந்த சபையார் மேல் பவுலுக்கு ஒரு தனி மரியாதை இருந்தது. தெசலோனிக்கியா சபைக்கும் பவுலுக்கும் இருக்கும் உறவு இதுதான்.

தெசலோனிக்கியா பட்டணம் சென்னை, விசாகப்பட்டணம் போல ஒரு முக்கியமான துறைமுகப்பட்டணம். ரோம ராஜ்ஜியத்தின் மெக்கதோனியா மாநிலத்தின் தலைநகரமாக இருந்தது. 2 லட்சம் மக்கள் கொண்ட அந்த பட்டணம் இன்றைக்கு சலோனிக்கா என்று அழைக்கப்படுகிறது. பல யூதர்கள், பல புற ஜாதியர்கள் அந்தப் பட்டணத்தில் வாழ்ந்து வந்தார்கள். இங்கு பவுல் தனது 2வது மிஷனெரி பயணத்தின் போது பிரசங்கித்தார். இவரது பிரசங்கத்தைக் கேட்ட பல புறஜாதியர்கள் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள். பவுலின் பிரசங்கத்தில் பலர் மனமாற்றம் அடைவதைக் கண்ட யூதர்கள் பொறாமை அடைந்து பவுலையும், சீலாவையும் பிடிக்க முயன்றனர். அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் கொடுத்த யாசோனை கைது செய்து விசாரித்தார்கள். இதனால் பவுலும், சீலாவும் அவசரமாக இரவோடு இரவாக 40 மைல் தூரத்திலுள்ள பெரோயா பட்டணத்திற்கு தப்பி ஓடினார்கள். இந்த பெரோயா பட்டணத்திலும் பவுலுக்கு அநேக ஆத்துமாக்கள் கிடைத்ததைக் கேள்விப்பட்டு இந்த யூதர்கள் அங்கும் சென்று பவுலைத் துரத்த, பவுல் அத்தேனே பட்டணத்திற்கு தனியாக, தனது உடைகளைக் கூட விட்டு விட்டு அவசரமாக தப்பி ஓடினார் (அப்:17)

எனவே தனது ஆபத்துக் காலத்தில் தன் உயிரைக் காப்பாற்றி உதவிய தெசலோனிக்கியரைப் பற்றிய ஆழமான நன்றி உணர்வு பவுலின் உள்ளத்தில் இருந்ததை இந்த நிருபம் வெளிப்படுத்துகிறது.

பவுல் இங்கு ஒரு வேளை ஒருமாதம் தங்கியிருக்கலாம். இந்த சமயத்தில் தனது செலவுகளை தாமே சந்திப்பதற்காக தனது சொந்த கைகளினால் (Tent Making) இரவு பகலாக வேலை செய்ததாக அவர் 2:9ல் குறிப்பிடுகிறார்.

ஆசிரியர் :

இதை பவுல் அப்போஸ்தலன் தான் எழுதினார் என்பதில் எந்தவித கருத்து வேறுபாடுமில்லை.

காலம் :

அத்தேனே பட்டணத்தில் சீலாவும், தீமோத்தேயுவும் தன்னை வந்து சந்தித்த பின்பு (3:1) தெசலோனிக்கியாவில் உள்ள விசுவாசிகள் எப்படி இருக்கிறார்களோ? என்று கவலைப்பட்ட பவுல், தான் அந்த பட்டணத்திற்கு தான் போனால் மீண்டும் பிரச்சினை வரும் என்று எண்ணி என்று கருதிய பவுல் தீமோத் தேயுவை அங்கு அனுப்பினார். அவன் சென்று அவர்களை சந்தித்து விட்டு வந்தவுடன் இந்த நிருபத்தை எழுதுகிறார் (3:2) இதை கி.பி. 51ம் ஆண்டு எழுதியிருக்கலாம் என்பது பலரது கணிப்பு.

திறவுகோல் வசனம் :

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக சமீபமாயிருப்பதால் நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அது மாத்திரமல்ல அன்றாட வாழ்க்கையிலும் நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்ற கருத்தை அதிகமாக வலியுறுத்துகிறார்.

உங்கள் மத்தியில் வேசித்தனம், விபச்சாரம் - இவற்றிற்கு இடம் கொடுக்க வேண்டாம் - என்பதை மறைமுகமாக "இந்த விஷயத்தில் ஒருவனும் தன் சகோதரனை வஞ்சிக்க வேண்டாம்" - என்று (4:6) எழுதுகிறார். தேவன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல; பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார் - என்று சற்று கடுமையாக சாடுகிறார்; எச்சரிப்பு விடுக்கிறார்.

திறவுகோல் அதிகாரம் :

4:13 முதல் 5:11 வரை இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து புதிய எற்பாட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகபட்சமான விளக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிருபத்தை பவுல் எழுதியதற்கு இன்னொரு முக்கியமான காரணம் - இங்குள்ள சில விசுவாசிகளுக்கு இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து சில சந்தேகங்கள் எழுந்திருக்க வேண்டும். ஒருவேளை இந்த சந்தேகத்தை தீமோத்தேயுவிடம் கூறியிருக்க வேண்டும். அதனால் தான் பவுல் இந்தநிருபத்தில் இயேசுவின் 2ம் வருகையின் போது மரித்தோர். உயிரோடிருப்பவர்கள் - இவர்களுக்கு என்ன நடக்கும் என்பதை பவுல் விளக்கமாக எழுதியிருக்கிறார் (இப்படி சிலர் சந்தேகம் கேட்டதால் தான் நமக்கும் கூட இதன் விளக்கம் கிடைத்திருக்கிறது).

புத்தகத்தின் மையக்கருத்து :

இப்புத்தகத்தில் உள்ள 5 அதிகாரங்களையும் 2 பகுதிகாளக பிரிக்கலாம். முதல் பகுதி (1-3): இதில் பவுல் இங்குள்ள விசுவாசிகளை அவர்களது அன்பு, விசுவாசம், நம்பிக்கை - இவற்றிற்காக அவர்களை புகழ்கிறார் (1:3) (அன்பு, விசுவாசம், நம்பிக்கை இந்த 3 சொற்களையும் பவுல் தனது நிருபங்களில் அடிக்கடி (1 கொரி 13:13) பயன்படுத்துவதை நாம் கவனிக்க தவறக் கூடாது) அவர்களது விசுவாசத்தில் வளரும் படியாக அவர்களை உற்சாகப்படுத்துகிறார்.

இரண்டாவது பகுதி (4:5) அவர்களது கிறிஸ்தவ விசுவாசத்தை நடைமுறை வாழ்க்கையில் காண்பிக்க வேண்டிய அவசியத்தை வலி யுறுத்துகிறார். புறஜாதியாரின், கொள்கையில் ஊறிப்போன அவர்கள், ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்று வாழாமல். தங்களது சமூக வாழ்க்கையில், பழைய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து தேவன் அழைக்கும் பரிசுத்த வாழ்க்கைக்குத் திரும்பும்படியாக எச்சரிக்கிறார். சில உறவினர்கள் மரித்துப் போனதால் அவர்களுக்கு என்னவாகும் என்ற கேள்விக்கு பவுல் பதில் கூறுகிறார். இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றி இந்தப் பகுதியில் விளக்கம் கொடுக்கிறார். இறுதியாக சில நடைமுறை சத்தியங்களை அவர்களுக்கு அழகாக எடுத்துரைக்கறார்.

1. தீமைக்கு தீமை செய்யாதீர்கள். பழிக்குப் பழி வாங்காதீர்கள் (5:15)

2. எப்பொழுதும் நியாயமானதையே செய்யுங்கள் (4:11)

3. அடிக்கடி ஜெபம் பண்ணுங்கள்

4. எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்

5. உங்கள் வாழ்க்கையில் நல்லதோ, கெட்டதோ, நன்மையோ, தீமையோ - எது நடந்தாலும் ஆண்டவரை துதியுங்கள்

6. ஏதாவது ஒன்றை நீங்கள் செய்யும் போது அது தவறு என்று நீங்கள் எண்ணினால், அதை நீங்கள் தவிர்த்து விடுங்கள்.

கிறிஸ்து :

பரலோகத்திலிருந்து அவர் வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (1:10)

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சகல பரிசுத்தவான்களோடு வருவார் (3:13)



II தெசலோனிக்கேயர் - புத்தகம் 53

புஸ்தக அறிமுகம் :

நீங்கள் ஒருவருக்கு ஒரு கடிதத்தை எழுதி அனுப்பி விட்டீர்கள். அனுப்பிய சில நாட்களில், நீங்கள் எழுதிய கடிதத்தில் ஒரு பெரிய தவறு இருப்பதை நீங்கள் உணருகிறீர்கள். எனவே அந்தத் தவறை திருத்துவதற்கு அவசரம் அவசரமாக இன்னொரு கடிதம் எழுதி அனுப்புவீர்கள்.

இதே தவறுதான் பவுலுக்கும் நடந்தது. அவர் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் கடிதத்தில் இயேசுவின் 2-ம் வருகையைப்பற்றி இவர் எழுதிய சில கருத்துக்களை I (தெச 4:13, 5:10) சிலர் திருத்தி - இயேசு ஏற்கனவே இந்த உலகிற்கு வந்து விட்டார் என்று மாற்றி எழுதிவிட்டதாக, ஒரு புரளியைக் கிளப்பி விட்டார்கள். இந்த தவறான - பவுல் எழுதாத ஒரு நிருபத்தை எழுதியதாக இவர் மேல் பழிசுமத்தி இயேசுவின் 2-ம் வருகை நடந்து முடிந்து விட்ட சம்பவம் - என்று போதிக்க ஆரம்பித்தார்கள். இது தெசலோனிக்கேயர் சபையார் மத்தியில் பயங்கர கொள்கை குழப்பத்தை உண்டாக்கிவிட்டது.

பவுலின் இந்த நிருபம் இன்னொரு குழப்பத்தையும் உண்டாக்கிவிட்டது. எந்த நேரத்திலும் இயேசு கிறிஸ்து இந்த உலகிற்கு வருவார் - என்று பவுல் எழுதிய வார்த்தைகளை தெசலோனிக்கேயர் சபையாரில் சிலர் தவறாக புரிந்து கொண்டு" இயேசுதான் எந்த நிமிடத்திலும் வந்து விடுவார் - என்று எண்ணி, தங்களது வேலையை ராஜினாமா செய்து விட்டு, வீட்டில் சோம்பேறியாக - ஒரு வேலையும் செய்யாமல் வெறும் பொழுதை போக்கிக் கொண்டிருந்தார்கள்.

தனது கடிதத்தில் எழுதப்பட்டதை இப்படி தவறாக புரிந்து கொள்வார்கள் என்று பவுல் ஒரு போதும் கற்பனைகூட செய்தது கிடையாது. இப்படிப்பட்ட தவறான கருத்துக்களை சரி செய்யவே பவுல் இந்த 2 தெசலோனிக்கேயர் நிருபத்தை முதல் நிருபம் எழுதிய 2 மாதத்திற்குள் எழுதுகிறார்.

ஆசிரியர் : இதை எழுதியவர் பவுல் என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் தர்க்கமும் இல்லை.

காலம் : முதல் நிருபம் எழுதிய 2 மாதத்திற்குள் இந்த 2வது நிருபம் எழுதப்பட்டது. கி.பி. 51ம் ஆண்டு எழுதப்பட்டது.

திறவுகோல் வசனம் : கர்த்தருடைய நாள் எது? என்பதை சரியாக புரிந்து கொள்ளுதல்.

ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஒரு ஆவியே வந்து, "இயேசு வந்து விட்டார்" என்று சொன்னாலும் நம்பாதீர்கள், எங்களிடத்தில் இருந்து வந்த நிருபம் என்று சொன்னாலும் அதை நம்ப வேண்டாம் (2 தெச. 2:2,3).

உங்களில் சிலர் எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறியாக சுற்றித் திரிகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். இப்படிபட்டவர்கள் வேலை செய்யவில்லையென்றால் சாப்பிடவே வேண்டாம். (2. தெச 3:10,11)

திறவுகோல் அதிகாரம் : 2வது அதிகாரம். இந்த அதிகாரத்தில் பவுல் அவர்களது மனதில் உள்ள சில தவறான கருத்துக்களை அகற்ற முற்படுகிறார். இயேசு உலகிற்கு வருவதற்கு முன்பு அந்தி கிறிஸ்து வெளிப்பட வேண்டும். இது போன்ற பல சம்பவங்கள் நடந்த பின்புதான் இயேசு வருவார். இயேசு இந்த உலகிற்கு வந்துவிட்டார் என்ற புரளியை நம்பாதீர்கள் (2 தெச 2 : 3-12)

மையக் கருத்து : கர்த்தருடைய நாள் - இயேசுவின் 2ம் வருகைதான் இந்த 2 நிருபங்களிலும் மையக் கருத்தாக இருக்கிறது. முதல் நிருபத்தில் இயேசு கிறிஸ்து எந்த நேரத்திலும் இந்த உலகிற்கு வருவார் - என்று எதிர்பார்த்து எச்சரிக்கையுடன் வாழுங்கள் - என்று எழுதியதை தவறாக புரிந்துகொண்டு வீட்டிலேயே உட்கார ஆரம்பித்த மக்களுக்கு இந்த 2-ம் நிருபத்தில் அந்த தவறான கருத்தை அதற்கு, சோம்பேறியாக வீட்டில் உட்கார வேண்டாம், ஒழுங்காக வேலைக்கு போங்கள் என்று அறிவுரை கூறுவதுதான் இந்த 2ம் நிருபத்தின் முக்கியமான நோக்கம்.

முதல் அதிகாரத்தில் : பயங்கரமான எதிர்ப்பு மத்தியில் விசுவாசத்தின் நிமித்தம் அவர்களது உயிருக்கே ஆபத்தான ஒரு சூழலில் வாழும் மக்களுக்கு முதலாவது உற்சாகப்படுத்துகிறார். அவர்களது விசுவாசத்தில் பலப்படுங்கள் (2 தெச. 1:4)

இரண்டாவது அதிகாரத்தில் : முதல் நிருபத்தில் - இயேசு ஏற்கனவே வந்து விட்டார்-நாளைக்கே வரப்போகிறார் - என்ற கருத்துக்களை சரி செய்ய முற்படுகின்றார். முதல் நிருபத்தில் - ஏற்பட்ட கொள்கை குழப்பங்களை நீக்க முற்படுகிறார் (2 தெச. 2: 2,3)

மூன்றாவது அதிகாரத்தில் : ஆலோசனை கூறுகிறார். இயேசுவின் வருகையை எதிர்பார்ப்பது என்றால் ஒரு வேலையும் செய்யாமல் வீட்டில் உட்கார்ந்து 24 மணி நேரமும் ஜெபிப்பது அல்ல. காத்திருத்தலும் வேலை செய்தலும் இரண்டும் கைகோர்த்து செல்ல வேண்டும் - படகை ஓட்டுவதற்கு இரண்டு துடுப்புக்கள், தேவைப்படுகிறது என்று அறிவுரை கூறுகிறார். ஒருவன் வேலை செய்யாவிட்டால் அவன் சாப்பிட வேண்டாம் என்று சற்று கடுமையாக சாடுகிறார். (2 தெச 3 : 10).

கிறிஸ்து : இயேசுவின் 2-ம் வருகை புதிய ஏற்பாட்டில் 318 முறை எழுதப்பட்டிருக்கிறது. இந்த 1,2 தெசலோனிக்கேயர் நிருபங்களில் இயேசுவின் 2-ம் வருகை தான் மையக் கருத்தாக உள்ளது. (2 தெச 1:6-10, 2:8-12)



I தீமோத்தேயு - புத்தகம் 54

புத்தக அறிமுகம்

இது ஒரு போதகருக்கு எழுதப்பட்ட தனிப்பட்ட கடிதம் (Pastoral Epistle, Personal Letter) இந்த தீமோத்தேயு கிறிஸ்தவ மார்க்கத்தின் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த 2வது பரம்பரை (2nd Generation) கொஞ்சம் பயந்த சுபாவம் உள்ளவன். இவனது அம்மா (Eunice) மற்றும் பாட்டி (Lois) இருவருமே யூத குலத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எபேசு பட்டணத்தில் தீமோத்தேயு போதகராக நியமிக்கப்பட்டார். இளம் வாலிபன் ஒருவன் ஒரு குழப்பம் நிறைந்த ஒரு சபையின் போதகனாக நியமிக்கப்படுவது சற்று கடினம் இவருக்கு அனுபவம் இல்லை. எனவே பவுல் தீமோத்தேயுவை உற்சாகப்படுத்துவதற்காக அவருக்கு அறிவுரை கூறுவதற்காக இந்த நிருபத்தை எழுதுகிறார்.

ஆசிரியர் :

இந்த நிருபத்தை பவுல் எழுதவில்லை என்று பலர் கருதினர். இது கடுமையான விமரிசனத்திற்கு உள்ளாயிற்று பெயர் தெரியாத யாரோ ஒருவர் இதை எழுதி - பவுலின் கையொப்பத்தைப் போட்டு இதை Forgery பண்ணியிருக்கிறார்கள் என்பது பலரது தர்க்கம். ஆனால் இதை பவுல்தான் எழுதினார் என்பதற்கு போதுமான ஆதாரங்கள் இருக்கிறது என்பது பல வல்லுனர்களின் ஒரு மித்த கருத்து.

காலம் : மெக்க தோனியாவிலிருந்து பவுல் இந்த நிருபத்தை கிபி 62 அல்லது 63வது ஆண்டு எழுதியிருக்க வேண்டும்.

திறவு கோல் வசனம் :

திறவுகோல் வார்த்தை

இப்புத்தகத்தை சபை ஸ்தாபனத்திற்கு தலைவர்களை எப்படி தெரிந்தெடுப்பது - என்ற ஒரு 'கையேடு' Manual என்று கூறினால் மிகையாகாது மாத்திரமல்ல: போதகராக விரும்புகிற எல்லோருக்கும் இது ஒரு நல்லவழிகாட்டி. (Guide)

திறவுகோல் வசனம் (3:15) தேவனுடைய வீட்டிலே நீ எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நீ தெளிவாக அறியும் நோக்கத்தோடு இந்த நிருபத்தை உனக்கு எழுதுகிறேன்.

உன்னைக் குறித்தும் உன் இளமையைக் குறித்தும் உன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு (4:12,16)

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராக இருக்கிறது. எனவே அதை விட்டு ஓடி, நல்ல போராட்டத்தைப் போராடு: நித்திய ஜீவனை அடைவதற்கு ஜாக்கிரதையாக இரு (6:11,12)

மையக் கருத்துக்கள்

தீமோத்தேயுவிற்கு எழுதிய 2 நிருபங்களும் தீத்துவிற்கு எழுதிய நிருபமும் ஆக 3 நிருபங்களும் போதகர்களுக்காக எழுதப்பட்டவைகள். இந்த 3 நிருபங்கள் மூலமாக எபேசு பட்டணத்தில் ஊழியம் செய்யும் தீமோத்தேயுவையும், எபேசுவைக் காட்டிலும் கடினமான ஊராகிய கிரேத்தா தீவில் ஊழியம் செய்யும் தீத்துவையும் உற்சாகப் படுத்துவதற்காக இந்த நிருபங்கள் எழுதப்பட்டது.

தீமோத்தேயுவிற்கு எழுதும் போது எபேசுசபையில் உள்ள கள்ளத் தீர்க்கதரிசிகளின் போதகத்தை எப்படி முறியடிப்பது, மூப்பர்கள், போதகர்கள், பிஷப் இவர்களை எப்படி தெரிந்தெடுப்பது அவர்களது - தகுதி என்ன - என்ற விபரங்களை எழுதுகிறார். சபையில் எழும் அன்றாட சில பிரச்சனைகளை கீழ்வருமாறு விவாதிக்கிறார்.

a) ஆண்களின் கடமை - ஜெபிப்பது

b) பெண்கள் சபையில், எப்படி Dress பண்ண வேண்டும், எப்படி அமைதலோடு இருக்க வேண்டும்

c) சில மூத்த விசுவாசிகள், வயதான பெண்கள், விதவைகள், திருமணம் ஆகாத பெண்கள் - இவர்களோடு எப்படி பழகுவது அவர்கள் தவறு செய்தால் அவர்களை எப்படி கையாளுவது என்று ஆலோசனைகள் கொடுக்கிறார் (5:1-25)

d) அவரிடம் உள்ள ஆவிக்குரிய வரங்களை எப்படி அனல் மூட்டி எழுப்புவது.

கிறிஸ்து

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1:15)

தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே (2:5) இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன் (4:10)

II தீமோத்தேயு - புத்தகம் 55

புத்தக அறிமுகம் : கி.மு. 64-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ரோம் பட்டணம் தீயினால் பாதிபட்டணம் எரிந்து சாம்பலாகியது. அப்பொழுது நீரோ மன்னன் கி.மு. 54-68 வரை ரோமப் பேரரசனாக ஆட்சி புரிந்தான். ரோம் எரிந்து கொண்டிருந்த போது இந்த நீரோ மன்னன் வீணை வாசித்துக் கொண்டிருந்தான் - என்பது சரித்திரம். இந்த தீயை மூட்டியது நீரோ மன்னன்தான் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பரவலாக இருந்தது. இதை மறைப்பதற்காகவும், இதை மக்கள் மறக்கச் செய்வதற்கும் - மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்கும் இந்த நீரோ மன்னன் கிறிஸ்தவர்களை துன்புறுத்தும் யுக்தியை கையாண்டான்.

இதன் எதிரொலியாக - இதுவரை சுதந்திரமாக இருந்த பவுல் அப்போஸ்தலன் கைது செய்யப்பட்டு ரோம் சிறையில் - உள் காவலில் அடைக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பவுலுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட செய்தி வெளியானவுடன் இதுவரை பவுலோடு ஒட்டு உறவாடி வந்த அநேக கிறிஸ்தவ விசுவாசிகள் - இப்பொழுது திடீரென காணாமல் போனார்கள். ஆனால் தீமோத்தேயு மாத்திரம் பவுல் கூட கடைசி வரை இருந்தார்.

தீமோத்தேயுவின் அப்பா ஒரு கிரேக்கர். அம்மா யூதப் பெண். இவனது பாட்டி இவனை சகல அறிவிலும் வளர்த்தாள். முக்கியமாக பவுலின் 3வது மிஷனெரி பயணத்தின் போது பவுலுக்கு நல்லதொரு துணையாக, உதவியாளனாக பணியாற்றினார் - என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் கருப்பொருள் : எபேசு பட்டணத்தில் அந்த சபையின் போதகராக பணியாற்றும் படியாக பவுலினால் தீமோத்தேயு என்ற வாலிபன் நியமனம் செய்யப்பட்டார். இந்த நிருபத்தின் நோக்கம் - தீமோத்தேயு என்ற வாலிபப் போதகரை உற்சாகப்படுத்துவது. “உனக்கு கொடுக்கப்பட்ட சவாலை சந்திக்க ஆயத்தப்படு” தவறான உபதேசங்களை மக்களை விட்டு அகற்ற ஒரு சிறந்த வழி சரியான உபதேசங்களினால் அவர்கள் மனதை நிரப்பு நல்ல எதிர்கால தலைவர்களை உருவாக்கு - கர்த்தருடைய வார்த்தையை சரியாக போதிக்க முன்வா!

உன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட நல்ல உபதேசம்; பொதுவான ஆராதனை மற்றும், சபை ஒழுங்குகளை கடைப்பிடி.

கீழே கொடுக்கப்பட்டிருக்கிற 5 தலைப்புகளில் தனது ஆலோசனைகளை பவுல் விளக்குகிறார்.

1. சபையின் உபதேசம் :

யூத மார்க்கத்தை பக்கவழியாக போதிக்கும் - கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறித்து எச்சரிக்கை - மோசேயின் பிரமாணத்தை விட்டுவிட்டு இயேசுவின் பிரமாணத்தை போதிக்க கற்றுக் கொள்; இந்த விஷயத்தில் உனக்கு எந்த தடுமாற்றமும் இருக்கலாகாது (1:12-17)

2. சபையின் ஆராதனை - தலைமைத்துவம்

ஆராதனையில் பெண்கள் எவ்வாறு அமைதியாக இருக்க வேண்டும் - ஆண்கள் தான் பேச வேண்டும்: ஜெபிக்க வேண்டும். பெண்கள் வெளிப்படையான அலங்காரத்தினால் அல்ல, உள்ளான அலங்காரத்தினால் தங்களை அலங்கரிக்க வேண்டும். ஒரு சபையின் மூப்பர் - பிஷப் இவர்களுக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்று விவரிக்கிறார். வளரும் சபைக்கு எதிர் காலத்தில் சரியான தகுதி படைத்த தலைவர்கள் தேவை என்பதை வலி யுறுத்துகிறார்.

3. தவறான உபதேசங்களை எப்படி கையாளுவது

விவாகரத்து, திருமணம், உணவு வகைகள் இப்படிப்பட்ட வாழ்க்கை பிரச்சனைகளை எப்படி அணுக வேண்டும். இந்த விஷயங்களில் கள்ளத் தீர்க்க தரிசிகள் மூலமாக ஆபத்து வராதபடி எச்சரிக்கையாக இருங்கள்.

4. சபை ஒழுங்கு :

ஒரு சபையில் ஒழுங்கை நடைமுறைக்குக் கொண்டு வருவதுதான் ஒரு போதகருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய கடினமான சவால், விதவைகளையும், மூப்பர்களையும் ஒழுங்குக்கு கொண்டு வர இந்த வாலிபன் எவ்விதமான அணுகு முறையை கையாள வேண்டும்.

5. போதகர் பொறுப்பு :

ஆஸ்தியும் செல்வமும் பெருகுவதுதான் ஆண்டவரின் ஆசீர்வாதத்திற்கு ஒரே அடையாளம் - என்று தர்க்கம் செய்யும் 'பண ஆசை' பைத்தியம் பிடித்தவர்களை விட்டு விலகிவிடு - என்று கடுமையாக எச்சரிக்கிறார்.

திறவுகோல் வசனம் : இயேசு கிறிஸ்துவிற்காக நல்ல போராட்டத்தை போராடு: அதன் நிமித்தம் உனக்கு வரும் துன்பங்களை சகித்துக் கொள்ள, முடிந்தால் அதை ஒரு சிலாக்கியமாக கருத கற்றுக் கொள்.

ஆண்டவருக்கு பிரியமாக இருக்க, இந்த உலகத்தின் காரியங்களில் சிக்கிக் கொள்ளாதபடி ஜாக்கிரதையாக இரு (2:3,4)

திறவுகோல் அதிகாரம் : இப்புத்தகத்தில் உள்ள 2-வது அதிகாரத்தை ஒவ்வொரு போதகரும், ஒவ்வொரு மிஷனெரியும், ஒவ்வொரு ஊழியனும் - ஒவ்வொரு நாளும் வாசிக்க வேண்டும். உங்களது ஊழியம் பயனுள்ளதாக, நெடுங்கால ஊழியமாக, பயிலும் ஒரு ஊழியமாக, பயனுள்ள பரிசுத்த ஊழியமாக கனி கொடுக்கும் ஊழியமாக இருக்க வேண்டுமானால் இந்த 2 தீமோ 2-ம் அதிகாரத்தை தினந்தோறும் வாசித்து, தியானியுங்கள்.

கிறிஸ்து : இயேசு மரணத்தை நீக்கி, ஜீவனையும் அழியாமையையும் வெளிப்படுத்தினார் (1:10)

இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர் என்பதை மறந்து போகாதே (2:8)

இயேசுவோடு மரித்தோமானால் அவரோடு கூட பிழைத்திருப்போம் (2:11)



தீத்து - புத்தகம் 56

அறிமுகம் : கிரேத்து தீவில் உள்ள சபைக்கு போதகராக பணி புரிந்து கொண்டிருந்த தீத்து என்ற வாலிபனுக்கு பவுல் பல ஆலோசனைகளைக் கூறுகிறார். போதகருக்காக எழுதப்பட்ட 3 நிருபங்களில் இதுவும் ஒன்று. சபையில் நிலவும் சில குழப்பங்களை, குறைகளை தவிர்ப்பதற்கு சரியான மாற்று மருந்து - மூப்பர்களை நியமிப்பது. அப்படிப்பட்ட மூப்பர்களை எந்த அடிப்படையில் தெரிந்தெடுப்பது - அவர்களுக்கு என்ன தகுதி இருக்க வேண்டும் என்று விளக்குகிறார். மூப்பர்கள் மாத்திரமல்ல, அங்குள்ள இளைஞர்கள், அடிமைகள் ஆகியோருக்கு எப்படி போதிப்பது என்று அறிவுரை கூறுகிறார். இவர்கள் அனைவரும் தங்களது நடைமுறை கிறிஸ்தவ வாழ்க்கையில் நல்லொழுக்கத்துடனும், அன்புடனும், அமைதியுடனும் நடந்து கொள்ளுதல்: அதோடு பகைமை, வாக்குவாதம், பிளவுகள் இவைகளை தவிர்த்து, கிறிஸ்துவின் போதனைகளை தங்களது அன்றாட நடைமுறை வாழ்க்கையின் மூலம் வாழ்ந்து காட்டுதல் மிக அவசியம்.

தீத்து ஒரு யூதரல்லாத இனத்தவர். சிரியாவிலுள்ள அந்தியோகியா பட்டணத்தைச் சேர்ந்தவர். பவுலின் மூன்றாவது மிஷனெரி பயணத்தின் போது அவரோடு சென்றவர். தீமோத்தேயு கொஞ்சம் பயந்த சுபாவமுள்ளவர். அதற்கு மாறாக தீத்து கொஞ்சம் தைரியசாலி . அதனால் தான் பிரச்சனை நிறைந்த கிரேத்தா தீவிற்கு போதகராக நியமிக்கப்பட்டார்.

ஆசிரியர் : இதை எழுதியது பவுல் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

அப்போஸ்தலர் நடபடிக்கை புத்தகத்தில் தீத்துவைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படாவிட்டாலும், பவுல் தனது 13 நிருபங்களில் 13 முறை இந்த தீத்துவைப் பற்றி குறிப்பிடுவதிலிருந்து - இந்த தீத்து பவுலுக்கு எவ்வளவு நெருக்கமானவர் என்பதை ஓரளவு நாம் புரிந்து கொள்ளலாம். இவர் விருத்தசேதனம் செய்யப்படாத ஒரு கிரேக்கர்.

ரோமாபுரியில் இரண்டாவது முறையாக பவுல் கைது செய்யப்பட்ட போது (அவருக்கு யாருமே உதவி செய்ய முன்வராத ஒரு சூழலில்) இந்த தீத்து பவுலுடன் இருந்தவர் - என்பது குறிப்பிடத்தக்கது. இவரை என்னுடைய உடன் ஊழியர், பங்குதாரர் (2 கொரி 8:23) என் மகன் (தீத்து 1:1) என்றும் பவுல் அழைக்கிறார்.

எழுதப்பட்ட காலம் : இந்த கிரேத்தா தீவு 150 மைல் நீளமும் 30 மைல் அகலமும் கொண்டது. முதல் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்தவர்கள் பொய் சொல்லுவதற்கு பெயர் பெற்றவர்கள். நீ ஒரு பொய்காரன் என்று யாருமே சொல்ல அவசியமில்லை: அதற்குப் பதிலாக நீ ஒரு கிரேத்தான் என்று சொன்னாலே போதும். அந்த அளவுக்கு பொய் பேசும் வழக்கம் அவர்களிடையே மலிந்து காணப்பட்டது.

திறவுகோல் வசனங்கள் : சபையார் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் - என்ற அறிவுரை அடங்கிய நூல்

தவறான கொள்கைகளை போதிப்பவர்கள், எதிர்ப்பாளர்கள், மோசமான நடத்தை உடையவர்கள் இவர்களை எப்படி சந்திப்பது, அடக்குவது என்ற ஆலோசனைகளை அவர் வழங்குகிறார்.

திறவுகோல் வசனம் : குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்கு செய்யவும், பட்டணங்கள் தோறும் மூப்பர்களை நியமிக்கவும் நான் உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டுவிட்டு வந்தேன் (1:5)

கடவுளிடம் நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்று சொல்பவர்கள் அந்த நம்பிக்கையை நற்செயல்களாக வெளிப்படுத்த முன் வர வேண்டும் - என்று நீ வலியுறுத்த வேண்டும். அவ்வகையான நற்செயல்கள்தான் மக்களுக்கு பயன்படும். தேவையற்ற வாக்குவாதங்கள் போட்டி மனப்பான்மை, வம்சவரலாறு பற்றிய ஆராய்ச்சிகள் - ஆகியவற்றை விட்டு நீ விலகிவிடு (3:8,9)

கிறிஸ்து : நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம் என்ன தெரியுமா? நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை நாம் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பது (2:13).



பிலமோன் - புத்தகம் 57

அறிமுகம் : உங்கள் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த வேலைக்காரன் - திடீரென்று - வீட்டில் உள்ள சில பொருட்களைத் திருடிக் கொண்டு ஓடி விட்டான் - என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி ஓடிப்போன வேலைக்காரன் - ஏதோ ஒரு உயிர் மீட்சி கூட்டத்தில் தொடப்பட்டு, இரட்சிக்கப்பட்டு - திருந்திய ஒரு மனிதனாக உங்கள் வீட்டிற்கு திரும்பி வந்தால் - நீங்கள் என்ன செய்வீர்கள்? இது தான் பிலமோனுக்கு இருந்த பிரச்சனை.

எழுதப்பட்ட காலம் : கி.பி. 60 அல்லது 61. இந்த கால கட்டத்தில் தான் பவுல் அடியார் ரோம் பட்டணத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

கி.பி. 64-ல் ரோம் பட்டணத்தில் பாதி தீக்கு இரையானது. கி.பி. 67-ல் ரோம் பட்டணத்தின் மேற்குப் பகுதியில் ஆஸ்டியனுக்குப் போகும் பாதையில் பவுல் சிரச்சேதம் செய்யப்பட்டார் என்பது சரித்திரம்.

பிண்ணனி : கொலேசுப் பட்டணத்தில் உள்ள பிலமோன் வீட்டில் ஒனேசிமு என்பவன் அடிமையாக வேலை செய்து கொண்டு வந்தான். ஒரு நாள் இவன் திடீரென மாயமாக மறைந்து விட்டான். யாருக்கும் தெரியாமல் எஜமானன் வீட்டிலிருந்து ஓடிப்போய் விட்டான். கொலேசு பட்டணத்திலிருந்து எப்படி ரோம் பட்டணத்திற்கு இவன் வந்தான்? எப்படி பவுலை சந்தித்தான் என்பது நமக்கு தெரியவில்லை. ஆனால் இந்த ஒனேசிமு பிலமோன் வீட்டில் இருந்த போது, பிலமோன் அடிக்கடி பவுலைப் பற்றிப் பேசியது இந்த ஒனேசிமிற்கு நன்கு நினைவிருந்தது.

பவுல் ரோம் பட்டணத்தில் இருப்பதை கேள்விப்பட்ட இந்த ஒனேசிமு - பவுலைத்தேடிப் போய் எப்படியோ கண்டுபிடித்து - அவரிடம் தான் பிலமோன் வீட்டை விட்டு சொல்லாமல் ஓடி வந்ததாகவும் ஒரு வேளை, இவன் எஜமானன் வீட்டில் திருடியதையும் சொல்லி மன்னிப்புக் கேட்டு, மனங்கசந்து அழுதிருப்பான். இதைக் கண்ட பவுல் மனம் உருகி, இந்த அடிமைக்கு உதவி செய்ய தீர்மானித்தான்.

அந்த காலகட்டத்தில், ஒனேசிமு மாதிரி ஒரு வீட்டை விட்டு ஓடிய ஒரு அடிமைக்கு மரண தண்டனை கொடுக்கப்படவேண்டும். இதை நன்கு அறிந்த பவுல், இந்த ஒனேசிமுவை எப்படியாவது

காப்பாற்றி அவனது பழைய எஜமானிடம் அனுப்புவது தான் இந்த பிரச்சனைக்கு நல்லதொரு தீர்வு என்று தீர்மானித்தான்.

இந்த நிருபத்தின் சாராம்சம்:

எனது அருமை நண்பன் பிலமோனுக்கு கிறிஸ்து இயேசுவிற்காக கைதியாக இருக்கும் பவுல் எழுதும் கடிதம் (ஒரு கைதிக்காக பரிந்து பேசும் கடிதத்தில் பவுல் தன்னையே ஒரு கைதி என்று எழுதுகிறார். காரணம் இக்கடிதத்தை எழுதும்போது பவுல் ரோம் பட்டணத்தில் வீட்டுக் காவலில் (House arrest) இருந்தார்.

நான் சிறைச் சாலையில் இருக்கும்போது நான் பெற்றெடுத்த என் மகனாகிய ஒனேசிமுக்காக இக்கடிதத்தை எழுதுகிறேன்.

இதற்கு முன்பு, ஒருவேளை அவன் உனக்கு ஒரு பிரயோஜனமும் இல்லாதவனாக இருந்தது உண்மைதான். ஆனால் இப்பொழுது அவன் உனக்கு மட்டுமல்ல, எனக்கும் எல்லோருக்கும் பயனுள்ள ஒரு பாத்திரமாக மாற்றப்பட்டிருக்கிறான்.

அவன் உன் வீட்டை விட்டு ஒருமுறை ஓடியது என்னமோ உண்மைதான். ஆனால் இனிமேல் அவன் நிரந்தரமாக உன்னோடு இருக்கும்படியாக அவன் மனமாற்றம் அடைவதற்குத் தான் அவன் அவ்வாறு சில காலம் உன்னை விட்டுப் போயிருக்கிறான் என்று நான் நினைக்கிறேன்.

ஒருவேளை அவன் ஏதாவது உனக்கு தவறு செய்திருந்தால், கடன்பட்டிருந்தால், தயவு செய்து அந்தக் கடனை என் கணக்கில் சேர்த்துக்கொள். நீ எனக்கு எத்தனையோ விஷயங்களில் கடன்பட்டிருக்கிறாய் என்பதை நீயே நன்கு அறிவாய்.

அவனை ஒரு அடிமையாக அல்ல, மாறாக ஒரு சகோதரனாக நீ ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று உன்னை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வேண்டுகோளிற்கு நீ நிச்சயமாய் சம்மதிப்பாய் என்று உறுதியுடன் இக்கடிதத்தை முடிக்கிறேன்.

இக்கடிதத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் :

யாருக்காவது நீங்கள் சிபாரிசுக் கடிதம் எழுத விரும்பினால், இந்த பிலமோன் நிருபத்தை ஒரு 'Model' கடிதமாக கருதி இதை வாசியுங்கள். இக்கடிதத்தை பவுல் வெகு ஜாக்கிரதையாக, ஒரு வழக்கறிஞர் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் தனது கட்சிக்காரருக்காக - நீதிபதியிடம் பரிந்து பேசும் ஒரு வழக்கறிஞரைப் போல இவரது வாதங்கள் இருப்பதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது.

தேவன், இயேசு, பாவி :

பாவம் செய்த மனிதர்களாகிய நாம் அனைவரும் இந்த வீட்டை விட்டு ஓடிப்போன ஒநேசிமுவிற்கு ஒப்பானவர்கள். எப்படி இயேசு நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறாரோ, அதைப்போல பிலமோனிடத்தில் இந்த பவுல் ஒநேசிமுவிற்காக பரிந்து பேசுகிறார். அப்படியானால் பவுலை இயேசுவிற்கும், பிலமோனை தேவனுக்கும் ஒப்பாக சொல்வோமானால் அதில் தவறு இல்லை. எனவே இந்த நிருபத்தில்.

பிலமோன் - தேவன்

பவுல் - பரிந்து பேசும் இயேசு கிறிஸ்து

ஒநேசிமு - தேவனைவிட்டு ஓடிப்போன மனிதர்களாகிய நாம் அனைவரும்

இப்புத்தகத்தின் கருப்பொருள் :

மற்றவர்களுக்காக பரிந்து பேசுதல் - பாவ மன்னிப்பு அருளுதல் - கிறிஸ்தவ அன்பு - தகுதியில்லாதவர்களுக்கும் சமுதாயத்தின் அடிமட்ட நிலையில் அடிமையைப் போல இருப்பவர்களையும் சிநேகிப்பது - அடிமையை அன்பு சகோதரராக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் - கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தேவை -என்ற உண்மையை இந்த கடிதம் வலியுறுத்துகிறது.

திறவு கோல் வசனம் :

என்னை ஏற்றுக் கொள்வது போல அந்த அடிமையாகிய ஒநேசிமுவையும் ஏற்றுக்கொள் (17).

கிறிஸ்து : பவுல் அடியார் இயேசு எப்படி பிதாவினிடத்தில் பாவிகளாகிய நமக்காக பரிந்து பேசினாரோ, அது போல இந்த நிருபத்தில் பவுல் ஒநேசிமுவிற்காக பரிந்து பேசுகிறார்.

பவுல் - இயேசு கிறிஸ்து.



எபிரேயர் - புத்தகம் 58

புத்தக அறிமுகம் : யூத மார்க்கத்தை விட்டுவிட்டு கிறிஸ்தவ மார்க்கத்தை தழுவியுள்ள பல யூத கிறிஸ்தவர்களுக்கு தங்களது சொந்த நாட்டினர் மூலம் பல உபத்திரவங்களும், பல பிரச்சனைகளும் எழுந்தன. இதன் நிமித்தம் பல யூத கிறிஸ்தவர்கள் தங்களது பழைய யூத மார்க்கத்திற்கே போய்விடலாம் என்று தங்கள் மனதில் எண்ணிக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு தங்களது கிறிஸ்தவ விசுவாசத்தில் தடுமாற்றம் அடைந்து தடம் மாறும் மன நிலையிலிருந்த அவர்களை மீண்டும் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஊன்றிக்கட்டும் நோக்கத்தோடு இந்த எபிரேயர் நிருபம் எழுதப்பட்டது. யூத மார்க்கத்தில் உள்ள குறைகள் என்னென்ன? கிறிஸ்தவ மார்க்கத்தில் உள்ள நிறைகள் என்னென்ன என்பதை விளக்கி எழுத வேண்டிய நிர்பந்தம் பவுலுக்கு ஏற்பட்டது.

இயேசு கிறிஸ்து - மோசேயைக் காட்டிலும் மேன்மையானவர், தேவதூதர்களைக் காட்டிலும், யோசுவாவைக் காட்டிலும், ஆரோனைக் காட்டிலும் மேன்மையானவர். மோசே ஆண்டவரது வீட்டில் வேலைக்காரன்: ஆனால் இயேசுவோ அந்த வீட்டின் சொந்தக்காரரின் மகன். ஆரோன் வருடா வருடம் ஆட்டையும், மாட்டையும் ஆண்டவருக்கு பலியிட்டான்: ஆனால் இயேசுவோ ஒரே ஒரு முறை தன்னைத்தானே பலியிட்டார்.

ஆசிரியர் : புதிய ஏற்பாட்டில் உள்ள 27 புத்தகங்களில் இந்த புத்தகம்தான் யார் எழுதியது என்று யாராலும் திட்டவட்டமாக, தீர்க்கமாக சொல்ல முடியாத புத்தகம். இந்த புத்தகம் யாரால் எழுதப்பட்டது என்று தெரியாத ஒரு நிலையில் இப்புத்தகம் 4-ம் நூற்றாண்டு வரை புதிய ஏற்பாட்டில் சேர்க்கப்படாமல் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் யார் என்று தெரியாவிட்டாலும், இந்த புத்தகத்தில் உள்ள ஆழமான ஆவிக்குரிய கருத்துக்களையும் அதன் ஆன்மீக அர்த்தங்களையும் யாராலும் மறுக்க முடியவில்லை.

இப்புத்தகத்தை யார் எழுதியது என்பது ஒருவேளை நமக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் இது எழுதப்பட்ட கால கட்டத்தில் - இதை எழுதியவரும், இது யாருக்காக எழுதப்பட்டதோ, அவர்களும், ஒருவரையொருவர் நன்கு அறிந்திருந்தார்கள் என்பதை 13:18-24 வரை உள்ள வசனங்கள் மூலம் நாம் அறியலாம். "எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள். நான் வெகு சீக்கிரமாக உங்களிடத்தில் வர முயற்சிக்கிறேன். தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டான்".

இதை பவுல் எழுதியிருக்க வாய்ப்பில்லை ஏனென்றால் இதை எழுதியவருக்கு எபிரேயு பாஷை தெரியாது. காரணம் இந்த புத்தகத்தில் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிற அனைத்து வசனங்களும், எபிரேயு பாஷையில் எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டு புத்தகத்திலிருந்தே எடுக்கப்படாமல் கிரேக்க பாஷையில் மொழிபெயர்க்கப்பட்ட Septuant கிரேக்க பழைய ஏற்பாட்டு புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. காரணம் இப்புத்தகத்தை எழுதிய ஆசிரியருக்கு எபிரேயு பாஷை தெரியாது. ஆனால் கிரேக்கு பாஷையில் பாண்டித்தியம் பெற்றவர். அது மாத்திரமல்ல இப்புத்தகத்தில் பயன்படுத்தியுள்ள கிரேக்க மொழி நடை, வார்த்தைகள் மிக உயர்ந்த பாணியில் உள்ளவை. இது நிச்சயமாக பவுலின் பாணி அல்ல.

ஆசிரியர் யார் : லூக்கா, அப்பொல்லோ, சீலா, பிலிப்பு, அல்லது பிரிஸ்கில்லா இவர்களில் யாராவது ஒருவர் எழுதியிருக்கலாம் என்பது பெறும்பாலானோர் கருத்து

எழுதப்பட்ட காலகட்டம் : தீமோத்தேயு உயிரோடு இருக்கிறார்: எருசலேம் பட்டணம் கி.பி. 70-ல் அழிக்கப்பட்டது. இதைப்பற்றி இந்த நிருபத்தில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனவே இந்த நிருபம் கி.பி. 64-68 கால கட்டத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

திறவுகோல் வார்த்தை : "மேன்மையானவர்" "Better" இந்த நிருபத்தின் மையக்கருத்தை வெளிப்படுத்தும் வார்த்தை "மேன்மையானவர்". இயேசு தேவ தூதர்களைப் பார்க்கிலும் மேன்மையானவர் இயேசு மோசேயைப் பார்க்கிலும் அதிக மேன்மையுள்ளவர் (3:3) இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியனாக வந்தவர். ஆபிரகாம் மெல்கிசேதேக்கிற்கு தசம பாகம் கொடுத்தார். ஆரோன் ஆபிரகாமின் வித்து. எனவே ஆரோனின் வம்சத்திலிருந்து வந்த ஆசாரியர்கள் அனைவரும் மெல்கிசேதேக்கிற்கும், இயேசுவிற்கும் கீழானவர்கள். மற்ற ஆசாரியர்கள் மரணத்தின் நிமித்தம் நிலைத்து நிற்க இயலாத ஆசாரியர்கள். ஆனால் இயேசுவோ என்றென்றும் நிலைத்து நிற்கும் ஆசாரியன் (7:6,7,24)

மேன்மையான உடன்படிக்கை (8)

மேன்மையான ஆசரிப்புக் கூடாரம் (9:1-12)

மேன்மையான பலி (9:13)

மேன்மையானது, மேலானது என்ற சொல் 15 தடவை இப்புத்தகத்தில் வருகிறது.

திறவுகோல் வசனங்கள் : நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், நம்மைப் போலவே எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாத பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார் (4:15)

மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்திருக்க, பாரமான, பாவமான யாவற்றையும் தள்ளிவிட்டு விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக் கடவோம் (12:1)

திறவு கோல் அதிகாரம் : பழைய ஏற்பாட்டில் உள்ள விசுவாச வீரர்களின் பட்டியல் கொடுக்கப்பட்ட 12-ம் அதிகாரம்.

விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்த இயலாது (11:6)

கருப்பொருள் : ஒரு கிறிஸ்தவனுக்கு 'இயேசு கிறிஸ்து' எல்லாவற்றிற்கும் போதுமானவர். அவரே மத்தியஸ்தர், பழைய ஏற்பாட்டில் ஆண்டவரைப் பற்றிய வெளிப்பாடு சற்று குறைவு - பரிபூரணமில்லாதது. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள தீர்க்க தரிசனங்கள், தீர்க்க தரிசிகள் - அனைத்துமே பூரணம் அடையவில்லை. புதிய உடன்படிக்கையாகிய புதிய ஏற்பாட்டின் மூலமாக இயேசு கிறிஸ்து சகலத்தையும் பூரணப்படுத்துகிறார்.

கிறிஸ்து : இந்த எபிரேயர் நிருபம் - இயேசு கிறிஸ்துவை ஆசாரியனாக, ராஜாவாக, தெய்வீகமும், மனுஷீகமும், கலந்து பிறந்த ஒரு தீர்க்கதரிசியாக, வெளிப்படுத்துகிறது. ஒரு அப்போஸ்தலனாக, பிரதான ஆசாரியனாக, மத்தியஸ்தனாக, விசுவாசத்தின் காரண கர்த்தாவாகவும், பூரணப்படுத்துகிறவராகவும் வெளிப்படுத்தப்படுகிறார் (1:1-3,8)

யாக்கோபு - புத்தகம் 59

புத்தகத்தின் சாராம்சம் : கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்தது. செத்த விசுவாசம் அவிசுவாசத்தைக் காட்டிலும் ஆபத்தானது, மோசமானது. விசுவாசம் நமக்குள் இருப்பது உண்மையானால் அது கிரியைகள் மூலமாக வெளிப்படவேண்டும். மற்றவர்கள் அதைப் பார்க்க வேண்டும். அந்த விசுவாச கிரியைகள் மற்றவர்களை பாதிக்க வேண்டும். கவனத்தை ஈர்க்க வேண்டும்.

விசுவாசம் இருக்கும் இடத்தில் சோதனை இருக்கத்தான் செய்யும். சோதனைகள் வரும்: போகும். ஆனால் நமது விசுவாசம் நிலைத்து நிற்கும். விசுவாசம் வெறும் வார்த்தையினாலும் அறிவுப்பூர்வமாகவும் வெளிப்பட்டால் மாத்திரம் போதாது. அது ஆக்க பூர்வமாக வெளிப்பட வேண்டும். நமக்குள் உள்ள விசுவாசம் நமது ஐம்புலன்களையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும். முக்கியமாக அந்த விசுவாசம் நமது நாவிற்கு கடிவாளம் போட்டு அதை கட்டுப்படுத்த வேண்டும்.

ஆசிரியர் : நமது வேதப் புத்தகத்தில் 4 யாக்கோபுக்கள் வருகிறார்கள் (1) முதலாவது இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸின் தகப்பன் (லூக் 6:16) (2) அல்பேயுவின் மகன் யாக்கோபு (மத் 10:4) இவருக்கு சின்ன யாக்கோபு என்ற இன்னொரு பெயரும் உண்டு (மாற்கு 15:40) (3) மூன்றாவது யாக்கோபு - செப தேயுவின் மகன் யாக்கோபு (மத் 4:21) இவர் யோவானின் சகோதரன் இயேசுவின் உள் வட்டத்தில் இயேசுவிற்கு மிகவும் நெருங்கிய சீடனாக இருந்த இவர் கி.பி. 44-ல் ஏரோதினால் சிரச்சேதம் செய்யப்பட்டார் (அப் 12:2) (4) நான்காவது யாக்கோபு இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரன் (மத் 13:55)

இந்த நான்காவது யாக்கோபுவாகிய - இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரன் தான் இந்த யாக்கோபு நிருபத்தை எழுதிய ஆசிரியர். இவர் இயேசு உயிர்த்தெழுந்த பின்புதான் இயேசுவின் சீடராக மாறுகிறார். அதுவரை அவர் தனது ஒன்றுவிட்ட அண்ணனாகிய இயேசுவை விசுவாசிக்க மறுத்தார். பெந்தேகோஸ்தே நாளில் ஆவியானவரின் அருள் பொழிவிற்காக மேலறையில் காத்திருந்தவர்களில் இவரும் ஒருவர் (அப் 1:14) யூதர்களில் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கும்: சபை உருவாகுவதற்கும் இவர் ஒரு தூணாக இருந்தவர் (அப் 12:17).

அப். 15-ம் அதிகாரத்தில் ஆதித்திருச்சபையின் முக்கியமான திருப்பு முனை - விருத்த சேதனம் தேவையில்லை என்று முடிவு

எடுக்கப்பட்டது. இந்த எருசலேம் பட்டணத்தில் நடந்த முதல் ஆலோசனை சங்கக் கூட்டத்தின் போது இந்த யாக்கோபு ஒரு முக்கியமான தலைமைப் பொறுப்பில் இருந்தவர். இதுவரை விருத்த சேதனம் தேவை என்ற கொள்கையை வைத்திருந்த அவரே எழுந்து இந்த விருத்த சேதனம் இனிமேல் தேவையில்லை என்று கூறி - பட்டிமன்றத்தில் நடுவர் தீர்ப்புக் கூறுவது போல, அவர் (அப் 15:14) தீர்ப்புக் கூறி - அந்த நீண்ட காரசாரமான விவாதத்தை ஒரு சுமுகமான முடிவிற்கு கொண்டுவருகிறார். இவர் கி.பி. 62-ம் ஆண்டில் இரத்த சாட்சியாக மரித்தார்.

எழுதப்பட்ட காலகட்டம் : இப்புத்தகம் கி.பி. 45-ல் எழுதப்பட்டிருக்க வேண்டும். எனவே புதிய ஏற்பாட்டிலேயே முதன் முதலில் எழுதப்பட்ட நூல் இப்புத்தகம் என்பது அநேகரது கருத்து.

கி.பி. 49-ம் ஆண்டில் எருசலேம் பட்டணத்தில் நடந்த ஆலோசனை சங்கக் கூட்டத்தைப் பற்றி (அப் : 15) யாக்கோபு எதுவுமே இந்த நிருபத்தில் எழுதப்படாத காரணத்தால், இந்த யாக்கோபு நிருபம் இந்த சம்பவத்திற்கு முன்பு எழுதப்பட்டிருக்க வேண்டும்.

திறவுகோல் வசனம் : உண்மையான விசுவாசம் என்றால் என்ன என்பதை விளக்குகிறார். இந்த நிருபம் கொள்கைகளை விளக்கும் ஒரு நூல் அல்ல. மாறாக நடைமுறை உண்மைகளை ஆசிரியர் வெளிப்படையாக எழுதுகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய விசுவாசத்தை - தான் எப்படிப்பட்ட கண்ணோட்டத்தை, அணுகு முறைகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறோம் என்பதையும் தனது இருதயத்தில் உள்ள விசுவாசத்தையும் ஒப்பிட்டு பார்த்து - அதில் முரண்பாடுகள் காணப்படாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கும்படி ஆலோசனை கொடுக்கிறார். உன்னுடைய இருதயத்தில் விசுவாசத்தை பூட்டி வைத்து விட்டு, உன் கையில் பணத்தையும் வைத்துக் கொண்டு மறைத்துக் கொண்டு, பசியோடு இருக்கும் ஒருவனைப் பார்த்து, "சமாதானத்தோடு போ, கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக" - என்று எப்படி கூற முடியும் (2:14-17)? என்று மேடையில் பேச்சாளர்கள் கேள்வி எழுப்புவது போல கேட்கிறார்.

திறவுகோல் வசனம் : ஒவ்வொருவரும் கேட்பதில் வேகமும், ஆர்வமும், பேசுவதில் நிதானமும், தாமதமும் காட்ட வேண்டும் (1:19)

திறவு கோல் அதிகாரம் : 1-ம் அதிகாரம். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் அடிக்கடி எதிர் கொள்ளும் ஒரு பரீட்சை - சோதனைகள்.

சோதனைகளை மன உறுதியுடன் தாங்குவோர் பேறு பெற்றவர்கள் (1:12)

புத்தகத்தின் சாராம்சம் :

1. முதல் பகுதி (1:1-18)

நமது விசுவாசம் சோதிக்கப்படுகிறது. நமக்கு சோதனை வரும் போது நாம் மன உறுதியுடன் அதை எதிர்கொள்ள வேண்டும்.

2. விசுவாசத்தின் குணாதிசயங்கள் (1:19-5:6)

உண்மையான விசுவாசம் எப்படி, எத்தன்மையுடையதாக இருக்க வேண்டும், ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் பாராட்டக் கூடாது. வசனத்தை கேட்பதோடு நின்று விடாமல் அதன்படி செய்கிறவர்களாய் மாற வேண்டும். நமது விசுவாசம் வாயோடு நின்றுவிடாமல் வாழ்க்கையிலும் வெளிப்பட வேண்டும்.

உலக சிநேகம் ஆபத்தானது: தாழ்மையை கடைப்பிடியுங்கள். பெருமை, சுயநலம், அநியாயம், இவற்றை அகற்றி விடுங்கள். பணமும், ஆஸ்தியும் உங்களை வஞ்சித்து விடாதபடி ஜாக்கிரதையாக இருங்கள்.

3. விசுவாசத்தின் வெற்றி (5:7-20)

விசுவாசமுள்ள ஜெபம் வியாதியிலிருந்து விடுதலை கொடுக்கும். யோபுவைக் கவனித்துப் பாருங்கள். இன்றைக்கு நாம் அனுபவிக்கும் கஷ்டங்களையும், துன்பங்களையும் பார்த்து மலைத்து விடாதீர்கள். அதற்கு மாறாக எதிர் காலத்தில் ஆண்டவர் நமக்கு அளிக்கப் போகும் மகிமையை எண்ணிப்பாருங்கள். அப்பொழுது தற்காலத்து துன்பங்கள் பிரகாசமான எதிர்கால சூரிய வெளிச்சத்திற்கு முன்பாக பனியைப் போல மறைந்து விடும்.

கிறிஸ்து : ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்று 1:1, 2:1 குறிப்பிடுகிறார்.

5:7 ஆண்டவரின் வருகைவரை பொறுமையோடு காத்திருங்கள்.



1 பேதுரு - புத்தகம் 60

புத்தகத்தின் சுருக்கம் :

இப்புத்தகத்தின் முக்கியமான மையக் கருத்து உபத்திரவம். ஒரு மனிதனுக்கு கஷ்டம், துன்பம் வரும் போது இரண்டு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. முதலாவது அது அவனது வளர்ச்சிக்கு உதவுகிறது. இரண்டாவது அவனுக்கு சோர்வும் மனக்கிலேசமும் ஏற்படுகிறது. இதை சரி செய்வதற்காகத் தான் பேதுரு தனது முதலாவது நிருபத்தை எழுதுகிறார்.

இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட பல கிறிஸ்தவர்களுக்கு அரசாங்கத்தாலும், சுற்றிலும் வாழும் மக்களாலும் பல உபத்திரவங்களும், கஷ்டங்களும் ஏற்பட்டன. இப்படிப்பட்ட உபத்திரவங்கள் நமக்கு ஒன்றும் புதிதல்ல. இந்த உபத்திரவத்தை எண்ணி சோர்ந்து போவதற்கு பதிலாக, நாம் இயேசுவின் உபத்திரவத்தில் நாமும் பங்கு பெற நாம் பாக்கியம் பெற்றவர்கள் என்று எண்ணிக் கொள்ளுங்கள் - என்று எழுதுகிறார்.

ஆசிரியர் : இதை எழுதியது பேதுரு அப்போஸ்தலன் என்பதில் சந்தேகமில்லை.

யாருக்காக எழுதப்பட்டது:

இக்கடிதத்தை எழுதிய பேதுரு, யாரை மனதில் வைத்துக் கொண்டு இதை எழுதினார் என்பதை இந்த நிருபத்தில் நாம் ஆராய்வோமானால் நமக்கு குழப்பம் காத்திருக்கிறது.

யூத கிறிஸ்தவர்களுக்கு?

சகல தேசங்களிலும் சிதறியிருக்கிற பரதேசிகளுக்கு எழுதுகிறேன் என்ற (1:1) வசனத்யையும் **புறஜாதிகள்** உங்களை கேவலமாக பேசாதபடிக்கு கவனமாய் நடந்து கொள்ளுங்கள் என்ற 2:12ம் வசனத்தையும் ஆதாரமாக வைத்து நாம் ஆராய்வோமானால் இந்த நிருபம் பல நாடுகளில் உபத்திரவத்தின் நிமித்தம் சிதறியிருக்கிற யூத கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது என்ற கருத்து வெளியாகிறது.

புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு?

ஆனால் அடுத்து வரும் சில வசனங்களைக் கவனித்தால் முற்றிலும் மாறுபட்ட கருத்து - அதாவது இந்த நிருபம் யூத கிறிஸ்தவர்களுக்கு அல்ல - மாறாக பல நாடுகளில் வாழும் புறஜாதி

(யூதர் அல்லாத) கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது என்பது புலப்படும்.

உதாரணமாக 2:9,10-ம் வசனங்களில் உங்களை அந்தகாரத்தினின்று ஆண்டவர் அழைத்தார்: முன்பு நீங்கள் தேவனுடைய மக்களாக இருக்கவில்லை. 4:10-ம் வசனத்தில் கடந்த காலத்தில் நீங்கள் புறஜாதிகளுடைய வழக்கத்தின்படி நடந்து வந்தீர்கள் என்று எழுதுகிறார்.

மேற்கூறிய வசனங்கள் - இந்த நிருபம் புறஜாதி கிறிஸ்தவர்களை மனதில் வைத்துக் கொண்டு எழுதப்பட்டது - என்பது தெளிவாகிறது.

திறவுகோல் வசனம் :

ஏற்கனவே சொன்னபடி, இந்த நிருபத்தின் மையக்கருத்து - கிறிஸ்தவர்களுக்கு வரும் உபத்திரவத்தை எப்படி எதிர் கொள்வது? நாம் பின்பற்றும் இயேசு கிறிஸ்துவும் உபத்திரவத்தை சகித்தார். நமக்கு ஒரு முன் மாதிரியாக இருக்கிறார் (2:21). நாம் இயேசுவிற்காக துன்பப்படுவது நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பெரிய சிலாக்கியம். நீங்கள் தவறு செய்ததினால் உபத்திரவப்படவில்லை, கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தின் நிமித்தம் தான் நாம் கஷ்டத்தை அனுபவிக்கிறோம். இதை நீங்கள் நன்கு புரிந்து கொள்ளுங்கள். இந்த உபத்திரவங்கள் உங்களை பங்கப்படுத்தவதற்காக அல்ல. உங்களை பக்குவப் படுத்தவதற்காக. இதை நினைத்து, நினைத்து நீங்கள் கவலைப்பட்டு, கலங்க வேண்டாம். மாறாக இதற்காக சந்தோஷப்படுங்கள்.

அழிந்து போகிற பொன் அக்கினியால் சோதிக்கப்படுவது போல உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு அதன் மூலம் உங்களுக்கு கனம் உண்டாகப் போகிறது (1:7)

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர். ராஜ குடும்பத்தைச் சார்ந்தவர்கள். பரிசுத்த மக்கள். ஆண்டவரின் உரிமைச் சொத்து. எனவே அந்தகாரத்தை விட்டு ஆச்சரியமான வெளிச்சத்திற்குள் அழைத்தவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவியுங்கள். (2:9)

திறவுகோல் அதிகாரம் :

4-வது அதிகாரம் உபத்திவரத்தில் அடங்கியுள்ள உன்னத உண்மைகள்.

நீங்கள் கிறிஸ்துவின் நிமித்தம் நிந்திக்கப்பட்டால் நீங்கள் பாக்கியவான்கள் (4:14)

நிருபத்தின் சாராம்சம் :

முதல் பகுதி (1:1-2:10) முழுக்க முழுக்க ஆன்மீக இரட்சிப்பைக் குறித்த விளக்கவுரை.

நீங்கள் இரட்சிக்கப்பட்டது உண்மையானால் - அதை உங்கள் நடத்தையில் வெளிப்படுத்த வேண்டும். உங்கள் நடக்கைகளில் எல்லாம் பரிசுத்தராயிருங்கள் (1:15) காரணம் உங்களை அழைத்தவர் பரிசுத்தர். விட்டுவிட வேண்டியதை (சகல துர்க்குணம், பொறாமை etc.,) விட்டு விட்டு பற்றிக் கொள்ள வேண்டியதையும் பருக வேண்டியதையும் (திருவசனமாகிய ஞானப்பால்) பருகுங்கள் (2:3)

இரண்டாவது பகுதி (2:13-3:12) அன்றாட நடத்தை

உங்களை ஆளும் அரசாங்கத்திற்கும், நீங்கள் வாழும் சமுதாயத்திற்கும் ஏற்றவர்களாக வாழுங்கள். பொல்லாப்பை விட்டு நன்மை செய். சமாதானத்தை நாடுங்கள். கிறிஸ்தவர்கள் சகல அதிகாரத்திற்கும் அடங்கி நடக்க வேண்டும்.

மூன்றாவது பகுதி (3:13-5:14) **உபத்திரவத்தில் உள்ள உண்மைகள்**

கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் வரும்போது, ஆச்சரியப்பட வேண்டாம். இந்தஉபத்திரவம் நமக்கு நன்மை பயக்கும். ஏற்ற காலத்தில் ஆண்டவர் உங்களை உயர்த்தும்படிக்கு அவரது பலத்த கரத்திற்குள் அடங்கியிருங்கள்.

கிறிஸ்து : ஆத்துமாக்களின் மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்திற்கு வந்திருக்கிறீர்கள் (2:25)

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உங்கள் மேல் தெளிக்கப்பட்டிருக்கிறது (1:1)



II பேதுரு - புத்தகம் 61

முன்னுரை :

பேதுரு முதல் நிருபம் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு சபைக்கு வெளியே இருந்து எவ்வாறு ஆபத்து வருகிறது என்பதை மையமாக வைத்து எழுதப்பட்டது.

ஆனால் இந்த இரண்டாவது நிருபம் எப்படி சபைக்கு உள்ளே இருந்து ஆபத்து எப்படி வர முடியும் என்பதை விளக்குகிறது. இந்த நிருபத்தில் சபைக்குள்ளே இருக்கும் கள்ள தீர்க்கதரிசிகள் மூலம் என்னென்ன தீமைகள் வர முடியும் என்பதை விளக்குவது தான் இந்த நிருபத்தின் முக்கியமான நோக்கம்.

ஒரு கிறிஸ்தவன் நடைமுறை வாழ்க்கையில் நீதியுள்ளவனாக, நேர்மையானவனாக இருக்க வேண்டும். அவனுக்கு தேவை சுயகட்டுப்பாடு, சகோதர சிநேகம், சுயநலமற்ற அன்பு, விடா முயற்சி, தேவ பக்தியே ஆகும்.

இயேசு கிறிஸ்து வரப்போகிறார் - நியாயத்தீர்க்கப்போகிறார் என்றெல்லாம் கதை அடித்தீர்களே, எங்கே அந்த இயேசு? ஏன் இவ்வளவு கால தாமதம் செய்கிறார் - என்றதொரு குதர்க்கமான கேள்வியை கள்ளத்தீர்க்கதரிசிகள் எழுப்பினார்கள். நியாயத் தீர்ப்பும் கிடையாது ஒரு மண்ணாங்கட்டியும் கிடையாது என்று அவர்கள் வாதித்தார்கள். அதற்கு பதில் அளிக்கும் வண்ணம் பேதுரு இந்த நிருபத்தை எழுதுகிறார். ஆண்டவர் நியாயத்தீர்ப்பு வழங்குவதற்கு தாமதிக்கலாம். ஆனால் அது கட்டாயம் வரும்" என்று அவர்களை எச்சரிக்கிறார்.

ஆசிரியர் : இது பேதுரு எழுதவில்லை என்பதற்கு உள்ளேயும், வெளியேயும் பல ஆதாரங்கள் இருந்ததால் முதல் 3 நூற்றாண்டுகள் இந்த புத்தகம் வேதத்தில் சேர்க்கப்படாமல் இருந்தது. பின்பு சேர்க்கப்பட்டது.

எழுதப்பட்ட காலம் : எனக்கு மரணம் சீக்கிரமாய் வரப்போகிறது. இந்த சரீரமாகிய கூடாரத்தை நான் விரைவில் களைய வேண்டியதிருக்கும் (1:14) என்று எழுதுவதிலிருந்து - இந்த நிருபத்தை தனது மரணத்திற்கு சற்று முன்பதாக பேதுரு எழுதியிருக்கிறார்

என்பது தெரியவருகிறது. அப்படியானால், இந்த நிருபம் கி.பி. 64-66 கால கட்டத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ரோம் நகரில் அவர் இரத்த சாட்சியாக இந்த கால கட்டத்தில் மரித்திருக்க வேண்டும்.

திறவு கோல் வசனம் : கள்ள தீர்க்க தரிசிகளைக் குறித்து எச்சரிக்கையுடன் இருங்கள். கள்ள தீர்க்க தரிசிகளுடைய வஞ்சகத்திலே சிக்கி நீங்கள் இழுப்புண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாக இருங்கள் (3:17)

திறவு கோல் அதிகாரம் : முதலாம் அதிகாரம். தீர்க்க தரிசன வார்த்தைகளைக் குறித்து சந்தேகம் எழ வேண்டாம். தீர்க்கதரிசனமானது தேவனுடைய பரிசுத்த மனிதர்களால், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எழுதப்பட்டது. (1:21)

இப்புத்தகத்தின் சாராம்சம் : முதலாம் நிருபத்தில், தேவனுடைய வசனத்தை, ஒரு குழந்தை பாலை நாடுவது போல, நீங்களும் வசனத்தின் மேல் வாஞ்சையாக இருப்பதின் அவசியத்தை வலியுறுத்தினார். (1 பேதுரு 2:1) இந்த 2வது நிருபத்தில், வேத வசனத்தை வாஞ்சித்தால் மாத்திரம் போதாது அதில் வளர வேண்டும் தேர்ச்சி பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் அவருடைய கிருபையிலும் நீங்கள் வளர வேண்டும் - என்று (3:18) அறிவுரை கூறுகிறார்.

முதல் அதிகாரம் : கிறிஸ்துவினுடைய நற்குணத்தில் ஊன்றக்கட்டப்பட வேண்டும் - திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாக நீங்கள் மாறவேண்டும். விசுவாசம், தைரியம், ஞானம், இச்சையடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், அன்பு - இத்தனை நற்பண்புகளும் உங்களுக்குள் உருவாக்கப்படவேண்டும். அப்படி நீங்கள் செய்தால் உங்கள் வாழ்க்கை கனி தரும் வாழ்க்கையாக மாறும்.

இரண்டாவது அதிகாரம் : இந்த அதிகாரத்தில் கள்ள தீர்க்கதரிசிகளை பயங்கரமாக சாடுகிறார். இவர்கள் துணிகரமானவர்கள், அசுத்த இச்சையுள்ளவர்கள், அகங்காரிகள், தேவனைத் தூஷிக்கிறவர்கள், புத்தியற்ற மிருகங்கள் என்றே அவர்களை அழைக்கிறார். பிலேயாமின் வழியில் நடப்பவர்கள். தண்ணீரில்லாத மேகங்களுக்கும், தான் கக்கினதைத் தின்னும்

நாய்க்கும், சேற்றிலே புரளும் பன்றிக்கும் இந்த கள்ள தீர்க்கதரிசிகளை ஒப்பிடுகிறார்.

I feel this is too much இந்த தாக்குதல் சற்று அதிகம் என்று நான் உணருகிறேன்.

மூன்றாவது அதிகாரம் : இந்த 3வது அதிகாரத்தில் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றி எழுதுகிறார். ஆண்டவரது நியாயத்தீர்ப்பு கிடையாது என்று வாதாடுபவர்களுக்கு பதிலடி கொடுக்கும் வண்ணம் நோவா காலத்தில் வந்த வெள்ளத்தையும் அதன்மூலம் மக்கள் அழிந்து போனதையும் நினைப்பூட்டி எச்சரிக்கிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்பில் கால தாமதம் ஏற்படுகிறது என்றால் அதற்கு ஒரே காரணம், அநேகர் மனந்திரும்ப வேண்டுமென்று அவர் பொறுமையை கையாளலாம். இதை தவறாக புரிந்து கொண்டால் அது அவர்களுக்கு ஆபத்து.

கிறிஸ்து : நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளருங்கள். (3:18)



I யோவான் - புத்தகம் 62

ஆசிரியர் : இப்புத்தகத்தை எழுதியது அப்போஸ்தலனாகிய யோவான் என்பதில் பொதுவாக கருத்து வேறுபாடு இல்லை. இருப்பினும் சிலர் யோவான் சுவிசேஷத்தை எழுதியது 'யோவான் அப்போஸ்தலன்' தான். ஆனால் யோவானின் 3 நிருபங்களை எழுதியது யோவான் அப்போஸ்தலன் அல்ல; அவற்றை எழுதியது 'யோவான் என்ற சபை மூப்பர் - 'சபை போதகர்' John, the elder or Presbyter - என்று வாதிக்கிறார்கள்.

எழுதப்பட்ட காலம் : இதை எபேசு பட்டணத்திலிருந்து எழுதியிருக்கிறார். யோவான் சுவிசேஷத்தை எழுதி முடித்த பின்பு இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார். அப். 8:14-ல் யோவான் எருசலேமில் உள்ள யூதமக்களுக்கு அதாவது விருத்த சேதனம் உள்ளவர்களுக்கு அப்போஸ்தலர்கள் - என்ற குழுவில் இந்த யோவான் இடம் பெறுகிறார் (விருத்த சேதனமில்லாதவர்களுக்கு பவுல் அப்போஸ்தலனாக ஆக்கப்பட்டார்) கலாத்தியர் 2:9-ல் பவுல் யோவானை சபையின் தூண் என்று எழுதுகிறார்.

இந்த நிருபத்தில் இவர் அடிக்கடி "பிரியமானவர்களே" "என் பிள்ளைகளே" - என்று தனது நிருபத்தை பெறுகிறவர்களை அன்போடு அழைப்பதை நாம் காணலாம். அப்படியானால் இந்த நிருபத்தை இவர் எழுதும்போது ரொம்ப வயதானவராக அப்பா ஸ்தானத்தில் இருந்து கொண்டு எழுதியிருக்கிறார்.

இன்னொரு காரியம். கி.பி. 81-96 கால கட்டத்தில் கிறிஸ்தவர்களுக்கு மிகப்பெரிய ஒரு உபத்திரவம் ரோமப் பேரரசன் டொமிஷியன் ஆட்சி காலத்தில் வெடித்தது. இந்த உபத்திரவத்தைப் பற்றி இந்த நிருபத்தில் எந்த குறிப்பும் இல்லாத காரணத்தால் இது உபத்திரவ காலம் ஆரம்பமாவதற்கு முந்தி - ஏறக்குறைய கி.பி 80-ம் ஆண்டு எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது பலரது கணிப்பு.

திறவுகோல் வசனம் : நீங்கள் எங்களோடு ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும், கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு சாட்சியாக அறிவித்து, உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இதை எழுதுகிறோம் (1:3,4)

தேவகுமாரனாகிய இயேசுவின் நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசம் வைக்கவும், அதன் மூலம் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதையும் நீங்கள் அறிய வேண்டும் என்பதற்காக இதை எழுதுகிறேன் (5:13).

திறவுகோல் அத்தியாயம் : முதல் அதிகாரம்

இந்த புத்தகத்தின் முதல் அதிகாரம், யோவான் சுவிசேஷத்திலுள்ள 15-ம் அதிகாரத்தின் தொடர்ச்சி - என்று நாம் சொன்னால் அது மிகையாகாது. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இதை எழுதுகிறேன். நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்க வேண்டும் - அவரது வார்த்தைகளில் நிலைத்திருக்க வேண்டும் என்று யோவான் (15:11,12) சுவிசேஷத்தில் எழுதும் யோவான் இந்த கருத்தின் தொடர்ச்சியாக அவரில் நிலைத்திருப்பது உண்மையானால் அதை நடைமுறை வாழ்க்கையில் வெளிப்படுத்தி - ஒளியில் நடக்க வேண்டும்; ஒளிவு மறைவு இல்லாத கண்ணாடி வீட்டில் வாழ வேண்டும். மற்றவர்களோடு ஐக்கியம் கொண்டவர்களாக வாழ வேண்டும் என்று யோவான் இந்த நிருபத்தில் வலியுறுத்துகிறார்.

இந்த நூலின் சாராம்சம் :

(1) முதல் இரண்டு அதிகாரங்களின் சாராம்சம்

யோவான் தனது முதலாம் நிருபத்தை இரண்டு விதமான நோக்கத்தோடு எழுதுகிறார். முதலாவது நோக்கம் - இவருடைய பிள்ளைகள் வெளிச்சத்தின் பிள்ளைகளாக மற்றவர்களோடு ஐக்கியம் கொண்டு வாழ வேண்டும் என்ற நடைமுறை அறிவுரையை அளிப்பது. இரண்டாவது நோக்கம் - 2 பேதுரு, யூதா புத்தகங்களுக்கு இணையாக - கள்ளப் போதனைகளை முறியடிப்பது.

(a) ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளுதல் - ஐக்கியத்தின் ஆதாரம்

ஆண்டவரோடு நாம் ஐக்கியம் கொள்ளுவதற்கு யோவான் அவருக்கு ரொம்ப பிடித்தமான - 3 கருத்துக்களை எடுத்து விளக்குகிறார் - வெளிச்சம், அன்பு, ஜீவன் இந்த 3 பதங்களும் யோவானுக்கு ரொம்ப பிடிச்ச வார்த்தைகள். இதை அடிக்கடி அவர் உபயோகப் படுத்துவதை அவர் எழுதிய 5 புத்தகங்களிலும் (யோவான் சுவிசேஷம், 3 நிருபங்கள், வெளிப்படுத்தின சுவிசேஷம்) நீங்கள் அடிக்கடி வாசிப்பீர்கள். புதிய ஏற்பாட்டில் பவுலுக்கு அடுத்தபடியாக அதிகபட்சமான புத்தகங்களை (5) எழுதியவர் இந்த யோவான் அப்போஸ்தலன் என்பது குறிப்பிடத்தக்கது.

(b) ஆண்டவர் ஒளியாக இருக்கிறார்: ஆண்டவர் ஒளியாக இருப்பதால் அவருடைய பிள்ளைகளாகிய நாமும் ஒளிவுமறைவு இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும். மற்றவர்களுக்கு

முன்பாக ஒளிவு மறைவு இல்லாத ஒரு வாழ்க்கையை நாம் வாழ்ந்தால் மாத்திரமே நாம் மற்றவர்களோடு ஐக்கியம் கொள்ளுவது சாத்தியமாகும்.

(c) **ஆண்டவர் அன்பாக இருக்கிறார்:** ஆண்டவர் ஒளியாக மாத்திரமல்ல, அவர் அன்பாகவும் இருக்கிறார். எனவே நாமும் அந்த அன்பில் நடக்க வேண்டும். அன்பு என்று சொல்லும் போது அது வெறும் வார்த்தைகளில் மாத்திரம் வெளிப்படாமல் அன்றாட வாழ்க்கையிலும், செயலிலும் அதை நாம் காண்பிக்க வேண்டும். அன்பு என்றால் 'பெறுவது' மாத்திரமல்ல அதற்கு மேலாக, கொடுப்பதில் அடங்கியிருக்கிறது. அன்பிற்கு நிபந்தனைகளோ, நிர்ப்பந்தங்களோ கிடையாது. அது Spontaneous - ஆக தானாக பீறிட்டு வரும் ஊற்றுப்போல - நமது வாழ்க்கையில் அனிச்சைச் செயல் போல அன்றாட வாழ்க்கையில் அன்பு வெளிப்பட வேண்டும்.

(d) **ஆண்டவர் நமது ஜீவன்:** ஆண்டவரோடு ஐக்கியம் கொள்வது என்றால் அதனுடைய முழு அர்த்தமும், முழு பரிமானமும் என்ன? அவரது தெய்வீக சுபாவத்தில் - பங்கெடுப்பதுதான் நாம் ஆண்டவரது ஜீவனில் பங்கெடுப்பது என்று பொருள். ஆண்டவரது ஜீவனுக்குள் நாம் வாழ்வது என்றால் என்ன அர்த்தம்? வயிற்றுக்குள் வளரும் சிசு தனது தாயின் ஜீவனின் ஒரு பகுதியாக இருப்பது போல நாமும் இயேசுவின் ஜீவனின் ஒரு பகுதியாக மாற வேண்டும். இப்படியாக தேவனுடைய ஜீவனில் பங்கு பெறுவது எப்பொழுது ஆரம்பமாகிறது? அது நாம் இயேசுவின் மேல் விசுவாசம் வைக்க ஆரம்பிக்கும் போது மாத்திரமே அந்த ஜீவன் ஆரம்பமாகிறது.

ஆண்டவரோடு நாம் ஐக்கியம் கொள்ளுவதற்கும், மற்றவர்களோடு ஐக்கியம் கொள்ளுவதற்கும் இந்த 3 சத்தியங்களையும் நாம் நமது அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிப்பது ரொம்ப அவசியம். இந்தக் கருத்துக்களைத்தான் முதல் 2 அதிகாரங்களில் வலியுறுத்துகிறார்.

2. இரண்டாவது பகுதி - 3,4,5 அதிகாரங்களின் சாராம்சம்

3. ஐக்கியத்தில் அடங்கியுள்ள நடைமுறை சத்தியங்கள்

இதை இப்புத்தகத்தின் 2-வது பகுதியாகிய 3,4,5 அதிகாரங்கள் விளக்குகின்றன.

(a) **தர்க்கத்திற்குரிய வசனங்கள் :**

இந்த 2-வது பகுதியில் தான் அநேக தர்க்கங்களையும், விவாதங்களையும் பிறப்பிப்பதற்கு காரணமாயிருக்கும் 2 வசனங்கள்

- நேர்மாறான கருத்துக்களை சொல்லும் 2 வசனங்கள் அடங்கியிருக்கின்றன.

1:6-ம் வசனத்தில் நம்மிடத்தில் பாவம் இல்லை என்று சொல்வோமானால் அது நிச்சயமாக அது ஒரு பொய்தான்.

இதற்கு நேர்மாறாக இருப்பது 3:6-ம் வசனம் அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவம் செய்வதில்லை (3:6).

இந்த இரண்டு வசனத்திலும் அடங்கியிருக்கிற முரண்பாட்டை நாம் புரிந்து கொள்வது நல்லது.

நாம் ஆண்டவரது வசனத்தில் நிலைத்திருக்கும்போது அதாவது யோசேப்பைப் போல் - ஆண்டவரைப் பற்றிய உணர்வும் பொறுப்பும் அவனுக்குள் இருந்ததால் தேவனுக்கு விரோதமான இவ்வளவு பெரிய பாவத்தை நான் எப்படி செய்வேன் என்று கூறிவிட்டு, ஓடிவிட்டான் (ஆதி 39:9-12) இதைத்தான் I யோவான் 3:6 கூறுகிறது.

பொதுவாக நாம் எல்லோரும் பாவம் செய்தவர்கள் தான் - என்று 1:6 கூறுகிறது. இது ஒரு பொதுவான கூற்று. ஆனால் 3:6 ஆண்டவரது வசனத்தில் நாம் நிலைத்திருக்கும் போது அவனால் பாவம் செய்ய முடியாது என்று கூறுகிறது.

(b) <u>சகோதர அன்பு - நாம் ஆண்டவர்மேல் வைத்துள்ள அன்பின் Extension</u>

இந்த இரண்டாவது பகுதியில் 3,4,5 அதிகாரங்களில் சக விசுவாசிகள் மேல் நாம் அன்பு செலுத்த வேண்டும். இந்த சகோதர அன்பு நாம் ஆண்டவர் மேல் வைத்துள்ள அன்பின் Extension தான்; ஆண்டவர் மேல் நாம் அன்பு செலுத்துவது உண்மையானால் அவரது கட்டளைக்கு நாம் கீழ்ப்படிவதுதான் அதன் நிரூபனம்; ஆண்டவருக்குக் கீழ்ப்படிதல் என்றால் அவர் மேல் நாம் உறுதியான அசையாத நம்பிக்கை வைப்பது தான்.

<u>இப்புத்தகத்தில் கிறிஸ்து :</u>

நாம் பாவம் செய்தால், நமது பரம தந்தையிடம் பரிந்து பேச ஒருவர் நமக்காக இருக்கிறார். அவரே மாசற்ற இயேசு கிறிஸ்து (2:1)

II யோவான் - புத்தகம் 63

புத்தக அறிமுகம் :

இந்த 2 மற்றும் 3 யோவான் நிருபங்கள் இரண்டுமே ஒரே அதிகாரம் கொண்டது. இந்த இரண்டு புத்தகங்களுமே, அவரது முதலாம் நிருபத்திற்கு (அளவில் சற்று பெரியது - 5 அதிகாரம் கொண்டது) முன்னுரையாக (Covering Letter) எழுதப்பட்டது என்று சிலர் வாதாடுகிறார்கள். அதை நிரூபிக்க போதிய ஆதாரம் கிடையாது.

இந்த புத்தகம் ஒரு பெண்ணிற்கு எழுதப்பட்டது. இது ஒரு சபைக்கு அல்லது ஒரு தனிப்பட்ட நபருக்கு எழுதப்பட்ட ஒரு (Personal Letter) கடிதம்.

இக்கடிதத்தின் முக்கியமான நோக்கம் இயேசு கிறிஸ்து 'மாமிசத்தில் வெளிப்பட்ட தேவன்' என்பதை மறுதலிக்கும் கூட்டத்தினர் அநேகர் அந்த நாட்களில் வாழ்ந்தார்கள். இவர்கள் கள்ள தீர்க்க தரிசிகள். இவர்களை குறித்து எச்சரிக்கும் நோக்கத்தோடு இக்கடிதம் எழுதப்பட்டது. இப்படிப்பட்ட கள்ள தீர்க்கதரிசிகளை உங்களது வீட்டில் கூட ஏற்றுக் கொள்ளக்கூடாது. கிறிஸ்தவர்களோடு ஐக்கியம் கொள்ளலாம். ஆனால் இவ்வகையான கள்ளத்தீர்க்கதரிசிகளோடு எக்காரணத்தை முன்னிட்டும் ஐக்கியம் கொள்ளக்கூடாது என்று கடுமையாக எச்சிரிக்கிறார்.

ஆசிரியர் : இதை எழுதியது யோவான் அப்போஸ்தலன்தான் என்பதில் எந்த ஐயமுமில்லை. யோவானுக்கு மிகவும் பிடித்த சில சொற்கள் 'அன்பு' - புதிய ஏற்பாட்டில் இந்த 'அன்பு' என்ற சொல் 116 முறை வருகிறது. ஆனால் யோவான் தனது நான்கு புத்தகங்களிலும் 62 முறை உபயோகப்படுத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அதுபோல 'சத்தியம்', Truth கிறிஸ்துவில் நிலைத்திருத்தல்', Abiding in Christ 'சத்தியத்தில் நடப்பது', "ஆதியிலிருந்து', ஒருவரில் ஒருவர் அன்பு கூறுதல்' - இந்த சொற்களை யோவான் தனது யோவான் சுவிசேஷத்திலும், 3 நிரூபங்களிலும் அடிக்கடி பயன்படுத்தவதை நாம் பார்க்கலாம்.

எழுதப்பட்ட காலம் :

கி.பி. 90ம் ஆண்டு ஏறக்குறைய தனது 90வது வயதில் இதை எழுதியிருக்க வேண்டும். அல்லது அதை Dictate பண்ணியிருக்க வேண்டும் - இவர் சொல்ல இன்னொருவர் எழுதியிருக்க வேண்டும்.

90 வயதில் கூட கடிதம் எழுதியிருக்கிறார் என்றால் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

யாருக்கு எழுதப்பட்டது :

தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பெண்ணிற்கும் அவளது பிள்ளைகளுக்கும்-யோவான் இந்த குடும்பத்தாரை விரைவில் நேரில் முகமுகமாக சந்திக்கப்போவதாக எழுதியிருப்பதால் நிச்சயமாக யோவானுக்கு அறிமுகமான ஒரு குடும்பத்தினராக இருக்க வேண்டும்.

திறவுகோல் வசனங்கள் :

ஆதி நாட்கள் முதல் நீங்கள் கேள்விப்பட்டதும், அப்போஸ்தலர்கள் கற்பித்த போதனையிலும், விசுவாசத்திலும் உறுதியாய் தரித்திருக்க வேண்டும்'' என்ற கருத்து வலி யுறுத்தப்படுகிறது. இதனுடைய இன்னொறு அர்த்தம் கள்ளத்தீர்க்க தரிசிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

இரண்டாவது ஒருவரில் ஒருவர் அன்பு கூர்ந்து அன்பில் நடந்து கொள்ளுங்கள் (4-6)

சாராம்சம் :

ஆண்டவரது கட்டளைகளில் நிலைத்திருங்கள் (1-6) ஒருவருக்கொருவர் அன்பை வெளிப்படுத்துங்கள். சத்தியத்தை அறிந்த நீங்கள் அந்த சத்தியத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

கள்ளத்தீர்க்கதரிசிகளோடு எந்த உறவும், ஒட்டுதலும் இருக்கலாகாது (7-11)

விரைவில் உங்கள் அனைவரையும் நேரில் பார்ப்பேன், அப்பொழுது நமது மகிழ்ச்சி நிறைவடையும்.

கிறிஸ்து :

கிறிஸ்துவின் போதனையில் நிலைத்திருக்கவேண்டும் (9).

III யோவான் - புத்தகம் 64

அறிமுகம் : இது யோவான் 'காயு' என்ற சகோதரனுக்கு எழுதிய Personal Letter. ஒரு தனிப்பட்ட நண்பர் காயுவுக்கு எழுதிய தனிப்பட்ட கடிதம்.

ஆசிரியர் : இதை யோவான் என்ற சுவிசேஷகர் தான் பவுலுக்கு அடுத்து அதிக புத்தகங்கள் எழுதியவர் மொத்தம் 5 புத்தகங்களை எழுதியுள்ளார் (யோவான் 1,2,3 யோவான் வெளிப்பாடு)

கால கட்டம் : 1,2,3 யோவான் நிருபங்கள் அனைத்தும் ஏறக்குறைய ஒரே கால கட்டத்தில் கி.பி. 90ம் ஆண்டு எழுதப்பட்டது. இவர் 'எபேசு' பட்டணத்தை தனது தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டார். இங்கே தங்கிக் கொண்டு சுற்றிலும் உள்ள பல சபைகளுக்கு மிஷனெரிகளையும், சுவிசேஷகர்களையும் அடிக்கடி அனுப்பிக் கொண்டு சுவிசேஷப்பணி செய்து கொண்டு வந்தார். இப்படி பல மிஷனெரிகளை, பிரசங்கிமார்களை அனுப்பும் போது அவர்களுக்கு தங்குவதற்கு இடம் கேட்டு சில சபை மூப்பர்களுக்கு கடிதம் எழுதுவது இவரது வழக்கம்.

"தெமேத்திரியு" என்ற ஊழியரை தயவு செய்து நன்கு கவனித்துக் கொள்ளுங்கள் என்று காயுவுக்கு எழுதிய கடிதம் தான் இந்த யோவான் எழுதிய மூன்றாம் நிருபம்.

நிருபத்தின் சாராம்சம் :

முதலாம் நிருபத்தில் நாம் ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி எழுதுகிறார்.

இரண்டாவது நிருபத்தில் ''தயவு செய்து கள்ளத் தீர்க்கதரிசிகளோடு ஐக்கியம் கொள்ள வேண்டாம்'' என்று எச்சரிக்கிறார்.

இந்த மூன்றாவது நிருபத்தில் "நீங்கள் சபையில் உள்ள மற்ற சகோதரர்களோடு ஐக்கியம் கொள்ள வேண்டும்" என்று வலி யுறுத்துகிறார்.

15 வசனங்கள் மாத்திரமே கொண்ட இந்த நிருபம் தான் வேதாகமத்திலேயே மிகச் சிறிய புத்தகம், (Shortest Book) என்று அழைக்கப்படுகின்றது.

இதில் எந்த போதனையும், முக்கியமான கருத்துக்களும் கிடையாது. ஆனால் மற்ற சகோதர, சகோதரிகளோடு ஐக்கியம்

வைத்துக் கொள்வது சாலச்சிறந்தது என்ற கருத்து மீண்டும் மீண்டும் இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

நிருபத்தின் முக்கிய நோக்கங்கள் :

1 யோவான் அவ்வப்பொழுது, அடிக்கடி அனுப்பும் மிஷனெரிகளை, தூதுவர்களை - "காயு" என்ற சகோதரன் தன் வீட்டில் தங்க வைத்து, உணவு கொடுத்து, நல்ல விருந்தோம்பல் செய்து அனுப்புவதை பாராட்டுவது இக்கடிதத்தின் முக்கிய நோக்கம். அதுவும் அறிமுகமே இல்லாதவர்களைக் கூட காயு தனது வீட்டில் தங்க வைத்து, உபசரித்து அனுப்புகிற உதவிகளுக்காக காயுவை பாராட்டுகிறார். நன்றி செலுத்துகிறார்.

2. தொடர்ந்து இந்த உதவியை யோவான் அனுப்பும் சுவிசேஷகர்களுக்கு உதவி செய்யும்படி வேண்டுகோள் விடுக்கிறார்.

3. தற்சமயம் இக்கடிதத்தை கொண்டுவரும் தெமேத்திரியுவையும் தயவு செய்து நன்கு கவனித்துக் கொள்ளும்படி கேட்கிறார். (12)

4. நான்காவது நோக்கம் ரொம்ப முக்கியமானது - வருந்தத்தக்கதும் கூட

இப்படி பல மிஷனெரிகளை பல சபைகளுக்கு அனுப்பி அந்த சபையின் பல மூப்பர்களுக்கும் இவர் கடிதம் எழுதுவது வழக்கம். அப்படிப்பட்டவர்களில் 'தியோத்திரபு' என்பவரும் ஒருவர்.

ஆனால் இந்த தியோத்திரபு விற்கு இப்படி யோவான் அடிக்கடி ஆட்களை அனுப்பி தனது வீட்டில் தங்க வைப்பது, சாப்பாடு போடுவது இவருக்கு பிடிக்கவில்லை. எனவே ஏற்கனவே யோவான் இந்த 3ம் நிருபத்திற்கு முன்பு எழுதிய ஒரு கடிதத்தை (1,2 யோவான் அல்ல) இந்த மனிதர் கோபத்தில் கிழித்தெறிந்து விட்டார்.

இவர் தங்குவதற்கு இடம் கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை, இவரது சபையார் வேறு யாரும் கூட இடம் கொடுக்கக் கூடாது - என்றும் சொல்லி சட்டமும் போட்டு விட்டார். "இந்த யோவான் யாரு? இவர் நமக்கு என்ன கட்டளையிடுகிறார்? என்னையாரும் அதிகாரம் பண்ண முடியாது" - என்று சிறிது காரசாரமாக தியோத்திரபு கூறிவிட்டார். யோவானை எதிர்க்க ஆரம்பித்து விட்டார்.

இந்த 'தியோத்திரபு'வை கண்டிப்பது இக்கடிதத்தின் இன்னொரு முக்கியமான நோக்கம். இதை 9, 10 வசனங்களில் நாம் வாசிக்கலாம்.

தலைவராக்கிக் கொள்ள விரும்பும் தியோத்திரபு எங்கள் அதிகாரத்தை ஏற்கவில்லை - என்று (V9) எழுதுகிறார்.

இந்த 'தியோத்திரபு' வின் விஷயத்தை நான் நேரில் வரும் போது பார்த்துக் கொள்கிறேன்.

5. காயு என் அன்பான காயுவே, நீ இந்த 'தியோத்திரபு'வைப் பார்த்து நீ சோர்வடைய வேண்டாம். நீ மிஷனெரிகளுக்கு தற்போது ஆற்றும் விருந்தோம்பல் ஊழியத்தை தொடர்ந்து செய் - என்று ஆலோசனை கூறுகின்றார்.

மூன்று முக்கிய நபர்கள்

1 காயு இந்த கடிதம் 'காயு'விற்கு எழுதப்பட்ட தனிப்பட்ட கடிதம். (Personal Letter) இந்த காயு என்ற சகோதரன் விருந்தோம்பலுக்கு நல்லதொரு முன் உதாரணம். இந்த விருந்தோம்பல் குணத்திற்காக இவரைப் பாராட்டுவதா அல்லது இவரது மனைவி Mrs. காயுவை பாராட்டுவதா என்று தெரியவில்லை.

வீடு தேடிவரும் மிஷனெரிகளை, பிரசங்கிமார்களை நன்கு கவனித்து விருந்தோம்பல் செய்பவர் ஆண்டவருடைய சத்தியத்தில் நடப்பவர். அதனால்தான் யோவான் அவரைப் பார்த்து, "காயுவே, உன் ஆத்துமாக வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து வளம் பெறுவாயாக" என்று வாய் நிறைய வாழ்த்துகிறார்.

2. தெமேத்திரியு இவர் ஒரு மிஷனெரி. இவரைப் பற்றி யோவான் நற்சாட்சி கொடுத்து, பிரயாணம் பண்ணி தற்சமயம் உன்னிடம் வரும் தெமேத்திரியுவை நன்கு கவனித்துக்கொள் என்று எழுதுகிறார். இவர் காயுவின் வீட்டிற்கு விருந்தினராகப் போய்க்கொண்டிருக்கும் ஒரு Guest.

3 தியோத்திரபு Vs காயு

உங்கள் சபையில் யாராவது ஒருவர் நன்றாக எல்லாரிடமும் பழகி ஒத்துப் போகிறவர் - நன்கு உபசரிப்பவர் யாராவது இருப்பின் அவர் தான் உங்கள் சபையின் 'காயு'. இதற்கு மாறாக யாராவது எப்பொழுது பார்த்தாலும் நான் தான் பெரியவன் - என்று சொல்லிக் கொண்டு யாரையும் சபைக்குள் விடாமல் அடிக்கடி சண்டை போட்டு - சபையை விட்டு விரட்டுகிறவர் யாராவது உங்கள் சபையில் இருந்தால் - அவர்தான் உங்கள் சபையில் "தியோத்திரபு".

திறவு கோல் வசனம் : உன் ஆத்துமா வாழ்கிறது போல நீயும் எல்லாவற்றிலும் வாழ்ந்து வளம் பெறு (2)

இயேசு கிறிஸ்து : முதலாம் இரண்டாம் நிருபங்களுக்கு முற்றிலும் மாறாக இந்த 3-வது நிருபத்தில் இயேசுவின் பெயர் எங்கும் எழுதப்படவில்லை. ஆனாலும் 7ம் வசனத்தில் அவருடைய நாமத்தின் நிமித்தம் புறப்பட்டு போனார்கள். என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

முக்கிய குறிப்பு :

இந்த புத்தகத்தில் நாம் ஒருமுக்கியமான அக்கால சபையின் நிலைமையை புரிந்து கொள்ளலாம். தொடக்ககால திருச்சபையின் அதிகார அமைப்பையும், சபைகளின் தனித்தன்மையையும் காட்டுகிறது. சில மூப்பர்கள் அடுத்த சபைமீது கொஞ்சம் அதிகாரம் வைத்திருந்தாலும், நாட்கள் செல்ல செல்ல ஒரு சபையின் மூப்பர் இன்னொரு சபையின் மீது செலுத்தும் அதிகாரம் அதிகமாக வரவேற்கப்படவில்லை என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. தியோத்திரபு, தன் பேச்சைக்கேட்காத சபை மக்களை சபையிலிருந்து நீக்கினான். அவ்வளவு அதிகாரம், ஆணவம் இவனுக்கு இருந்தது.



யூதா - புத்தகம் 65

அறிமுகம் : இந்த புத்தகம் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் - யூத கிறிஸ்தவர்கள் மற்றும் பிற கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் எழுதப்பட்டது. ஆனால் முக்கியமாக யூத கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது என்று சிலர் கருதுகிறார்கள். இந்த யூதா நிருபமும் II பேதுரு நிருபமும் இரண்டுமே ஒரே கருத்துக்களைக் கொண்டவைகள். இரண்டு நிருபங்களுமே கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக எழுதப்பட்டது. II பேதுரு 2:1 - 3:4, யூதா 4-18 வசனங்களும் ஒரே மாதிரி இருக்கும். மாத்திரமல்ல இதில் உள்ள 13,14,15 வசனங்கள் 'ஏனோக்கு' - அதாவது தேவனோடு சஞ்சரித்த ஏனோக்கு எழுதிய (ஆனால் வேதப்புத்தகத்தில் இடம் பெறாத) புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட வசனங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் : இதை எழுதிய ஆசிரியர் யூதா - உண்மையிலேயே இயேசுவின் ஒன்றுபட்ட சகோதரன் (இயேசுவின் தாயாகிய மரியாளுக்கும் யோசேப்புக்கும் 4 பிள்ளைகள் - யாக்கோபு (யாக்கோபு நிருபத்தை எழுதியவர்), யோசேப்பு, சீமோன், யூதா (யூதா நிருபத்தை எழுதியவர் (மத் 13-15).

இவர் ஆரம்ப காலத்தில் இயேசுவை எதிர்த்தவர். ஆனால் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவரை விசுவாசித்து பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட போது மேலறையில் இருந்தவர்களில் இவரும் ஒருவர். அதனால் தன்னை இயேசுவின் சகோதரர் என்று அறிமுகப்படுத்த சற்று வெட்கப்பட்டார். அதனால் தான் தன்னை இயேசுவின் ஊழியக்காரர் என்றும் யாக்கோபின் சகோதரர் என்றும் 1-ம் வசனத்தில் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறார்.

எழுதப்பட்ட காலம் : இது கிரேக்க மொழியில் வெகு நேர்த்தியாக எழுதப்பட்டுள்ளது. கி.பி 66-80 காலகட்டத்தில் எழுதப்பட்டிருக்கலாம். தீத்துராயன் கி.பி. 70ல் எருசலேமை அழித்த சம்பவம் இங்கு குறிப்பிடப்படாத காரணத்தினால் ஒரு வேளை இது கி.பி. 70ம் ஆண்டிற்கு முந்தி எழுதப்பட்டிருக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள்.

மையக் கருத்து :

கள்ளத்தீர்க்கதரிசிகள் மலிந்து காணப்பபட்ட காரணத்தால், விசுவாசிகள் தங்களது விசுவாசத்திற்காக போராட வேண்டும்: போர்க்கொடி உயர்த்த வேண்டும். விசுவாசத்தை மறுதலிக்கிறவர்களை - எதிர்த்து எழுதப்பட்டது. விசுவாசத்தில் உறுதியாய் நிற்பதற்கு ஒரு சிறந்த வழி ஆண்டவரைப் பற்றிய அறிவில் வளர்ந்து அதில் தேர்ச்சி பெறுவது. விசுவாசத்திற்காக போராடுவது.

உண்மையிலேயே பார்க்கப் போனால், இவர் இரட்சிப்பைப் பற்றி விளக்கமாக எழுத வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்தக் கடிதத்தை தொடங்கினார். ஆனால் அவரது கடிதத்தின் கருத்து சற்று தடம் புரண்டு, கள்ளத் தீர்க்கதரிசிகளை கடுமையாக சாட ஆரம்பித்துவிட்டார். காரணம் இந்த கள்ளத்தீர்க்கதரிகள் அநேக கிறிஸ்தவர்களை மறுதலிக்கச் செய்து - சபையில் குழப்பம் விளைவித்த கோபமும், ஆதங்கமும் இவர் உள்ளத்தில் கடல் கொந்தளிப்பைப் போல கொந்தளித்துக் கொண்டிருந்தது.

திறவுகோல் வசனம் : 3ம் வசனம்

பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது.

புத்தகத்தின் சாராம்சம் :

நோக்கம் : (1-4) இரட்சிப்பைப் பற்றி எழுத ஆசைப்படுகிறேன். இருப்பினும் போலி தீர்க்கதரிசிகள் மூலம் ஏற்படப்போகிற ஆபத்து அதிகமாக இருப்பதால், அதைப்பற்றி எச்சரிக்க விரும்புகிறேன்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் மூலம் வரும் ஆபத்துக்கள் (5-16)

இந்த கள்ளத் தீர்க்கதரிசிகள் ஒன்றும் புதிதாக காளானைப் போல முளைத்து வரவில்லை. ஆதியிலிருந்து இவர்கள் தேவ ஜனங்களோடு இருக்கிறார்கள். உதாரணமாக மோசேக்கு விரோதமாக போர்க்கொடி தூக்கிய கோராகு கூட்டத்தாரின் பரம்பரைதான் இந்த கள்ளத்தீர்க்கதரிசிகள். இவர்கள் காயீன் மற்றும் பணத்திற்கும் கூலி

க்கும் தீர்க்கதரிசனம் சொன்ன பிலேயாமும் இவர்கள் கூட்டத்தை சேர்ந்தவன்தான் என்று கடுமையாக விமரிசனம் செய்கிறார்.

விசுவாசிகளுக்கு ஒரு ஆலோசனை (17-23)

அன்பார்ந்தவர்களே, இப்படிப்பட்ட கள்ளத் தீர்க்கதரிசிகள் கூட்டத்திலிருந்து நீங்கள் தப்ப வேண்டும்: ஏற்கனவே சிக்கிக் கொண்டவர்களை, தயவு செய்து தீ விபத்தில் சிக்கிக் கொண்டவர்களை காப்பாற்றுவது போல அவர்களைக் காப்பாற்றுங்கள்.

உங்கள் விசுவாச வாழ்க்கையைக் கட்டி எழுப்புங்கள். பரிசுத்த ஆவியின் உதவியுடன் ஊக்கமாக ஜெபியுங்கள். கடவுளுடைய அன்பில் நிலைத்திருங்கள்.

வாழ்த்துரை (24,25)யும், கிறிஸ்துவும்

வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய **இரட்சகரான தேவனுக்குக்** கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்



திருவெளிப்பாடு - புத்தகம் 66

பெயர் : வேதாகமத்தின் கடைசி நூலாகிய திருவெளிப்பாடு புத்தகம் - மற்ற புத்தகங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. வேதாகமத்திலுள்ள மற்ற நூல்களில் - உதாரணமாக சுவிசேஷங்களில் தீர்க்கதரிசனங்கள், வெளிப்பாடுகள் அங்கும் இங்கும் காணப்படும். ஆனால் இந்தப் புத்தகம் முழுவதுமே - தீர்க்கதரிசனம் - அடையாளங்கள் - காட்சிகள் - தரிசனங்கள் - முழுக்க முழுக்க உள்ளன. தானியேல், எசேக்கியல் புத்தகங்களும் இவ்வகையைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு வெளிப்பாடு என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவே யோவானுக்கு பத்மூ தீவில் தோன்றி, தன்னை வெளிப்படுத்துகிறார். ஒரு சினிமாவில் காதாநாயகனை உடனே தனது முழு உருவத்தையும் காண்பிக்காமல், அவரது Shoe போட்டு நடப்பது, அல்லது பின்பகுதி, கதாநாயகனின் ஒவ்வொரு பகுதியாகக் காண்பித்து Suspense-ஐ உருவாக்குவார்கள். அது போலவே இங்கேயும், இயேசு கிறிஸ்துவும் - தான் யார், எப்படிப்பட்டவர் - என்பதை கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்துகிறார். இப்புத்தகத்திற்கு வெளிப்பாடு - வெளியரங்கமாக்கப்படுதல் என்று பெயர் சூட்டப்பட்டிருப்பது சற்று ஆச்சரியமாகவும், விநோதமாகவும் இருக்கிறது. காரணம் இதில் எழுதப்பட்டிருக்கும் அனைத்தும் மறைமுகமானவைகள் - இரகசியமானவைகள் - புரியாதவைகள் சாதாரண மனிதனுக்கு விளங்காதவைகள். அடையாளங்கள் - மாயாஜாலகாட்சிகள் - அபூர்வ விலங்குகள் - கடல்கன்னிகைகளைப் போல - பாதி மிருகம் - பாதி மனிதன் - இது போன்ற காட்சிகள் நிறைந்த ஒரு புத்தகம். இதற்கு பொருத்தமான - நடைமுறை தலைப்பு - புரியாத புத்தகம் - விளங்காத வெளிப்பாடு - இப்புத்தகத்திற்கு நூற்றுக்கணக்கான விளக்கங்கள் கொடுக்கப் பட்டிருக்கிறன்றன. ஆனால் அவற்றில் எந்த விளக்கமும் தெள்ளத்தெளிவாக, ஆணித்தரமான விளக்கம் இதுவரை கொடுக்கப்படவில்லை - என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதியாகமம் Vs வெளிப்படுதல்

ஆதியாகமப் புத்தகத்தில் எல்லாம் ஆரம்பமாகிறது: வெளிப்படுதலில் சகலமும் முடிவிற்கு வருகிறது: ஆதியாகமத்தில் பாவம் நுழைகிறது. வெளிப்படுத்தலில் பாவம் Once for all பரிகரிக்கப்படுகிறது: ஆதியாகமத்தில் சூரியன் மறைகிறது: ஆதியாகமத்தில் ஜீவ விருட்சத்தை புசிக்கக்கூடாது - என்று மனிதன் விரட்டியடிக்கப்படுகிறான்: வெளிப்படுத்தலில் ஜீவ விருட்சத்தின்

கனியை புசிக்க அழைக்கப்படுகிறான். ஆதியாகமத்தில் நுழைந்த சாபம் வெளிப்படுத்தலில் நீக்கப்படுகிறது. ஏதேன் தோட்டத்தில் நுழைய அனுமதிக்கப்பட்ட சாத்தான் வெளிப்படுத்தலில் என்றைக்கும் அணையாத நித்திய அக்கினிக்குள் தள்ளப்படுவான்.

காலம் : இது எழுதப்பட்டது நீரோ மன்னன் காலம் (கி.பி. 54-68) என்று சிலர் கருதுகிறார்கள். காரணம் இந்த நீரோ மன்னன் காலத்தில்தான் கிறிஸ்தவர்களுக்கு அதிகபட்சமாக உபத்திரவம் உருவாகியது. ஆனால் இன்றும் சிலர் ரோமாபுரியின் மன்னன் டொமீஷியன் (கி.பி. 89-96) காலத்தில் இந்த நூல் எழுதப்பட்டது என்று கருதுகிறார்கள். இதுவே அநேகருக்கு ஏற்புடையதாயிருக்கிறது. இந்தக் காலக்கட்டத்தில் தான் ரோம் மன்னர்கள் சீசரை கடவுளாக வணங்க மக்கள் வற்புறுத்தப்பட்டனர். கிறிஸ்தவர்கள் சொல்லொன்னா இன்னலுக்கு ஆளானார்கள். யோவான் பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டார்.

ஆசிரியர் : யோவான் சுவிசேஷத்தை எழுதிய யோவான் தான் இதையும் எழுதியிருக்கிறார். இது பொதுவான கருத்து. இருப்பினும் இந்நூலின் இலக்கணம், மொழி நடை, இறையியல் - இவற்றை ஆராய்ந்து பார்த்தால், யோவான் சுவிசேஷத்தை எழுதியவர் இந்த வெளிப்பாடு புத்தகத்தை எழுதியிருக்க வாய்ப்பில்லை: யோவான் என்ற பெயரைக்கொண்ட ஏதோ ஒரு சபையின் மூப்பர் எழுதியிருப்பார் என்று தர்க்கம் செய்கிறவர்களும் உண்டு.

இந்நூலின் விளக்கம் : இந்தப் புத்தகத்திற்கு நூற்றுக்கணக்கான விளக்கவுரைகள் எழுதப் பட்டிருக்கின்றன. பல குருடர்கள் யானையின் பல பாகங்களை தடவிப் பார்த்து விட்டு, காலைப் பார்த்துவிட்டு யானை ஒரு தூண், காதை தடவி விட்டு, யானை ஒரு சொளகு, வாலைத் தடவிப் பார்த்து விட்டு யானை ஒரு துடப்பம் - என்று சொன்ன கதைதான். ஒருவர் சொல்லுவதற்கும் இன்னொருவர் சொல்லுவதற்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. தொடர்ந்து வாசியுங்கள்.

1) முதல் சாரார் - வாதம் 1

இவர்கள் இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள அனைத்து தீர்க்கதரிசனங்களும் ஏற்கனவே நடந்து முடிந்து விட்டது. அனைத்து தீர்க்கதரிசனங்களும் நிறைவேறி முடிந்து விட்டது. யோவான் வாழ்ந்த காலத்தில் நடந்த சம்பவங்களை இப்புத்தகம் குறிக்கிறது. ரோம சாம்ராஜ்யம் அழிந்தபோது, இப்புத்கத்தின் தீர்க்கதரிசனம் அனைத்தும் கி.பி. 2/3 நூற்றாண்டிலேயே இச்சம்பவங்கள் நடந்து முடிந்து விட்டது.

2) சாரார் –2 வாதம் – 2

இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் எதிர்காலத்தில் நடக்கப்போகிற சம்பவங்களை குறிக்கிறது. இது பூமியைப் பற்றி மாத்திரமல்ல, அண்ட சராசரத்தில் உள்ள அனைத்து கோளங்களும் எப்படி முடிவிற்கு வரப்போகிறது என்று இப்புத்தகம் தீர்க்க தரிசனமாக உரைக்கிறது.

3) சாரார்– 3 வாதம் 3

இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற அனைத்து அடையாளங்களும், நமக்குப் புரியாத விளங்காத காட்சிகளும் – எல்லாமே ஆவிக்குரிய அர்த்தங்கள் கொண்டது. ஒவ்வொன்றிகும் Physical – கண்ணும், காதும் வைத்து உருவகப்படுத்தி – அதற்கு ஒரு விளக்கம் கொடுப்பது தவறு. அதற்கு ஆவிக்குரிய அர்த்தம் கொடுப்பது தான் சாலச் சிறந்தது.

4) சாரார் – 4 வாதம் – 4

இந்த சாரார் வாதம் – முதல் வாதத்திற்கும் இரண்டாவது வாதத்திற்கும் நடுவில் இருக்கும் வாதம். அதாவது இப்புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களுக்கு இரண்டு பார்வைகள் உண்டு அதாவது கிட்டப்பார்வையும் உண்டு தூரப்பார்வையும் உண்டு.

ஒரு சில தீர்க்கதரிசனங்கள் யோவான் வாழ்ந்த கால கட்டத்திலே நடந்து முடிந்தது உண்மைதான். ஆனால் அதே தீர்க்கதரிசனத்தை தூர லென்ஸ் உள்ள கண்ணாடியிலும் பார்க்க வேண்டும். ஒரே தீர்க்கதரிசனத்திற்கு இரண்டு Components உண்டு – இரண்டு பாகங்கள் உண்டு. ஒன்று Near - Immediate உடனுக்குடன் நடப்பது. இரண்டாவது Far - தூரப்பகுதி – இனிமேல் நடக்கப்போகும் பகுதி. எனவே இந்த 4-ம் சாரார் வாதம் – இந்த புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசனங்களைப் பார்ப்பதற்கு முதலில் கிட்டப்பார்வை அளிக்கும் Convex lense போட்டு பாருங்கள்: பின்பு தூரப்பார்வையை கொடுக்கும் Concave Lense போட்டுப் பாருங்கள் – என்று வாதிக்கிறார்கள்.

இப்பொழுது சொல்லுங்கள் – மேலே கொடுக்கப்பட்ட வாதங்களை வாசித்துவிட்டு – உங்களுக்கு குழப்பம் – ஏன் மூளை வாதமே வந்திருக்கும் – என்று நினைக்கிறேன். மேலே நான் எழுதியிருப்பது உங்களுக்குப் புரிந்தால் 'நல்லது'. புரியாவிட்டால் 'ரொம்ப நல்லது'.

இந்த நான்கு முற்றிலும் வித்தியாசமான விளக்கங்களில் எனக்கு சரியாக தோன்றுவது இரண்டாவது வாதம், இதை 'Futurists' வாதம் - எதிர்கால நோக்கு என்று அழைப்பார்கள்.

இந்த 'Futurists' - எதிர்கால நோக்கு - பார்வையின் படி இந்த 'வெளிப்படுதல்' புத்தகத்தில் எழுதப்பட்ட சம்பவங்களை கீழே கொடுக்கப்பட்ட சம்பவங்களின் படி கிரமப்படி சிந்திப்பது இதை ஓரளவு புரிய முயற்சி எடுப்போம்.

வெளிப்படுத்தல் புத்தகத்தின் சாராம்சம்

மோசே வாழ்ந்த காலம் 'நியாயப்பிரமான யுகம்'. இந்த நியாயப்பிரமானத்தின் காலத்தைத் தொடர்ந்து, இப்பொழுது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும், காலத்தை கிருபையின் யுகம் "Age of Grace" என்று அழைக்கிறோம்.

இந்த கிருபையின் யுகத்திற்கும் ஒரு கால எல்லைக்கோடு உண்டு. அது இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகை - அதாவது 'ரகசிய வருகை' சம்பவம் நடக்கும் போது இந்த கிருபையின் காலம் முற்றுப் பெறும். இந்த ரகசிய வருகை திருடனைப் போல வரும். யாருக்கும் தெரியாது. ஆண்டவர், ஒரு திருடனைப் போல இந்த உலகத்திற்கு வந்து இந்த உலகத்தில் எவற்றை அவர் பொக்கிஷமாக கருதுகிறாரோ - அவர்களை - மணவாளன் வருகைக்காக ஆவலுடன் - காத்திருக்கும் மணவாட்டி ஆகிய சபையை ஆண்டவர் Hijack பண்ணிக் கொண்டு - கதாநாயகன் குதிரையில் வந்து கதாநாயகியை மாத்திரம் அலாக்காககத் தூக்கிக் கொண்டு - கண்மூடி திறப்பதற்குள்ளாக மறைந்து போவது போல - தன்னுடைய சபையை எடுத்துக் கொண்டு மீண்டும் வானத்தில் ஏறி நடு வானத்திற்கு போய் விடுவார்.

இயேசுவின் இந்த ரகசிய வருகை சம்பவம் வெளி 4:1-ம் வசனத்தில் கொடுக்கப்பருக்கிறது.

இந்த ரகசிய வருகையில் உயிரோடிக்கிற விசுவாசிகள், ஏற்கனவே மரித்த விசுவாசிகள் - அனைவரும் மறுரூபமாக்கப்பட்டு - இயேசுவோடு நடுவானில் இருப்போம். வெளி 4:1-ம் வசனத்திலிருந்து 19:11-ம் வசனம் வரை நாம் அனைவரும் நடுவானில் ஏறக்குறைய 7 ஆண்டுகள் இருப்போம்.

இந்த 7 ஆண்டுகள் பூமியில் பயங்கர குழப்பம் நிலவும். பூமியில் இரட்சிக்கப்படாத மக்கள் அனைவரும் கொதி நிலையில் இருப்பார்கள். காரணம் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள்

- Missing - காணாமற் போய்விட்ட காரணத்தால். இந்த 7 ஆண்டுகளை உலகத்தின் உபத்திரவ காலம் என்று அழைக்கிறோம். இந்த 7 ஆண்டு கால இடைவெளியில் அந்தி கிறிஸ்து ஆட்சிக்கு வந்து பலரை, அற்புதத்தினாலும், அடையாளத்தினாலும் வஞ்சிப்பான். மக்கள் அவனை தெய்வமாக வணங்குவார்கள்.

இதற்கிடையில் இந்த 7 ஆண்டு உபத்திரவ காலத்தில்தான் யூதர்கள் மனமாற்றம் அடைவார்கள். முதலில் கண்மூடித்தனமாக அந்தி கிறிஸ்துவை மேசியா என்று கருதிய யூதர்கள் - விரைவில் அவன் போலி மேசியா என்பதை புரிந்து கொண்டு, இயேசுவே - உண்மையான மேசியா என்று அறிக்கையிட்டு - இதன் நிமித்தம் கொல்லப்படுவார்கள். ரத்த சாட்சியாக மரிப்பார்கள்.

இந்த காலகட்டத்தில் தான் - மரணத்தை ருசி பார்க்காமல் இன்னும் உயிரோடிருக்கும் ஏனோக்கும், எலியாவும் பூமிக்கு வந்து இரத்த சாட்சியாக மரிப்பார்கள் (11:1-14).

சோதோம் கொமோராவில் நடந்தது போல எகிப்து தேசத்தில் மோசே மூலம் பார்வோனும் எகிப்தும் வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் பல அடையாளங்களையும் ஆண்டவரது தண்டனைகளையும் அனுபவித்தது போல - இந்த பூமி பலவிதமான வாதைகளை சந்திக்க நேரிடும். இந்த உபத்திரவம் 7 ஆண்டுகள் நீடிக்கும்.

இயேசுவின் இரண்டாம் வருகை - பிரத்தியட்சமான வருகை

இந்த 7 ஆண்டுகள் முற்றுப்பெறும் போது மீண்டும் இயேசு இந்த உலகத்திற்கு தமது உயிர்த்தெழுந்த பரிசுத்த வான்களோடு பூமிக்கு மூன்றாவது முறையாக வருவார். இது வெளி 19:11-21 பகுதியில் போடப்பட்டிருக்கிறது. இயேசு சாத்தானையும் அவன் சேனைகளையும் வென்று, அவனை 1000 ஆண்டுகள் கட்டிப்போடுவார்.

வெளி 20:1-15 வேதப்பகுதி, இயேசுவின் ஆயிரவருட அரசாட்சியைப் பற்றி விளக்குகிறது. இயேசுவும் அவரது சீஷர்களும் இந்த பூமியை 1000 ஆண்டுகள் ஆளுவார்கள்.

1000 ஆண்டுகளுக்கு பின்பு மீண்டும் சாத்தான் கட்டவிழ்க்கப்படுவான். அவன் மீண்டும் இந்த பூமியில் சிலரை வஞ்சிப்பான். சிலர் அவன் வலையில் விழுவார்கள். சில காலத்திற்குப் பின்பு சாத்தான் நித்திய அக்கினியில் போடப்படுவான் வெளி 20:10.

வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு (20:11-25)

சாத்தானை கட்டி நித்திய அக்கினியில் போட்ட பின்பு, தேவன் தனது வெள்ளை சிங்காசனத்தில் உட்கார்ந்து இதுவரை இந்த உலகத்தில் பிறந்து இறந்தவர்கள் - ஆகாயத்தில் கடலில் செத்தவர்கள் - விபத்தில் செத்தவர்கள் - இதுவரை இறந்தவர்கள் அனைவரும் உயிரோடு எழுப்பபப்படுவார்கள். அவர்கள் அனைவரையும் தேவன் தனது வெள்ளை சிங்காசனத்தில் அமர்ந்து கொண்டு நியாயத்தீர்ப்பு நியாயமாக வழங்குவார்

புதிய வானம் புதிய பூமி (21:1)

இந்த வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பிற்கு பின்பு, புதிய வானம், புதிய பூமி உருவாக்கப்படும் (21:11) தற்சமயம் நாம் வாழும் இந்த பூமியில் அவ்வப் பொழுது அடிக்கடி, பூமி அதிர்ச்சி, Volcano, அக்கினி குழம்புகளை கக்குவது, சுனாமி போன்ற இயற்கை சேதங்கள் நடைபெறாது. நாம் பயமில்லாமல் வாழலாம்.

புதிய எருசலேம் (21:2-22:5)

புதிய எருசலேம் வானத்திலிருந்து இறங்கிவரும் இதன் நீளம் - அகலம் - உயரம் - எல்லாமே சரிசமம் - 2400 கி.மீட்டர் சதுரம். இந்த 2400 km x 2400 km x 2400 km கொள்ளளவு உள்ள ஒரு குடியிருப்பில் Apartment-ல் எத்தனை வீடுகள் கட்டலாம் - என்பதை யாராவது சிவில் இன்ஜினியர் கணக்கிட்டு சொல்வது நல்லது - நம் ஒவ்வொருவருக்கும் Single Room-மே வைத்துக் கொள்ளுங்கள் (Bathroom attached) - இதை கட்டுவதற்கு எவ்வளவு செலவாகும். இத்தனை பேருக்கும் சாப்பாடு போடுவது, Building maintenance, Electricity charge, water charge - எவ்வளவு ஆகும். இது எல்லாமே இலவசம்.

முடிவுரை :

ஆண்டவரே வெளிச்சமாக இருப்பார். அவரே நமக்கு ஜீவ தண்ணீராகவும் இருப்பார். யூரேனியம் 235-ன் Life பல கோடி வருஷங்களாக இருக்கும் போது, நிச்சயமாக ஆண்டவரது வெளிச்சத்திற்கு முடிவேயிராது - என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

திறவுகோல் வார்த்தை : இயேசுவின் இரண்டாம் வருகை

திறவுகோல் வசனம் : "நீ காண்பதையும் அதாவது இப்பொழுது நிகழ்கின்றவைகளையும், இனிமேல் நிகழவிருப்பதையும் எழுது" (1:19)

திறவுகோல் அதிகாரங்கள் : 19,20,21,22

ஆண்டவருடைய கடைசிக்கால திட்டங்கள் இந்த 4 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

19-ம் அதிகாரம் - இயேசுவின் இரண்டாம் வருகை

20-ம் அதிகாரம் - ஆயிர வருட அரசாட்சி

21-ம் அதிகாரம் - புதிய வானம், புதிய பூமி

22-ம் அதிகாரம் - புதிய எருசலேம்

இயேசு கிறிஸ்து : ஆதியும் அந்தமும் (1:17) தேவகுமாரன் (2:18) யூதாசிங்கம், தாவீதின் வேர் (5:5) ஆட்டுக்குட்டியானவர் (5:6), ராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தா (19:16) ஆல்பா, ஒமேகா (22:13), விடியற்கால நட்சத்திரம் (22:16)



ஆசிரியரைப் பற்றி

சகோ S.பன்னீர் செல்வம் அவர்கள் பொறியியல்-எலெக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் துறையில் மைக்ரோ வேவ் (Microwave) பாடத்தில் ஒரு வல்லுனர், இவர் ஒரு ரோமன் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தவர். மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரியில் படிக்கும் போது தனது 18 வது வயதில் தான் பைபிளை முதன் முதலாக பார்த்திருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவர் வேதாகமத்தை பல மொழிகளில் மொழி பெயர்க்கும் ஒருபணிக்காக ஒரு பொறியியற் கல்லூரியல் **HOD** ஆக இருந்த தனது பதவியை ராஜினாமா செய்தார் என்றால் அது நிச்சயமாக ஆண்டவரது செயல்தான் என்பதில் ஐயமில்லை.

இவர் இந்திய வேதாகம மொழி பெயர்ப்பாளர்கள் ஊழியத்தின் நிறுவனர், அதன் பத்திரிகையாகிய "சத்திய வார்த்தை" மாத இதழில் இவரது செய்தியை இந்தியாவிலும் வெளிநாட்டிலும் படித்துவிட்டு பல போதகர்கள், பிஷப், கிறிஸ்தவ தலைவர்கள் பாராட்டி இருக்கிறார்கள் வெளிநாட்டில் நடந்த ஒரு கூடுகையில் சங்கை சிவில் பிலிப்ஸ் என்ற ஒரு தலைவர் "இந்தப்பத்திரிக்கை உலகிலேயே மிகச்சிறந்த பத்திரிக்கை" என்று வர்ணித்தார்.

உங்கள் கரத்திலிருக்கும் "வேதாகம புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம்" என்ற நூல் வேதாகமத்திலுள்ள 66 புத்தகங்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. ஒரு கூட்டத்தில் முக்கிய பேச்சாளர்களை ஒருவர் அறிமுகப்படுத்துவது போல ஒவ்வொரு புத்தகத்தைப் பற்றிய முக்கிய குறிப்பு, யார், எந்த கால கட்டத்தில், எப்படிப்பட்ட பின்னணியில், எதற்காக, யாருக்காக எழுதப்பட்டது? புத்தகத்தின் மையக்கருத்து என்ன? ஒவ்வொரு புத்தகத்திலும் இயேசு கிறிஸ்து எவ்வாறு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறார்-என்ற விபரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

அறிமுகம் இல்லாத ஒரு நபருடன் நாம் அதிக நேரம் பேச முடியாது. அவரைப் பற்றி சிறிது அறிமுகம் கிடைத்து விட்டால், நேரம் போகிறதே தெரியாமல் மணிக்கணக்காக அவரோடு பேசவும் பழகவும் வாய்ப்பிருக்கிறது. அது போலத்தான் இந்த வேதாகம புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் என்ற புத்தகத்தை நீங்கள் வாசித்த பின்பு, நீங்களும் நேரம் போகிறதே தெரியாமல் ஆண்டவரது வார்த்தையை பல நாட்கள் பல மணி நேரங்கள் வாசிப்பதற்கும், அதை தியானிப்பதற்கும் இந்த அறிமுக நூல் ஒரு தூண்டுகோலாக நல்லதொரு வழி காட்டியாக அமையும் என்பதுதான் எங்களது வாஞ்சையும், வேண்டுகோளும் ஜெபமும்.

Word Publishers Trust
Coimbatore-14